# மேகம் விலகுதடி...!



## ஜெய்சக்தி

முதற்பதிப்பு: மார்ச், 2015
உரிமை: ஆசிரியருக்கு ©

MEGAM VILAGUDHADI

By: Jaisakthi

First Edition: March, 2015

No. of Pages: 296

Paper used: 11.6 White

விலை ரூ. 150/-

TAMILTHEN PATHIPPAGAM
137.B., First Floor,
Sundakamuthur Bypass Road,
2nd Street, Thiru Nagar,
Coimbatore - 641 026.
Ph:0422 - 2345747.
Cell: 98422 32646.

Laser Typeset By : TamilThen Pathipagam.

Printed at : Maha Offsets, Chennai - 5.

# மேகம் விலகுதடி...!

ஜெய்சக்தி

# மேகம் விலகுதடி....!

## அத்தியாயம் - 1

''நல்லாயிருக்கீங்களாய்யா? ரொம்ப சந்தோஷம். வாங்க! வாங்க!'' என்று வரவேற்றார் ஜவுளிக்கடை முதலாளி.

''நல்லாயிருக்கேன்!'' என்றார் மகளுடன் உள்ளே நுழைந்து கொண்டிருந்த சந்திரமௌலி அமர்த்தலாக.

''சின்னம்மா வராங்களா? ரொம்ப சந்தோஷம்!'' என்று மறுபடியும் கும்பிடு போட்டார் ஜவுளிக்கடைக்காரர்.

''ஆமாமா! ரொம்ப நாளாச்சு! அவளுடன் வெளியே போய் வெளியே வந்த மாதிரியும் ஆச்சு! அவளுக்கு வேணுங்கற டிரஸ் வாங்கிக் கொடுத்த மாதிரியும் ஆச்சு அப்படின்னு தான் வந்தேன்'' என்று சொல்லிக்கொண்டே இளம் பெண்களுக்கான சுடிதார் பகுதியில் நுழைந்தார்.

பின்னாலேயே அவரது மகள் இந்துமதியும் நுழைந்தாள். பேருக்கு ஏற்ற மாதிரியே முகம் சந்திர பிம்பமாகத்தான் இருந்தது.

இருபதுகளின் ஆரம்பத்தில் இருந்தாள் போலும். ஆனாலும் தந்தையினுடைய உற்சாகம் மகளிடத்திலே காணப்படவில்லை.

''நல்லாயிருக்கீங்களாம்மா?'' என்றார் ஜவுளிக்கடைக்காரர். அவரிடத்திலே தன் கோபத்தைக் காட்டி என்ன ஆகப்போகிறது என்று எண்ணினாளோ என்னவோ முகம் மலர்ந்து சிரித்தபடி "நல்லாயிருக்கேன்!'' என்றாள்.

''அம்மா வந்திருக்கீங்க! இண்ணைக்கு ஒரு ரெண்டு லட்சத்துக்காவது நீங்களெல்லாம் ஜவுளி வாங்கிடணும்!'' என்றார் ஜவுளிக்கடைக்காரர்.

''அட போய்யா! ரெண்டு லட்சமா? அவளுக்கு எவ்வளவுக்கு வேண்ணா வாங்கட்டும்!'' என்றார்!'' சந்திரமோகன்.

''இருக்கறதுலே நல்ல காஸ்ட்லியான ஐட்டம் எல்லாம் எடுத்துப் போடுங்க!'' என்றார்.

''என்னம்மா அது? என்ன பாட்டியாலா, லெக்கின்ஸ், சுடிதார், சல்வார் கமிஸ் இன்னும் என்னென்ன இருக்கு எல்லாம் வாங்கிக்க!'' என்றார்.

''அப்பா! எனக்கு ஏற்கனவே நிறைய இருக்குப்பா!'' என்றார் இந்துமதி.

''உனக்கு நிறைய இருக்கும்மா! நான் வாங்கிக் கொடுத்து ரொம்ப நாளாச்சே? இது உன் சந்தோஷத்துக்காக இல்லை என் சந்தோஷத்துக்காக!'' என்றார்.

''சரிப்பா! அப்ப நீங்களே செலக்ட் பண்ணுங்க!'' என்றாள் இவள்.

''செலக்ட் பண்ணிடுவேன்! அப்புறம் விலை அதிகம் வேண்டாம் கீண்டாம்னெல்லாம் நீ சொல்லக்கூடாது!'' என்றார்.



''சொன்னா விட்டுடவா போறீங்க? என்ன வேண்ணா செய்ங்க அப்பா!'' என்று அவள் கூட நின்று கொண்டாள்.

''சரிம்மா! விலையெல்லாம் பார்க்கக் கூடாது. உனக்கு டிஸைன் பிடிச்சிருக்கா? கலர் உனக்குப் பிடிச்சிருக்கா? மெட்டீரியல் பிடிச்சிருக்கா? அதை மட்டும் பாரு!'' என்றார். அவள் சட்டென்று சிரித்து விட்டாள்.

''இதெல்லாம் பார்க்கறதுக்குப் பேருதாம்ப்பா செலக்‌ஷன்!'' என்றாள்.

''அதான் சொல்றேன்! நீயே செலக்ட் பண்ணிடு!'' என்றார்.

மகளுக்கு விதவிதமாக வாங்கிக் குவித்தார். ''ஏம்மா இருபதைத் தாண்டிட்டே. பட்டுப் புடவையும் ரெண்டு, மூணு வாங்கிக்கயேன்!'' என்றார்.

''அய்யோ! அப்பா! நான் எங்கப்பா இப்பப் புடவை கட்டறேன்!'' என்றாள்.

''கட்டிப் பழகிக்கணும்மா! இனி அப்பா பக்கத்து சொந்தங்கள்லே நிறைய விசேஷமெல்லாம் வருது. நீ வரணும். உன் அம்மாவையும்தான் கூப்பிடணும். வரும் போது நீ நல்ல விதமா உடுத்திட்டு வரணும்!'' என்றார்.

''சரி! என்னமோ செய்ங்கப்பா!'' என்றாள். பட்டுப் புடவை செக்‌ஷனிலும் நுழைந்தார். நுழைந்து அவளுக்கு சாதாரண விலையில், சற்று உயர்வான விலையில், கொஞ்சம் அதிகமான விலையில் என்று எடுத்தார்.

''அப்பா! சில வீட்டில் இருபத்தைந்தாயிரத்துக்குக் கல்யாணப் புடவையே வாங்கறாங்க!'' என்றாள். ''சில

வீடும்மா! அவங்க கணக்கு வேற. நான் யாரு? பெரிய இண்டஸ்டிரியலிஸ்ட்ம்மா! ஆறு மில்லும்மா. எனக்கு எல்லாத்துக்கும் ஏக வாரிசு நீதாம்மா!'' என்றார் அப்பா.

அவள் ஒன்றும் பேசவில்லை. ''அந்த லெவலுக்கு இருக்கணும்மா!'' என்றார்.

'இனிப் பேசி ஒன்றும் பிரயோஜனம் இல்லை!' என்பது போல அவளுக்குப் பிடித்த கலர், டிசைன் இதையெல்லாம் மட்டும் சொல்லிக் கொண்டிருந்தாள்.

கிட்டத்தட்ட மூன்று மணி நேரத்திற்கு மேல் அங்கே இருவரும் செலவழித்தார்கள். செலக்ஷனுக்கு நடுவிலே அப்பா அவளுடைய படிப்பைப் பற்றியும் விசாரித்துக் கொண்டார்.

''டிகிரி முடியுதுப்பா. நான் தான் ப்ரஃபஷனல் கோர்ஸுக்கு போன்னேன். நீ போகலை. ஒரு எம்.பி.ஏ. பண்ணிடறியா?'' என்றார்.

''ம்! அதுவேண்ணா பண்றேம்ப்பா!'' என்றாள்.

''எம்.பி.ஏ. ஃபினான்ஸ்ல பண்றியா?'' என்றார்.

''சரிப்பா! எந்த டிசிப்ளின்னாலும் சரி!'' என்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

கடை முதலாளி அவர்கள் செய்கிற பர்சேஸைப் பார்த்து ஸ்தம்பித்துப் போயிருந்தார். ''வாங்க நம்ம ரூமுக்கு வாங்க! இதெல்லாம் பேக் பண்றதுக்குள்ளே கொஞ்சம் லைட்டா ஏதாவது ஸ்நாக்ஸ் சாப்பிடலாம்!'' என்றார்.



''என்ன ஸ்நாக்ஸ் கொடுப்பீங்க? ரெண்டு பிஸ்கட்டையும், ஒரு டீயையும் கொடுப்பீங்க!'' என்று சிரித்தார் சந்திரமோகன்.

''ஏதோ எங்க தகுதிக்குக் கொடுப்போங்கய்யா!'' என்று அழைத்துக் கொண்டு போய் முந்திரி கேக், உயர்தரமான கார வகைகள் என்று பரிமாறினார்.

''ஹலோ! மிஸ்டர் நல்லசாமி! நான் இதெல்லாம் சாப்பிடறது இல்லை. முந்திரி கேக் வேண்ணா சாப்பிடுவேன். நல்ல வேளையா சுகர் இல்லை, இருந்தாலும் டயட் கண்ட்ரோல்ல இருந்துக்கறது. நாம தனியா அங்கே இங்கே சுத்திக்கிட்டு இருக்கோம். எந்த நேரத்துல என்ன பிரச்சினையா இருந்தாலும் ஜாக்கிரதையா இருந்துக்கணுமில்லே?'' என்றார்.

''அது சரிதாங்க அய்யா!'' என்றார்.

''ஏம்ப்பா இப்படியெல்லாம் சொல்றீங்க?'' என்றாள் இவள்.

''இல்லடா...!''

''ஏன்? உங்களுக்கு அஸிஸ்டெண்ட்ஸ் இருக்காங்களே அப்பா?'' என்றாள்.

''இருக்காங்கடா! இருந்தாலும் நாமும் கொஞ்சம் ஜாக்கிரதையா இருந்துக்கணுமில்லே? சுகர் கொலஸ்ட்ரால்ன்னு உன்னைப் போட்டு டாக்ஸ் பண்ணக் கூடாதில்லே?'' என்றார்.

''அப்பா ப்ளீஸ்!'' என்றாள் நின்று.

''சரிடா! ரியாலிட்டியை சந்திச்சுத்தான் ஆகணும் அதுக்கெல்லாம் வருத்தப்படக் கூடாது!'' என்றார்.

மகளும் தந்தையும் பாசமாக உரையாடிக் கொள்ளவே அவரும் அதைப் பார்த்துக் கொண்டிருந்தார். இவ்வளவு பெரிய குடும்பத்தில் நடந்திருந்த அந்த விஷயம் எல்லோ ருக்கும் தெரியும்தான். இருந்தாலும் அந்த விஷயத்தைத் தொட்டு விடாமல் நாசூக்காக மற்ற விஷயங்களைப் பற்றி மட்டும் பேசினார் நல்லசாமி

''உங்க வீட்ல எல்லாரும் நல்லா இருக்காங்களா?'' என்றார் சந்திரமோகன்.

''நல்லாயிருக்காங்கய்யா''

''அம்மாவைப் பார்த்தேன். கிளப்புக்கு வந்திருந்தாங்க. ஆனா அவங்க உங்க கடை புடவையைக் கட்றதில்லை போல இருக்கு!'' என்று ஜோக் அடித்தார் சந்திரமோகன்.

நல்லசிவம் அசடு வழிய சிரித்தார். ''இல்லே இல்லைங்க. நம்ம கடை புடவைதான்!'' என்றார் சின்ஸியராக.

''ஒரு ஜோக்குக்கு சொன்னன்ய்யா!'' என்றார் சந்திர மோகன். அவர்கள் சிற்றுண்டியை அருந்திவிட்டு வெளியிலே வந்தார்கள்.

''காம்ப்ளிமெண்டா நல்ல சூட்கேஸ் அஞ்சாறு கொடுத்திருக்கேன்கய்யா!'' என்றார்.

''எனக்கு எதுக்குய்யா?''

''இல்லல்லே! இருக்கட்டும்.''



''சரி, சரி, குடுங்க நாம முக்கியமானவங்க யாருக்காவது கொடுத்துக்கலாம்!'' என்றார்.

நான்கு பெரிய சூட்கேஸ்கள்! நல்ல சூட்கேஸ்கள்! ஒவ்வொன்றும் ஆயிரக் கணக்கான விலையுள்ளது. துணிமணிகளை அடுக்கிக் கொடுத்தார்.

நாலு சூட்கேஸையும் வேலையாட்கள் வந்து எடுத்துக் கொண்டு போனார்கள். இரண்டு சூட்கேஸ் காலியாக கொடுத்தனுப்பினார். கீழ்த் தளத்திற்கு வருவதற்கு முன்பாக வழியிலே தெரிந்தவர்களிடமெல்லாம் பேசிக் கொண்டு வந்தார் சந்திரமோகன்.

அப்போது அந்தப் பக்கமாகப் போன அந்த இளைஞனை கவனித்தாள் இந்துமதி.

அவன் முழுக்கை சட்டை அணிந்து பேண்ட் அணிந்து பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தான்.

''அடடா! அருள் பிரகாஷ் நல்லாயிருக்கியாப்பா?'' என்றார் சந்திரமோகன்.

''நல்லாயிருக்கேன் சார்! என்ன சார்? கடையையே பாதி விலைக்கு வாங்கிட்டீங்க போல இருக்கு!'' என்று சிரித்தான் அருள் பிரகாஷ்.

''ஆமாமா! நீ உன் நுகர்வோர் பிரச்சாரத்தையெல்லாம் இங்கே ஆரம்பிச்சுடாதே!'' என்றார்.

''இடம் தெரியாம செய்வேனா?'' என்றான் அழுத்தமாக.

''ஏம்ப்பா, நமக்கு இருக்கறது ஒரே பொண்ணு. அவளை அக்கறையா கவனிக்கணுமில்லே?. அதான் இவ்வளவு ஷாப்பிங்''

''சார்! இதெல்லாம் உடுத்தி முடிக்கறதுக்கே ரெண்டு வருஷம் ஆயிடுமே?'' என்றான்.

''நீ எங்கே அதெல்லாம் பார்த்தே?'' என்றார்.

''இல்லே சார்! நான் மேல நம்ம ஒண்ணு விட்ட சிஸ்டருக்கு ஒரு சுடிதார் எடுக்கறதுக்காக வந்திருந்தேன். ஒரு ஆயிரம் ரூபாய்க்கு ஒரு சுடிதார் எடுத்துட்டு உங்க முன்னாடி அந்த சுடிதாரோட வந்து நின்னு பேசினா சமானமாவா இருக்கும்?'' என்றான் அருள்பிரகாஷ்.

''கிண்டல் பண்றே?'' என்றார் சந்திரமோகன்.

''இல்ல சார்! உண்மையாவே...!''

''ஏய்! நீ அப்படியெல்லாம் ஃபீல் பண்றவனா? நீ சுயமரியாதைக்காரன். நீ அஞ்சு லட்சத்துக்கு எடுத்தா எனக்கு ஆயிரம் ரூபாய் பெருசுன்னு தானே பேசுவே!'' என்றார்.

அருள் பிரகாஷ் சிரித்தான். ''பை த பை! மீட் மை டாட்டர் இந்துமதி. மை ஒன்லி டாட்டர். காலேஜ்ல படிச்சுகிட்டு இருக்கறா பி.காம்., சி.ஏ.வோ என்னவோ படிக்கறா. ஆனா அடுத்த வருஷம் எம்.பி.ஏ. பண்ணனும் சொல்லிக்கிட்டு இருந்தேன்!'' என்றார்.

அவன் ''வணக்கம் மேடம்!'' என்றான்.

அவளும் வணக்கம் என்றாள். சூட்கேஸ்கள் எல்லாம் காரிலே ஏற்றப்பட கையிலே இரண்டு காலி சூட்கேஸ் இருந்தது.

''அருள் இங்கே வா!'' என்றார்.



வணக்கம் சொல்லி விட்டு நகர்ந்தவனை அழைக்கவும் அவன் திரும்பி வந்தான். இந்த சூட்கேஸை என்னோட காம்ப்ளிமெண்டா வச்சுக்கோ!'' என்றார்.

''எதுக்கு சார்?''

''இல்லப்பா! அஞ்சாறு கொடுத்திருக்காரு. வேண்ணா இதையும் வச்சுக்கோ. ரெண்டையும் வச்சுக்கோ. நீ அடிக்கடி டிராவல் பண்றே! நான் என்ன விலைக்கா வாங்கிக் கொடுத்தேன். எனக்குக் கொடுத்தாங்க. உனக்குக் கொடுக்கறேன். நீ வச்சுக்கோ!'' என்றார்.

அவனுக்கு அது உபயோகமாத்தான் இருக்கும். ''சரி ஆத்துல போற தண்ணியா? அய்யா குடி அம்மா குடின்னு எவன் எவனோ குடிக்கறான். நீ நல்ல பையன் நுகர்வோர் இயக்கமெல்லாம் வச்சுக்கிட்டு ஊருக்கு நல்லது சொல்லிக்கிட்டு இருக்கறே?''

''அது.... பண்ற பாவத்துக்குப் பரிகாரம் சார்!'' என்றான் அவன்.

''ஆமாமா!'' என்று கடகடவென்று சிரித்தார் சந்திரமோகன்.

''அது அப்படித்தான். ஒரு பக்கம் ஒரு பொருளைப் பற்றி வியாபாரத்துக்காக பூஸ்ட் பண்ணி அட்வர்டைஸ் பண்றே. இன்னொரு பக்கம் இந்தப் பொருளை இப்படி வாங்கிடாதிங்க. பிளாஸ்டிக்கை வாங்கிடாதிங்க. அதை வாங்காதிங்கன்னு விளக்கமும் கொடுக்கறே!''

''சார்! அட்வர்டைஸ்மெண்ட்ல கூட நான் முடிஞ்ச வரைக்கும் தரம் பார்த்துத்தான் பண்ணுவேன்.ரொம்பப்

பொய்யாவெல்லாம் பண்ண மாட்டேன். ஓரளவுக்குக் குவாலிட்டி உள்ள புராடக்ட்ஸ்தான்! செலக்ட் பண்ணுவேன். எதுக்கு வேண்ணா பண்றதுன்னா நான் இந்த நேரத்துக்குப் பெரிய ஆள் ஆகியிருப்பேன் சார்!'' என்றான்.

''ஆனா நிம்மதியாத் தூங்கறியே?'' என்றார் சந்திரமோகன்.

''அது நிஜம்தான் சார்!''

''உங்க அப்பா அம்மாவெல்லாம் நல்லா இருக்காங்களா? அது அந்த சிவப்பிரகாசம் உன் பிரதர் பற்றி ஏதாவது தெரிஞ்சுதா?'' என்று கேட்டார்.

அவன் முகம் வாடியது. ''இல்லைங்க சார்! ஒண்ணும் தெரியலை''

''சரி விடு! விடு! அவன் போன மாதிரியே வந்து சேருவான்'' என்றார்.

''உங்க அப்பாவும் அப்படித்தான். உன்னை மாதிரித்தான். பிரின்ஸ்ப்பல்ஸ்ன்னுகிட்டு வாத்தியார் வேலை பார்த்துட்டு ஏதோ அந்த வீட்டைக் கட்டினாரு. அதுல நீங்க இப்ப மேலே இருந்துட்டு நீங்க கீழே வாடகை வாங்கிக்கறீங்க, அவருக்கும் ஏதோ பென்ஷன் வருது இல்லே.,'' என்றார்.

தன்னுடைய தந்தையும் சந்திரமோகனும் பால்ய தோழர்கள் என்பது அவனுக்கு தெரியும். ஒரே பகுதியில் இருந்தவர்கள். அப்போதெல்லாம் ஏற்றத் தாழ்வு எதுவும் இருக்கவில்லை.



''நான் வரேன். உங்க அப்பாவை வந்து ஒரு தடவை பார்க்கறேன்''

''பரவாயில்லை சார்! நீங்க டைம் சொன்னீங்கன்னா நானே அப்பாவைக் கூட்டிட்டு வந்து காட்டிட்டுப் போயிடறேன்''

''அப்படியா? அப்படி செஞ்சேன்னா ரொம்ப சந்தோஷம். ஒண்ணு பண்றியா? இந்த வாரமெல்லாம் நான் இங்க தான் இருக்கேன். கோயம்புத்தூர்லதான் இருக்கேன். சண்டேதான் ஃபிரான்ஸ் கிளம்புறேன். வெள்ளிக்கிழமை கூட்டிட்டு வர்றியா?'' என்றார்.

''சரிங்க சார்! எங்கே கூட்டிட்டு வரட்டும்?'' என்று கேட்டான்.

''நம்ம ஆர்.எஸ்.புரம் பங்களாவுக்குத்தான். இந்த வாரம் ஒரு நாலஞ்சு நாள் இந்துவோட இருக்கணுங்கறதுக்காகவே எல்லாத்தையும் தள்ளி வச்சுட்டேன். இந்து இந்த வாரம் என்கூட தான் இருக்கப் போறா!'' என்றார்.

''அப்படிங்களா?'' என்று கேட்டுக் கொண்டான். பிறகு சூட்கேஸ் இரண்டையும் எடுத்துக் கொண்டு நகர்ந்தான். அவர்களும் பின்னாலேயே வந்தார்கள். மரியாதைக்காக அவர்கள் கார் ஏறும் வரை வந்து நின்று வழியனுப்பினான்.

''சரிப்பா! அப்பாவை உடம்பைப் பார்த்துக்கச் சொல்லு! அம்மாவைக் கேட்டேன்னு சொல்லு!'' என்றபடி கிளம்பினார் சந்திரமோகன்.

இவன் வணக்கம் தெரிவித்தான்.

சந்திரமோகனும் இந்துமதியும் ஒரே சமயத்தில் வணக்கம் தெரிவித்தார்கள். கார் மெல்ல நகர்ந்தது. ஏதோ ஒரு தேரிலே ஒரு மகாராணி நகர்வது போல ஒரு கற்பனை அவன் முகத்திலே தோன்றியது.

'இவ்வளவு பணத்துக்கு அவர் துணிமணிகளை வாங்கிக் குவிக்கிறார். ஆனால் அந்த பெண்ணின் முகத்தில் சிறிதும் மகிழ்ச்சி இல்லாத மாதிரி இருக்கிறதே!' என்று அவனுக்கு தோன்றியது. 'கற்பனையோ? அந்தப் பொண்ணு அவங்க அப்பாவுக்கும் அம்மாவுக்கும் ஏக வாரிசு. அப்பா அம்மா கதை எல்லாருக்கும் தெரிஞ்சதுதான். ஆனா என்ன பண்ண முடியும்? பெரிய இடத்து விவகாரம் நமக்கு எதுக்கு?' என்று நினைத்தவனாக அந்த சூட்கேஸைப் பார்த்தான்.

அதே நேரத்தில் முதலாளி அங்கே வந்தார். "என்னப்பா? ரெண்டு சூட்கேஸையும் உனக்குக் கொடுத்துட்டாரா?" என்று கேட்டார் முதலாளி.

"ஆமா! இன்னைக்கு எனக்குப் பொருள் வரவு அப்படின்னு ராசி பலனில் போட்டிருந்தது!" என்று சிரித்தான். அவரும் சிரித்தார்.

"இல்லாட்டி நீங்க குடுப்பீங்களாக்கும்?" என்றான்.

"குடுக்கறேன்பா! நீயும் அந்த அளவுக்கு ஜவுளி வாங்கினா கொடுக்கறதுதான்! என்றார்.

"அந்த அளவுக்கு ஜவுளி வாங்கி ஆறு சூட்கேஸ் வாங்கறதுக்கு நான் சூட்கேஸையே விலைக்கு வாங்கிக்குவேன்!" என்றான் அருள்பிரகாஷ்.



"அருள் பிரகாசு! அப்பப்ப நீ இப்படி வெடி போடுவே?!" என்று கலகலவென்று சிரித்தார் நல்லசிவம்.

"சரிங்க சார்! அந்த விளம்பரம் பத்திப் பேசலாம்னுதான் வந்தேன்!" என்றான்.

அவன் வியாபார விஷயத்தில் கருத்தைச் செலுத்தினான். ஆனாலும் அந்த இந்துமதியின் முகம் மனதுக்குள்ளே வந்து போய்க் கொண்டிருந்தது.

## அத்தியாயம் - 2

அடுத்த வாரத்தில் ஒரு நாள் ஒரு பெரிய நகைக் கடைக்குள் நுழைந்தான் அருள் பிரகாஷ். இந்த நகைக் கடைக்கான விளம்பரம் ஒன்றில் அவனையும் கூட்டு சேர்த்துக் கொண்டிருந்தார் ஒரு பெரிய அட்வர்டைசிங் நிறுவனத் தலைவர், கோவையில் மிகப்பெரிய அட்வர்டைசிங் நிறுவனர்.

"நிறைய வருதுப்பா. எனக்குத்தான் முடியலை.ஏதோ ஒரு ரெண்டு பிட்டு மட்டும் நீ பண்ணித் தாயேன்!" என்று கேட்டார்.

"சரிங்க சார்! இந்த வாரம் ஃப்ரீயாத்தான் இருக்கேன். வேண்ணா பண்ணித் தரேன்!" என்றான் இவன்.

ஒரு பெரிய நடிகையை வைத்து இந்த விளம்பரம் செய்வதாக ஏற்பாடு. அந்த நடிகைக்கு அணிவிப்பதற்கான நகையை முடிவு செய்வதற்காக வந்திருந்தான். எப்படி

யெல்லாம் அந்த நடிகையை விளம்பரத்தில் வரச் செய்யலாம் என்று ஏற்கனவே திட்டம் போட்டு வைத்திருந்தார்கள்.

நதியிலே குளித்து எழுந்து வரும்போது அதற்கு ஏற்ற வகையில் நகைகள். அவளே கல்லூரிக்குச் செல்வது போல அந்த நேரத்தில் நகைகள், ஒரு பார்ட்டியில் அவள் அணிந்திருக்கும் நகைகள், கோயிலுக்குச் செல்லும் போது அணிந்திருக்கும் நகைகள் இது எல்லாமே இரண்டு நிமிஷத்துக்குள்ளாக வந்து போக வேண்டும். ஆனால் நகைகள் ப்ராமினென்ட்டாகத் தெரிய வேண்டும் என்றெல்லாம் முதலாளியின் கேபினில் அமர்ந்து ஒரு அரை மணி நேரம் பேசிக் கொண்டிருந்தான்.

அந்த நேரத்தில் ஒரு பெண்மணி தடபுடலாக காரிலே வந்து இறங்கினாள். முதலாளி உடனே கூட இருந்தவர்களிடம் ''சிந்துஜா அம்மா வர்றாங்கடா சிந்துஜாம்மா! போங்கடா போய் வரவேற்பு பண்ணிடுங்கடா!'' என்று சொல்லி விட்டு ''இல்லே தம்பி! பெரிய பார்ட்டி!'' என்று தலையசைத்து விட்டு இவரும் வேகமாகப் போனார்.

''அம்மா வாங்க! அம்மா வாங்க!'' என்று கை கூப்பினார். அந்தக் காரிலே இருந்து இந்துமதியும் இறங்கினாள். பழக்கத் திற்காக இவன் இந்துமதியைப் பார்த்து புன்னகைத்தான். அவளும் லேசாகப் புன்னகைத்தாள். ஆனால் அமர்த்தலாக நின்று கொண்டாள்.

''சின்னம்மா வந்திருக்காங்களா? வாங்க வாங்க!'' என்று வரவேற்றார் முதலாளி.

''என்ன மிஸ்டர் முருகவேல்? நல்லாயிருக்கீங்களா?'' என்றாள் சிந்துஜா.



''ஏதோ உங்க புண்ணியத்துல நல்லாயிருக்கேம்மா!'' என்றார்.

''எங்க புண்ணியத்தையெல்லாம் உங்களுக்குக் கொடுத்துட்டா அப்புறம் எங்களுக்கு என்ன மிச்சம் இருக்கும்?'' என்றாள் சிந்துஜா.

''அம்மா இப்படித்தான் எப்பவும் ஜோக் அடிப்பீங்க!'' என்றார் முதலாளி.

''சரி, சரி, என் டாட்டரைக் கூட்டிட்டு வந்திருக்கேன் அவளுக்குக் கொஞ்சம் நகையெல்லாம் எடுக்கணும்!'' என்றார்.

''எடுத்தர்லாம்மா! லேட்டஸ்ட் ஃபேஷன் நிறைய வந்திருக்கு. டி.வி.லயெல்லாம் பார்க்கறீங்கள்லே அதையெல்லாம் தூக்கி சாப்பிடற மாதிரி டிசைனெல்லாம் பண்ணியிருக்கோம்மா. டேய்! பசங்களா! அந்த ஆரம் எல்லாம் கொண்டு வந்து காட்டுங்க, நெக்லஸ் காட்டுங்க, வளையல் காட்டுங்க, செட் செட்டா காட்டுங்கடா!'' என்றார்.

''அம்மா! எனக்கு தடி தடியா வேண்டாம். சிம்பிளா போதும்!'' என்றாள்.

''வாங்க! உட்காருங்க!'' என்றார். அவர்கள் இரண்டு பேரும் அந்த ஹாலில் இருந்த சேர்களிலே வந்து அமர்ந்தார்கள்.

''உள்ளே கேபின்லே உட்கார்ந்துக்கலாமா அம்மா?''

''இல்லே, இல்லே, இங்கயே இருக்கறோம்.அப்பதா சுத்தி முத்தியும் பார்த்து ஏதாவது பிடிச்ச மாடல் இருந்த எடுக்கலாம்''

''தம்பி! நீங்க உட்காருங்க!'' என்று அவனை இரண் சேர் தள்ளி அமரச் செய்தார் முருகவேல்.

'சரி, இந்த வியாபாரம் முடியட்டும்!' என்று அவனு அமர்ந்து கொண்டான்.

''அதுக்குள்ளே காஃபி சாப்பிடுங்க தம்பி!'' என் முணுமுணுத்து விட்டு அவனுக்கு காஃபியை வரவழைத்து கொடுத்தார். அவனும் எதற்கு வம்பு என்று இன்னு இரண்டு சீட்டு தள்ளி அமர்ந்து கொண்டான்.

அமைதியாக காஃபியை அருந்தினான். இருந்தாலு தாயும் மகளும் பேசிக் கொள்வது அவன் காதில் விழத்தா செய்தது. ''என்னமோ பெரிய இவராம்! ஜவுளிக் கடைக்கு கூட்டிட்டுப் போய் அஞ்சு லட்ச ரூபாய்க்கு ஜவுளி வாங்கி கொடுத்துட்டாராம். இந்த பெருமை பீத்தல் தாண்டி உங் அப்பன்கிட்டே எனக்குப் பிடிக்கறதில்லை.இதனா தாண்டி பிரச்சினையே வந்தது!'' என்றார் சிந்துஜா.

இந்துமதி சற்று நேரம் ஒன்றும் பேசவில்லை. பிற ''அம்மா, அப்பா பெருமைக்காகவெல்லாம் வாங்கி தரலை. ஆசையாத்தான் வாங்கித் தந்தாரு. அவருக்கு டைம் கிடைக்கறதே பெரிசு'' என்று அவள் முடிப்பதற்குள்ளா அம்மா தலையிட்டாள்.

''அப்போ நாங்கல்லாம் என்ன ஈ ஓட்டிக் கிட்டிரு கோமா? உங்க அப்பன் தான் பெரிய பிஸினஸ் மேனா நானும் பிஸினஸ் உமன் தா ண்டி''



''அம்மா, இல்லேன்னு யாரு சொன்னா?''

''அவரு ஆறு ஃபேக்டரி ரன் பண்ணினா நான் ரெண்டு ஃபாக்டரியாவது ரன் பண்றனா இல்லையா? நடத்திட்டுத் தாண்டி இருக்கேன்'' என்றாள்.

இந்துமதிக்கு தலையில் கையை வைத்துக் கொள்ளலாம் போல இருந்தது. ஆனாலும் ''சரிம்மா! உன் இஷ்டத்துக்கு என்னமோ பண்ணும்மா!'' என்று சொல்லி விட்டு அமர்ந்தாள்.

''உனக்கு... கூடவே வச்சு பார்த்துட்டு இருக்கற என்னைக் கண்டா பாசம் இருக்கறது இல்லடி. என்னைக்காவது ஒரு நாளைக்கு வந்து டாய் டுய்னுட்டுப் போறாரு பாரு! அவரு மேல தான் பாசம்!'' என்றாள்.

''அப்படி இல்லம்மா. நீ சொன்னதாலதான் நான் உன் கூடவே இருக்கேன். உன் பாசம் முழுக்க எனக்குக் கிடைக்குது. அவரு எப்பவாவது தானே வர்றாரு?''

''யார் அப்படி இருக்கச் சொன்னா? யார் அப்படி பிஸினஸ் பண்ணச் சொன்னா?'' என்றாள் கையை ஆட்டிக் கொண்டு.

இந்துமதி மறுபடியும் அமைதியாக அமர்ந்து கொண்டாள். லேசாக ஓரக் கண்ணால் அருள் பிரகாஷைப் பார்த்தாள். அருள் பிரகாஷ் கவனமாக வேறு பக்கம் பார்த்தான். காஃபி குடித்துக் கொண்டிருந்தான். ஆனால் காதுகள் இரண்டும் தீட்டப்பட்டது போல இவர்கள் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்தன.

இந்துமதி பெருமூச்சு விட்டாள். "அம்மா, அப்பாவோட ஃப்ரெண்ட்ஸ் யாராவது இருக்கப் போறாங்கம்மா. நீ இப்படியெல்லாம் பேசி யாராவது சொல்லிக் கொடுத்தரப் போறாங்கம்மா!" என்றாள்.

"சொல்லிக் கொடுத்தா என்ன ஆகும்? உங்க அப்பா என்ன தலையா எடுத்துருவாரு!" என்றாள் சிந்துஜா.

"சரிம்மா, தலையை எடுக்க மாட்டாரு. பட் ஒரு பப்ளிக் பிளேஸ்ல நீங்க ரெண்டு பேரும் இப்படி கிரிட்டிசைஸ் பண்ணிகிட்டா நல்லாவா இருக்கு?" என்றாள்.

"அதை வேண்ணா சொல்லு. நான் கொஞ்சம் குறைச்சுக்கறேன்!" என்றவள் "சரி, இங்க பாருடி. பணத்தையே பார்க்காதே! இந்த வருஷம் முழுக்க நான் உன்னை ஷாப்பிங் கூப்பிட்டேன். நீ வரவே இல்லை. அடுத்த ரெண்டு வாரத்துல ஒரு பெரிய கல்யாணம் வருது"

"ஆமாம்மா! அப்பா கூட அதுக்கு வருவேன்னாரு"

"ம்ஹூம்! அவரு வந்தா என்ன? வராட்டி என்ன? ஆனா அந்தக் கல்யாணத்துல நீதான் டாப்பா இருக்கணும். பொண்ணை விட நீதான் விதவிதமா நகை போட்டு நிக்கணும்!" என்றாள்.

"நான் என்ன மாடலா? நகைக் கடை மாடலா? அப்படியெல்லாம் போட மாட்டேன். நான் சிம்பிளாதான் போடுவேன்!" என்றாள்.

"இத பாருடி! உன் ஃப்ரெண்ட்ஸ் கல்யாணத்துக்கு இத்துனூண்டு சன்னமா மாட்டிக்கிட்டு போறே, ஓகே. இது



சொந்தக்காரங்க கல்யாணம். இது என் கௌரவப் பிரச்சினை, அதுவும் இல்லாம உங்க அப்பாவுக்கு முன்னாடி நான் உன்னை எவ்வளவு செல்லமா வச்சிருக்கேன்னு உங்க அப்பாவுக்குத் தெரியணும்!" என்றாள்.

"நான் சந்தோஷமா இருக்கறதை விட எங்க அப்பா கிட்டே நீ நிரூபிக்கணும். அதுதான் முக்கியம்.இல்லே?" என்றாள்.

"அப்படித்தாண்டி! இப்ப நீ சந்தோஷமா இல்லையா?"

"அய்யோ அம்மா! இப்ப நான் சந்தோஷமாத்தான் இருக்கேன். போதுமா?" என்றாள் இந்துமதி கடுப்பாக.

"ம்! அப்படிச் சொல்லு" என்றவள் பார்த்துப் பார்த்துத் தான் நகைகளைத் தேர்ந்தெடுத்தாள்.

"அம்மா! நீ எல்லாமே கனமா, பெரிய சைஸா எடுக்கறே! அது எனக்குப் பிடிக்கலை. அது உன் இஷ்டத் துக்கு எடுத்துக்கோ. உண்மையா ஷாப்பிங் என் பிரியத்துக்கு கூட்டிட்டு வந்தீன்னா எனக்காக நானும் கொஞ்சம் எடுத்துப்பேன்!" என்றாள்.

"சரி!" என்றாள், அந்தப் படிக்கு அவள் கழுத்தோரத்தில் இருக்கிற மாதிரி ஒற்றைச் சரமாக அதிலே விதவிதமாக ஒரு பத்து நெக்லஸுக்கு மேலாக எடுத்தாள்.

"பத்தும் சேர்த்து இருபது பவுன் கூட வரலை!" என்றாள் அம்மா.

"நீ என்னம்மா? என்ன நினைச்சு என்னைக் கூட்டிட்டு வந்தே!"

"இத பார்றி, இன்னைக்கு நூறு பவுன் நான் உனக்கு வாங்கித் தரப் போறேன்!" என்றாள்.

"அம்மா...!?" என்றாள் இந்துமதி.

"ஆமாடி! நூறு பவுன்....! உனக்கு நகை வாங்கிக் கொடுத்து ஏழெட்டு வருஷமாச்சு. இன்னைக்கு வாங்கிக்கோ. நான் உனக்கு கிலோ கணக்கா போடப்போறேன். இந்த நூறு எம்மாத்திரம்!" என்றார்.

"ஆண்டவா!" என்று சலித்துக் கொண்டாள் இந்துமதி.

"இத பார்றி, ஒரு நெக்லஸ் கிடைக்காதான்னு எத்தனையோ பேர் ஏங்கிகிட்டிருக்காங்க!"

"அதாம்மா, நானும் சொல்றேன். எத்தனை பேரு உலகத்துல அப்படி இருக்காங்க. நமக்கு எதுக்கும்மா இவ்வளவு ஆடம்பரம்?"

"ஆடம்பரமெல்லாம் ஒண்ணும் இல்லடி. இந்தப் பத்து நெக்லஸையும் நீ வீட்ல வச்சுக்கோ. மத்ததெல்லாம் லாக்கர்ல இருக்கட்டும். அடுத்த வாரம் கல்யாணத்துக்குப் போறப்போ இந்த செட்தான் நீ போடப்போறே!" என்று ஒரு பெரிய செட்டை எடுத்துக் காண்பித்தாள்.

"அம்மா, கனக்கும்மா!" என்றாள்.

"கனத்தா என்ன? மொத்தமாவே ஒரு இருபது பவுன் தான் வருது!" என்று கிட்டத்தட்ட நூறு பவுன் வரைக்கும் தேர்ந்தெடுத்தாள். இந்துமதி மௌனமாக அமர்ந்து கொண்டாள்.

கடைக்காரர் வாயெல்லாம் பல்லாக உபசரித்தார்.



"கூல்டிரிங்க்ஸ் சாப்பிடறீங்களாம்மா? என்ன சாப்பிடறீங்க?" என்றார்.

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்"

"கொஞ்சம் ஸ்நாக்ஸாவது...!" என்றார் பதவிசாக.

"சரி, கேபின்ல வைங்க! அங்கே வந்து பார்த்துக்கலாம்!" என்றாள்.

அவர்கள் தேர்ந்தெடுப்பதற்கே இரண்டு மணி நேரத்துக்கு மேல் ஆகி விட்டது. இடையிலே இவனைக் கெஞ்சுதலாகப் பார்த்தார்.

"பரவாயில்லை!" என்றான் இவனும். இன்று இந்த நாள் முழுக்க இவன் இந்தக் கடைக்காக ஒதுக்கியிருக்கிறான் என்பதால் சட்டென்று எழுந்து எல்லா நகைகளையும் பார்வையிட்டுக் கொண்டிருந்தான்.

நூறு பவுன் இருபது லட்சத்துக்கு மேல் வருமா என்று கணக்குப் போட்டுக் கொண்டிருந்தான். அன்றைக்கும் அப்படித்தான் இந்தப் பெண் மகிழ்ச்சியே இல்லாமல் இருந்தாள். இத்தனை வாரி இறைக்கிறாள் அவளுடைய தாய். ஆனாலும், அவள் மகிழ்ச்சியே இல்லாத மாதிரி இருக்கிறாளே என்று தோன்றியது.

"சரி வாடி, சரி கேபின்ல ஸ்நாக்ஸ் சாப்பிடலாம்!" என்று அழைத்தாள் அம்மா.

"அம்மா! எனக்கு எதுவும் வேண்டாம். நீ போய் சாப்பிடு! நான் அப்படியே மீதி மாடலெல்லாம் பார்க்கறேன்!"

''பாரு, பாரு! ஏதாவது புடிச்சதுன்னா செலக்ட் பண்ணு!'' என்றாள் உற்சாகமாக.

''சரிம்மா!'' என்றாள்.

அவள் இன்ட்ரஸ்ட் இல்லாது வருவது போல கேஷுவலாக வருவது போல அப்படியே நடந்து அருள் பிரகாசம் நின்று கொண்டிருக்கிற இடத்துக்குப் பக்கத்திலே வந்து ''வணக்கம் சார்!'' என்றாள்.

''வணக்கம்!'' என்றான் அவன். ''என்ன ஷாப்பிங் பொளந்து கட்டுறீங்க?'' என்றான்.

''சார்! நாங்க பேசினது எல்லாம் உங்க காதில விழுந்ததுன்னு எனக்குத் தெரியும். தயவு செய்து எங்க அப்பாகிட்டே...!''

''ஹலோ மேடம்! இது என்ன இப்படி சொல்றீங்க, இந்த விஷயத்தையெல்லாம் எதுக்கு உங்க அப்பாகிட்ட பேசப் போறேன். எப்பவாவது தான் சந்திப்பேன். அப்ப அவரு விஷயம் என் விஷயம் பேசறதுக்கே நிறைய இருக்கும்''

''இல்லே! உங்க அப்பாவும் எங்க அப்பாவும் நெருங்கின ஃப்ரெண்ட்ஸ்னு அன்னைக்கு சொல்லிக்கிட்டு இருந்தீங்க. பேச்சு வாக்கில ஏதாவது சொல்லிடாதீங்க சார்!''

''இல்லம்மா. நான் அதெல்லாம் சொல்ல மாட்டேன் அதனால எனக்கு என்ன பலன்?இத்தனை ஷாப்பிங் செய்யறீங்க. நீங்க ஏன் சந்தோஷமா எடுத்துக்க மாட்டேங் கறீங்க?'' என்று கேட்டான்



இந்தக் கேள்வியை அவள் எதிர்பார்க்கவில்லை. ''சார், இதுவே பத்து ஏழைப் பெண்கள் குடும்பங்களுக்கு கிடைச்சா கல்யாணம் ஆகிடுமில்லே?'' என்றாள்.

அவன் ஆச்சரியமாக அவளைப் பார்த்தான். ''ஆமா சார்! இதெல்லாம் வெட்டி ஆடம்பரம். எங்க அம்மாவும் சரி அப்பாவும் சரி சொன்னா கேட்க மாட்டாங்க!'' என்றாள்.

''சரி விடுங்க! கிடைக்கறதை அனுபவிங்க. ஏன் சங்கடப் பட்டுக்கறீங்க? சந்தோஷமா அனுபவிங்க!'' என்றான்.

''அப்படித்தான் மனசைத் தேத்திக்கறேன். ஆனாலும் என்னமோ என்னை ஒருத்தர் இந்தப் பக்கம் இழுக்கற மாதிரியும் ஒருத்தர் அந்தப் பக்கம் இழுக்கற மாதிரியும் தோணுது''.

''என்னங்க இது? எதுக்கு இழுக்கணும்? இது அம்மா, அது அப்பா. எதுக்காக ஒருத்தருக்கு ஒருத்தர் இழுக்கணும்!'' என்றான்.

''என்னமோ தெரியலை சார்! உங்ககிட்டே ஃப்ரீயா பேசலாம்னு எனக்குத் தோணுது!''

''தாராளமா சொல்லுங்க. கான்பிடன்ஷியலா வச்சுப்பேன். இதெல்லாம் அட்வர்டைஸ் பண்ண மாட்டேன்!'' என்றான்.

அப்பொழுதுதான் அவள் வேதனையோடு அந்த வார்த்தைகளை சொன்னாள். அவன் திடுக்கிட்டுப் போய் அவளைத் திரும்பிப் பார்த்தான்.

''என்ன சொன்னீங்க? சந்தோஷம்கறது காசு, பணத்துல இல்லையா?'' என்றான்.

''ஆமாம்!'' என்றாள்.

''ஏங்க அப்படிச் சொல்றீங்க?'' என்றான். அப்போதுதான் அவள் அந்த வார்த்தைகளைச் சொன்னாள். அவன் திடுக்கிட்டுப் போய் அவளைப் பார்த்தான்.

''ஓஹோ!'' என்றான் சற்றே இறங்கிய குரலில். அதற்குள்ளாக 'இந்து...!'' என்று அவள் தாய் அழைக்கும் குரல் கேட்டது.

''தெரியுமே. வரேன்!''. என்று அவளும் நகர்ந்தாள்.

அவன் சட்டென்று திரும்பி நின்று கொண்டான். ''யாருடி அது? எதுக்கு இந்த மாதிரி ஆளுங்க கிட்ட யெல்லாம் பேசறே?'' என்று அவள் தாய் சொல்லிக் கொண்டே செல்வது அவன் காதுகளில் விழுந்தது.

கொஞ்சம் கடுப்பானான். ஆனால் அதற்கு மகள் ''அம்மா என்னம்மா?இந்த மாதிரி ஆளுங்கறே? அவரும் பெரிய ஆளுதான். பெரிய அட்வர்டைஸிங் ஏஜென்ஸி வச்சு நடத்திக்கிட்டு இருக்காரு. அப்பாவோட ஃப்ரெண்ட். சும்மா எல்லாத்தையும் இறக்கிப் பேசாதே!'' என்று கோபித்துக் கொண்டு பதில் சொல்வதைக் கேட்டவுன் அவன் மனமும் அமைதி அடைந்தது.

ஆனால் அந்த நகைக் கடையில் இருந்து வெளியேறும் போது அந்தப் பெண் சொன்ன வார்த்தைகளை சுமந்து கொண்டு தான் ஏதோ ஒரு வேதனையில் ஆழ்ந்தவனாகத் தான் போனான்.



## அத்தியாயம் - 5

**"அ**ப்பா, நல்லா சாப்பிடுங்கப்பா!'' என்றாள் இந்துமதி. தந்தையும் மகளும் உணவருந்த அமர்ந்திருந்தார்கள். அந்தப் பெரிய டைனிங் டேபிளில் அவர் நடுநாயகமாக அமர அவருக்கு இடது புறத்திலே அவள் இருந்தாள். வேலை ஆட்கள் ரெண்டு பேர் நின்று பரிமாறிக் கொண்டிருந் தார்கள்.

''நல்லாத்தாம்மா சாப்பிடறேன்! அம்பது வயசு ஆகப்போகுது. டாக்டர்ஸ் சுகர் பார்டர்ல இருக்கற மாதிரி சந்தேகப்படறாங்க. அதனால ஸ்வீட்டெல்லாம் கட் பண்ணிட்டேன்!'' என்றார்.

''என்னப்பா? போன மாசம் சுகர் இல்லைன்னீங்க!'' என்றாள்.

''ஆமாம்மா! இடைப்பட்ட காலத்துல ஒரு டெஸ்ட்டுக்குப் போகலாம்னு போனேன். எதுக்கும் கொஞ்சம் கேர்ஃபுல்லா இருங்கன்னு சொல்லியிருக்காங்க!'' அவள் அன்புடனும், கவலையுடன் அப்பாவைப் பார்த்தாள்.

''ஏம்ப்பா அலைஞ்சுக்கறீங்க? நான் ஒருத்தி தானே? வேணப்பட்டது கிடக்குது. எனக்கு இதுவே ரொம்ப அதிகமாத் தெரியுதுப்பா. டேக் கேர் ஆஃப் யுவர் ஹெல்த்!'' என்றாள்.

அவர் அன்புடன் இடது கையால் அவள் தலையைக் கோதி விட்டார்.

"என்ன செய்யச் சொல்றே? சும்மா இங்க இருக்க முடியாது. எனக்கு ஊர் ஊரா சுத்திப் பழகிடுச்சு. அப்படி இருந்தாத்தான் நல்லாயிருக்கு!" என்றார்.

"அப்பா! நான் ஒண்ணு சொல்றேன். கேட்கறீங்களா? எனக்காக எனக்காகன்னு சொல்றீங்க. இதை எனக்காக செய்ங்கப்பா!" என்றாள்.

"சொல்லும்மா!" என்றார்.

"நீங்க வெளிநாட்டிலே இருக்கிற கனெக்ஷன் எல்லாம் குறைச்சுக்கிட்டு...! நாலைஞ்சு ஃபேக்டரியைக் குறைச்சுக் கிட்டு...! ரெண்டு ஃபேக்டரியை மட்டும் வச்சுக்கிட்டு, ரெண்டு மில்லு மட்டும் வச்சுக்கிட்டு அதுல கொஞ்சமா பிஸியா இருந்துக்கோங்கப்பா போதும்!" என்றாள்.

"இல்லம்மா! உனக்கு நல்ல ஒரு மாப்பிள்ளையாப் பார்த்துக் கல்யாணத்தைப் பண்ணி வச்சுட்டு அப்புறம் தான் இதையெல்லாம் செய்யணும். பெரிய இடமா வந்ததுன்னா பெரிய அளவிலே செய்யணுமில்லே?" என்றார்.

அவள் மறுபடியும் அவரைக் கவலையுடன் பார்த்தாள். "அப்பா! எனக்குப் பெரிய இடமே அலுத்துப் போச்சுப்பா. நீங்களும் பெரிய இடம், அம்மாவும் பெரிய இடம். என்ன நடந்துகிட்டிருக்குது? இரண்டு பேருக்கும் ஈகோ போட்டி போகுது. அம்மா இறங்கி வர மாட்டேங்கறாங்க. நீங்களும் இறங்கி வரமாட்டேங்கறாங்கறீங்க!" என்றாள்.

சந்திரமோகன் சற்றுக் கோபமாக அவளைப் பார்த்தார். "இந்து என்னக் கடுப்பேத்தாதே. நீயே சொல்லு. உங்க அம்மாவுக்கு நான் எவ்வளவோ அட்ஜஸ்ட் பண்ணலையா?



ஆனா அவதான் என்னமோ பெரிய மில்லுக்கார வீட்டுப் பொண்ணுன்னு ரொம்ப அவமானப் படுத்தறா.நான் என் ஃபேக்டரியை நிர்வாகம் பண்ண வேண்டாமா? அவ அவளுக்கு பங்கு வந்ததுன்னு அவ அதையும் பார்க்கச் சொன்னா. சரி அதையும் நான் சேர்த்துப் பார்த்தேன். ஆனா அதுல ரொம்ப இண்டர்ஃபியர் பண்ணிட்டு ரொம்ப இடைஞ்சல் பண்ணினா. நடைமுறையும் அவளுக்குத் தெரிய மாட்டேங்குது. என்ன செய்யச் சொல்றே?" என்றார்.

'அது உண்மைதான் அப்பா. அம்மாவைச் சமாளிக்கிறது கொஞ்சம் கஷ்டம்தான்!' என்று எண்ணிக் கொண்டாள்.

"அது சரிப்பா! ஆனா உங்களுக்கும் கோபம் வந்துடுதில்லே? அம்மா இறங்கி வர்றப்ப நீங்க கொம்புல ஏறி உட்கார்ந்துக்கறீங்க!" என்றாள்.

"குரங்குன்னு சொல்றே!" என்று சிரித்தார் அப்பா.

"அய்யோ! அப்படி இல்லப்பா!" என்றாள் இந்துமதி.

"அம்மா, உங்க அம்மாகிட்ட யாராவது பேச முடியுமா? எதையாவது அவளுக்குப் புரிய வைக்க முடியுதா? ஒண்ணு குளிர்நிலவாய் பொழிவா. இல்லை சூரியனா தகிப்பா இது ரெண்டுமே நம்மளுக்கு கஷ்டமா இருக்கும்மா!" என்றார்.

அவளுக்குப் புரிந்தது. "சரிப்பா, நீங்க ரெண்டு பேரும் ரெண்டு எக்ஸ்ட்ரீமா நிக்கறீங்க. எனக்கு அம்மா அப்பா வோட சேர்ந்து சந்தோஷமா ஒரு நாள் இருக்கணுங்கற ஆசையே போச்சு. கடவுள் எனக்கு அப்படி ஒரு குடும்பத்தை... பினையைக் குடுக்கலை. கிடைக்க வேண்டியது கிடைக்கலை.

நிறையத் தங்க நகையும், ஒட்டறதுக்கு நாலு காரும் இருந்து எனக்கு என்னப்பா பிரயோஜனம்?'' என்றாள்.

''அம்மா, யு டோண்ட் பிளேம் மி. இப்பக் கூட உங்க அம்மாவை வந்து இங்க இருக்கச் சொல்லு. ஐ வி அட்ஜஸ்ட். உனக்காக அட்ஜஸ்ட் பண்றேன்''

இந்துமதிக்குத் தெரியும். அப்பா அட்ஜஸ்ட் செய்வதற்கு முயற்சி செய்வார். ஒரு நான்கு நாட்கள்தான். அதற்குப் பிறகு அம்மா ஏதாவது கடுப்பேற்றுவாள். அப்பாவுக்கு இருக்கிற பல வேலைகளில் இருக்கிற டென்ஷனில் அவரும் கடுப்பாகி விடுவார். மீண்டும் பெரிய சண்டைதான் நடக்கும்.

''பாரும்மா! ஆக்சுவலா நான் டைவர்ஸ் பண்ணனும்னு முடிவெடுத்தேன். பத்து வருஷத்துக்கு முன்னாலேயே ஆனா எங்க அம்மா அப்பா, உங்க தாத்தா பாட்டி எல்லாரும் உனக்காக பொறுத்துப் போகணும்னு சொன்னாங்க. அதுக்காகத்தான் இந்த அளவுக்காவது எல்லாம் நடந்துகிட்டிருக்கு. நானும் மனுஷன் தானே?'' என்றார்.

''சரிங்கப்பா! நீங்க அப்பவே டைவர்ஸ் பண்ணிட்டு மேரேஜாவது பண்ணியிருக்கலாம்.நான் மகள் தான் இருந்தாலும் சொல்லக்கூடாதுதான். ஆனாலும் நாப்பது வயசுல ஒருத்தர் தனியா இருக்கறது தப்புதானேப்பா! முடியாதுப்பா'' என்றாள்.

அவர் நாசூக்காக அந்தப் பேச்சைத் தவிர்த்து விட்டார். அந்த மாதிரித் தனிமையை நான் அவ்வப்போது தீர்த்துக் கொள்கிறேன் என்று அவளிடம் எப்படிச் சொல்ல முடியும்?



''சரிம்மா! நான் நாற்பது வயசுல வந்தேன். உங்க அம்மாவுக்கு அப்போது எவ்வளவு முப்பத்தைந்து கூட இல்லை. இப்போ அவள் வைராக்கியமா இல்லையா?'' என்றார்.

''அது நிஜம்தாம்ப்பா! அம்மா வந்து உங்களையே சமாளிக்க முடியலை. இன்னொருத்தரையெல்லாம் அம்மாவால சமாளிக்க முடியுமா?'' என்றாள் மகள்.

''அதாம்மா! உனக்காக எல்லாத்தையும் பொறுத்துக் கறது!'' என்றார். இவளுக்குத் தெரியவில்லை அப்பாவுக்கு ஒரு நட்பு இருக்கிறது, வெளிநாடு போகும் போதெல்லாம் அந்த நட்பு, அங்கேயும் வந்து விடும். ஆனால் அந்த நட்பு நட்பைத் தேர்ந்தெடுக்கும் போதே எந்த வித எதிர்பார்ப்பும் இல்லாத நட்பாகத்தான் தேர்ந்தெடுத்தார்.

அந்தப் பெண்ணுக்குக் குழந்தை பெற முடியாது என்பதைத் தெரிந்துதான் அப்படி ஒரு பெண்ணை தேர்ந் தெடுத்து ஆதரித்தார். இதெல்லாம் இவளுக்கு தெரிந்திருக்க வில்லை. அதனால் அப்பாவுக்கு ஏங்கினாள்.

அம்மாவை நினைத்தாலும் பாவமாகத்தான் இருந்தது. ஆனால் என்ன செய்வது. ''அப்பா! சரிப்பா உடம்பைப் பார்த்துக்கோங்க!'' என்றாள்.

அதற்குப் பிறகு அவள் அப்பாவிடம் சிரிக்கிற மாதிரி பேச ஆரம்பித்தாள். பிரான்ஸ், லண்டன் போகும்போது, வெளியூரிலே நடந்த கலாட்டாக்களை எல்லாம் அவரும் சிரிக்கச் சிரிக்க சொல்லிக் கொண்டிருந்தார்.

"அவனுங்க பேசற இங்கிலீஷுக்கும் நமக்கு புரியறதுக்கும் நடுவிலே நிறைய தமாஷ்மா. இப்போதைக்குப் பழகிப் போச்சுன்னுவை. ஆரம்பத்திலே பயங்கர கலாட்டா" என்று சந்தோஷமாக சிரித்துக் கொண்டிருந்தார்.

"அப்பா! நீங்க வந்து எனக்கு ஜவுளி வாங்கிக் கொடுத்தீங் கள்ளே அதுக்கப்புறம் அம்மா கூட்டிட்டுப் போய்...!" என்றாள்.

சந்திரமோகன் "தெரியும்! தெரியும்!" என்று விழுந்து விழுந்து சிரித்தார்.

"நூறு பவுன் வாங்கிக் கொடுத்தாளாம்மா! வாங்கிக்க வாங்கிக்க. ஆமா நான் உனக்கு ஒரு அலவன்ஸ் கொடுத்தேன். அவ ஒரு அலவன்ஸ் கொடுத்தா. நீ என்னதான் பண்றே?" என்றார்.

"அப்படியே வச்சிருக்கேன். ஆனா நான் என்ன பண்ணினாலும் நீங்க என்னன்னு கேட்கக் கூடாது எனக்குக் குடுத்தாச்சுல்ல" என்றாள்.

"அம்மா! நீ வேண்ணா தெருவுல தூக்கிப் போடு இல்லே டிச்சுல தூக்கிப் போடு. நான் கேட்க மாட்டேன். என் மகளுக்கு எது சந்தோஷமா அதை செய்!" என்றார் அப்பா.

"ஆனா, அம்மா அப்படி இல்லையேப்பா? குடுக்கும் போதே அதை என்னடி பண்றே? நகை வாங்கிக்கோ. புடவை வாங்கிக்கோன்னு ஒரே குடைச்சல் அப்பா. இல்லை ஏதோ சொத்து வாங்கிப்போடு உனக்கே மாசம்



லட்சக் கணக்கில வருதுடி. அப்படி இப்படின்னு ஒரே பேச்சுதான்".

"ஆமாம்மா! வேண்ணா நான் நல்ல இன்வெஸ்டர்ஸை இன்ட்ரொட்யூஸ் பண்றேன். இன்வெஸ்ட் பண்ணு!" என்றார்.

"வேண்டாம்ப்பா! நீங்க ரெண்டு பேரும் சேர்த்து வச்சிருக்க சொத்தே எனக்குப் போதும்!" என்றாள். "சரிம்மா! அப்புறம் சொல்லு."

"அய்யோ தமாஷுப்பா! ஒரு பெரிய ஆரம் அது இருக்குது, தாம்புக் கயிறாட்டம். அதை வாங்கியிருக்காங் கப்பா அதுக்குத் தகுந்த மாதிரி கழுத்துக்கு நெக்லஸாம் இந்த ரெண்டு சனியனையும்தான் நான் கல்யாணத்தப்ப போட்டுக்கணுமாம்!"

"அட ஆண்டவா! என் பொண்ணு கொடியாட்டாம் இருக்கா. இதை வேற மாட்டிக்கிட்டு கூட ரெண்டு பேரும் கைத்தாங்கலா பிடிச்சுகிட்டு வரணுமோ?" என்றார் அப்பா.

"அப்படித்தாம்ப்பா ஆச்சு!" என்று அவள் கலகலவென்று சிரித்தார்.

"இத்தனைக்கும் நடுவிலே உனக்குப் பிடிச்ச நகை வாங்கலையா?" என்றார்.

"நான் பிடிவாதம் பிடிச்சு எனக்குத் தகுந்த மாதிரி ஒன்றரை பவுன், ரெண்டு பவுன்னு சின்ன நெக்லஸ் கழுத்து ஒரமா இருக்கற மாதிரி, பிடிச்ச மாதிரி ஒரு பத்து நெக்லஸ் வாங்கினேன்!" என்றாள்.

''அதானே பார்த்தேன். அதையே மாத்தி மாத்தி போட்டுக்கம்மா''

''அப்புறம் மெல்லிசா தங்க வளையல் வாங்கினேன்ம்ப்பா! செயின் தான் நிறைய கிடக்குதேப்பா!'' என்றார்.

''அது சரி, நான் வாங்கியிருக்கிற டிரெஸுக்கெல்லாம் மேட்சிங்கா போட்டுக்கோ!'' என்றார்.

''நீங்க ரெண்டு பேரும் மேட்சிங்கா இருந்தா எனக்கு ரொம்ப வசதியா இருந்திருக்கும். மத்ததிலெல்லாம் மேட்சாகி என்னப்பா ஆகுது?''

''மறுபடியும் மறுபடியும் அந்தப் பாயிண்ட்டுக்குத்தானே வர்றே?'' என்றார் அவர்.

''போங்கப்பா! எனக்கும் வயது இருபது ஆச்சு. பத்து வயசுல இருந்து பார்த்துகிட்டிருக்கேன். ஏதோ பதினைஞ்சு வயசு வரைக்கும் ஏதோ டிராமாவாவது ஆடிகிட்டிருந்தீங்க. இப்ப சுத்தமா பிரிஞ்சு உட்கார்ந்துகிட்டிருக்கீங்க''

''பாரும்மா! நான் டைவர்ஸ் வேணும்னுதான் நினைச்சேன். உனக்காகத்தான் பேசாம இருந்தேன்''

''ஐய்யோ வேண்டாம்ப்பா! டைவர்ஸ்! ஸ்கூல் டேஸ்ல நான் அனுபவிச்ச ஜாடை மாடை பேச்சுக்களே போதும். எனக்குன்னு ஒரு கல்யாணம் நடந்தா அதில நீங்க ரெண்டு பேரும் நின்னு ஆசீர்வாதம் பண்றப்பதான் நான் கல்யாணம் பண்ணிப்பேன்!'' என்றாள்.

''சரிம்மா! கவலைப்படாதே! அப்படி ஒரு சிச்சுவேஷன் இருந்தா நான் கண்டிப்பா வந்து நிக்கறேன்'' என்றார்.



''ஆனா அதிலேயும் பிரச்சினைம்மா. நான் ஒரு மாப்பிள்ளையை சொல்லுவேன். உங்க அம்மா ஒரு மாப்பிள்ளையை சொல்லுவா! அதுலயும் பிரச்சினை வரும்''

''அப்பா! ப்ளீஸ்! எல்லா விஷயத்துலயும் நீங்க விட்டுக் கொடுத்துப் போங்கப்பா. அம்மா விட்டுக் கொடுத்துப் போக மாட்டாங்க!'' என்றாள்.

''அதாம்மா! வாழ்க்கையே தொலைச்சாச்சே. ம்!'' என்றார்.

''சரிப்பா! இந்த விஷயம் பேச வேண்டாம். இருங்க. நகைக் கடையில என்ன நடந்துச்சுன்னு நான் சொல்றேன்!'' என்றாள்.

நகைக் கடையில் அம்மா செலக்ட் செய்வதற்குள்ளாக அந்த முதலாளிக்கும் அம்மாவுக்கும் நடந்த பேச்சுக்களை யெல்லாம் நாடகமாக நடித்துக் காட்டினாள்.

''அப்பா! அந்த முதலாளி நல்லா நடிக்கிறாருன்னு எனக்குத் தெரியுது. அம்மா! சின்னம்மா! அப்படின்னுட்டு ஒரே நடிப்புப்பா. அம்மா அதை நம்புறாங்க. உடனே பெருமையா அப்படியா அப்படியான்னு சொல்லிட்டு அந்த காலத்துல வரலட்சுமி அம்மா நடிப்பாங்களே. டிவிடில படம் போட்டுப் பார்த்திருக்கேன் அந்த மாதிரி சீன் பண்ணிட்டு இருந்தாங்க''

''சரி..., ஃபேக்டரியெல்லாம் ஒழுங்கா நடக்குதா?''

''யாருக்குத் தெரியும்? தாத்தா போய் அப்பப்ப எட்டிப் பார்க்கறாங்க அதனால கொஞ்சம் கண்ட்ரோல் இருக்கு.

அம்மாவுக்கு கொஞ்சம் அட்மினிஸ்ட்ரேஷன் தெரியலை தான்னு நினைக்கறேன்பா. யாராவது ரொம்பப் புகழ்ந்தா நம்பிடறாங்க. உண்மைய சொன்னா ஏத்துக்க மாட்டேங் குறாங்க!'' என்றாள்.

''சரிம்மா! நீயும் நடிக்கப் பழகிக்கோ. நீயும் போய் நிர்வாகத்திலே உட்காரு!'' என்றார்.

''அவ்ளோதான். எனக்கும் அம்மாவுக்கும் டெய்லியும் சண்டைதான் நடக்கும்''

''இல்லம்மா, இது உன்னோட வேலை, இது என்னோட வேலைன்னு பிரிச்சுக்கோ எல்லாம் சரியாப் போகும்!'' என்றார்.

''சரிப்பா! அப்பப்ப நான் உங்ககிட்டே கைடன்ஸ் வாங்கிப்பேன்!'' என்றாள்.

''கிழிஞ்சது போ! எங்கிட்டே கைடன்ஸ் வாங்கினேன்னு தெரிஞ்சதுன்னா உங்க அம்மா உன்னை டிஸ்மிஸ்தான் பண்ணுவா!''

''அதெப்படி? எனக்காகத் தான் சொத்தேங்கறாங்க பின்னே எப்படி டிஸ்மிஸ் பண்ணுவாங்க?''

மறுபடியும் ஏதோ ஜோக் அடித்தார். தன் இடது கையால் மகளுடைய தன் இடது கையால் மகளுடைய தோளின் மேல் கை வைத்தபடி அமர்ந்து உணவருந்தினார்.

இரண்டு பேரும் கலகலவென்று சிரித்துக் கொண்டார்கள். எதற்கோ சிரித்துக் கொண்டே திரும்பிய! சந்திரமோகன் சமையல்காரரை கவனித்தார். சமையல்காரர் இருளடித்த



முகத்தோடு நின்று கொண்டிருந்தார். வாயிலைப் பார்த்தார். கண்கள் இரண்டும் நிலைகுத்தி நின்றன.

'யாரை இப்படிப் பார்க்கறாரு?' என்று திரும்பிப் பார்த்தாள். அங்கே இடுப்பில் கைகளை வைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தாள் சிந்துஜா.

''அம்மா!'' என்று எழுந்தாள் இந்துமதி.

''வாம்மா! அய்யோ! அதிசயம் வா வா!'' என்று வரவேற்றாள்.

அவள் முறைத்துக் கொண்டே உள்ளே வந்தாள். பரிமாறிக் கொண்டு இருந்தவரைப் பார்த்துப் 'போலாம்!' என்பது போல கண் அசைத்தாள். உடனே அவர் அந்தப் பக்கம் போய் விட்டார்.

சந்திரமோகன் ஒரு வித ஆச்சரியத்துடன் இதை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தார். ''என்ன? இரண்டு பேரும் இப்படி சிரிச்சுகிட்டிருக்கீங்க''

''ஏம்மா? அப்பாவோட சிரிக்கக் கூடக் கூடாதா?'' என்றாள்.

''இப்படித்தானே சிரிச்சு சிரிச்சு உன்னை வலையில போட்டுகிட்டிருக்காரு? எனக்கு எதிரா திருப்பி விட்டுகிட்டிருக்காரு?'' என்றாள்.

''அம்மா! ப்ளீஸ்! இப்படியெல்லாம் பேசாதீங்க. அப்பா உங்களோட ஒத்துப் போகத்தான் சொல்லுவாரு. உங்களைக் குறையெல்லாம் சொல்ல மாட்டாரு!'' என்றாள் இந்துமதி.

"எல்லாத்தையும் சொல்லித் தொலைச்சிட்டிய இல்லையா?" என்றாள்.

"இத பாரு சிந்து, பார்த்துப் பேசு குழந்தைகிட்டே!"

"குழந்தை! இவளா குழந்தை? துரோகி!" என்றவ "போன வாரம் முழுக்க நீங்க வச்சுக்கிட்டீங்கள் அப்புறம் எதுக்கு இன்னைக்கு மறுபடியும் வரச் சொல் யிருக்கீங்க? எனக்கே தெரியாம திருட்டுத் தனம வந்திருக்கா!" என்றாள்.

இந்துமதி எழுந்து நின்றாள். "அம்மா! ப்ளீஸ் அண்ட ஸ்டாண்ட். நான் ஒண்ணும் குழந்தை இல்லை. டுவண் இயர்ஸ் ஒல்ட். எங்க அப்பாவைப் பார்க்கறதுக்கு, இங் வர்றதுக்கு உரிமை இருக்கு!" என்றாள்.

"உரிமையா? பல்லைப் பேத்துடுவேன்!" என்றாள் சிந்

சிந்து என்று சந்திரமோகன் குரல் உயர்ந்தது. அதற்கு சமமாக சிந்துவின் குரலும் எழுந்தது.

இந்து தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந் விட்டாள்.

## அத்தியாயம் - 4

பேச்சும் குரலும் தடித்துக் கொண்டே போயிற்று.

"என்ன தைரியம் இருந்தா? எனக்குத் தெரியாம எ பொண்ணை இங்க வரவழைச்சிருப்பீங்க?" என்றாள்.



"இதோ பாரு! இந்தக் கேள்விக்கு அவளே பதில் சொல்லிட்டா. ஷி இஸ் நோ லாங்கர் எ சைல்ட். இருபது வயசு ஆயிடுச்சு அவளுக்கு. எய்ட்டீன் தாண்டிட்டாலே மேஜர்.அவ அப்பாவை வந்து பார்க்கறதுக்கு அவளுக்கு உரிமை இருக்கு. அவ வரக்கூடாதுன்னு சொல்றதுக்கு உனக்கு எந்த உரிமையும் இல்லை!" என்றார்.

"இத பாருங்க! அவ என் கஸ்டடியில இருக்கா. என்னைக் கேட்காம வர முடியாது"

"அவ யாரு கஸ்டடியிலும் இல்லை. நான் தான் சொன்னேன் இல்லே! அவ மேஜர் ஆயிட்டா. இப்போதைக்கு நீ சங்கடப்படக்கூடாதேன்னு உன் கூட இருக்கா அவ்வளவுதான்!" என்றார் சந்திரமோகன்.

"ஹலோ! உங்ககிட்டே வரக்கூடாது. உங்க நிழல் கூட அடிக்கக் கூடாதுன்னுதானே நான் அவளை அங்கே வச்சிருக்கேன்!"

"ஏன்? எங்க நிழல் என்ன? அரக்கனோட நிழலா? இல்லை உங்க நிழல் என்ன தங்க தேவதையோட நிழலா?" என்றார் அவர்.

"கண்டிப்பா நாங்க தங்க தேவதைதான். அவளைப் பார்த்துப் பார்த்து செதுக்கி செதுக்கி வளர்த்திருக்கேன்!" என்றாள்.

"என்ன வளர்த்திருக்கே நீ? ஒரு நாள் அவகிட்டே உட்கார்ந்து அவ கிட்டே அன்பாப் பேசியிருக்கியா?" என்றார்.

''ஏன்? எல்லாம் நடக்குது அவளுக்கு. அவ இப்படிக் கண் அசைச்சா போதும் ஓடி வந்து வேலை செய்யறதுக்கு அத்தனை வேலைக்காரங்க இருக்காங்க''

''அதுக்கு அவ ஹாஸ்டல்லே போய் இருந்திருக்கலாம். உன்னை விட பத்து வேலைக்காரங்க எக்ஸ்ட்ராவா போடுவேன். உனக்கு ரெண்டு ஃபாக்டரின்னா எனக்கு ஆறு ஃபாக்டரி இருக்கு!'' என்றார் அப்பா.

அப்பாவைக் கவலையுடன் பார்த்தாள் இந்துமதி. ''அப்பா! ப்ளீஸ்! நீங்களும் சில்லியா பேசாதீங்க'' என்றாள்.

''என்னம்மா பின்னே? உங்கம்மாவுக்கு சில்லியாப் பேசினாத்தான் புரியும். கொஞ்சம் ஹை ஃபையா, நியாயமா, ஸொஃபிஸ்டிகேட்டடா பேசினாவெல்லாம் புரியாது''

''ஹலோ! ஸொஃபிஸ்டிகேட்டடா வளர்ந்தவங்க தான் நாங்க. உங்க அப்பா அம்மா மாதிரி சேரில வளர்ந்தவங்க இல்லை நாங்க''

''ஹலோ! நீ என்னைப் பேசு. எங்க அப்பா அம்மாவை எதுக்குப் பேசறே? அவங்கல்லாம் கஷ்டப்பட்டவங்கதான். கஷ்டப்பட்டுத்தான் சம்பாதிச்சாங்க. ஆனா உன்னைக் கல்யாணம் பண்ணும் போது உன்னைவிட நான் வசதியாத்தான் இருந்தேன்!'' என்றார்.

''இருந்தும் என்ன பண்றது? ஒரு சொசைட்டில எப்படி நடந்துக்கணும்னு தெரியலை. ஒரு பணக்கார வீட்ல எப்படி நடந்துக்கணும்னு தெரியலை!'' என்றாள்.



''ம்... தெரியாமத்தான் இப்ப ஆறு ஃபேக்டரி நடத்திகிட்டிருக்கோமாக்கும் நாங்க. தெரியாமத்தான் இத்தனை பேரு எங்ககிட்ட வேலை செய்யறாங்க. மூவாயிரத்து ஐந்நூறு பேரு எங்கிட்ட வேலை செய்யறான் எவனும் எங்கிட்ட பண்பாடு இல்லைன்னு சொல்லலை.ஆனா, உன்னோட ஃபேக்டரிலே போய் கேட்டுப்பாரு. ஐய்யோ அந்தம்மாவா ராட்சஷி அப்படிங்கறானுக!'' என்றார்.

''எவன் சொன்னான்! அதெல்லாம் உங்ககிட்டே பத்து பைசா வாங்கறதுக்கு சொல்லியிருப்பாங்க. அப்படிச் சொன்னா நீங்க சந்தோஷப்பட்டுக் காசு கொடுப்பீங்க அதுக்காக. அப்படியே இருக்கட்டுமே? நான் வாயாடி, ராட்சஷி, காண்டா மிருகம் என்னவேண்ணா சொல்லிக் கோங்க. ஆனா உங்களை மாதிரி இல்லையே?'' என்றாள்.

''ஏன்? நான் என்ன தப்பு பண்ணிட்டேன்!'' என்றார்.

''இங்கே பாருங்க. என் வாயைப் பிடுங்காதீங்க!'' என்றாள்.

''வாயைப் பிடுங்கினா என்ன வரும்? நல்லதாவா வரும்!'' என்றார்.

''நல்லது வராதில்லே? எனக்குத் தெரியாதுன்னு நினைச்சுக்கிட்டு இருக்கீங்களா? அவ என்ன...! அவ பேரு ரோஜாமணி...! தெரியாதுன்னு நினைச்சுகிட்டிருக்கீங்களா?''

சந்திரமோகன் ஒரு நிமிடம் இதை எதிர்பார்க்கவில்லை. ஸ்தம்பித்து நின்றார். பிறகு ''அது என்னோட பர்சனல் மேட்டர். அதைப் பேசறதுக்கு உனக்கு உரிமை இல்லை''

''என்ன பர்சனல் மேட்டர்! எங்கிட்டே டைவர் வாங்கலை!''

''நான் தான் கொடுங்கறேனே!'' என்றார்.

''எதுக்கு இவ பேர் நாளைக்கு கெடறதுக்கா? இவளுக்கு ஒரு வழி பண்ணனுமேன்னுதான் உன்னையெல்லாம் சகிச்சுக்கிட்டு இருக்கேன்!'' என்று ஏக வசனத்தில் இறங்கினாள் சிந்துஜா.

''இத பாரு சிந்து, மரியாதை கொடுத்து மரியாதை வாங்கிக்க!'' என்றார்.

''உனக்கு என்ன மரியாதை? எனக்குத் தெரியாதுன்னு நினைச்சுட்டு இருக்கீங்களா. ஐந்து வருஷமா இந்த ரோஜாமணியோட காண்டாக்ட் வச்சுக்கிட்டு ஃபிரான்ஸ் போறதும், லண்டன் போறதும் ம்... இவ்வளவு கேவலமான பிறவியா இருக்கீங்க. இவ்வளவு கேவலமா நடந்துட்டு என்னைப் பேசுவிங்களா?'' என்றாள்.

சந்திரமோகன் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டார். ''ப்ளீஸ்! இந்து நீ அந்தப் பக்கம் போ!'' என்றார்.

இந்து அப்பாவின் பங்களாவில் கீழே தனக்கென்று இருந்த ஓர் அறையிலே போய் அமர்ந்து கொண்டாள். ஆனாலும் அவர்கள் பேச்சுக் குரல் கேட்டது. கவலையுடன் எழுந்து சுற்றும் முற்றும் பார்த்தாள். நாகரீகம் தெரிந்த வேலைக்காரர்கள் எல்லாம் பங்களாவில் இருந்து ஒரு ஐம்பதடி தூரம் தள்ளி அந்தப் பக்கம் நின்று கொண்டிருந் தார்கள்.



அவரவர்கள் ஏதோ வேலை பார்ப்பது போன்ற பாவனையுடன் நின்று கொண்டிருந்தார்கள். ''ஆமா,நீ என்னைக்கு எங்கிட்டே அட்ஜட்ஸ்ட் பண்ணியிருக்கே? கல்யாணம் ஆன காலத்திலிருந்து ரஃப் அண்ட் டஃப்பா தான் இருந்திருக்கே. என்னைக்காவது ஒரு ஹஸ்பெண்ட் கிட்டே எப்படி நடந்துக்கணுமோ அப்படி நடந்திருக்கியா? நானும் உன்னைத் தாங்கினேன். உங்கிட்டே பரிஞ்சு பரிஞ்சு பேசினேன். குழைந்து குழைந்து பேசினேன். என்னென்னமோ பண்ணிப் பார்த்தேன். எப்பவுமே உன்னோட சொத்தையே தலையிலே ஏத்திகிட்டு அலைஞ் சுக்கிட்டிருக்கே. பேரழகி! பெரிய சொத்துக்காரின்னு நினைப்பிலே அலைஞ்சுகிட்டிருந்தே. அப்ப நானும் சொத்துக்காரன்தானே? எவ்வளவுக்கு விட்டுக் கொடுக்க முடியும். பொண்ணுக்குப் பத்து வயசு வரைக்கும் நானும் விட்டுப் பிடிச்சுப் பார்த்தேன். ஆனா நீ திருந்தறதாவே இல்லை. டைவர்ஸ் கொடுத்து ஒதுங்கித் தொலை அப்படின் னாலும் பொண்ணை என் கஸ்டடியில வைத்து ஒழுங்கா வளர்த்துக்கலாம்னாலும் அதுக்கும் விட மாட்டேங்கறே. இதோ பாரு ரோஜா மணி என்ன? பத்து மணிகளை வேண்ணாலும் நான் என் கஸ்டடியில வச்சுப்பேன். தட்ஸ் மை பிஸினஸ்!'' என்றார்.

''அப்ப நானும் அந்த மாதிரி பண்ணலாமா?. டைவர்ஸ் வாங்காமே நீங்க துரோகம் பண்றீங்கள்லே?'' என்றாள்.

''இதோ பார்! அந்தப் பொண்ணுகிட்டே எனக்கு எந்த லீகல் ரிலேஷன்ஷிப்பும் கிடையாது. என்னுடைய நிலைமை என்னன்னு தெரிஞ்சுதான் அவ என்னோட ஒத்து

வந்திருக்கா. உன்னோட லைஃப்ல அவ தலையிடப் போறதே இல்லை. ஆம்பளைங்க நாலு இடத்துக்குப் போவோம். நாலு விதமா இருப்போம்!'' என்று குரலெடுத்துக் கத்தினார் சந்திரமோகன்.

"அப்ப நாங்களும் அப்படி...!" என்று அவள் சொல்லி முடிப்பதற்குள்ளாக சந்திரமோகனின் கை விண்ணென்று அவள் கன்னத்தில் இறங்கியது.

''போறதுன்னா போடி! அதான் நான் சொல்றேன்ல டைவர்ஸ் கொடுக்கறேன், வாங்கிட்டுப் போன்னு சொல்றேன்ல. உனக்கு ஆரம்ப காலத்துல இருந்தே என்னமோ நான் உன் பர்சனாலிட்டிக்கு குறைஞ்ச மாதிரியே ஒரு நினைப்பு. நீ என்ன ரொம்ப பர்சனாலிட்டின்னு நினைச்சுட்டு இருக்கியா? போய் கண்ணாடி முன்னாடி நின்னு பாரு வங்கொடக்கான் மாதிரி இருக்கே. சரி, நானும் இருந்துட்டுப் போகட்டும். அவ திருந்திப்பா, இன்னைக்குத் திருந்திப்பா, நாளைக்கு திருந்திப்பான்னு பார்க்கறேன் ஊரு உலகத்துல யாருகிட்டே வேண்ணா சொல்லு. எம் மேல தப்பு இருக்குதான்னு சொல்லட்டும். இப்பவும் நான் என்ன அந்தப் பொண்ணைக் கல்யாணமா பண்ணியிருக்கேன்?. ஒரு கம்பானியனா இருக்கா. ஏன்? ஆல் பிக்காஸ் ஆப் யூ. நீ எனக்கு ப்ராப்பர் கம்பெனி கொடுத்திருந்தேன்னா எனக்கு எதுக்கு இது? இன்னொண்ணு தெரிஞ்சுக்கோ. குணத்திலே அந்தப் பொண்ணுகிட்டே நீ ஏணி வச்சாலும் எட்ட மாட்டே. அவ்வளவு தியாக மனப்பான்மை. இந்த நிமிஷம் நீ டைவர்ஸ் கொடு. நான் அவளை ஊர் அறியக் கல்யாணம் பண்ணிக்கிட்டு என் பொண்ணை எங்கிட்ட



வச்சுக்கறேன். உன்னை விட அவ இந்துமதியைத் தாங்கி வச்சுக்குவா. ஏன்னா அவளுக்கு குழந்தை பாக்கியம் கிடையாது.உனக்கு கிடைச்ச குழந்தை பாக்கியத்தோட அருமை உனக்குத் தெரியாது!'' என்று படபடவென்று பேசினார் சந்திரமோகன்.

உள்ளே அமர்ந்திருந்த இந்துமதியின் கண்களில் கரகரவென்று கண்ணீர் வழிந்தது.

அப்பா தனக்காகத்தான் தியாகம் செய்து கொண்டிருக்கிறார். தனியாக இருக்கிறார் என்று எண்ணிக் கொண்டிருந்தோமே அந்த எண்ணத்திலும் மண் விழுந்தது. ஆனால் அவர் பக்கத்திலும் நியாயம் இருக்கிறது என்று ஒரு மனது சொன்னது.

'நியாயம் இருக்கிறது..., இருந்தாலும் அம்மாவுக்கு டைவர்ஸ் கொடுக்காமல்...அப்பாவை ரொம்ப உயரத்தில் வைத்திருந்தோமே? இப்படி சறுக்கி விட்டாரே!' என்று அவளுக்கு ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை.

''இது அம்மாவுக்கு துரோகம் தானே?'' என்று நினைத்தாள். அப்போதுதான் அப்பா இன்னொரு உண்மையை போட்டு உடைத்தார். ''இங்கே பாரு! இவ்வளவு பேசறியே? நீ இந்த ராபர்ட் கூட அப்பப்ப பேசி கிட்டிருந்தே. அப்பப்ப அவன் கூட வெளியே கிளியேன்னு போயிட்டு வந்துகிட்டிருந்தேன்னு எனக்குத் தெரியாதா? அப்ப கூட நான் உன்னை சந்தேகப்படலை. ஏன்னா என்ன தான் நீ கோபமா பேசினாலும் பண்ணினாலும் அந்தளவுக்குக் கீழே போக மாட்டேன்னு எனக்குத் தெரியும். என்னைக்

கடுப்பேத்தணும்னுதானே அப்படியெல்லாம் செஞ்சே? அப்புறம் உங்க அப்பா அம்மா புடிச்சு உன்னை வாங்கு வாங்குன்னு வாங்கினதுக்கு அப்புறம் அடங்கினே. நான் அப்பவே சொன்னேன்ல டைவர்ஸ் வாங்கிட்டுப் போய் நீ அந்த ராபர்ட்டையே கல்யாணம் பண்ணிக்கோன்னு. உனக்கு ஊர் உலகத்துல போலி கௌரவம் வேணும். ஆனா நீ எல்லாத்தையும் ஆட்டிப் படைச்சுட்டு இருப்பே. எல்லாரும் உன்கிட்டே தோப்புக்கரணம் போட்டுகிட்டிருக் கணும்னு நினைக்கறியா?. ஐ கேர் எ டேம் ஃபார் யுவர் ப்ராபர்ட்டி, பிகாஸ் ஐ ஹேவ் மோர் ப்ராபர்ட்டி தேன் யுவர்ஸ்!'' என்றார் அவர்.

இரண்டு பேரும் எனக்கு சொத்து எனக்கு சொத்து என்று மாறி மாறி பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டவுடன் அவளுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது.

''இன்னொண்ணு தெரிஞ்சுக்க. இந்த சொத்து இன்னைக்குப் போகும். நாளைக்கு வரும். எல்லாத்தையும் விட என் மகளைத்தான் நான் சொத்தா நினைக்கிறேன். அவளுக்காகத்தான் இத்தனையும் பொறுத்துகிட்டிருக்கேன். இன்னைக்கு என் மக அந்த ரோஜாமணியை விட்டுடுன்னு சொன்னான்னு வச்சுக்கோ நாளைக்கு அவளைத் திரும்பிப் பார்க்க மாட்டேன்!''

''ஆமா!, இந்தக் கேவலத்தை வேற அவ கேட்டுட்டு இருக்கறா. அவ வந்து அப்பா ரோஜாவை விட்ருன்னு உங்களுக்குச் சொல்லுவா.இப்பவே உங்க இமேஜ் எல்லாம் டர் ஆயிடுச்சு!'' என்று சிரித்தாள் சிந்துஜா.



''அதானே உன் நோக்கமே? அந்தப் பொண்ணு ஏதோ நிம்மதியா இருந்தா. அவ மனசையும் கலைச்சு விட்டுடுட்டியா?'' என்றார்.

''ஆமா! பின்னே? நீங்கதான் என்னமோ தெய்வங்கறா, நீங்கதான் ரொம்ப அன்பின் திருவுருவங்கறா. இந்த அன்பு கொஞ்சம் வேற இடத்துலயும் தடம் மாறிப் போய் கிட்டிருக்குன்னு தெரியணுமில்லே?'' என்றார்.

''ஏன் தடம் மாறிப் போச்சு. நீ தப்புப் பண்ணினே. நீ எனக்கு ஒத்து வந்திருந்தேன்னா. நானும் ஒழுங்கா இருந்திருப்பேன்!'' என்றார் அப்பா.

அதில் உண்மை இருந்தது இந்துமதிக்குப் புரிந்தது. ''ஒழுங்கா இருக்கறதுன்னா என்ன? என்ன ஒழுக்கம் கெட்டுப் போயிட்டேன் நான்? நீங்க உடனே கூப்பிட்ட வுடனே சரசமாடிட்டு நிக்கணுமா? அப்படியே வெட்கப் படற மாதிரி நாடகம் ஆடிட்டு நிக்கணுமா?'' என்றாள்.

''அதுதான் உனக்குத் தெரியாதேப்பா. ஆனா, ஐய்யோ அவ அங்க உட்கார்ந்திருக்கா. ப்ளீஸ் சிந்து, நீ இங்கிருந்து கிளம்பு!'' என்றார்.

''நான் கிளம்பணும்னா என் மக என் கூட வரணும்''

''இங்கே பாரு! அவ இப்ப ஷாக்ல இருக்கா. நீ கிளம்பு.''

''நான் கொண்டு வந்து விடறேன் கிடறேன்னுகிட்டு வீட்டுக்குள்ளேயெல்லாம் வந்துடாதீங்க!'' என்றாள்.

''அடச்சி! உன் வீட்டுக்குள்ளேயெல்லாம் எவன் வருவான்?. அது ஒரு வீடா? அது... அங்கே வந்தா

இருளடைஞ்சு கிடக்கும். உணர்ச்சிகளுக்கே இடமில்லா
ஒரு...என்ன சொல்றது? பழைய கட்டடம் அது. அதுக்
வரணுமாக்கும்!'' என்றார் அவர்.

சிந்து ''போதும் நிறுத்துங்க!'' என்றாள்.

''நான் நிறுத்திக்கறேன். இந்த சமயத்துல உன்னா
இந்துமதியை ஹேண்டில் பண்ண முடியாது. நீ கோப
காட்டுவே. அவ ஏற்கனவே ரொம்ப சென்சிட்டிவ
இருக்கா. நான் அவகிட்ட பேசிக்கிறேன். நீ எத்தனை
மணிக்குக் கொண்டு வந்து விடணும்னு சொல்லு. நா
கொண்டு வந்து விடறேன்!'' என்றார்.

''நைட் எட்டு மணிக்கு எம் பொண்ணு என் வீட்டுக்
வந்தாகணும்!'' என்றாள்.

''சரி, தாயே! பரதேவதை! கொண்டு வந்து விடறே
போ!'' என்றார்.

''இந்த மாதிரி பேச்செல்லாம் எங்கிட்டே வச்சுக்காதீங்க

''ஓகே மிஸஸ் சிந்துஜா! ஐ ஆம் வெரி சாரி! ப்ளீஸ் டே
லீவ்!'' என்றார்.

''கேவலமான மனுஷங்ககிட்டேயெல்லாம் இப்படி
கேவலமா பேச்சுக் கேட்க வேண்டியிருக்குது!'' என்
புலம்பிக்கொண்டே கோபமாக வெளியேறினாள் சிந்துஜ

சந்திரமோகன் டைனிங் டேபிளில் அமர்ந்து தொடர்ந்
சாப்பிட ஆரம்பித்தார். ''இந்து வாம்மா!'' என்றார்.

இந்து கண்களில் கண்ணீருடன் மெதுவாக நடந்து வந்
அந்த டைனிங் டேபிளில் அமர்ந்தாள். ''இத பா



கண்ணம்மா! அப்புறம் எல்லாம் பேசலாம். என் பக்க நியாயத்தையும் நான் சொல்றேன்!'' என்றார். அவள் மௌனமாக சாப்பிட்டாள்.

சாப்பிடவில்லை என்றால் அப்பா விட மாட்டார். பல்வேறு சூழ்நிலைகளைச் சந்தித்தவர் என்பதால் அவர் மிகவும் அமைதியாக தொடர்ந்து சாப்பிட்டார். ''நிம்மதியா சாப்பிட விட மாட்டேனுட்டா!'' என்று மட்டும் ஒரு வார்த்தையை சொல்லி விட்டு மணி அடித்தார். காலிங் பெல்லை அடித்தவுடனே வேலை ஆட்கள் எல்லாம் ஓடி வந்தார்கள்.

''போய் அவங்கவங்க வேலையைப் பார்க்கச் சொல்லு செங்கோடா!''.

''சரிங்க சார்!'' என்று சமையல்காரரும் கிட்டத்தட்ட உதவியாளர் மாதிரியும் இருந்த அந்த செங்கோடன் மற்றவர்களையெல்லாம் போய் வேலையைப் பார்க்கச் சொன்னான்.

''வீட்டுக்கு வந்து வேலைக்காரங்க முன்னாடி மானத்தை வாங்கறா!'' என்று புலம்பினார்.

இந்துமதி ஒன்றுமே பேசவில்லை.

சாப்பிட்டு முடித்த பின்பு அவர் கை கழுவி விட்டுத் திரும்புவதற்குள்ளாக அவள் ஓடிப் போய் தன் அறையிலே நுழைந்தாள். கட்டிலுக்குப் பக்கத்திலே இருந்த மேஜையின் முகத்தைக் கவிழ்த்து வெடித்து அழுதாள். திரும்பிப் பார்த்த சந்திரமோகன் மகளைக் காண வேண்டி வருத்தத்துடன் ஒரு

பெருமூச்சு விட்டு விட்டு அவளுடைய அறைக்குப்
போனார்.

''இந்து, ஐ ஆம் சாரிடா!'' என்றார்.

அவள் திரும்பி அப்பாவை நெகிழ்ந்து பார்த்தாள்
''எனக்கு இருந்த ஒரே சந்தோஷத்தையும் பறிச்சுட்டீங்
களேப்பா?'' என்றாள்.

''என்னடா?'' என்றார்.

''எத்தனைதான் சண்டைக்காரங்களா இருந்தாலும் எங்க
அம்மாவும் அப்பாவும் எனக்காக வாழ்க்கையைத் தியாகம்
பண்ணிகிட்டிருக்காங்க அப்படின்னு நினைச்சுகிட்டிருந்
தேனே!'' என்று சொன்னாள்.

''நான் தெய்வம் இல்லம்மா மனுஷன். பெத்த
புள்ளகிட்டே எப்படிச் சொல்றது? பத்து வருஷம் உங்க
அம்மாவோட வாழ்ந்தேன். அது ஒரு நரக வாழ்க்கைம்மா.
உனக்குச் சொன்னாப் புரியாது!'' என்றார்.

''புரியும்ப்பா! ஆனாலும்,''

''இதோ பாருடா! நான் அம்மாவுக்கு எந்த துரோகமும்
செய்யலை. ரோஜா கூட எந்த டையும் இல்லை!'' என்றார்.

''இருந்தாலும், நீங்க...நீங்க...!'' என்று மேலும் மேலும்
தேம்பி அழுதவளைத் தேற்றுவதற்காக அவள் பக்கத்திலே
போய் நின்று அவள் தலையை தடவிக் கொடுத்தார். வலது
கையால் அவளுடைய கையைப் பிடித்தார்.



அவள் அவருடைய கையைத் தட்டி விட்டு விட்டு
''ப்ளீஸ், கொஞ்ச நேரம் என்னைத் தனியா விடுங்க!''
என்றாள்.

ஆழ்ந்த வருத்தத்துடன் சந்திரமோகன் அந்த அறையை
விட்டு வெளியேறினார். ''கெடுத்துட்டா..., எல்லாத்தையும்
கெடுத்துட்டா...!'' என்று முணுமுணுத்துக்கொண்டே
தன்னுடைய அறைக்குப் போனார்.

## அத்தியாயம் - 5

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு மெல்ல மகளின்
அறையில் எட்டிப் பார்த்தார் சந்திரமோகன். இப்போதும்
முதுகு குலுங்க படுக்கையில் படுத்த படி அழுது கொண்டிருந்
தாள் இந்துமதி.

''இந்து!'' என்று சங்கடத்துடன் அழைத்தபடி உள்ளே
நுழைந்த சந்திரமோகன் படுக்கையின் ஒரு பக்கமாக
அமர்ந்தார். ''ஏண்டா இப்படி அழறே?''

''ஒண்ணும் இல்லப்பா! எனக்கு ஏன் சேர்ந்து வாழ்ற
அம்மா அப்பா கிடைக்கலைன்னு என் விதியை நொந்து
தான் அழுதுகிட்டு இருக்கேன்!''

''நான் என்னடா ராசா பண்றது? நானும் பத்து வருஷம்
உங்க அம்மா கிட்டே போராடினேன்!''

''நான் உங்களைத் தப்பு சொல்லவே இல்லைப்பா.
அம்மாவையும் தப்பு சொல்லலை. அவங்க சுபாவப்படி
அவங்க நடந்துக்கறாங்க''

''அதைப் புரிஞ்சுக்கிட்டுத்தானே நானும் பத்து வருஷம் ஒத்துப் போனேன். என்னை ரொம்ப அவமானப்படுத்தறா. என்ன சொல்றது? ரொம்ப ஹ்யுமிலியேட் பண்றா. இப்போ நான் இந்த அளவுக்கு இருக்கும் போதே இப்படி நடத்தறாளே. ஒரு ஏழைபாழையான ஒரு ஹஸ்பெண்ட் இவ கிட்ட மாட்டியிருந்தா என்னாகியிருக்கும்?''

இந்துமதி ''அதைப் பேசி இப்ப என்னப்பா ஆகுது. ஆனா நீங்களும்...!'' என்றாள்.

''தெரியும்மா. உனக்கு ஷாக்கா இருக்கும்னு எனக்குத் தெரியும். ஆனா நானும் மனுஷன்தானேம்மா? பல இடங்களுக்குப் போறோம். அங்கே ஃபிரான்ஸெல்லாம் போகும்போது...உனக்குத் தெரியும். அங்கெல்லாம் ஜோடி ஜோடியா வருவாங்க. ஒரு நேரம் இல்லாட்டியும் ஒரு நேரம் வந்து... எனக்கு ஐ ஆம் வெரி சாரிம்மா! நான் உங்கிட்டே பேச வேண்டியதிருக்கு''

''புரியுதுப்பா!''

''அதனாலதாம்மா நான் ஒழுங்கு படுத்திகிட்டேன். அங்கங்கே போய் நெறி கெட்டு தறி கெட்டுப் போறதுக்கு ஏதாவது ஒரு பொண்ணுக்கு வாழ்க்கை கொடுத்த மாதிரி இருக்கட்டும்னு நினைச்சுத்தான் நான் ரோஜாமணியை ஆதரிச்சுட்டேன். அவளுக்கும் ஒண்ணும் துரோகம் பண்ணலைம்மா. கோயில்ல வச்சு மாலை மாத்திக்கிட்டேன்!'' என்றார்.

இந்துமதி என்ன சொல்வது என்று தெரியாதவளாக அப்பாவைப் பார்த்தாள்.



''இப்ப என்னப்பா பண்றது? இனித் தொடர்ந்து இந்த நாடகம் வேண்டாம்ப்பா!'' என்றாள்.

''என்னம்மா பண்றது? உனக்காக உனக்குன்னு ஒரு கல்யாணம்னு ஆகற வரைக்கும் இதெல்லாம் நடந்து தான் ஆகணும். அதுக்கப்புறம் நான் வேண்ணா உங்க அம்மா கிட்ட டைவர்ஸ் வாங்கிக்கறேன்!''

''வேண்டாம்ப்பா, என்னைப் பகடைக்காயா வச்சுக்கிட்டு ரெண்டுபேரும் இப்படி பந்தாட வேண்டாம்பா!'' என்று மறுபடியும் அழுதாள். சந்திரமோகன் எழுந்து மகளுடைய தலையைத் தடவிக் கொடுத்தார்.

''சரின்னு சொல்லும்மா, ஒரு நல்ல மாப்பிள்ளையாப் பார்த்து உன்னை செட்டில் பண்ணிடறேன். அதுக்காகத்தானே இந்த ஒளிவு மறைவு நாடகமெல்லாம்!'' என்றார்.

''அப்பா! உங்களுக்காக நான் இருபது வயசுல கல்யாணம் பண்ண முடியுமாப்பா? அதுவும் உங்க கல்யாண வாழ்க்கையைப் பார்த்ததுக்கு அப்புறம் எனக்கு மேரேஜ்னு நினைச்சாலே பயமா இருக்குப்பா''

''ஏம்மா அப்படி நினைக்கிறே? உங்க தாத்தா பாட்டியைப் பாரு. அம்மாவோட அம்மா அப்பாவைப் பாரு! எங்க அம்மா அப்பாவைப் பாரு, அவங்களெல்லாம் இன்னமும் ஒத்துமையாத்தானே இருக்காங்க? நான் மேக்ஸிமம் முயற்சி பண்ணிட்டு இருக்கேம்மா. இப்ப வேண்ணாலும் சொல்லு. உங்க அம்மாவும் நானும் ஒரே கூரைக்குக் கீழே இருக்கோம்''

''அதெல்லாம் வேண்டாம்ப்பா, இதெல்லாம் விஷ பரீட்சை. நீங்களும் அமைதியா இருக்க முடியாது. அம்ம தானும் அமைதியா இருக்க மாட்டாங்க. உங்க ரெண் பேரையும் பார்த்துப் பார்த்து நான் ஒரு வழிய ஆயிடுவேன்!'' என்றாள்.

''இப்ப என்னடா பண்றது? ஏத்துக்கடா! மனசை கொஞ்சம் மாத்திக்கடா! நீ வேண்டாம்னு சொல்லு. நா வேண்ணா ரோஜாமணியைக் கொஞ்ச நாள் ஒதுக் வச்சுடறேன்!'' என்றார்.

''அப்பக் கூட கொஞ்ச நாள்னுதானே சொல்றீங்க அப்பா!'' என்றாள்.

''இல்லம்மா, அவளையும் ஏமாத்தக் கூடாதில்லே? இப் அவளுக்கு வாழ்க்கைக்கு வசதியெல்லாம் செஞ்சு கொடு துட்டேன். அவ என்னை எதிர்பார்க்காம அவளுக்குன்னு ஏதோ வருமானம் வர்ற மாதிரி ஏதோ கொஞ்ச சொத்தெல்லாம் வாங்கிக் கொடுத்துட்டேன்.அவளுக் நான் பெரிசா துரோகம் பண்ணலைம்மா. அவ அநாதை விடுதில வளர்ந்த பொண்ணு. எங்கயோ ரெண்டு மூனு மீட்டிங்ல பார்த்து என்னை ரொம்ப பிடிச்சுப் போச்சுன்னு அவளாத்தான் வந்து பேசினா''

இதற்கு என்ன பதில்சொல்வது என்று தெரியாம இந்துமதி சற்று நேரம் அமைதியாக இருந்தாள்.

''ரோஜாமணி கதையை விடும்மா. நீ மனசை தேத்தி கோம்மா. நீ உங்க அம்மாகிட்ட பேச்சே வச்சுக்காதே அளவா இருந்துக்கோ. உனக்குன்னு சந்தோஷத்தை



தேடும்மா. உனக்குன்னு படிக்க பிடிக்குதா, வரையப் பிடிக்குதா இல்லை வேற எதாவது பிடிக்குதா இல்லை கம்ப்யூட்டர்ல ஏதாவது செய்யறதுக்கும் பிடிக்குதா அப்படின்னு யோசிச்சுப் பாரு. அதிலே இறங்கிக்கோ'' என்றவர் அவளுக்குத் தனிமை கொடுத்துப் போனார்.

சற்று நேரம் கழித்து ''சரி, அப்போ நீ சரியா சாப்பிடவே இல்லை. கொஞ்சம் சாப்பிடும்மா!'' என்றார். அவளுக்கு வேறு வழியில்லாமல் அப்பாவுடன் போய் பேருக்கு கொஞ்சம் எதையோ கொறித்து விட்டு வந்தாள். திரும்பவும் சந்திரமோகன் அவளிடம் பேசினார். வெகு நேரம் அவளிடம் பேசினார். ஆனாலும் இந்துமதிக்கு அப்பா இனிமேல் தனக்கென்று இல்லை என்ற அதிர்ச்சி தந்த உண்மைதான் மனதுக்குள்ளே ஓடிக் கொண்டே இருந்தது.

ஏழே முக்கால் மணி வரையிலும் மகளுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தவர் ''அம்மா, சரிம்மா எட்டு மணிக்குக் கொண்டு வந்து விடறேன்னு சொல்லி யிருக்கேன். கொண்டு போய் விட்டுடறேன். நீ கொஞ்ச நேரம் போய் இருந்துட்டுத் திரும்பி வந்துடறதுன்னா வந்துடு. இல்லைன்னா, அந்த ராட்சஷி ஒரே ஆர்ப்பாட்டம் பண்ணி உன்னை டார்ச்சர் பண்ணுவா!'' என்றார்.

''சரிப்பா!'' என்று புறப்பட்டாள். அவள் முகத்தில் ஆழ்ந்த சிந்தனை ஓடிக் கொண்டிருந்தது. அதிகமாகப் பேசாத தன் மகளைப் பார்க்கும் போதெல்லாம் சந்திர மோகனுக்கு வயிற்றைப் பிசைந்தது. பெருத்த அதிர்ச்சியில் இருக்கிறாள் என்று தோன்றியது.

''சரிம்மா, நீ போ! நான் உங்க தாத்தா பாட்டிகிட்டே சொல்றேன்!'' என்றார்.

''அவங்ககிட்டே பேசுவீங்களாப்பா?'' என்றாள்.

''அம்மா, அவங்க அப்பப்ப எங்கிட்டே பேசிகிட்டுத் தான் இருக்காங்க. அவங்களுக்கு என்னைப் பத்தி ஒரு குறையும் இல்லை. உங்க அம்மா மேலதான் வருத்தம். ஆனா உங்க அம்மா யார் சொன்னாலும் கேட்க மாட்டாளே என்ன பண்றது?''

கார் பயணத்தின் போதும் இந்துமதி மௌனமாகவே இருந்தாள்.

''ப்ளீஸ் டா! என்னை மன்னிச்சுடுடா, மன்னிச்சுடுடா!'' என்று கெஞ்சினார் சந்திரமோகன்.

''பரவாயில்லைப்பா!'' என்றாள் எங்கோ பார்த்துக் கொண்டு.பிறகு ''சரிப்பா, அட்லீஸ்ட் அந்த ரோஜாமணி சித்தியையாவது நல்லா வச்சுக்கங்க!'' என்றாள்.

அவள் சித்தி என்று சொன்னது அவருக்கு மகிழ்ச்சி தந்தது. ''பாவம், ஏழைப்பட்டவங்கன்னு சொல்றீங்க. அட்லீஸ்ட் நம்ம குடும்பத்திலே அவங்களும் நீங்களுமாவது சந்தோஷமா இருங்க!'' என்றாள்.

''அது பார்க்கலாம்மா. உனக்கு இவ்வளவு வருத்த மாகும்னு எனக்குத் தெரியலையே!'' என்றார்.

''அதுக்காக அவங்களை கை விட்டுடாதீங்கப்பா!'' என்றார். ''அப்பா, இனிமேல் என்னைப் பத்திக் கவலைப் படாதீங்க. என்னைப் பத்தி நினைக்காதீங்க!'' என்றாள்.



''என்னம்மா என்னென்னமோ பேசறே? உன்னைப் பத்தி நினைக்காம எனக்கு என்ன வாழ்க்கை? ரோஜாமணிக்கும் ஒண்ணும் குழந்தையெல்லாம் கிடையாது. அவளும் சேர்ந்து உனக்கு நல்லது நினைக்கத்தான் செய்வா. உங்க குடும்ப வாழ்க்கை இப்படி ஆயிப்போச்சு.இந்துமதியை நல்லா வச்சுக்கங்க. இந்துமதியை சந்தோஷமா வச்சுக்கோங்க. இல்லைன்னா கூட்டிட்டு வாங்க. நான் எங்கிட்டே வச்சுக் கறேன். ஒரு தாய்கிட்டே இருந்து என்னென்ன கிடைக் குமோ 'அதெல்லாம் நான் கொடுக்கறேன் அப்படின்னு தாம்மா சொல்லுவா!'' என்றார் அவர்.

''ரொம்ப நல்லவங்க போல இருக்கு!'' என்றாள் இந்துமதி.

''ரொம்ப ரொம்ப நல்லவம்மா!'' என்றார் சந்திரமோகன்.

அப்படிச் சொல்லும் போது அவர் முகத்தில் பெருமை பொங்கியது. அதை லேசான வருத்தத்துடன் பார்த்தாள் இந்துமதி.

''என்னடா பார்க்கறே?''

''இல்லை அவங்களைப் பத்தி உங்களுக்கு ரொம்பப் பெருமை இல்லே?'' என்றாள்.

சந்திரமோகன் ஒன்றும் பேசவில்லை. ''ஆனா அம்மாவைப் பத்தி அப்படிச் சொல்றதுக்கு எதுவுமே இல்லாமப் போச்சு. இல்லப்பா?!'' என்றாள்.

''சரி, விட்றா! அதைப் பேசி என்னத்துக்கு ஆகுது?'' என்றார் சந்திரமோகன்.

''ஏம்பா, நான் இல்லாம இருந்திருந்தா உங்க ரெண்டு பேருக்குமே பிரச்சினை கம்மியா ஆயிருக்குமில்லே?'' என்றாள்.

சடன் பிரேக் போட்டு நிறுத்தினார் சந்திரமோகன். பிறகு நடுரோட்டில் நிறுத்தியிருப்பதை உணர்ந்திருந்து காரை ஒரு ஓரமாக ஒதுக்கினார். ''என்னடா பேசறே நீ? பல்லைக் கழட்டிடுவேன்!''.

''இல்லப்பா, அதுதானே உண்மை?''

''நீதாண்டா என் சந்தோஷமே! எதுக்கு நான் அங்கேயும் இங்கேயும் ஓடிட்டு இருக்கறேன்னா இந்த ஊர்ல இருக்கறதில்லைன்னா உன் கூட இருக்க முடியறதில்லை. இதே ஊர்ல இருந்தும் உன்னோட இருக்க முடியலைங்கற அந்த சோகம் என்னை தாக்குது. அதுக்காகத் தான் நான் அங்கேயும் இங்கேயும் ஓடிடறது.மாசத்துக்கு ஒரு வாரம் மட்டுமாவது உன் கூட இருந்துட்டுப் போனா லீவு நாள்ல கூட நான் இங்கே இருக்கறது இல்லை. ஏன்னா உன் கூட இருக்க முடியாம இந்த ஊர்ல இருந்து என்ன பண்றது?. அவ்வளவு உன் மேல பிரியம் வச்சிருக்கேன். நீதாம்மா உயிரு. உங்கம்மா ஊரையே கூட்டி ஆர்ப்பாட்டம் பண்றாங்கற ஒரே காரணத்துக்காகத்தான் நான் உன்னை அங்க விட்டிருக்கேன்''

''ஆமாம்ப்பா, உண்மை என்னன்னா அம்மாவுக்கும் என்னை விட்டுட்டு இருக்க முடியாது. ஆனா அதை ஒத்துக்க மாட்டாங்க. உங்க மேலயும் பிரியம் இருக்குப்பா. ஆனா ஈகோப்பா ஈகோ!'' என்றாள் இவள்.



''அதுதான் அவளையும் சாகடிக்குது, எங்க வாழ்க்கையும் சாகடிச்சது!'' என்றார்.

அந்த இருபது நிமிட பயணம் அதற்குள்ளாக முடிந்து சிந்துஜாவினுடைய பங்களா கேட்டுக்கு முன்பாக வந்து நிறுத்தினார். நிறுத்தி விட்டு ''சரிம்மா, நீ இறங்கி உள்ளே போ!'' என்றார்.

மகள் அவரை ஆழ்ந்து பார்த்தாள். பிறகு அவருடைய கழுத்தைக் கட்டிக் கொண்டு அவர் நெற்றியிலே முத்தமிட்டு விட்டு 'குட் நைட்ப்பா!' என்று இறங்கிப் போனாள்.

ஏனோ அவளுடைய செய்கையிலே வித்தியாசம் தெரிந்தாற்போல உணர்ந்தார் சந்திரமோகன். அது அவருக்கு நெஞ்சில் ஒரு விதமான பயத்தையும் ஏற்படுத்தியது. மகள் பங்களாவுக்குள் போவதற்குள்ளாக சிந்துஜாவினுடைய தாய் தந்தை இருவரிடமும் பேசினார்.

''மாமா, அவ என்னமோ ஒரு மாதிரி இருக்கா. இன்னைக்கு சில அசிங்கமான விஷயமெல்லாம் நடந்து போச்சு. இவளுக்கு தெரியக்கூடாததெல்லாம் தெரிஞ்சு போச்சு!'' என்றார்.

''என்னப்பா அந்த ரோஜாமணி விஷயமா?'' என்றார் மாமனார்.

''ஆமாங்க, மாமா இது நம்ம அன்பு மனைவி சிந்துஜா இருக்காங்களே, மகளை வச்சுக்கிட்டு என்னென்ன பேசக்கூடாதோ அதெல்லாம் யோசிக்காம பேசிட்டா.

இந்துமதி ரொம்ப ஷாக்ல இருக்கா. ப்ளீஸ் டேக் கேர் ஆஃப் ஹர்!'' என்றார்.

''சரிப்பா, நாங்க பார்த்துக்கறோம்!'' என்றார்கள்.

இந்துமதி உள்ளே நுழைந்த பொழுது பாட்டியும் தாத்தாவும், ஓடிவந்து அவளை அரவணைத்துக் கொண்டார்கள். இந்துமதி பாட்டியைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

''என்னடா?''

''இல்லே பாட்டி, நான் இருக்கறதுதான் எங்க அம்மா அப்பா ரெண்டு பேர்த்துக்கும் இடைஞ்சல்!'' என்றாள்.

''பல்லைக் கழட்டிருவேன். என்ன பேசறா பாரு! அதுக ரெண்டுத்துக்கும் பொழப்பு இல்லை. அடிச்சுக்கிட்டு கிடக்குதுக. நீ எங்களுக்கு வைரம்டா, மாணிக்கம்டா! நாங்க இருக்கறோம்ல. எங்க காலம் வரைக்கும் உன்னை நல்லா பார்த்துப்போம்!'' என்று அவளை தழுவிக் கொஞ்சினார் மரகதப் பாட்டி.

''சாப்டியா?'' என்றார்.

''சாப்பிட்டேன்!'' என்றாள் அவள். முதல் மாடியில் தான் ஒரு படுக்கையறையில் அவள் தங்கியிருந்தாள். இன்னொரு பெரிய படுக்கை அறையில் மரகதமும், மகாலிங்கமும் இருந்தார்கள்.

அதனால் அவளுக்கு பெரிதாகத் தனிமை தெரியவில்லை. அவர்கள் இரண்டு பேருமே கிட்டத்தட்ட இவளுக்குக் கிடைக்காத தாய் தந்தையினுடைய பங்கை ஆற்றினார்கள்



என்றாலும் தாய் தந்தையினுடைய போக்கு அவளை வெகுவாக உறுத்தியது.

மகாலிங்கமும் மரகதமும் இரண்டு பேருமே அவளுடைய அறையில் வெகு நேரம் அமர்ந்திருந்தார்கள். பிறகு ''சரிடா ராஜா, மணி பத்தரைக்கு மேல் ஆகுது. நீ தூங்கு. நான் வந்து வந்து பார்த்துக்கறேன். கதவைத் தாழ் போடாதே!'' என்று சொல்லி விட்டு மகாலிங்கமும் மரகதமும் கதவை அடைத்துக் கொண்டார்கள்.

இரண்டு எட்டு போன மரகதம் திரும்பி வந்து ''சரி, நான் வேண்ணா உங்கிட்டயே படுத்துக்கட்டுமா? இது என்னைக்கும் தீராது. சரிம்மா கவலைப்படாதே. ஒரு ரெண்டு மூணு நாள் ஷாக்கா இருக்கும். உங்க அப்பா என்ன பண்ணுவார்? நாங்களே உங்க அப்பாவைக் கோச்சுக்கலை. சிந்துஜாவைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்து படாத பாடு பட்டுட்டான். அவனும் ஒரு மனுஷன் தானே. இவளாவது டைவர்ஸ் கொடுத்திருந்து கல்யாணம் பண்ணியிருந்தாக் கூட நாங்க உன்னை எங்க கூட வச்சு வளர்த்தியிருப்போம்!'' என்றார் மரகதம்.

இந்துமதி ஒன்றும் பேசவில்லை. ''என்ன சாமி பண்றது? பேசக்கூடாததெல்லாம் உங்கிட்டே பேச வேண்டியதா யிருக்கு!'' என்று புலம்பிக் கொண்டே போனார்.

அதற்குப் பிறகு ஒரு பதினொரு மணி வாக்கில் அறையில் வந்து எட்டிப் பார்த்தார். கதவு லேசாக ஒருக்களித்திருந்தது. உள்ளே நுழைந்து பார்த்தார்.

இரவு விடிவிளக்கின் ஒளியில் பார்த்த போது இந்துமதி தேவதையாக இருந்தாள். தாயைப் போல நிறம் இல்லை சற்று நிறம் குறைவுதான் என்றாலும் அதைப்பற்றி அவள் பெருமையாகத்தான் பேசுவாள். "இதுதான் நம்ம நாட்டு நிறம். நாம எதுக்கு வெள்ளைக்காரனாட்டம் வெளேர்னு இருக்கணும்?"என்பாள்.

தாத்தாவும் பாட்டியும் சிரிப்பார்கள். "இதுதான் பாப்பா உண்மை.தேக்கு மரத்தாலே செதுக்கின மாதிரி இருக்கே!" என்பார் மகாலிங்கம். யோசனையுடன் நின்று பார்த்தாள் மரகதம். அப்போதுதான் அது அவருக்கு உறைத்தது. படுத்திருந்த விதத்தில் ஏதோ ஒரு வித்தியாசம் தெரிந்தது.

தொய்ந்து போய் படுத்திருக்கிறாற்போல இருக்கிறதே என்று போய் அவளைத் தட்டிப் பார்த்தார். தலை சுழன்றாற் போல அவள் சரிந்து திரும்பிப் படுத்தாள். மரகதத்துக்குப் புரிந்து விட்டது.

"ஐய்யோ. தலையில கல்லைப் போட்டுட்டாளே!" என்று அலறிக் கொண்டு "ஏனுங்க, ஏனுங்க!" என்று ஓடினாள்.

மகாலிங்கம் 'என்ன? என்ன?' என்று வந்தார். பேத்தியைக் காட்டினார்.

மகாலிங்கத்திற்குப் புரிந்து போனது. உடனே பயந்து போய் சந்திரமோகனுக்கு ஃபோன் செய்தார். சிந்துஜாவும் செய்தி அறிந்து ஓடிவந்தாள்.

அதற்குப் பிறகு பரபரப்பாக காரியங்கள் நடந்தேறின.



## அத்தியாயம் - 6

மெல்லக் கண் விழித்தாள் இந்துமதி. சுற்றும் முற்றும் பார்த்தாள். எங்கே இருக்கிறோம் என்று அவளுக்கே ஒரு நிமிடம் தெரியவில்லை. பிறகுதான் தெரிந்தது.

ஒரு ஆஸ்பத்திரியில் இருக்கிறோம் என்று. கோயம் புத்தூரின் பிரபலமான ஆஸ்பத்திரி அது அதிலே சூட் மாதிரியான ஒரு தனி அறை புக் செய்திருந்தார்கள்.

கண் விழித்த பொழுது எதிரிலே அருள் பிரகாஷ் அமர்ந்திருந்தான். "நீங்க?" என்று அவள் பேசுவதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தாள்.

"வேண்டாம், பேசறதுக்கு டிரை பண்ணாதீங்க. அமைதியா படுத்துக்கோங்க!" என்றான் அருள் பிரகாஷ்.

இந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தாள். சந்திரமோகன் கவலையுடன் நின்று கொண்டிருந்தார். சற்றுத் தள்ளி சிந்துஜா அவளும் கவலை தோய்ந்த முகத்துடன் நின்று கொண்டிருந்தாள்.

மகள் கண் விழித்த உடனே சிந்துஜா குலுங்கி அழுது விட்டாள். தன் வாழ்நாளில் இந்துமதி பார்க்காத காட்சி.

"ஏம்மா, எங்களையெல்லாம் அவ்வளவு வெறுத்துப் போச்சா?" என்று திரும்பினாள்.

"ப்ளீஸ் மேடம்! இப்ப எந்த உணர்ச்சி வசமான காட்சியும் ஆகாது. எமோஷனலா அவங்க கிட்டே பேசாதீங்க!" என்றான் அருள் பிரகாஷ்.

''ரொம்பத் தாங்க்ஸ்ப்பா, சரியான நேரத்துக்கு நீ வந்து உதவி செஞ்சே!'' என்றார் சந்திரமோகன்.

மகள் இப்படி ஒரு முயற்சி செய்து விட்டாள் என்று மகாலிங்கமும் மரகதமும் போன் செய்த உடனே கா வேகமாக எடுத்துக் கொண்டு புறப்பட்டார் சந்திரமோகன் புறப்படும் போதே அவருக்கு நினைவுக்கு வந்தது அருள் பிரகாஷ் இது மாதிரி விஷயங்களில் ஒரு கவுன்சிலி செண்டர் வைத்து நடத்திக் கொண்டிருக்கிறான் என்று அவனுக்கும் போன் செய்து கொண்டே வண்டியை ஓட்டினார்.

கிட்டத்தட்ட ஆறேழு வருடங்களுக்குப் பிறகு அந்த பங்களாவின் வாசலில் வந்து காரை நிறுத்தினார். சிந்துஜா ''எதுக்கு வந்தீங்க?'' என்று ஓடி வந்து தடுக்க முயற்சி செய்த போது ஒரே தள்ளாகத் தள்ளி விட்டார். ''மரியாதையா பேசாம இரு!'' என்றார்.

சிந்துஜா பயந்து போய் நின்று விட்டாள்.

பரபரவென்று மாடிக்கு ஓடிப் போய் மகளை எடுத்து தோளிலே போட்டுக் கொண்டு கிடுகிடுவென்று கீழே இறங்கி வந்தார். வெளியே அவர் காருக்கு வரவும் பைக்கி இருந்து அருள் பிரகாஷ் இறங்கவும் சரியாக இருந்தது.

தாத்தாவும் பாட்டியும் ஓடி வந்து பின் சீட்டிலே ஏறி கொண்டார்கள். அந்த நேரத்திலும் கூட சிந்துஜா ஓடி போய் தன்னுடைய இன்னொரு காரைத்தான் எடுத்து கொண்டு புறப்பட்டாள்.



''அவ என்னமோ பண்றா. நீங்க வண்டி எடுங்க தம்பி!'' என்றார் மகாலிங்கம். அருள் பிரகாஷ் அந்த வண்டியை பின் தொடர்ந்து தன் பைக்கிலேயே வந்தான். அந்தப் பெரிய மருத்துவமனை ஊருக்குச் சற்று வெளியே இருந்தது. ஆனால் அவர்கள் பங்களாவிற்கு கொஞ்சம் பக்கமாகவே இருந்தது. அதோடு கூட அந்த மருத்துவமனையின் தலைமை மருத்துவர் சந்திரமோகனுக்கு மிகவும் வேண்டியவர்.

அந்த மருத்துவமனையில் சந்திரமோகனுக்கு பங்குகளும் இருந்தன. அதனால் நிலைமையைச் சொல்லி ''தயவு செய்து இது கொஞ்சம் வெளிய வராம பார்த்துக்கங்க!'' என்று வேண்டிக் கொண்டார் சந்திரமோகன்.

''வாங்க, வாங்க பிரச்சினையில்லாம பார்த்துக்கலாம். உங்களுக்கு தனி சூட் புக் பண்ணிடறேன்!'' என்று புக் செய்தார்.

ஏதோ மயக்கம் என்பது போலவே சொல்லி ட்ரீட் மெண்ட் செய்தார்கள். மறுநாள் காலையில்தான் கண் விழித்தாள் இந்துமதி.

முதல் நாள் முழுக்க வயிற்றைச் சுத்தம் செய்வது என்று அவளைப் படுத்தி விட்டார்கள். ஏதோ தூக்க மாத்திரை களை அள்ளிப் போட்டிருக்கிறாள். தாத்தாவினுடைய அறையில் இருந்து எடுத்து வைத்திருக்கிறாள்.

''நல்ல காலம்! ஒன் அவர்க்குள்ளே கொண்டு வந்தீங்க!'' என்றார் டாக்டர்.

''எந்த சாமி புண்ணியமோ? எங்க புள்ளே பிழைச்சா!'' என்று கண்ணீர் வடித்தார்கள் மகாலிங்கமும் மரகதமும்.

இதற்குள்ளாக சந்திரமோகனின் பெற்றோர்களும் வந்
சேர்ந்தார்கள்.

சந்திரமோகனின் அப்பா நடராஜனும் சந்திரமோகனி தாய் சிவகாமியும் அமைதியானவர்கள் தான். இருபது மை தள்ளி ஒரு கிராமத்திலே இருந்தார்கள். மருமகளுடை போக்கைப் பார்த்து பயந்து போய் இருந்தார்கள். அதனா அவர்கள் இங்கே இருக்க வேண்டாம் என்று கிராமத்தி வைத்திருந்தார் சந்திரமோகன். அவர்கள் வீட்டிலும் போ போய் இந்துமதி தங்குவாள். இரண்டு தாத்தா பாட் களுமே அவள் மேல் அன்பைப் பொழிந்தார்கள்.

ஆனால் யாரிடம் இருந்து அன்பு கிடைக்க வேண்டுமே அவளிடம் இருந்து கிடைக்கவில்லையே என்ப இந்துமதிக்கு ஒரு பெரும் குறையாக இருந்தது. இருந்தாலு தந்தை தன் மீது உயிரையே வைத்திருக்கிறார் என் எண்ணி இறுமாப்புற்றிருந்தாள். ஆனால், தந்தையு தனக்கான வடிகாலைத் தேடிக் கொண்டு விட்டார் என்ப அவளுக்கு ஒரு அதிர்ச்சியாக இருந்தது.

அதைக் கூட அவள் மன்னிக்கத் தயாராக இருந்தா ஆனால் அவளுடைய இன்னொரு மனம் உன்னால் தானே இவ்வளவு பிரச்சினைகளும்? இரண்டு பேரும் ஏதே இவளுக்காக இவளுக்காக என்றே பேசிக் கொள்கிறார்க இரண்டு பேரும் அவரவர்களுடைய வாழ்க்கையை தன காகத் தொலைத்த மாதிரித்தானே பேசிக் கொள்கிறார்க என்னால் எதற்கு இவர்களுக்குத் தொல்லை? நான் போ விடுகிறேன் என்று விரக்தியில்தான் அந்த முடிவ எடுத்தாள்.



இப்பொழுது அத்தனை பேரும் கதறிக் கொண்டு நிற்பதைப் பார்க்கும் பொழுது ஒரு வகையில் அவளுக்கு நிறைவாக இருந்தது. 'பரவாயில்லை. இத்தனை பேரும் தன் மேல் அன்புதான் வைத்திருக்கிறார்கள்!' என்று. ஆனால் அப்போதும் கூட பத்தடி தள்ளி நின்று கொண்டு தந்தையை முறைத்துக் கொண்டிருக்கிற தாயைப் பார்த்தாள். அவளுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

"ஏம்பா! என்னைப் பிழைக்க வச்சீங்க?" என்றாள்.

"என்னடா ராஜா இப்படிப் பேசறே? நீ என்ன நினைச்சுகிட்டிருக்கே? நீ ஒருத்தி இருக்கேன்னுதான் நான் என்னமோ தெம்பா அலைஞ்சு கிட்டிருக்கேன். டிப் டாப்பா அலைஞ்சு கிட்டிருக்கேன். வடிகாலா இன்னொரு பொண்ணு கூடத் தொடர்பு வச்சுட்டேன்னுதானே உனக்கு வருத்தம்? ஆனா இது மட்டும் உண்மைடா. உனக்கு மட்டும் ஏதாவது ஆயிருந்தா நான் பின்னாடியே வந்திருப்பேன்" என்றார் சந்திரமோகன்.

"ப்ளீஸ்ப்பா, அப்படியெல்லாம் சொல்லாதீங்க!" என்றாள் இந்து.

"பின்னே என்னடா? உன் மேல் உயிரையே வச்சிருக் கேன்டா. உன்னை சந்தோஷமா வச்சுக்க முடியலை யேன்னுதான் நான் அங்கேயும் இங்கேயும் பேயாட்டம் அலைஞ்சுகிட்டிருக்கேன்".

"அப்பா! பேசாம அம்மாவுக்கு டைவர்ஸ் கொடுத் துருங்க!" என்றாள்.

"அதெல்லாம் அப்புறம் பேசலாம்டா. நீ தேறி வா" என்றார். அருள் பிரகாஷ் இதையெல்லாம் பார்த்து கொண்டிருந்தான்.

அவர்கள் எல்லோரும் மாற்றி மாற்றிப் பேசியதற்கு பிறகு 'சரி, கொஞ்ச நேரம் அவங்களுக்கு ரெஸ் கொடுங்க. நான் அவங்ககிட்டே கொஞ்சம் பேசணு நீங்கல்லாம் போய் கொஞ்சம் ரெஸ்ட் எடுங்க!'' என்றா

சந்திரமோகன் அவன் இந்த மாதிரி தற்கொல முயற்சிகளில் இருப்பவர்களுக் கெல்லாம் கவுன்சிலி கொடுக்கும் ஒரு அமைப்பில் இருக்கிறான் என்பன பெற்றோர்களிடமும் மாமனார், மாமியாரிடமு ஏற்கனவே சொல்லியிருந்தார்.

மகாலிங்கமும் மரகதமும் சிந்துஜாவிடம் அதை சொல்லியிருந்தார்கள். சிந்துஜா அரை மனதாகத்தா வெளியே போனாள்.

''உங்களுக்கு என்ன பிரச்சினை?'' என்றான் அருள் பிரகாஷ்.

''பார்த்திங்கள்ளே, எங்க அம்மாவும், அப்பாவும்தா பிரச்சினை. நான் உங்களுக்கு அன்னைக்கே சொன்னே ன்ல்லே? ரெண்டு பேருக்கும் அன்பு காட்டவே தெரியல ரெண்டு பேரும் மாத்தி மாத்தி அவங்க பணத்தாலயு பலத்தாலயும் என்னை அடிக்கப் பார்க்கறாங்க. அது எனக் ரொம்ப வருத்தமா இருக்கு. வாழ்றதுல ஒரு அர்த்தமே இல்லை அப்படின்னு தோணுது!'' என்றாள்.



அருள் பிரகாஷ் சற்று நேரம் அவளைப் பேச விட்டான். அவள் மனத்தில் இருப்பதை யெல்லாம் கொட்டினாள். அதற்குப் பிறகு அவன் மெதுவாகக் கேட்டான். ''ஓகே. நீங்க போயிடறீங்க. நீங்க போனதுக்கு அப்புறம் அமைதியாக இருப்பாங்கன்னு நினைக்கறீங்களா?'' என்றான்.

''அதை நான் பார்க்க மாட்டேன் இல்லே?'' என்றாள்.

''பைத்தியக்காரத்தனங்க. நீங்க போனதுக்கு அப்புறம் என் பொண்ணை நீதான் கொன்னே அப்படின்னு ஒருத்தரை ஒருத்தர் டார்ச்சர் பண்ணிக்கப் போறாங்க.'' என்றான்.

''நான் தான் யாருக்குமே வேண்டியதில்லையே?'' என்றாள் அவள்.

''இது அனதர் பிளண்டர்''

''என்ன சொல்றீங்க?'' என்றாள்.

''இத பாருங்க இந்துமதி. யாருக்காகவோ நாம வாழ வேண்டிய அவசியம் இல்லை. நமக்காக நாம இருக்கணும்''

''இருந்தாலும் அன்பு செலுத்தறதுக்குன்னு யாராவது வேணுமில்லே?'' என்றாள்.

''என்ன பேசறீங்க? உங்க தாத்தா, பாட்டி, மகாலிங்கம் ஐயா, மரகதம் அம்மா, ரெண்டு பேரும் எப்படித் துடிச்சாங்க? இந்தப் பக்கம் நடராஜன் ஐயாவும், சிவகாமி அம்மாவும் எப்படித் துடிச்சாங்க? உங்களுக்கு நாலு உயிர்கள் அன்பு செலுத்தறதுக்கு இருக்குங்க. இங்கே ஒரு

பக்கத்திலயே ஒரு பெரிய அநாதை விடுதி இருக்கு. அங் ஒரு நாளைக்கு வந்து பாருங்க. அங்கே என்ன மாதி குழந்தைங்களை வளர்த்தறாங்க தெரியுமா? பெத் குழந்தைங்களை குப்பைத்தொட்டியிலே விசிட்டு போயிடுவாங்க.சில சமயங்களில் சில குழந்தைகளை நா கடிச்ச கை போய்...! கால்....!''என்று அவன் தொட முன்னே "ப்ளீஸ்... சொல்லாதீங்க!" என்றாள் இந்து.

"கஷ்டமாத்தான் இருக்கும்.ஆனாத் தெரிஞ்சுக்கோங்க அந்த மாதிரி குழந்தைங்களைக் கொண்டு வந்து வளர்த்தறாங்க. அவங்களும் மகிழ்ச்சியாக இருக்காங்க உலகத்திலே வர்ற ஒவ்வொரு உயிரும் தனி உயிருங்க. நீங்க இப்ப ட்வெண்டி இயர்ஸ் ஒல்ட். முடிச்சிட்டிருக்கீங்களோ டிகிரி. எம்.பி.ஏ. பண்றீங்களோ?

"ம்...?" என்றான் அவன்.

"எம்.பி.ஏ. பண்ணப் போறீங்களோ? பண்ணிட்டு இருக்கீங்க. அப்படி இருக்கும் போது உங்களுக்கு வாழ்க்கையில ஒரு பர்ப்பஸ் இருக்கு. உங்க வாழ்க்கையை நீங்க வாழ்ந்து தான் ஆகணும். இது மாதிரியெல்லாம் தற்கொலை பண்ணிக்கறது எல்லாம் ரொம்பப் பாவம். உங்களுக்குத் தெரியுமா? நம்ம இந்து மதத் தத்துவத்தில் சொல்றாங்க. இந்த மாதிரி தற்கொலை செய்துக்கற உயிர் எல்லாம் அவங்களுடைய ஆயுட் காலம் முடியற வரைக்கும் இருட்டுக்குள்ளே இருக்கற மாதிரி அந்த ஆன்மா படாத பாடு படும் அப்படின்னு சொல்றாங்க.அதை விடுங்க. வாழும் வரை போராடு அப்படின்னு ஒரு பாட்டுக் கேட்டிருக்கீங்களா? நாம கடந்து வந்தாச்சு. நாம வாழ்ந்து



காட்டணும். அம்மா, அப்பா நம்ம வாழ்க்கையோட ஒரு அங்கம் அவ்வளவுதான். அந்தப் பகுதி சரியில்லையா? அதைத் தூக்கி அந்தப் பக்கம் வச்சுட்டு நீங்க உங்களோட எய்ம், உங்களோட வாழ்க்கைன்னு யோசிங்க. ஏதாவது சோஷியல் சர்விஸ் உங்ககிட்டே இருக்கற பணத்துக்கு... நான் தான் பார்த்தேனே? அன்னைக்கு நூறு பவுனை அலட்சியமாக வாங்கிட்டுப் போனீங்க.உங்க பாக்கெட் மணியே... லட்ச லட்சமா கிடக்குதாமே சந்திர மோகன் அங்கிள் சொன்னாங்க. அதுல கொஞ்சமே கொஞ்சம் எடுத்து ஒரு பத்து குழந்தைங்களைப் படிக்க வைங்க. பத்து பேரை வாழ வைங்க. உங்களுக்கு வாழ்க்கையில ஒரு அர்த்தம் வந்துடும். இப்படி வெறுமையெல்லாம் தோணாது. எதுக்குங்க அன்பையெல்லாம் பிச்சை கேட்டுட்டு இருக்கீங்க? அன்பெல்லாம் பிச்சை கேட்டு வாங்கறது இல்லைங்க. உங்ககிட்டே நிறைய அன்பு உள்ள இருக்குது. அதை எடுத்து தாய், தகப்பன் இல்லாத குழந்தைகளுக்கு வாரி வாரி குடுங்க. அவங்க திருப்பி எல்லா அன்பையும் உங்களுக்குக் கொடுப்பாங்க தெரியுமா?பெட் அனிமல்ஸ் பிடிக்குமா?'' என்றான்.

"ம்...!" என்றாள்.

"ரெண்டு நாய்க்குட்டியை வளர்த்துங்க. இவங்களை விட அது பெட்டர். அது எப்படி ஓடிவந்து உங்க மடியில உட்காரும்னு பாருங்க.இன்னமும் நாம ஏதாவது ஒரு வெண்டிலேஷன் தேடிக்கணுங்க!" என்றான்.

அவள் அமைதியாகக் கேட்க ஆரம்பித்தாள். "வேறு ஒரு உலகம் இருக்குங்க. அந்த வேறு ஒரு உலகத்திலே நிறைய

விஷயங்கள் இருக்கு. அந்த உலகத்துக்கு அடுத்த நேரத்துக்கு சோறு கிடைக்குமான்னு தெரியாது. பத்து ரூபாயை லக்சரியா நினைக்கறவனெல்லாம் இருக்கான். ஆயிரம் ரூபாயை கண்ணுல பார்க்காதவனெல்லாம் இருக்கான். விலை மதிப்பில்லாதது இந்த உயிர். ஆண்டவன் கொடுத்தது. இன்னொரு விஷயம் ஓஷோ சொல்றாரு. நீங்க உங்க அம்மா, அப்பாவை சொந்தம் கொண்டாடாதீங்க. அவங்களும் உங்களை சொந்தம் கொண்டாட வேண்டாம். ஒவ்வொரு குழந்தையும் தாய் தந்தையின் வழியாக வந்தது அப்படின்னு சொல்றாரு. தாய் தந்தைக்கான காரணம் என்ன? அவங்க ஒரு மீடியேட்டர் தான். உங்க வாழ்க்கைக்கு ஒரு பர்ப்பஸ் இருக்கு. அதைத் தெரிஞ்சுக்கிட்டீங்கன்னா வாழ்க்கையை கொண்டாடலாம்ங்க, என்னைப் பாருங்க எனக்கு பெரிய பண வசதியெல்லாம் கிடையாது. ஆனா நான் ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்திருக்கும் போது இந்த நாளை நான் சந்தோஷமா கொண்டாடுவேன். இன்னைக்கு எனக்கு ஆண்டவன் இதைக் கொடுத்திருக்காரு. அப்படின்னு ஒரு பிளான் போட்டுக்குவேன்!'' என்றான்.

இந்துமதி சுவாரசியமாகக் கேட்க ஆரம்பித்தாள். ''ஓஹோ, வாழ்க்கையில் இப்படி கோணங்கள் எல்லாம் இருக்கிறதா?'' என்று முதல் முதலாக அவள் தன்னுடைய சூழ்நிலையை மறந்து வெளியே இருக்கிற உலகத்தைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தாள்.

அருள் பிரகாஷின் முகத்திலும் புன்னகை மலர்ந்தது. அப்போது உள்ளே வந்த சந்திரமோகன் ஒரு ஓரமாக நின்று



அவன் செய்கிற ரசவாதத்தை வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தார்.

இந்த இளைஞன் இவ்வளவு அழகாக விவரமாக செயல்படுகிறானே என்று அவனை ஆச்சரியமாகப் பார்த்து விட்டு மகளைப் பார்த்தார். மகள் அவன் சொல்வதை ஆழ்ந்து கேட்டுக் கொண்டிருப்பதோடு மெது மெதுவாக அவள் முகத்திலே ஒரு அமைதி உணர்வு பரவுவதையும் பார்த்தார்.

சூழ்நிலை அங்கே மெல்ல மெல்ல மாறிக் கொண்டிருந்தது.

## அத்தியாயம் - 7

நன்றாக உறங்கினாள் இந்துமதி. அவள் ஆழ்ந்த உறக்கத்திற்குப் போகும் வரை அவள் அருகிலே அமர்ந்திருந்தான் அருள் பிரகாஷ். ''கொஞ்ச நேரம் இருங்க. நீங்க இங்கே இருந்தா எனக்கு செக்யூர்ட் ஃபீலிங்கா இருக்கு!'' என்றாள்.

''நோ ப்ராப்ளம்!'' என்றான் அவன். அவளுக்கு கொடுத்திருந்த மருந்துகள் வேலை செய்ய ஆரம்பித்தன. கிட்டத்தட்ட அந்த உறக்க நேரத்தில் தான் சொல்ல வேண்டியதைச் சொன்னால் அவளுடைய மனதிலே அது ஓடிக் கொண்டிருக்கும் என்று எண்ணினான் அருள் பிரகாஷ். பிறகு வெளியே வந்தான்.

''ரொம்ப தாங்க்ஸ்ப்பா!'' என்றார் சந்திரமோகன். ''சார், அவங்க ரொம்ப பாதிக்கப்பட்டிருக்காங்க. எதுக்காக வாழணுங்கற அளவுக்கு யோசிச்சிருக்காங்க. நீங்க ஏதாவது பண்ணனும் சார். ஏதாவது ஒரு சேஞ்ச். நீங்க அவங்க வாழ்க்கையில கொண்டு வரணும்''

''நான் என்னப்பா பண்ணட்டும்? ரொம்ப நாசூக்கான விஷயம் அதைப் போட்டு என் பொண்டாட்டி உடைச்சிட்டா. இவ ரொம்ப சாஃப்ட் டைப்.சிந்துஜா வளர்த்தும் ரொம்ப சாஃப்டா இருந்திருக்கா!'' என்றார் அவர்.

சற்று பின்னாலே வந்து கொண்டிருந்தா சிந்துஜாவின் காதிலே விழுந்து விட்டது. உடனே அவள் முன்னாலே வந்து ''என்ன சிந்துஜா வளர்ப்புன்னு சொல்றீங்க?. சிந்துஜா நல்லாதான் வளர்த்திருக்கேன். ஒழுக்கமாத்தான் வளர்த்திருக்கேன்!'' என்றாள்.

''நீ வளர்க்கலை. அவ வளர்ந்துட்டா!''

உடனே அருள்பிரகாஷ் ''ப்ளீஸ், ப்ளீஸ், இப்பவாவது புரிஞ்சுக்கோங்க. இந்தப் பொண்ணு இந்த முடிவுக்கு போனதுக்கு அப்புறமும் நீங்க ரெண்டு பேரும் எப்பப் பாரு தகராறு நடத்திகிட்டிருந்தா என்ன அர்த்தம்?'' என்றான்.

சந்திரமோகன் அமைதியாகி விட்டார். ''எல்லாத்துக்கும் இவர்தான் காரணம்!'' என்றாள் சிந்துஜா.

அருள் பிரகாஷ் திரும்பி நின்றான். ''மேடம், அவரு மட்டும் இல்லைங்க மேடம்! நீங்களும்தான் காரணம்.

''ஹவ் டேர் யூ?'' என்றாள்.



''இந்த மிரட்டல் எல்லாம் உங்க வீட்ல இருக்கவங்க கிட்ட வச்சுக்கோங்க. ஒண்ணும் இல்லை. இந்த விஷயத்தை எல்லாரும் சேர்ந்து அமுத்திட்டோம். அந்த லெட்டர் அப்படியே போலீஸ்கிட்ட போயிருந்தா தற்கொலை முயற்சி அப்படின்னு அவ பேர்லயும் கேஸ் போட்டிருப்பாங்க. தற்கொலைக்கு தூண்டினதுக்கு உங்க ரெண்டு பேர் மேலயும் கேஸ் போட்டிருப்பாங்க''

சிந்துஜாவின் முகம் மாறியது.

''ப்ளீஸ், லிஸன் டூ மி. நான் உங்களை கிரிட்டிஸைஸ் பண்ணலை. நீங்க யாரு மேடம்? யூ ஆர் எ ஹியூமன் பீயிங். உங்க அம்மா அப்பாவுக்கு மக. இவருக்கு ஒய்ப்னு சொல்லிக்கப் பிடிக்கலைன்னா விட்ருங்க. நான் ஒரு கேள்வி கேட்கறேன். உங்க ஈகோவை மட்டும் பார்த்தீங்கள்லே? நீங்க பெத்துப் போட்ட பொண்ணைப் பத்தி யோசிச்சீங்களா?'' என்று கேட்டான்.

சிந்துஜா சற்று திகைத்துப் போனாள். அவளிடம் யாரும் இப்படி பேசியதில்லை. ''எங்கிட்ட யாரும் இப்படி பேசினதில்லை''என்றாள் கோபமாக.

''அதுதான் மகா பெரிய தப்பு. சார் பேசியிருக்கணும். உங்க அம்மா அப்பா பேசியிருக்கணும். இந்துமதியாவது கேட்டிருக்கணும். உங்க கிட்டே எதுக்கு வம்புன்னு ஒதுங்கி ஒதுங்கி போனாங்கன்னா. தெரியாதுன்னு அர்த்தமா? நீங்க அப்படி நினைச்சுக்கிட்டுஇருக்கீங்க. இவங்ககிட்ட எதுக்கு பேசணும்னுதான் ஒதுங்கிப் போறாங்க. ப்ளீஸ், செல்ஃப் அனாலிஸிஸ் பண்ணுங்க. முதல்லே கவுன்சிலிங் உங்களுக்குத்தான் வேணும்!'' என்றான்.

சிந்துஜா அவன்பேசப் பேச அமைதியானாள். "உங்களுக்கு மனசுல ஏதோ குறை இருக்கு. இத்தனை பேர் அன்பு காட்டத் தயாரா இருந்தும் அதைப் புரிஞ்சுக்கலை. அப்படின்னா உங்களுக்கு ஏதோ பிரச்சினை இருக்கு. யு பெட்டர் கம் டு எ சைக்காலஜிஸ்ட்!"

சிந்துஜா திகைத்துப் போய் நின்றாள்.

"அருமையான பொண்ணு! உங்க கௌரவப் போட்டிக்காக அவளுக்கு ஜவுளி வாங்கிக் கொடுக்கவும், நீங்க நகை வாங்கிக் கொடுக்கவும் செஞ்சா அந்தப் பொண்ணு மயங்கிடுமா? அது சுய சிந்தனையுள்ள பொண்ணு. எனக்கு வேண்டியது அம்மா, அப்பா ஒண்ணா இருக்கணும். எனக்கு வேண்டியது அம்மா, அப்பாவோட அன்பு. ரெண்டு பேரும் சேர்ந்து எங்கூட சந்தோஷமா இருக்கணும். அது கிடைக்கலை. மத்தது எது கிடைச்சு என்னங்குது அந்தப் பொண்ணு. எதுக்காக நான் வாழணும்னு கேட்கறா அந்தப் பொண்ணு"

சந்திரமோகனும் திகைத்துப் போய் பார்த்தார். "கொஞ்சம் தனியா யோசிங்க மேடம். நீங்க உங்களுக்குள்ளேயே இருக்காம ஒரு வெளி ஆளா நின்னு நாம என்ன செஞ்சுகிட்டிருக்கோம். இது நியாயமா? நம்ம கடமை என்ன? அதெல்லாம் நீங்க எப்பவாவது யோசிச்சிருக்கீங்களா?" 'இந்து குழந்தையா இருக்கும் போது ஒரு நாளாவது நீங்க சோறு ஊட்டியிருக்கீங்களா?"

சிந்துஜா ஒன்றும் பேசவில்லை. அவளுடைய அம்மா, அப்பா இரண்டுபேரும் பின்னாலே நின்றார்கள். அவர்கள் முகம் மலர அருள் பிரகாசத்தை பார்த்ததோடு மட்டுமல்லாமல் மகாலிங்கம் "நல்லாக் கேளு!" என்பது போல பின்னாலே இருந்து சைகை செய்தார்.

அருள்பிரகாசத்துக்கு அந்த நேரத்தில் சிரிப்பு வந்தது. இருந்தாலும் அடக்கிக் கொண்டு "செல்ஃப் அனாலிஸிஸ் பண்ணுங்க மேடம். உங்களுக்கு உண்மையான ஃப்ரெண்டுங்க யாராவது இருக் காங்களா? அவங்ககிட்டே உட்கார்ந்து பேசுங்க. நான் இப்படியெல்லாம் தப்பு பண்ணினேன். தப்பு பண்ணி னேன்னு கூட சொல்ல வேண்டாம். இது தப்பா ரைட்டா? என் மகள் இப்படி ஒரு வேலையை செஞ்சுட்டாளே அப்படின்னு பேசுங்க. கௌரவம் பார்க்காதீங்க!" என்றான்.

சிந்துஜா மறுபடியும் பேச வாயெழாமல் நின்றாள். மேலும் "நான் உங்களை நோக்கி ஒரு ஆள் காட்டி விரலை நீட்டிக் குற்றம் சாட்டியிருக்கிறேன். அனலைஸ் பண்ணுங்க. இனிமேலாவது அந்தப் பொண்ணை நிம்மதியா வாழ விடுங்க. நான் அந்தப் பொண்ணுகிட்ட வேற விதமா டீல் பண்ணிக்கிட்டு இருக்கேன்.உங்களையெல்லாம் தூக்கி எறிஞ்சிட்டு தன்னைப்பத்தி யோசிச்சு வாழணும் அப்படிங்கறதை அவங்களுக்கு நான் சொல்லிக் கொடுத்துக்கிட்டு இருக்கறேன். ரெடி ஆயிருவாங்க. ஆனா உங்க பிரச்சினை என்ன தெரியுமா? நீங்க உங்களை மட்டும்தான் யோசிக்கிறீங்க. யூ திங்க் ஒன்லி ஆஃப் யுவர் செல்ஃப். உங்களுக்கு மத்த மனுஷங்களைப் பத்தி நினைப்பே இல்லை. கொஞ்சம் நினைங்க. கொஞ்சம் நினைச்சுப் பாருங்க!" என்றான்.

சொல்லி விட்டு "சார், வாங்க சார்!" என்று சரசரவென்று இழுத்துக் கொண்டு போனான். வேர்த்துப் போன முகத்துடன் சிந்துஜா நடந்து போக பெற்றோர்கள் இருவரும் அவனைத் திரும்பிப் பார்த்து சிரித்து விட்டுப் போனார்கள். அந்த நேரத்திலும் மகாலிங்கமும் ஆள் காட்டி விரலையும் பெரு விரலையும் இணைத்து சூப்பர் என்பது போல சொல்லிவிட்டுப் போனார்கள்.

அவர்கள் போனதற்குப் பிறகு திரும்பவும் அவர் அந்த கூட்டுக்கு வந்தார்கள். சந்திரமோகன் வாய் விட்டு கடகடவென்று சிரித்தார். "சூப்பர்! அருள் பிரகாஷ். என் வாழ்க்கையிலே என்னால செய்ய முடியாததை நீ செஞ்சுட்டே!" என்றார்.

"உங்களுக்கு வெட்கமா இல்லையா சார்?" என்றான் அருள் பிரகாஷ். அவர் திகைத்துப் போய் பார்த்தார்.

"இப்படிச் சொல்ல வெட்கமா இல்லே?. நான் கேட்டதை நீங்க எப்பவோ கேட்டிருக்கலாமில்லே?" என்றான்.

"நீ வேறப்பா? கேட்டிருந்தேன்னு வச்சுக்கோ. இப்பத் தான் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் வந்திருக்கு. அவ அப்பவே ஆரம்பிச்சிருப்பா. நான் அவளைக் கொடுமைப் படுத்திட்டேன், வார்த்தைகளால் காயப்படுத்திட்டேன். அப்படின்னு பெரிய சீன் பண்ணி வீட்டை ரணகளம் பண்ணியிருப்பா. ஒரு நாளா ரெண்டு நாளா தொடர்ந்து பார்த்துட்டுத்தான் நான் வேண்டாம் இந்த வம்பேன்னு விட்டுட்டேன்!" என்றார்.



"அதோடு மட்டும் விட்டிருந்தாப் பரவாயில்லையே ரோஜா மணியைப் போய்...!" என்று அவன் சிரித்தான்.

"ப்ளீஸ்பா! அது என்னோட பெரிய தப்புதான். ஆனா அதிலேயும்நான் ரொம்ப கேர்ஃபுல்லா...!"

"கேர்ஃபுல்லா இல்லே சார்! சுயநலமா. குழந்தை பிறக்க முடியாத ஒரு பொண்ணா பார்த்து தேர்ந்தெடுத்து அஃபேர் வச்சுக்கறது எவ்வளவு பெரிய திட்டம்?" என்றான் அருள் பிரகாஷ்.

அவர் முகம் வாடியது. "என்னப்பா இப்படிச் சொல்றே?"

"ஆமா!"

"நீ நினைக்கிற மாதிரி இல்லப்பா. அந்தப் பொண்ணு தான் என்னை அப்ரோச் பண்ணுச்சு. அந்தப் பொண்ணுக்கு எங்க குடும்ப விஷயம் எல்லாம் தெரியும். மனசு நிம்மதி இல்லாம இருக்கேன்னு தெரிஞ்சுக்கிட்டு நான் உங்ககிட்ட எதுவுமே எதிர்பார்க்கலை, அப்படின்னு வந்தா!" என்றார்.

"தியாகி சார் அந்த மேடம். நான் சொல்றேன் கேளுங்க. ஒபனா நீங்க சிந்துஜா மேடத்தை.டைவர்ஸ் பண்ணிடுங்க. ரோஜாமணியை மேரேஜ் பண்ணிக்கோங்க. என்னைக் கேட்டா இந்துமதியும் கூட அங்க வந்துடுவாப்ல என்றான்.

"வந்துடுவாப்பா! என்ன இருந்தாலும் அந்தப் பொண்ணு கூட சந்தோஷமா பேசினாக் கூட இவளுக்குத் தோணும். நம்ம அம்மா அப்பா இப்படி இல்லையேன்னு தோணும். ரொம்ப கிரிட்டிக்கலான சிச்சுவேஷனா போச்சு. எனக்கு என்ன பண்றதுன்னே தெரியலை!" என்றார்.

"இந்துமதி ரெடியாகட்டும் சார்! இன்னும் ஒரு நாலஞ்சு நாள்.

சைக்காலஜிஸ்ட் வரச் சொல்லியிருக்கேன். எ ஃப்ரெண்டுன்னு சொல்லி அறிமுகப்படுத்தறேன். அவரு கவுன்சிலிங்னு தெரியாத மாதிரி கவுன்சிலிங் கொடுத்து வாரு. ஒரு நாலஞ்சு நாள்ல ரெடி பண்ணிடலாம் சார் என்றான்.

"ரொம்பத் தாங்க்ஸ்பா. என்னோட மனசாட்சியோட உறுத்தலுக்கு நீ மருந்தா இருந்தே. என் பொண்ணை மட்டும் நீ ரெடி பண்ணிக் கொடுத்துடுப்பா. உனக்கு என்ன வேண்ணா செய்யறேன்!" என்றார்.

"பார்த்தீங்களா? மறுபடியும் பணத்தால அடிக்கறதுக்குத் தானே பார்க்கறீங்க?"

"இல்லப்பா, நான் அப்படிச் சொல்லலை. நீ நிறைய நல்ல காரியங்கள் செஞ்சுகிட்டிருக்கேன்னு தெரியும். எதுக்கு வேணுமோ சப்போர்ட் கேளு. நான் தரேன்.ஏதாவது ஆசிரமம் நடத்தணும்னாலும் சொல்லு. உனக்கு இடம் கட்டடம் எல்லாம் நான் பண்ணித் தரேன். என் வாழ்க்கையிலே நான் செஞ்ச தப்புக்களுக்கு பிராயச்சித்தம் பண்ணலாம். எம் மகளுக்கு வேணுங்கறது கிடக்குது. நகை சொத்து, கார், பங்களா போதும். இத்தனையினாலயும் அவளுக்கு நிம்மதி கொடுக்க முடியலை!"

"தேர் யூ ஆர் சார்! நானும் இதையே தான் அவங்ககிட்டே சொல்லியிருக்கேன். நான் இப்போதைக்கு இந்துமதியை டைவர்ட் பண்ணி ஏதாவது சோஷியல்



சர்வீஸ்ல இறக்கி விடறேன். போய் வேற மாதிரி ஆளுங்களைப் பார்க்கும் போது இப்படிப் பட்டவங்களும் வாழ்ந்துட்டு இருக்காங்க. நாம ஏன் இந்த முடிவுக்கு வந்தோம்னு நினைப்பாங்க. மாற்றம் வரும்!" என்றான்.

"தயவு செய்து செய்ப்பா. மானிட்டரியா என்ன சப்போர்ட் வேண்ணாலும் நான் கொடுக்கறேன். அவ பேர்லயும் பேங்குல நிறைய டெபாசிட் கிடக்குது. அவ வேண்ணா அதை எடுத்து யூஸ் பண்ணிக்கலாம். நான் எந்தக் கேள்வியும் கேட்க மாட்டேன்"

"ரொம்ப சந்தோஷம் சார். ஆனா உங்களைப் போல பணக்காரங்களெல்லாம் இப்படி முடிவுக்கு வர்றதுக்கு ஏதாவது ஷாக் ட்ரீட் மெண்ட் தேவையா இருக்கு. இல்லே சார்?"

"குத்தலாத்தான் பேசறே. ஆனாலும் உங்கிட்டே எனக்கு கோபம் வரலை. ஏன்னா நீ எங்க வெல்விஷர். உண்மையா நீ வரலைன்னு வச்சுக்கோ நான் என்னுடைய சோ கால்டு ஒய்ஃப் சிந்துஜா இருக்காளே அவளை என்ன பண்ணியிருப் பேன்னு எனக்குத் தெரியாது. நல்ல வேளை,, நீ என்னை கூல்டவுன் பண்ணி இந்தப் பக்கம் கூட்டிட்டு வந்தே!" என்றார்.

"தெரியலை சார், நான் அவங்க கிட்டே இப்ப சொன்ன மாதிரி அவங்க கிட்டயும் ஏதோ பிராப்ளம் இருக்குது. அதையும் நாம உட்கார்ந்து பேசணும்சார். அவுங்களுக்கும் ஏதாவது கவுன்சிலிங் கொடுக்கணும்!" என்றான்.

''கவுன்சிலிங்கா? நான் என்ன பைத்தியமா அப்படின் சண்டைக்கு வந்துருவா''

''அதான் சொல்றேன். அவங்களுக்கு நேரடியா கொடுக் கூடாது. இன்டைரக்டாதான் கொடுக்கணும். அவங்க இ கிளப்லே எல்லாம் இருப்பாங்களே அங்கயெல்லா டாக்டர்ஸ் சைக்காலஜிஸ்ட் யாராவது இருக்காங்களான் பாருங்க. கான்ஃபிடன்ஷியலா அவங்ககிட்டே ஹெல் வாங்கலாம்!'' என்றான்.

''இதுகூட நல்ல ஐடியாதான்'' என்றார் சந்திரமோகன்

''நீ சொன்னதுக்கு அப்புறம்தாம்ப்பா எனக்குத் தோணு எங்கேயோ ஏதோ ஒரு ஷாக் அவளுக்கு ஆயிருக்கு போல இருக்கு. என்ன எழவோ!'' என்றார் இவர்.

ஓரிரண்டு நாட்களுக்குள்ளாக இந்துமதி பழைய மாதிரி தேறினாள். இந்த இடைப்பட்ட நேரத்திலே ஒரு நா தன்னுடைய தாய் தந்தையரை அழைத்துக் கொண் வந்தான் அருள் பிரகாஷ்.

சிகாமணியும், சந்திரமோகனும், அந்த கூட்டி முன்னறையிலே இருந்த சோஃபாவிலே அமர்ந் தங்களுடைய பழைய காலத்தை எல்லாம் பேசி கொண்டார்கள்.

''எம்ப்பா சிகாமணி, இவ்வளவு பணம் இருக் ஃபாக்டரி இருக்கு. மக பார்த்தியா? இப்படிப் பண் கிட்டிருக்கா. அவ... சிந்துவைப் பார்த்தியா? வா கைன்னா என்னன்னே புரிஞ்சுக்க மாட்டேங்கறா!'' என் புலம்பினார்.



சிகாமணி ''இனிமேலாவது மாறிக்கப்பா. வேணுங்கறதை சேர்த்தாச்சு. பொண்ணு கூட கொஞ்ச நேரம் செலவழிக்க வச்சுக்கோ. ஃப்ரெண்டு தானே அதனால சொல்றேன். சிந்துஜா ஒத்து வரலைன்னா டைவர்ஸ் வாங்கிக்கோ. வாங்கிட்டு அந்த பொண்ணு ரோஜாவை கல்யாணம் பண்ணிக்கோ!'' என்றார்.

''நான் ஏற்கனவே மாலை மாத்திக்கிட்டேன்!''

''உலகறிய ஏத்துக்கோ. அந்தப் பாவமும் உனக்கு வேண்டாம்!'' என்றார்.

''இனி அப்படித்தான் செய்யணும்!'' என்றார். ''எல்லாமே இந்துமதி கையில தான் இருக்கு. இந்துமதி என்ன சொல்றாளோ? அதான்!'' என்றார்.

சிகாமணியும், கமலவதியும், இந்துமதியிடம் மிகவும் அன்பாகப் பேசினார்கள்.

அருள் பிரகாஷிடம் ''உங்க அம்மா அப்பாவா?'' என்றாள் அவள்.

''ஆமா!'' என்று அறிமுகப்படுத்தினான். அவர்கள் சற்று நேரம் பேசி விட்டு அந்தப் பக்கம் போனதற்குப் பிறகு ''அருள்! நீங்க ரொம்ப லக்கி!'' என்றாள் இந்துமதி.

''என்னங்க லக்கி? உங்களுக்கு அஞ்சு லட்ச ரூபாய் ஜவுளி, நூறு பவுன் நகைன்னு எப்ப வேண்ணா கிடைக்குது?'' என்றான் குறும்பாகச் சிரித்தபடி.

உச்சுக் கொட்டினாள் இந்துமதி. ''எவ்வளவு அருமை யான அம்மா, அப்பா உங்களுக்கு கிடைச்சிருக்காங்க?'' என்று.

''வச்சுக்கோங்க. அம்மா, அப்பாவை வேண்ணா நீங்களே கூப்பிட்டு வச்சுக்கோங்க'' என்றான். அப்போது தான் இந்துமதிக்கு அந்த யோசனை தோன்றியது சந்திரமோகனிடம் அதைச் சொல்லவும் செய்தாள்.

சந்திரமோகனும் யோசனையிலே ஆழ்ந்தார்!

## அத்தியாயம் - 8

அழகான அளவான அந்த வீட்டை சுற்றி சுற்றிப் பார்த்தாள் இந்துமதி. மொத்தமாக ஒரு ஏழு செண்ட்டுக்குள் தான் இருக்கும். நடுவிலே வீடு. சுற்றிலும் தோட்டம். காம்பவுண்ட் கட்டியிருந்தார்; சிகாமணி. அந்தக் காலத்து வாத்தியார் என்பதால் லோன் போட்டு சர்வீஸ் முடிவதற்குள்ளாகக் கட்டியிருந்தார்.

மாடியிலேயும் இரண்டு மூன்று அறைகள் இருந்தன. மாடிக்கு உள்ளே இருந்தும் படி சென்றது. வெளியே இருந்தும் படி சென்றது. ஆஸ்பத்திரியில் இருந்து புறப்படுவதற்கு முன்பாக இந்துமதி அந்த விசித்திரமான ஆசையை வெளியிட்டாள்.

''அப்பா, எனக்கு ஒரு சந்தோஷமான ஃபேமிலி கூட இருக்கணும்னு ஆசையா இருக்கு. கொஞ்ச நாள் இவங்களோட போய் இருக்கட்டுமா?'' என்றாள்.

''எவங்களோடம்மா?'' என்றார் சந்திரமோகன்.

''அதான் உங்க ஃப்ரெண்டு சிகாமணி, கமலவதி அம்மா எல்லாம் இருக்காங்கள்லே, அந்த மாமா அத்தை வீட்ல



போய் இருக்கேன். ஒரு மூணு மாசம் இருக்கேம்ப்பா, எனக்கு அந்த அனுபவம் வேணும்ப்பா!'' என்றாள்.

சந்திரமோகனும் அப்போது இருந்தார். ஒரு இளைஞன் இருக்கிற வீட்டில் எப்படிப் போய் மகளைத் தங்கச் சொல்லுவது என்பது போல யோசித்தார் சந்திரமோகன். ஆனால் இப்போதைக்கு மகள் எதைக் கேட்டாலும் அவளுக்கு வாரிக் கொடுப்பதற்குத் தயாராக இருந்தார். அவள் இப்படி ஒரு யோசனையைச் சொன்னவுடனேயே அருள் பிரகாஷைப் பார்த்தார். அருள் பிரகாஷ் ஒரு விதமான சிரிப்புடன் புரிந்து கொண்டது போல் சொன்னான்.

''யோசிக்காதீங்க சார்! நான் மாடியிலே தங்கிக்கறேன். ஒண்ணும் பிரச்சினை இல்லை. அவங்க கீழே தங்கிக்கட்டும். இவங்க இருக்கற வரைக்கும் வேண்ணா நான் அந்த வெளிவாசப்படியை யூஸ் பண்ணிக்கிட்டு மேலேயே இருந்துக்கறேன்!'' என்றான்.

''சேச்சே, நான் அப்படித் தப்பா எல்லாம் நினைக்கலைப்பா. ஆனா உங்க அம்மா, அப்பா ஒத்துக்குவாங்களா?'' என்றார்.

''நான் ஒத்துக்க வைக்கிறேன் சார். ஒண்ணும் பிரச்சினை இல்லை. நீங்க என்னை நம்பலாம்'' என்றான் அவன்.

''அப்படியா அப்பா? நீங்க ஒத்துக்கறீங்களாப்பா?'' என்றாள் இந்துமதி.

''சரிடா கண்ணு. எனக்கு ஒண்ணும் பிரச்சினை இல்லை. உங்க அம்மாதான்''

"நீங்க அண்ணைக்கே சொல்லிட்டீங்க. ஐ'ம் ட்வெண்டி இயர்ஸ் ஓல்டுன்னு. நான் மேஜர் ஆயாச்சு. என்னை யாரும் கட்டுப்படுத்த முடியாது அப்படின்னு அம்மாகிட்டே சொன்னேன்னு சொல்லிடுங்க" என்றாள்.

"அம்மா அது பிரச்சினை இல்லை. அருள்பிரகாஷ் தான் உன்னை மயக்கிக் கூட்டிட்டுப் போயிட்டாருன்னு சொல்லு வாங்களோன்னு பயமா இருக்கு!" என்றார்.

"ரொம்பத்தாம்ப்பா, சொன்னா சொல்லிட்டுப் போகட்டும். எது வேணும்னாலும் சொல்றவங்களைப் பத்தி நமக்கு என்ன?" என்றாள் அவள்.

"சரிம்மா, ஆஸ் யூ விஷ்!. கொஞ்சம் டைம் கொடும்மா. நான் சிவாகிட்டேயும் பேசிடறேன்!" என்றார். என்னப்பா?" என்றார் அருள் பிரகாஷிடம்.

"நானும் பேசறேன் சார். கவலையே படாதீங்க, இந்துமதி மேடம். நீங்க இங்கே இருந்து டிஸ்சார்ஜ் ஆகும் போது நேரா யூ ஆர் கமிங் டு எ ஹோம். நாட் எ ஹவுஸ். ஓகே!" என்றான்.

"தாங்க் யூ!" என்றாள் இந்துமதி.

அதற்குப் பிறகு பெரிய பிரளயமே நடந்தது. சிந்துஜா வெகுவாக ஆட்சேபித்தாள். ஆனால் மகாலிங்கமும் மரகதமும் "பெரியவங்க ரெண்டு பேர் இருக்காங்கள்லே அப்புறம் என்ன?" என்று சொல்லி விட்டார்கள்.

சிந்துஜா "இங்கில்லாத வசதியா? இங்கில்லாத ஆட்களா?" என்று ஆரம்பித்தாள்.

அப்போதுதான் இந்துமதி சொன்னாள், "இங்கில்லாதது அங்கே ஒண்ணு இருக்கு!" என்று.

'என்ன!' என்பது போல் எல்லாரும் பார்க்க. "அன்பு கிடைக்கும். அரவணைப்பு கிடைக்கும். நீ இந்த கிளப்புக் கெல்லாம் போய் முக்கியமான வேலையெல்லாம் பாரும்மா. அப்பா நீங்க போய் உங்க பிஸினஸை பாருங்க!" என்றாள்.

சந்திரமோகனின் முகம் வாடியது. ஆனால் கணவனையும் சேர்த்து அவள் தாக்கியதுமே சிந்துஜாவின் முகம் மலர்ந்தது. "என்னமோ பண்ணு!" என்று சொல்லி விட்டு அந்தப் பக்கம் போய் விட்டாள்.

மகள் தந்தையைப் பார்த்து "சாரிப்பா!" என்றாள்.

"ஏம்மா?" என்றார்.

"இல்லே, உங்களையும் சேர்த்துத் தாக்கினாத்தான் அம்மாவுக்குப் பிடிக்கும். சரின்னுட்டுப் போயிடுவாங்க. அதற்காகத்தான் அந்த டிரிக்கை நான் செஞ்சேன். ஐ ஆம் வெரி சாரிப்பா!" என்றாள்.

சந்திரமோகன் கடகடவென்று சிரித்தார். அவள் கன்னத்தைத் தடவிக் கொடுத்து விட்டு "எப்ப இருந்துடா நீ இந்த மாதிரி ட்ரிக்கெல்லாம் பண்றே!" என்றார்.

"சூழ்நிலைதாம்ப்பா. நெஸஸிட்டி லீட்ஸ் டு இன்வென்ஷன்!" என்றாள்.

"மகா பெரிய இன்வென்ஷன்மா" என்றவர் தொடர்ந்து "நீ சந்தோஷமா இருந்தாப் போதும்மா. வேண்ணா ஒண்ணு பண்ணலாம். நீ தனியா அங்கே போய் இருக்க வேண்டாம்.

நம்ம வீட்ல வேலை செய்யுதில்லே குப்பம்மா, அந்த பொண்ணை வரச்சொல்லட்டுமா? உன்னை விட கொஞ்சம் மே பி ஒரு நாலைஞ்சு வருஷம் பெரியவ. அது வந்து துணைக்கு இருக்கட்டும்''

''சரிப்பா, அது வேண்ணா செய்ங்க.ஏன்னா எனக்கு ஒரு வேலையும் செய்யத் தெரியாது. நான் போய் அவங்களுக்கு வேலை கொடுக்கக் கூடாது. குப்பம்மாவை வச்சுக்கலாம். சமையல் கூட மத்த வேலையும் செய்வாங்க. கமலவதி அத்தைக்கும் கொஞ்சம் ரெஸ்ட் கிடைக்கட்டும்!'' என்றாள்.

'சரி!' என்று ஒத்துக் கொண்டார் சந்திரமோகன். அதற்குப் பிறகு ஏற்பாடுகள் வெகு வேகமாக நடந்தது.

டிஸ்சார்ஜுக்குப் பிறகு அவள் ஒரு இரண்டு மூன்று நாட்கள் தாயோடு போய் தங்கியிருந்தாள். சிந்துஜா இப்போது கொஞ்சம் மாறியிருந்தாள். ஒரு ஐம்பது சதவீதம் மாறியிருந்தாள். மகளின் அறைக்கு அடிக்கடி வந்து பார்ப்பதும் ''என்னடா சாப்பிடறே?'' என்று அன்பாக உபசரிப்பதுமாக இருந்தாள்.

அவள் அந்தப் பக்கம் போனதற்குப் பிறகு மகாலிங்கமும் மரகதமும் பேசிக் கொண்டார்கள். ''இந்தப் புத்தி மொதல்லயே வந்திருந்தா எவ்வளவு நல்லா இருந்திருக்கும்?'' என்று.

''விடுங்கப்பா, இப்பவாவது கொஞ்சம் மாத்திக்கறதுக்கு ட்ரை பண்றாங்கள்லே!'' என்றாள்.

''என்னம்மா பின்னே?பெரிய ஈகோ, இவ பெரிய இதுன்னு என்னத்தம்மா வச்சிருக்கா. ஹஸ்பெண்டையும் இழந்துட்டா. அவரு ரொம்பப் போராடினாரும்மா.



அவரைத் தப்பு சொல்லக்கூடாது. அவரும் மனுஷன் தானே. எங்களுக்கே ரோஜாமணி மேட்டர் எல்லாம் தெரியும். நாங்க கண்டுக்கலை. அவரு எங்ககிட்ட சொல்லிட்டுத்தான் செஞ்சாரு!'' என்றார்.

''இல்லப்பா, இனிமேல் இந்தப் போலி நாடகம் வேண்டாம். பேசாம சிந்துஜா அம்மாவும் அப்பாவும் டைவர்ஸ் பண்ணிக்கட்டும்!'' என்றாள்.

''அதான் அவங்க பேசி முடிவு பண்ணிக்கட்டும்மா. நீ உன் வரைக்கும் நிம்மதியா இரு. ஏண்டா நீ எங்கயோ ஏதோ வீட்ல போய் இருக்கேன்னு சொல்றியே அங்கே போகணுமா? நாங்க இங்கே உன்னைப் பார்த்துக்க மாட்டோமா?'' என்றார்கள் பெரியவர்கள் இரண்டு பேரும்.

அவள் சட்டென்று எழுந்து போய் இரண்டு பேருக்கும் நடுவிலே சோஃபாவிலே அமர்ந்து கொண்டாள். இரண்டு பேருடைய கைகளையும் இரண்டு கைகளால் பிடித்துக் கொண்டாள். ''கண்டிப்பா தாத்தா, கண்டிப்பா பாட்டி. உங்க அன்பு மட்டும் இல்லைன்னா நான் என்ன ஆகியிருப்பேன்னே தெரியாது. ஆனா கொஞ்ச நாள் இந்த அட்மாஸ்ஃபியரில் இருந்து சேஞ்ஜ் வேணும். நான் எங்க அம்மாகிட்ட இருந்தா அம்மாவும், அப்பாவும் பிரிஞ்சு இருக்காங்களேன்னு தோணும். அப்பா கூட போய் இருந்தாலும் இப்படி சூழ்நிலையினால இப்படி ஆயிப் போச்சே அப்படின்னு தோணும்.இதெல்லாத்தையும் மறந்துட்டு நான் போய் கொஞ்ச நாள் அங்கே அவரு சிகாமணி மாமா வீட்ல இருக்கேன். அவரு இந்தத் திருக்குறளுக்கெல்லாம் நல்லா விளக்கம் சொல்லுவாராம். அவருகிட்டே

உட்கார்ந்து திருக்குறளுக்கு நல்லா விளக்கம் கேட்டுக் கறேன்!'' என்றாள்.

''சரிம்மா, உன் இஷ்டம்!'' என்றார்கள்.

''எல்லாத்தையும்விட தாத்தா கொஞ்ச நாள் எனக்கு இந்த சிம்பிள் லைஃபை லீட் பண்ணனும் போல இருக்கு. இங்க இருந்தா அம்மா விட மாட்டாங்க. அந்த நகையைப் போடு. இந்த சுடிதாரைப் போடு. இந்த புடவையைக் கட்டு அப்படின்னு தொல்லை பண்ணிக்கிட்டே இருப்பாங்க. அப்பா தொல்லை பண்ண மாட்டாரு. ஆனா அங்கேயும் அட்மாஸ்ஃபியர்ல ஒரு ரிச்னஸ் இருக்கும். ஐ வாண்ட் டு பி அவே ஃப்ரம் தட்!'' என்றாள்.

''சரிடா ஆஸ் யு விஷ்!'' என்றார் மகாலிங்கம். அவர் அந்த காலத்து பி.ஏ. அல்லவா? அழகான ஆங்கிலம் பேசுவார்.

மரகதமும் அப்படித்தான். ஓரளவுக்குப் படித்தவர்தான். ''சரிம்மா அங்கயும் இரு, அப்பப்ப இங்கேயும் வந்து இரு!'' என்றார். அங்கிருந்து புறப்படுவதற்கு முதல் நாள் சற்று நேரம் வெளியிலே உலாவுவதற்கு சென்றாள் இந்துமதி.

அப்போதுதான் கவனித்தாள். பின்னாலே இருக்கக் கூடிய தோட்டத்திலே அங்கங்கே சிமெண்ட் சேர்கள் போட்டிருந்தார்கள். அதிலே ஒன்றில் சிந்துஜா கவலையோடு அமர்ந்திருந்தாள். அவள் முகத்தில் கவலையைப் பார்த்தவுடனே இவளுக்கும் மனம் உருகியது. அருகிலே போய் அம்மா என்று உட்கார்ந்தாள்.



சிந்துஜா அவளைத் திருப்பிப் பார்த்தாள். அவள் கண்களில் வெறுமை ஓடியது.

''என்னம்மா?'' என்றாள் இந்துமதி. எதிர்பாராத விதமாக குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்து விட்டாள் சிந்துஜா.

''என்னம்மா இது?'' என்றாள் இந்துமதி பரபரப்புடன்.

''ரொம்பப் பெருமையா இருந்தேன்டி. எங்கே இருந் தாலும் அவரு ராமச்சந்திர மூர்த்திதான் அப்படின்னு. ஆனா ஒரு அஞ்சாறு மாசத்துக்கு முன்னாடிதான் எனக்குத் தெரிஞ்சது. எவ்வளவு நொறுங்கிப் போயிட்டேன் தெரியுமா?''

இந்துமதி பெருமூச்சு விட்டாள்.

அம்மாவைத் தன் மடியிலே சாய்த்துக் கொண்டு தடவிக் கொடுத்தாள். சிந்துஜா மேலும் பொங்கிப் பொங்கி அழுதாள். ''என்னம்மா செய்ய முடியும்? நீங்க இப்ப யோசிக்கறீங்க. அப்பா ரொம்ப தாழ்ந்து வந்தாரில்லம்மா. நீங்க இறங்கிப் போயிருக்கணுமில்லே!'' என்றாள்.

''உனக்குத் தெரியாதுடி. நான் பத்து வார்த்தை சொல்லி குதிச்சுகிட்டிருப்பேன். அவரு ஒரே வார்த்தையிலே சுருக்குன்னு பேசிட்டு உட்கார்ந்துருவாரு!'' என்றாள் அவள்.

''இருக்கலாம்மா! ஆனா நேர்மையாத்தானே இருந்தாரு. இப்பக் கூட பாரு ஒரு தொடர்புன்னா கூட அது எந்த விதத்துலயும் கமிட்மெண்ட் இல்லை. எப்ப வேண்ணா உங்க அம்மா வந்து எங்கூட வாழலாம். அந்த நிமிஷம் நான்

ரோஜாமணியை வெட்டி விட்டுருவேன்னெல்லாம் சொல்றாரு. ஆனா அது நியாயமா அம்மா?'' என்றாள்.

''ஏண்டி, இப்போதைக்கு என்னை விட உனக்கு அந்த ரோஜாமணியைப் பிடிக்குதில்லே?!'' என்றாள்.

''இல்லம்மா, அவங்க மேல ஒரு நன்றி உணர்ச்சி!'' என்றாள்.

''என்னடி நன்றி உணர்ச்சி? நீ எனக்காக வாதாட வேண்டாமா?'' என்றாள்.

''உனக்காக எப்படிம்மா வாதாட முடியும்? வாதாடினா நீ எதுக்கு வாதாடறேன்னு கேட்டாலும் கேட்பே. நீ வாதாடி சொல்றதுக்கெல்லாம் நான் நடந்துக்கணுமான்னு கேட்பே. நீ எப்படி நடத்துக்குவேன்னே தெரியாதேம்மா? ஆனா அவங்களைப் பொறுத்த வரைக்கும் அப்பாவுக்கு எந்த எதிர்பார்ப்பும் இல்லாம சந்தோஷத்தை கொடுத்திருக்காங்க. நீ கிடைச்ச சந்தோஷத்தை இழந்துட்டே. யூ மிஸ்ட் யுவர் சான்ஸ்!'' என்றாள்.

சிந்துஜா எழுந்து அமர்ந்தாள். கண்ணைத் துடைத்துக் கொண்டாள். ''சரிடி. நீ அங்கேயே இருடி. உனக்கு எப்படி இஷ்டமோ அப்படியே இரு. உனக்கு சிம்பிளா லைஃப் இருக்கணும்னா அப்படியே இரு!'' என்றாள்.

''இல்லம்மா. கொஞ்ச நாள் ஐ வாண்ட் டு பி அலைவ். அருள் சொன்னாகில்லே? அது மாதிரி நீங்க செல்ஃப் அனாலிசிஸ் பண்ணுங்க. நான் இந்த அளவுக்குப் போவேன்னா இதுக்கு என்ன காரணம்னு யோசிக்க



ஈகோன்னு சொல்லி ஒரு ஏணி மேல உட்கார்ந்திருக்கீங்கல்ல அதுல இருந்து இறங்கி வாங்க!''

''போதும்டி, நீயும் உபதேசம் பண்ணாதே! கேட்டுக் கேட்டு சலிச்சுடுச்சு!'' என்றாள் சிந்துஜா.

''சரிம்மா யூ டேக் கேர். எப்பவாவது பார்க்கணும்னா நீங்க அங்கே வாங்க. நானும் வர்றேன்!'' என்றாள். அதற்குப் பிறகு சந்திரமோகன் வீட்டிற்குப் போய் இரண்டு மூன்று நாட்கள் இருந்து விட்டு ''நான் கிளம்பறேம்ப்பா!'' என்றாள்.

''இத பாரும்மா, எளிமையா இருக்கேன்னுட்டு நீ அங்க போய் நடந்து போறது. ஆட்டோவில போறதெல்லாம் வேண்டாம். ஏன்னா நீ யாரோட பொண்ணுன்னு எல்லாருக்கும் தெரியும். இப்ப நிறைய நடக்குது. எவனாவது கடத்திட்டுப் போனா கூட உண்டு. அதனால உன்னோட காரை எடுத்துட்டுப் போ!'' என்றார் அப்பா.

''சரிப்பா!'' என்றாள் அவள் சலிப்புடன். இரண்டு பெட்டிகள் நிறைய துணிமணிகளையும் எடுத்துக் கொண்டு குப்பம்மாவை உடன் ஏற்றிக் கொண்டு அவள் காரை எடுத்தாள். சந்திரமோகன் நின்று வழியனுப்பினார். அப்போது சர்ரென்று ஒரு காரில் வந்து சிந்துஜா இறங்கினாள்.

அம்மாவைப் பார்த்தவுடனே அவளும் இறங்கினாள். ''போய்த்தான் ஆகணுமாடி?'' என்றாள்.

''ப்ளீஸ்மா! ஒரு ஹாலி டே மாதிரிம்மா. மூணு மாசம்தாம்மா நான் இருந்துட்டு வந்துடறேம்மா!'' என்றாள்.

சற்றும் எதிர்பாராத விதமாக மகளின் கன்னத்தை தடவினாள் சிந்துஜா. அவள் தலையை இழுத்து உச் முகர்ந்தாள்.

இந்துமதிக்கு சிலிர்த்தது. அவளுக்கு விவரம் தெரிந் அம்மா இப்படி அவளைச் செய்ததே இல்லை. அவ கண்களிலும் கண்ணீர் ததும்பியது.

"அம்மா, நான் என்ன உன்னை ஒரேயடியா பிரிஞ்சா போறேன்? ஜஸ்ட் ஃபார் எ சேஞ்ஜ்!" என்றாள்.

"சரிடி, போயிட்டு வா!" என்று சொன்னவள் தன் கர்ச்சீஃபை எடுத்துக் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

அருள் பிரகாஷ் பைக்கிலே முன்னாலே செல் பின்னாலே காரை ஓட்டிக் கொண்டு போனாள் இந்துஜா.

கார் நகர்ந்தது. அப்போதுதான் சந்திரமோகன் கவனித் தார். சிந்துஜா கிட்டத்தட்ட அவர் பக்கத்திலே இருக்கிற மாதிரி நின்று கொண்டிருந்தாள்.

எதிர்பாராத விதமாக அவரிடம் திரும்பி "நான் இப்படி அவளை விட்டுப் பிரிஞ்சிருந்ததே இல்லை!" என்றாள்.

"பரவாயில்லை விடு. அவளும் பெரிய பொண்ணா யிட்டா. அவ விருப்பத்தையும் நாம மதிக்கத்தானே வேண்டும்?" என்றார்.

"ஆமா!" என்றாள்.

இரண்டு பேருக்குமே தாங்கள் அப்படி சகஜமாக பேசுவது ஆச்சரியமாக இருந்தது. "இவ்வளவு தூரம் வந்துட்டே. உள்ளே வந்துட்டுப் போயேன்!" என்றார் சந்திரமோகன்.

"நீங்க தான் பெரிய கோடு போட்டுட்டீங்களே? நான் எப்படி அதைத் தாண்டி வர்றது!" என்றாள் சிந்துஜா.

சந்திரமோகன் திகைத்து நின்றார். சிந்துஜா வேகமாகப் போய்த் தன்னுடைய காரை எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

சந்திரமோகன் ஆழ்ந்த வருத்தத்துடன் பார்த்துக் கொண்டு நின்றார்.

## அத்தியாயம் - 9

'நமச்சிவாய வாழ்க!நாதன் தாள் வாழ்க!

என்று பாடியபடியே பூஜை அறையிலே பூஜைகளுக்கான ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார் சிகாமணி. கமலவதி கட்டி வைத்திருந்த பூவைக் கொண்டு வந்ததோடு உதிரிப் பூக்கள் எடுப்பதற்கு சுற்றிலும் இருந்த செடிகொடிகளை நாடிப் போனார்.!

அதற்குள்ளாக குளித்து புது மலர் போல வந்த இந்துமதி "அத்தை இருங்க, நானும் வரேன்!" என்றாள். இரண்டு பேருமாக போய் பூக்களைப் பறித்தார்கள். பூஜைக்காக என்று அவர் நிறைய செடிகளை வைத்திருந்தார்.

பொன்னரளி, செவ்வரளி, செம்பருத்தி, அது போக பூஜைக்கு உகந்த பூக்கள் என்று பலவகைச் செடிகள்

வைத்திருந்தார். இந்துமதி ஆர்வமாக அந்தப் பூக்குவளை யிலேயே பூக்களைப் பறித்துக் கொண்டு வந்து போட்டாள்.

மாடி அறையிலே அப்போதுதான் குளித்து விட்டு வெளியே தலை துவட்டிக் கொண்டு வந்து ஜன்னல் ஓரமாக நின்ற அருள் பிரகாஷ் அந்தக் காட்சியைப் பார்த்தான். புன்னகைத்துக் கொண்டான்.

'இந்துமதி புதுவாழ்வு வாழ்றாப்ல இருக்கு' என்று சிரித்துக் கொண்டே அவன் தன்னுடைய வேலையைப் பார்க்கப் போனான். பூக்களைப் பறித்துக் கொண்டு வந்து சிகாமணி இடத்திலே கொடுத்தார்கள்.

''கொண்டாம்மா! கொண்டா! நீயே போய் பூ பறிச்சுட்டு வர்றியா தங்கம்? சரி சரி குடு, குடு'' என்று வாங்கிக் கொண்டார். அந்த பூஜை அறையிலேயே சாமி விக்கிரகங்கள் இருந்தன.சின்னச் சின்ன விக்கிரங்களாக ஒரு ஏழெட்டு விக்கிரகங்கள் இருந்தது. அது போக நிறைய படங்களை மாட்டி வைத்திருந்தார்.

''இதும்மா எங்க தாத்தா காலத்திலே இருந்து இந்த விக்கிரகங்களையெல்லாம் வச்சுக் கும்பிட்டுட்டு இருக்காங்க. இந்த படங்களும் அப்படித்தான். கோயிலுக்கு போறப்பவெல்லாம் வாங்கிட்டு வந்து வந்து இந்த ரூம் பார்த்தியா? ரூம் பூரா படங்கள்!'' என்று ஒவ்வொரு படத்திற்கும் ஒவ்வொரு செம்பருத்திப் பூ என்று ஒவ்வொரு பூவாக வைத்தார்.

இவளும் உதவி செய்தாள். அவர் மறுக்கவில்லை. இவள் சிரித்துக் கொண்டே ''கடை விரித்தேன் கொள்வாரில்



லைன்னு சொல்றாங்க. அருட் பெருஞ்சோதி தனிப்பெரும் கருணைன்னு வள்ளலார் சொல்றாங்க. ஆனா எதுக்கு இத்தனை விக்கிரகங்கள், இத்தனை படங்கள்?'' என்று அவள் கேட்டாள்.

''அருட்பாவெல்லாம் படிப்பியா?'' என்றார் சிகாமணி.

''ம்... எங்க தமிழ் மிஸ் அதையெல்லாம் ஊட்டி விட்டிருக்காங்க. அதனால அதையெல்லாம் கொஞ்சம் கொஞ்சம் படிப்பேன்!'' என்றாள்.

''திருக்குறளுக்கு பொருள் கேட்கணும்னு நினைச்சி யாம்?'' என்று அவளைப் பார்த்து வாஞ்சையாக சிரித்தார் சிகாமணி.

''ஆமாம், எங்க அப்பா பெருமையா சொல்லிகிட்டிருந் தாங்க. நீங்க திருக்குறளை கரைச்சு குடிச்சிருக்கீங்க. நிறைய பக்தி இலக்கியங்கள் பத்தி எல்லாம் நிறைய சொல்வீங்க அப்படின்னு சொன்னாரு''

''அளந்துட்டானா?'' என்றார்.

''அளக்கலே. உண்மையத்தான் சொல்லியிருக்காரு''

''சரிடா, உனக்கு என்ன தெரிஞ்சுக்கணுமோ கேளு!'' என்றார்.

''அதான், இப்பக் கேட்டேனே மாமா. கடவுள் ஒருத்தருன்னு சொல்றாங்க. அப்புறம் எதுக்கு இத்தனை விக்கிரகம்னு கேட்டேனே?'' என்றாள்.

''அம்மா, உனக்கு தெரிஞ்சிருக்குமோ என்னமோ தெரியலை. தியானத்திலே ரெண்டு வகை இருக்கு. ஏதாவது

ஒரு உருவத்தை மையப்படுத்தி அப்படியே தியான படுத்திக் கொண்டு வருவது. உருவமே இல்லாம வெட்ட வெளியில் தியானம் பண்ணுவது. இந்த ரெண்டாவது முறை எல்லாருக்கும் வராதும்மா. பாமர ஜனங்களுக்கும் ஆரம் நிலையில் இருப்பவங்களுக்கும் சாமிக்கு உருவ இருக்குதுன்னு ஒரு நம்பிக்கை இருக்கறதுல தப்பில்லை. அதான் அன்பு செலுத்தறான் பக்தி செலுத்தறான். தனக்கு அலங்காரம் பண்ணிக்கறது போலவே சாமிக்கும் அலங்காரம் பண்ணிப் பார்க்கிறான். ஏதோ ஒரு விதத்துல நம்மைப் படைச்ச சக்தியை அவன் நினைக்கிறான்.இப் நாங்களெல்லாம் கும்பிடறோம்னா பெரியவங் சொன்னதைப் புரிஞ்சுகிட்டுப் பண்றோம்.. கடவுளுக்கு உருவமும் பேரும் தேவையில்லை.அவன் அதுக்கு அப்பா பட்டவன் அப்படின்னு தெரியுது. தெரிஞ்சுக்கிட்டு இதெல்லாம் வச்சுக்கிட்டு கும்பிடறதுல தப்பில்லை .தர்ம மீட்டர்ல காய்ச்சலை அளக்கலாம். ஆனா தர்மா மீட்ட கடவுள்னு காய்ச்சல்னு நினைச்சுடக் கூடாதில்லே. அ மாதிரித்தான்!'' என்றார்.

அவள் கலகலவென்று சிரித்தாள். ''உதாரணம் ரொம் நல்லா இருக்குது மாமா!'' என்றாள்.

''அது தானா வந்துருச்சு!'' என்று அவரும் ஜோ அடிப்பது போல சிரித்தார்.

இரண்டு பேரும் சிறிய விளக்குகளை ஏற்றி வைத்தார்க அதில் பூக்கள் அலங்காரத்தில் அந்த பூஜை அ பார்ப்பதற்கு அழகாக இருந்தது.



ஒரு தெய்வீகத் தன்மை அங்கே இருந்தது. தன் வீட்டுப் பூஜை அறை இந்துமதிக்கு நினைவுக்கு வந்தது. அங்கேயும் வேலைக்காரர்கள் எல்லாவற்றையும் சுத்தம் செய்து வைப்பார்கள்.

தாத்தா வந்து கும்பிடுவார். அழகிய விக்கிரகங்கள், விலை உயர்ந்த விக்கிரகங்கள் எல்லாம் இருந்தன. ஆனாலும் ஏனோ இவ்வளவு சாந்நித்தியம் இருந்த மாதிரி அவள் உணரவில்லை. ''ரொம்ப அருமையா இருக்கு மாமா இந்தப் பூஜை அறை.''

''என்னம்மா இப்படிச் சொல்றே? நான் உங்க அம்மா வீட்டுப் பூஜை அறை பார்த்திருக்கேனே. ஜேஜே ன்னு இருக்குமே''

''ஜேஜேன்னு இருக்கும் மாமா. ஆனா ஆத்மார்த்தமா கையெடுத்துக் கும்பிடறதுக்கு அங்கே ஆள் இல்லை!'' என்றாள்.

''ஏம்மா, தாத்தா... பாட்டி!'' என்றார்.

''தாத்தா பாட்டி கும்பிடுவாங்க. ஆனாலும் வீட்டுக்கு உடையவங்க கும்பிடணுமில்லே?'' என்றாள்.

''அதை விடு. நாம இன்றைய நியாயத்தைப் பேசுவோம்!'' என்றார் அவர்.

''இலக்கியத்திலே எல்லாம் உனக்கு இன்ட்ரஸ்ட் இருக்கா?'' என்றார்.

''இன்ட்ரஸ்ட் இருக்கு. ஆனா எனக்குத் தனியா படிச்சு விளங்கிக்கத் தெரியாது!'' என்றாள்.

''அம்மா, நம்ம தமிழ்லே இருக்கற மாதிரி பொக்கிஷங்கள் வேற எதிலேயும் இருக்க முடியாதும்மா. ஆத்திச்சூடின்னு நாம சர்வ சாதாரணமா நினைக்கிறோம். ஆனால் இந்த குழந்தைகளுக்கான மாரல் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் உலகத்துல வேற எந்த இலக்கியத்துலயும் கிடையாது. நாலடியார், பதினென்கீழ்கணக்கு நூல்கள், இதெல்லாம் நாம குழந்தைகளுக்குச் சொல்ல வேண்டிய விஷயங்கள். ஆனால் சிலது இந்தக் காலத்துக்கு ஒத்து வராது. ஆனா அதையெல்லாம் ஒதுக்கி வச்சுட்டு இந்த காலத்துக்கு ஒத்து வரக்கூடிய விஷயங்களை நிறைய சொல்லலாம்மா''

''நீங்க எனக்கு வகுப்பெடுங்க. நான் அதெல்லாம் கேட்டுக்கறேன்!'' என்றாள்.

எல்லாவற்றையும் தயார் செய்த பிறகு 'அருள்' என்று குரல் கொடுத்தார் சிகாமணி.

''வந்துட்டேம்ப்பா!'' என்று அரைக்கை சட்டையும் வேட்டியுமாக இறங்கி வந்தான் அருள் பிரகாஷ். ''பூஜைக்கெல்லாம் ரெடி ஆயாச்சா?''என்றான்.

''வழக்கமா இவன்தாம்மா ஹெல்ப் பண்ணுவான். இன்னைக்கு நீ வந்துட்டே. கொஞ்ச நாளைக்கு அவன் ஃப்ரீயா இருக்கட்டும்!'' என்றார் சிகாமணி.

''ஆமாம்ப்பா, உங்க சரக்கெல்லாம் எடுத்து விடறதுக்கு ஒரு சிஷ்யை வந்தாச்சு. வெளுத்துக் கட்டுங்க''

''ஏண்டா?எங்களைக் கண்டா அப்படி இளப்பமா இருக்கா உனக்கு?''



''அய்யய்யோ இல்லப்பா!'' என்று சட்டென்று மரியாதைக்கு தாவினான் அவன்.

இந்துமதியைப் பார்த்து ''அப்பாவுக்கு இலக்கியத்திலே நிறைய பரிச்சயம் இருக்கு. பள்ளிக்கூடத்திலே வேலை செய்யும் போதே நிறைய இடங்களில் ஸ்பீச்செல்லாம் கொடுப்பாரு. உங்களுக்கும் இலக்கியத்துல ஆர்வம்னு ஏதோ காதில் விழுந்தது!'' என்றான்.

''நீங்க உனக்கு அப்படின்னே பேசலாம்!'' என்றாள் இந்துமதி.

''ஓகே, உனக்கும் இலக்கியத்திலே எல்லாம் ஆர்வம் இருக்க மாதிரி தெரியுது!'' என்றான் அருள்பிரகாஷ்.

''ஆமாம், எவ்வளவு முடியுமோ? அவ்வளவு மாமா கிட்டே இருந்து தெரிஞ்சுக்கலாம்னு இருக்கேன்!'' என்றாள்.

''தெரிஞ்சுக்க. அப்ப வாழ்க்கையையே இன்னொரு கோணத்திலே பார்க்கலாம். எனக்கு சின்ன வயசுல இருந்து அப்பா நிறைய விஷயங்கள் சொல்லியிருக்காரு. அதனால தான் வாழ்க்கையைப் பார்த்து பயப்படறது இல்லை!'' என்றான் அவன்.

அதற்குள்ளாக சிகாமணி கற்பூரத்தை ஏற்றி வைத்து ஆரத்தி காட்ட ஆரம்பித்தவுடனே அருள் பிரகாஷ் மணியை எடுத்து கையிலே வைத்துக் கொண்டு அடிக்க ஆரம்பித்தான்.

பூஜையை முடித்து விட்டு சற்று நேரம் எல்லோரும் அமைதியாக கும்பிட்டார்கள். அந்த அமைதியில் இருந்து

திடீர் என்று 'ஒருமையுடன் நினது திருவடி நினைக்கின்
உத்தமர்தம் உறவு வேண்டும்' என்று பாட ஆரம்பித்த
சிகாமணி.

எல்லோரும் அமைதியாக நின்றார்கள் அந்த
பாடலிலேயே எவ்வளவு அர்த்தம் இருக்கிறது என்
எண்ணிக் கொண்டாள் இந்துமதி.

மறுபடியும் நீர் விளாவி சாமி கும்பிட்டு விட்
அறையை விட்டு வெளியே வந்தார்கள். "நல்லா பாடறீங்
மாமா!" என்றாள்.

"இந்தப் பாட்டு வள்ளலார் பாட்டுதாம்மா. இந்த ஒ
பாட்டிலேயே அத்தனை விஷயங்கள் இருக்கு!" என்றா
அவர்.

"விளக்கம் சொல்லுங்க மாமா!" என்றாள்.

"பாட்டு முடியட்டுமே. அப்புறம் சொல்லலாம்
என்றார்.

சிகாமணி தரையில்தான் அமர்ந்து சாப்பிடுவார். ஒ
சின்ன டைனிங் டேபிள் இருந்தது. அவசரத்துக்கு அரு
பிரகாஷ் அந்த டைனிங் டேபிளைப் பயன்படுத்தி
கொள்வான். சிகாமணி நடுவிலே அமர இடது பக்கத்திலே
இந்துமதியும், வலது பக்கத்திலே அருள் பிரகாஷையும் அம
வைத்துக் கமலவதி பரிமாறினாள்.

இந்துமதி "இப்படியெல்லாம் நான் உட்கார்ந்
சாப்பிட்டதே இல்லை!"

"பழகிக்கம்மா. தரையிலே உட்கார்ந்து சாப்பிட்
தொந்தி போடாதாம்!" என்று சிரித்தார் சிகாமணி. அவ



திரும்பி மாமாவை அளவெடுத்தாள். 'ஆள் சிக்குன்னுதான் இருக்கிறாரே'என்று நினைத்துக் கொண்டாள்.

"என்னம்மா அளவெடுக்கறியா?" என்றார் அவர்.

"நிறைய வாக்கிங்கெல்லாம் போவேம்மா. முடிஞ்ச வரைக்கும் பக்கத்திலே எல்லாம் நடந்துதான் போறது. வண்டி எடுக்கறதில்லை. வண்டியிலே போக வேண்டிய தூரம்னாத்தான் வண்டி எடுக்கறது. இவன் பாரு அடுத்த தெருவுக்குப் போறதுன்னா கூட வண்டிதான். ஆனா எக்ஸர்ஸைஸ் அது இதுன்னு பண்ணி உடம்பை நல்லா வச்சுக்கறான்!" என்றான்.

"நானும் கூட யோகா கிளாஸ் போகணும்னு ஆசைப்பட்டேன் மாமா!" என்றாள்.

"யோகா வேண்ணா நானே சொல்லித்தரேம்மா. நானே யோகா டீச்சர்தான்!" என்றார் சிகாமணி.

"மாமா!" என்றாள் அவள்.

"ஆமாம்மா, இன்னைக்கும் டெய்லி ஒரு நாற்பது நிமிஷம் யோகா பண்ணிட்டுத்தான் ரூமை விட்டு வெளியே வந்தேன். குளிச்சு முடிச்சு யோகா பண்ணிட்டுத்தான் வெளியே வர்றது."

"சரிங்க மாமா!" என்று அவள் உற்சாகமானாள்.

"ஆமாங்க, இந்துமதி இங்கே எத்தனை மாசம்? மூணு மாசம் நாலு மாசம் இருக்கறதுக்குள்ளே வாழ்க்கை நெறிமுறைகளையெல்லாம் அப்பாகிட்டே கத்துக்கங்க. நம்ம பெரியவங்க சொல்லி வச்சதெல்லாம் அற்புதமான

வாழ்க்கை முறை. நாம அதெல்லாம் தவற விட்டுட்டோம்" என்றான் அருள்பிரகாஷ்.

சாப்பிட சாப்பிட அவள் முகம் வாடியது "என்ன திடீர்னு வாட்டம்?" என்றார் சிகாமணி.

"இல்லை, எங்க வீட்ல எல்லாம் ஒருநாளும் இப்படி பேசிக்கிட்டே உட்கார்ந்து சாப்பிட்டதே இல்லை. அம்மாவும் நானும்தான் ஒண்ணா சாப்பிடுவோம். அம்மா சாப்பிடும் போது எங்க தாத்தா பாட்டி வரமாட்டாங்க. அவ கூட யாரும்மா உட்கார்ந்து சாப்பிடுவா. அவ ஏதாவது வாயைப் பிடுங்குவா. கடைசியில பிரச்சினையா முடியும் அப்படின்னு சொல்லுவாங்க!" என்றாள்.

அவர்களுக்கு புரிந்தது. சிகாமணி அருள் பிரகாஷைப் பார்த்தார்.

"அருள், நீ சொன்னதுதாண்டா கரெக்ட்!" என்றார்.

"என்னப்பா!" என்றான்.

"சிந்துவுக்கு ஏதோ ஏதோ பிரச்சினை இருக்கற மாதிரித் தான் தோணுது" என்றார்.

"நான் எப்படிப்பா அப்ரோச் பண்ண முடியும்?" என்றான்.

"இல்லே, நீ ஏதோ யோசனை சொன்னியாமே? கிளப்லே... அவங்க கிளப்லேயே ஒரு சைக்காலஜிஸ்ட் இருக்காங்க. அந்த பொண்ணைக் கூட எனக்குத் தெரியும். நல்ல பொண்ணு. கான்பிடன்ஷியலா வச்சுக்குவா. நான் அவ கிட்டே பேசறேன்!" என்றார் சிகாமணி.



"செய்யலாம்ப்பா, இதிலே அடியைப் புடிடா பாரத பட்டான்னு நுனியை புடிக்கணும்ப்பா. வேற வழியில்லே. பாவம் அவங்களும் கஷ்டப்பட்டுக்கறாங்க. அவங்களும் சந்தோஷமா இருக்க மாட்டேங்கறாங்க. எப்பவும் நெருப்பு மேலே நடந்த மாதிரியே கணகணன்னு நடக்கறாங்க!" என்றான் அருள் பிரகாஷ்.

இந்துமதிக்கும் கூட 'ஆமாம்!' என்று சொல்லத் தோன்றியது. ஆனால் ஒரு பக்கம் அம்மாவை விட்டுக் கொடுக்க வேண்டாம் என்று அமைதியாக அமர்ந்து கொண்டாள்.

"தனிப்பட்ட முறையிலே யாரும் கெட்டவங்க இல்லடா. ஏதோ பிரச்சினைகள். அதிலே சிக்கிடறாங்க. பாரு, ஏதாவது செய்ய முடியுமான்னு பாரு. நான் ஏதாவது உதவி செய்யணும்னா சொல்லு நான் செய்யறேன்!" என்றார் சிகாமணி.

நட்புக்காக நண்பரின் குடும்பத்தை சரி செய்வதற்காக அளந்தளந்து திட்டமிடுகிற அந்த அன்பு நிறைந்த குடும்பத்தைப் பார்த்தாள். அவளுக்குள்ளும் ஏதோ நகர்கிறாற்போல இருந்தது. சாப்பிட்டு முடித்ததற்குப் பிறகு அருள் பிரகாஷ் கிளம்பினான்.

"இன்னைக்கு என்னடா புரோகிராம்?" என்றார்.

"அப்பா இன்னைக்கு ஆஃபீஸ் போகணும். இன்னைக்கு ஒரு அட்வர்டைஸ்மெண்ட் கிடைக்கற மாதிரி இருக்கு. பார்ட்டி வரேன்னிருக்காங்க. அவங்ககிட்ட பேசணும். அதுமட்டும் இல்லே. சாயங்காலம் கவுன்சிலிங் இருக்கு போகணும்!" என்றான்.

"எத்தனை மணிக்கு வருவே?" என்றார்.

"இப்ப சொல்ல முடியாதேப்பா. ஆனா அப்புறமா வை... சொல்லிடறேம்பா. எப்ப வருவேன்னு முன்னாடி கூப்பிட்டு சொல்றேன்!" என்றார்.

"நல்ல கடையாப் பார்த்து சாப்பிட்டுக்கோடா... இல்லைன்னா டிஃபன்பாக்ஸ்லே சாப்பாடு எடுத்துக்கிட்டு போயிடு!" என்றார்.

"இல்லப்பா, பரவாயில்லை!" வாசல் வரை கூட நடந்தாள் இந்துமதி.

"என்ன இந்து?" என்றான் அவன் திரும்பிப் பார்த்து.

"நீங்க எவ்ளோ லக்கி தெரியுமா?" என்றாள். அவன் மென்மையாக சிரித்தான்.

"வரட்டுமா?" என்று தலையாட்டி விட்டு கிளம்பினான்.

அவன் செல்வதைப் பார்த்துக் கொண்டே நின்றாள் இந்துமதி.

## அத்தியாயம் - 10

எப்பொழுதும் ஆர்ப்பாட்டமாக வந்து இறங்குகிற சிந்துஜா இன்றைக்கு அமைதியாக வந்து இறங்கினாள். அவள் உறுப்பினராக இருக்கிற கிளப் மீட்டிங் இன்று.

வழக்கமாக பெரிய பட்டுப் புடவை ஒன்றை கட்டிக் கொள்ளுவாள். நிறைய நகைகள் போட்டுக் கொண்டு வருவாள். ஆனால் இன்றைக்கு அந்த ஆடம்பரத்தைக்



குறைத்து விட்டு கொஞ்சம் நடுத்தரமான ஒரு பட்டுப் புடவை, அழகான நகைகள் என்று வந்து இறங்கினாள். முகம் மட்டும் வாடியிருந்தது.

எல்லோருக்கும் விஷயம் தெரிந்திருக்கும். அவளும் கணவரும் ஒன்றாக இல்லை என்று அரசல் புரசலாகத் தெரியும். ஆனால் டைவர்ஸ் வாங்கவில்லை என்பதும் தெரியும்.

விசேஷங்களுக்கு மட்டும் ஒன்றாகப் போவார்கள் வருவார்கள் என்பதெல்லாம் எல்லோருக்கும் தெரிந்தது தான். யாரும் அது குறித்துக் கேட்பதில்லை. ஆனால், இந்துமதியின் தற்கொலை முயற்சி சிந்துவை நிலைகுலையச் செய்து விட்டது.

'இவளுக்காகத்தான், இவளுக்காகத்தான் என்றுதானே நாம் இத்தனை நாளும் பேசிக் கொண்டிருந்தோம். அவளே அப்பாவும் வேண்டாம் அம்மாவும் வேண்டாம் என்று முடிவெடுத்து விட்டாள் என்றால் எங்கேயோ தவறு இருக்கிறது.

'நான் கொஞ்சம் கோபக்காரிதான், டென்ஷன் காரிதான். ஆனால் நான் யாரையும் வெறுக்க மாட்டேனே' என்று தனக்குத்தானே சமாதானம் செய்து கொண்டாள்.

சிந்தனையோடே ஒரு பக்கம் வந்து அமர்ந்தாள். இன்றைக்கு ஒரு ஹோட்டலில் மீட்டிங் ஏற்பாடு செய்திருந்தார்கள். ஏதோ ஒரு திரையுலக நட்சத்திரத்தின் அம்மாவோ அப்பாவோ யாரோ வருகிறார்கள்.

ஒரு அரை மணி நேரம் எதையாவது பேசுவார்கள். உறுப்பினர்கள் எல்லாருக்கும் வட்ட வட்ட மேஜைகள். அழகிய மேஜை விரிப்புடன் ஒவ்வொரு மேஜையைச் சுற்றியும் ஒரு நான்கைந்து சேர்கள் என்று போட்டு வைத்திருந்தார்கள்.

வெளிச்சம் அளவான வெளிச்சமாக இருந்தது. அந்தத் தலைமை விருந்தினர் வருவதற்கு அரை மணி நேரம் தாமதம் என்று அறிவித்தார்கள். எல்லாரும் சாப்பிட ஆரம்பித்தார்கள். பஃபே முறையிலே போய் வாங்கிக் கொண்டு வந்து சாப்பிட ஆரம்பித்தார்கள்.

இவள் யாரையும் நாடிப் போகவில்லை. அன்றைக்குத் தனியாகவே அமர்ந்து கொண்டாள். யாராவது தேடி வந்தால் வரட்டும் என்பது போல.

ஒன்றிரண்டு பேர் மட்டும் கொஞ்சம் நெருங்கியவர்கள் வந்து அவளிடத்திலே ஐந்து நிமிடம் பேசிவிட்டுக் கிளம்பினார்கள். அதிலே ஒருத்தி "என்ன சிந்து? நான் கேள்விப்பட்டது நிஜமா?" என்றாள்.

"என்ன கேள்விப்பட்டீங்க?" என்றாள் சிந்து.

"இல்லே உன் பொண்ணுக்கு ஏதோ உடம்பு சரியில்லைன்னு"

"பெரிசா ஒண்ணும் இல்லை. அவளுக்கு ஃபுட் பாய்சன் ஆயிடுச்சு. தலை சுத்தி வாந்தி எடுத்துட்டா. அதுக்காக அட்மிட் பண்ணினோம். அவ்ளோதான்!" என்றாள்.

"இவள் எப்படி புளுகறா பாரு!" என்று அவள் மனதுக்குள் நினைத்துக் கொண்டாள் போலும்.



அவள் கண்கள் அதைக் காட்டின. ஆனால் வாய். "அப்படியா? ஐய்யோ, நம்ம ஜனங்க இருக்காங்களே ஊருதுன்னா பறக்குதுன்னுடுவாங்க. அதுக்குள்ளே இப்படி ஆயிடுச்சு அப்படி ஆயிடுச்சுன்னு கிளப்பி விட்டுட்டாங்க!" என்றாள்.

"பேசறவங்களுக்கு என்ன மாலா? என்ன வேண்ணா பேசிட்டுப் போவாங்க. நாம அதுக்கெல்லாம் பதில் சொல்லிகிட்டிருக்க முடியுமா?" என்றாள் சிந்துஜா.

வழக்கமாக இந்தப் பேச்சுக்கு அவள் கோபப்பட்டிருக்க வேண்டும். கொஞ்சம் முரட்டுத்தனமாகவும் ஏதாவது பேசி இருக்க வேண்டும். "எவ சொன்னவ? எதிர்லே வரச் சொல்லு" என்பது போலப் பேசுபவள் இன்றைக்கு அவள் ஏதோ விவரமாக பதில் சொல்லியதாக மாலாவுக்குத் தெரிந்தவுடனே மாலா எழுந்து போய் விட்டாள்.

இப்படி ஒன்றிரண்டு பேர்கள் வந்தவர்களை எல்லாம் பேசி அனுப்பி விட்டாள் சிந்துஜா. மறுபடியும் கொஞ்சம் தயிர் சாதம் வாங்கிக் கொள்ளலாம் என்று போய் நின்றாள். அவளுக்கு ஊறுகாயோடு தொட்டு சாப்பிடுவது மிகவும் பிடிக்கும். எடுத்துக் கொண்டு வரும்பொழுது கூட அவள் சுற்றும் முற்றும் பார்க்கவில்லை.

நேர் பார்வையாக பார்த்தபடி வந்து தான் முதலில் அமர்ந்திருந்த இருக்கையிலேயே அமர்ந்து கொண்டாள். பின்னாலே இரண்டு பேர் பேசுவது அவள் காதிலே விழுந்தது.

"பார்த்தியா சந்தியா, நான் கேட்டதுக்கு என்ன பதில் சொன்னாங்க, பார்த்தியா?" என்றாள் அந்த

''மாலா, உனக்கு எதுக்கு மாலா அவங்க வீட்டு விவகாரம்? நீ போய் ஏன் அதையெல்லாம் கேட்டுகிட்டி ருக்கே?'' என்றாள் சந்தியா.

''பெண் விடுதலை பெண்ணின் பெருமையெல்லாம் இந்த அம்மா பேசுது. ஆனா குடும்பத்திலே ஹஸ்பெண்டை அட்ஜஸ்ட் பண்ணிட்டுப் போகத் தெரியலை. அந்த ஆள் அவரு பொண்ணு கூடத் தனியா வீட்ல இருக்காரு. அந்தப் பொண்ணு இவங்க ரெண்டு பேரும் போடுற சண்டையைப் பார்த்துட்டு வெக்ஸ் ஆகி தூக்க மாத்திரையைப் போட்டுருச்சு!'' என்று நேரில் பார்த்தது போல மாலா விவரித்துக் கொண்டிருந் தாள்.

''இதெல்லாம் எப்படித் தெரியும்?'' என்றாள் சந்தியா.

''அவங்க வீட்ல வேலை செய்யறாளே அந்த வேலைக்காரியோட சொந்தக்காரி எங்க வீட்ல வேலை செய்யறா!'' என்றாள்.

அவள் விவரமாக வேலைக்காரியின் பெயரைச் சொல்ல வில்லை. எப்படிக் கண்டுபிடிப்பது என்று தெரியவில்லை சிந்துஜாவுக்கு. ''ஆனா ஏதோ நகையும் பட்டும் பூட்டிட்டு வந்தாத்தான் பெரிசா மதிப்பாங்கன்னு இவ நினைச்சுக்கறா. நமக்கெல்லாம் வசதி இல்லாமலா இருக்கு? ஆனா குடும் பத்துல அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டுப் போகலை. எனக்கு மூணு பேர் நாத்தனார்கள். இந்த ஞாயிற்றுக்கிழமை மூணு பேரும் வர்றாங்க. மூணு பேர்கிட்டேயும் என்னைப்பத்தி என்ன சொல்றாங்கன்னு கேளு!'' என்றாள் மாலா.



சந்தியா சிரித்தாள். ''உன்னைப் பத்தி என்ன சொல் வாங்க? எங்க அண்ணியாட்டம் இல்லைன்னு சொல்வாங்க. சொல்லிட்டு அந்தப் பக்கம் போய் ராட்சசின்னு சொல்லுவாங்க. பெண்களே இப்படித்தானேப்பா? அதுவும் இல்லாமே மாலா உனக்கு நடிக்கத் தெரியுது. சிந்து ஷாட் டெம்பர்ட் அவளுக்கு நடிக்கத் தெரியாது. ரொம்பப் பெரிசா பணம் காசுதான் முக்கியம்னு நினைச்சுக்கறா. ஒரு வகையில பார்த்தா அவ பாவம்!'' என்றாள் சந்தியா.

''நீ என்ன வித்தியாசமா பேசறே?'' என்றாள் மாலா.

''ஆமா மாலா, இந்தப் பெண்கள்லே வந்து ரெண்டு மூணு கேட்டகிரி இருக்கு. நமக்கு நாமே எதிரிகள். ஒரு பொண்ணு தைரியமா தனியா வாழ்ந்தா அவளோட கேரக்டரை டேமஜ் பண்றதே நாமதான். கேரக்டரை அஸாசினேஷன் பண்றதுல நாம கில்லாடிகள். ஒவ்வொருத் தருக்கும் தனிப்பட்ட வாழ்க்கை இருக்குன்னு நாம ஒத்துக்கவே மாட்டோம். அவங்க அவங்க வீட்ல ஆயிரம் இருக்கும். ஆனாலும் அடுத்தவங்க வீட்டைப் பேசணும். சிந்துஜாவுக்கு வாழ்க்கைன்னா என்னன்னு புரியலை. கொஞ்சம் நயந்து கலந்து போனா எல்லாத்தையும் சமாளிச் சுக்கலாம்னு அவளுக்கு தெரியலை.ஒரே பொண்ணு நிறைய சொத்து. அவங்க அம்மா, அப்பாவால அவளைக் கண்ட்ரோல் பண்ண முடியலை இதான் விஷயம்!'' என்றாள் சந்தியா.

சந்தியா பேசுகிற ஒவ்வொரு வார்த்தையும் ஆணி அடித்தாற்போல சிந்துவின் மனத்திலே இறங்கியது. 'இதுதான் உண்மையோ? சந்தியா தெளிவாகப் பேசுகிறாள்.

தன்னை அவள் குறை சொல்ல வில்லை. தன்னுடை
பலவீனத்தை அவள் ஆராய்கிறாள்' என்று தோன்றியது

முதல் முறையாக விவேகமான ஒரு முடிவு செய்தா
'இந்த சந்தியாகிட்டே நாம ப்ரெண்ட்ஷிப் வச்சுக்கணு
அப்பத்தான் எது சரி, எது தப்புன்னு நமக்கு தெரியு
என்றெண்ணியவளுக்கு உடனே ஒரு பெருமூச்
எழுந்தது.

இத்தனை காலத்துக்கு அப்புறம் இதை அனலை
பண்ணி என்னாகறது? எப்படியோ சந்திரமோகனை வ
நழுவ விட்டாச்சு. யாரோ ரோஜாமணி அவரை சுவீக
சுட்டா. கபளிகரம் பண்ணிட்டா. இனிமேல் நான் எப்ப
அவரு கிட்ட போய் சேர முடியும். இல்லை அவருதா
எப்படி வந்து சேருவாரு என்று எண்ணிக் கொண்டா
ஆனால், 'இப்பவும் உன்னோட ஈகோதானே உன்கிட்
இருக்கு. உன் பொண்ணைப் பத்தி நினைக்
மாட்டேங்கறே இல்லே. உன் பொண்ணுக்கு அம்மா அப்ப
ஒண்ணா இருக்கணுங்கறது ஆசை. பிரிஞ்சு போ
குழந்தையா அவ ரொம்ப சஃபர் பண்ணிக்கிட்டா. நீயே
அதை உணர மாட்டேங்கறே? என்று ஒரு மனது கேட்ட

அவள் அப்போதுதான் திரும்பி சந்தியாவைப் பார்த்தவ
போல 'என்னடா தெரிஞ்ச குரலா இருக்கேன்
பார்த்தேன்!'

''ஹலோ சந்தியா!'' என்றாள்.

''ஹாய், சிந்து!'' அவளும் சிரித்தாள்.

'இப்படி வாயேன்!' என்றாள் சிந்து.



'சரி மாலா! நான் சிந்துகிட்டே கொஞ்ச நேரம் பேசறேன்!'' என்று சந்தியா அந்தப் பக்கம் வந்து அமர்ந்தாள்.

சிந்துஜா ஒரு நிமிடம் அமைதியாகக் கழித்து விட்டுப் பிறகு சொன்னாள், ''நீ பேசினது எல்லாம் நான் கேட்டேன்!'' என்று.

''உனக்குக் கேட்கட்டும்னுதான் நானும் பேசினேன்!'' என்றாள் சந்தியா.

சிந்துஜா திகைத்துப் போனாள். ''பின்னே என்ன? மாலா மாதிரி நான் ஊர் வம்புக்காரின்னு நினைச்சியா. நோ, நோ, நோ! நான் பல தடவை உன்கிட்டே பேசணும்னு நினைச்சது உண்டு. ஆனா அப்ரோச் பண்ணினா நீ தூக்கி எறிஞ்சு பேசிடுவியோன்னு நினைச்சேன். அதனால தான் மாலாகிட்ட விட்டுக் கொடுக்காம பேசினேன்!'' என்றாள்.

''தாங்க்ஸ் சந்தியா. எனக்கு... எனக்கு... குட் யூ பி மை ஃப்ரெண்ட்?'' இந்தக் கேள்வியை எதிர் பார்க்காத சந்தியா ஒரு நிமிடம் திகைத்து விட்டாள். பிறகு தோளைக் குலுக்கி விட்டு ''ஒய் நாட்?'' என்றாள்.

''ப்ளீஸ் சந்தியா, இப்ப நீ அனலைஸ் பண்ணினே இல்லே? அதே மாதிரி நான் என்னென்ன தப்பு பண்ணியிருக்கேன்னு அனலைஸ் பண்ணிச் சொல்லேன்!'' என்றாள்.

''உன் தப்பை நான் எப்படி அனலைஸ் பண்ண முடியும்? நீதான் யோசிக்கணும்.''

''நீ சொன்னது கரெக்ட்தான். எங்க அப்பா அம்மா என்னை மிரட்டவே மாட்டாங்க. வேணுங்கறதெல்லாம்

வாங்கிக் கொடுத்துருவாங்க. அம்மாவும் சொத்துக்காரங்க அப்பாவும் சொத்துக்காரங்க. அந்த சொத்தை நிர்வாகம் பண்றதுக்கே அவங்களுக்கு நேரம் போதுமா இருந்தது நான் ஒரே பொண்ணுங்கறதுனால செல்லமா வளர்த்தறத நினைச்சுட்டு என்னை ஸ்பாயில் பண்ணிட்டாங்கன்னு நினைக்கிறேன்'' என்றாள்.

சந்தியா கலகலவென்று சிரித்தாள். ''செல்ஃப் அனாலிசிஸ் சூப்பரா ஆரம்பிச்சிருக்கு''

''ஆனா நீ சொன்னயில்லே? நல்லா யோசிச்சுப் பாரு பெண்கள் தனி ஆள் இல்லையா? பெண்கள் சுய சார்பா இருக்கக் கூடாதா?'' என்றாள்.

''இது ரொம்ப சிக்கலான கேள்வி சிந்து. பெண்கள் தனி ஆள்தான். ஆனால் குடும்பங்கறது ஒரு அற்புதமான அமைப்புதான். அப்போ ஒரு ஆணும் பெண்ணும் சேரும் பொழுது ரெண்டு பேரும் தனியாள்ங்கறதிலேயே நின்னா குடும்பம் எப்படி வரும்?'' என்றாள் சந்தியா.

''நீ சொல்றது கரெக்ட்தான்!'' என்றாள் சிந்துஜா.

''ஏதோ ஒரு பாய்ண்ட்லே காம்ப்ரமைஸ் பண்ணனும் முக்கியமா குழந்தைங்க வந்துட்டா. உனக்கு தெரியுமா சேரிப் பக்கத்துலயெல்லாம் போய்ப் பாரு. நாள் முழுக்க வேலைக்குப் போயிட்டு வந்து ஏதோ ஒரு டப்பாக்குள் காசு போட்டு வச்சிருப்பா. ஆனா குடிகார கணவன் வந்து தேடி பிடிச்சு அவ தலைமயிரைப் புடிச்சு அடிச்சு அந்தக் காசை எடுத்துட்டுப் போயிடுவான்.இந்தப் பொம்பளை அவனை திருப்பி வரும் போது அவனுக்கு மீன் வறுத்து வச்சிருப்பா.



கேட்டா ஆம்பிளைன்னா அப்படித்தான் இருப்பான் அப்படின்னு சொல்லுவா. இப்படியெல்லாம் வாழ்க்கை வாழறாங்க பெண்கள்!''

''அது தப்புதானே?'' என்றாள் சிந்து.

''தப்புதான். இது முழுக்க ஆண்கள் சொசைட்டியாத் தான் இருக்கு. மேல் ஷாவனிஸ்ட் சொசைட்டியாத்தான் இருக்குது. அவளுக்கு எப்படி உதவறது? நாங்கல்லாம் போய் சுய உதவிக் குழுவில் சேர்த்து விட்டு காசு அங்கே இருக்கற மாதிரி பண்ணலாம். நிறைய ஸ்லம்கள்ளே பண்ணி யிருக்கோம். இப்ப ஹஸ்பெண்டை எதிர்த்து நிக்கறாங்க. சோறு வேணுமா கேளு ஆக்கிப் போடறேன். வேறு என்ன வேணுமோ செய்யறேன். இந்தக் காசெல்லாம் கேட்காதே? நீ ஒழுங்கு மரியாதையா வேலை செஞ்சு காசை கொண்டு வந்து கொடு. குடுக்க முடியலையா? கம்முன்னு கெட. அப்படின்னு மிரட்ட ஆரம்பிச்சுட்டாங்க!'' என்றாள் சந்தியா.

சிந்து கலகலவென்று சிரித்தாள். ''உன் நிலைமை அப்படியா? யோசனை பண்ணிப் பாரு. சந்திரமோகன் உங்கிட்டே எவ்வளவோ இறங்கி வந்தாரா இல்லையா?''

''என்ன? அனலிஸிஸ் நடக்குது?'' என்று அங்கே செளமியா வந்து அமர்ந்தாள்.

''ஹலோ, செளமியா!'' என்றாள் சந்தியா.

''செளமியா தெரியுமா? நம்ம கிளப் மெம்பர்!'' என்றாள்.

''தெரியுமே?'' என்றாள் சிந்து.

சௌமியா கஷ்டப்பட்டுப் படித்து உயர்நிலைக்கு வந்தவள். ஆனால், சிந்துஜாவுக்கு அவள் மேல் பெரிய மரியாதை இல்லை. இளப்பமாகத்தான் நினைப்பாள். ஆனால், அவள் சைக்காலஜிஸ்ட் என்று தெரியாது டாக்டராக இருக்கிறாள் என்று தெரியும்.

சிகாமணி சௌமியாவிடம் பேசியிருக்கிறார் என்பதும் அவள் .தான் சந்தியாவுடன் மெதுவாகப் பேசி அப்படி ஆரம்பிக்கச் சொல்லியிருக்கிறார் என்பதும் தனக்கு இப்போது ட்ரீட்மெண்ட் ஆரம்பமாகிறது என்பதும் சிந்துவுக்குப் புரியவில்லை.

ஆனால், சந்தியா, சௌமியா இருவருடைய நட்பையும் அவள் ஆர்வமாக வரவேற்கலானாள்.

## அத்தியாயம் -11

அருள் பிரகாஷின் அறையை எட்டிப் பார்த்தாள் இந்துமதி. ''ஹலோ! வாங்க, வாங்க!'' என்று வரவேற்றான். அது அவர்கள் ஏற்கனவே குடியிருந்த இடம் என்பதால் அங்கேயே இரண்டு மூன்று அறைகள் இருந்தன. ஒரு கூடம் அல்லது ஹால் இரண்டு பெட்ரூம்கள் ஒரு கிச்சன் என்று அது போக மொட்டை மாடியில் இடம் என்றும் இருந்தது.

''எப்படியோ என்னைத் தனிக்குடித்தனம் வச்சுட்டீங்க!'' என்று சிரித்தான் அருள் பிரகாஷ்.

''நீங்க கீழயே இருக்கலாம். எனக்கு ஒண்ணும் அப்ஜக்ஷன் இல்லே!'' என்றாள் அவள்.



''இல்லல்லே, நீங்க ஃப்ரீயா இருங்க. நானும் ஃப்ரீயா இருக்கேன்.நான் இருக்கேன்னு நீங்க அன் ஈஸியா ஃபீல் பண்ணனும். நீங்க இருக்கீங்கன்னு நானும் கொஞ்சம் மூவ்மெண்ட்ஸை எல்லாம் கட்டுப்படுத்தனும்.லெட் அஸ் பி ஃப்ரீ!''.என்றான்.

''உங்க இஷ்டம்!'' என்றாள் இந்துமதி.

''வாங்க, உட்காருங்க!'' என்றாள்.

''இப்படி மொட்டை மாடியிலே உட்காரலாமா?'' என்றாள் இந்துமதி. அந்த நேரம் கொஞ்சம் மாலை நேரமாக இருந்தது. செவ்வானமாகக் கூட இருந்தது.

''ரொம்ப அழகா இருக்கில்லே!'' என்றாள் இந்துமதி.

''ம்...!'' என்றான். சிரித்துக் கொண்டே தன்னுடைய உள் அறையிலே இருந்து இரண்டு சேர்களை கொண்டு வந்து போட்டான்.

இரண்டு ஒயர் சேர்கள். ''நீங்க சோஃபாவெல்லாம் இங்கே எதிர்பார்க்க முடியாது!'' என்றான்.

''எதிர்பார்க்கலையே? இதுதான் நல்லாயிருக்கு!'' என்றாள் இந்துமதி. எதிர் எதிராக அமர்ந்து கொண்டார்கள். நடுவிலே ஒரு சின்ன டீப்பாயையும் போட்டார்கள்.

''நான் இங்கேயே காஃபி மேக்கர் எல்லாம் வச்சிருக்கேன். உங்களுக்குக் கொஞ்சம் வேண்ணா காஃபி போட்டுத் தரட்டுமா?'' என்றான்.

''சரி, கொடுங்க!'' என்றாள். அவன் காஃபி மேக்கரில் காஃபி போட்டுக் கொண்டு வந்து கொடுத்தான்.

"காஃபி மேக்கர் எல்லாம் நீங்க வாங்குவீங்களா? நீ இயற்கை ஆதரவாளர் ஆச்சே?" என்றாள் இந்துமதி.

"நான் எங்கேங்க வாங்கினேன்? யாரோ காம்ப் மெண்டா கொடுத்தாங்க. சரின்னு யூஸ் பண்றே அவ்வளவுதான்!" என்றான்.

"அப்புறம் சொல்லுங்க?" என்றான்.

"சும்மாதான் வந்தேன். மாமாவையும் போட்டு அறு எடுத்துட்டேன். இன்னைக்கு அவரு திருவாசகத்தை பத்தியெல்லாம் சொன்னாரு"

"நிறைய விஷயங்கள் சொன்னாரு!"

"ஆமா, அப்பா ரொம்ப நல்லா விளக்கம் சொல் வாங்க. ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே! என்ற ஒ லைனுக்கு மட்டும் அப்படி விளக்கம் சொல்லுவாங் அதிலே ஆழம், அகலம், நுண்மைன்னு மூணு விஷ இருக்கு. இது எல்லாமே கடவுளுக்கு எப்படின் சொல்லுவாரு!" என்றான்.

"ஆமா, அதுவும் இப்ப ரிட்டயர் ஆனதுக்கு அப்பு கிளாஸ் எடுக்கறதுக்கு ஆள் இல்லையா? நீங்க வந்திருக்கி ரொம்ப என்ஜாய் பண்ணுவாரு!" என்றாள்.

"கிண்டல் பண்றீங்களோ?" என்றாள்.

"எப்பவாவது கிண்டல் பண்றதுதான். ஆனாலும் சொல் விஷயங்கள் கேட்கறதுக்கு நல்லா இருக்கும்!" என்றா அருள் பிரகாஷ்.



"இந்த மாதிரியெல்லாம் இளமைப் பருவம் எனக்குக் கிடைக்கலை!" என்றாள்.

அவன் அமைதியாகக் கேட்க ஆரம்பித்தான். அவள் மனதிலே இருப்பது வெளியே வரட்டும் என்று எண்ணி னான். "ஸ்கூல் டேஸ்ல மே பி ஏழெட்டு வயசு ஸ்கூல் முடிச்சுட்டு வீட்டுக்கு வருவேன். வந்தா அம்மா ஒருபக்கம் கிளப்புக்கு போயிருப்பாங்க. அப்பா பிஸினஸ் விஷயமா அலைஞ்சுகிட்டிருப்பாங்க.நல்ல வேளை. தாத்தா பாட்டி இருந்ததினாலே லோன்லியா ஃபீல் பண்ணினதில்லை. இருந்தாலும் எனக்கு ஒரு பக்கம் ஏதோ அப்படியே கேப் இருந்துட்டே இருக்கும்!" என்றாள்.

"இயற்கைதான்"

"அம்மா, அப்பாவோட சேர்ந்து எங்காவது வெளியே போகணும்னு ரொம்ப ஆசை எனக்கு. ரொம்ப அழுதேன்னா கூட்டிட்டுப் போவாங்க. ஆனா திரும்பி வர்றதுக்குள்ளே ரெண்டு பேருக்கும் சண்டை வந்துடும். ஏண்டா போனோம்னுட்டு எனக்கே கஷ்டமாயிடும். வீட்டுக்கு வந்து அழுவேன். எனக்குப் பத்து வயசு வரைக்கும் ஒண்ணாத்தான் இருந்தாங்க. ஒண்ணா ஒரே வீட்ல இருந்தாங்க. அவங்க ரெண்டு பேருக்கும் அவங்கவங்க பிரச்சினையே பெரிசா இருந்தது. பத்து வருஷத்துக்கு அப்புறம் ஒரு ஒரு பெரிய பிரச்சினை ஆனவுடனே அப்பா இந்த பங்களாவுக்கு வந்துட்டாரு. அப்புறம் தான் தெரிஞ்சது. எப்பவேண்ணா இப்படி ஒரு நிலைமை வரலாம்னு தயாரா வச்சிருந்திருக்காரு அப்படின்னு"

''நீங்க அப்பாவோட போயிருக்கலாமே?''

''போயிருக்கலாம். அப்பாவோட அம்மா, அப்பா ரெண்டு பேரும் கிராமத்துல இருக்காங்க. அவங்க இங்க வரமாட்டோம் நீங்க ரெண்டு பேரும் அடிச்சுக்கறதைப் பார்க்கறதுக்கு எங்களுக்கு சக்தி இல்லைன்னு சொல்லிட்டாங்க. எங்க அம்மாவோட அம்மா, அப்பா இங்கே இருந்தாங்க. அட்லீஸ்ட் அவங்க அரவணைப்பாவது கிடைக்கும் அப்படின்னு நினைச்சேன்.அது மட்டும் இல்லே அப்பா பிஸினஸ் பிஸினஸ்னு அலைஞ்சுகிட்டிருப்பாரு. எவ்வளவு நேரம் தான் தனியா இருக்க முடியும்?'' என்றாள்.

''ஒரு வகையில கரெக்ட்தான்!'' என்றான் அருள் பிரகாஷ். அவள் சொல்வதற்கெல்லாம் ஆமோதித்து அவள் மனதிலே இருந்து விஷயங்களைக் கொண்டு வர வேண்டும் என்று நினைத்தான். அந்த வலையில் அவளும் விழுந்தாள்.

''ஆனா அப்பப்போ குறைஞ்சது ரெண்டு மாசத்துக்கு ஒரு தடவையாவது ஒரு வாரமாவது அப்பா இங்கே தங்குவாரு. அந்த ஒரு வாரமும் என்னைக் கூட வச்சுப்பாரு. ராஜகுமாரியாட்டம் கூட வச்சுப்பாரு''

''அப்புறம் என்னங்க?'' என்றாள்.

''அதுதாங்க தப்பே. ராஜகுமாரியா இருக்கணும்னு நான் நினைக்கலை. சாதாரண மனுஷியாத்தான் இருக்கணும்னு நினைச்சேன். எனக்குத் தேவையான்தெல்லாம் அவங்க கொடுக்கலை. தேவையில்லாதது எது எதையோ கொடுத்தா என்ன பிரயோஜனம்?''

''அதுவும் சரிதான்!'' என்றான் அருள் பிரகாஷ்.



''ஒரு வாரம் சந்தோஷமா இருந்துட்டு வீட்டுக்குப் போவேன். அம்மாவுக்கு ஒரு வாரம் அப்பாகூட போய் இருந்துட்டேன்னு என் மேல கோபமா இருக்கும். இங்கிருந்து போனவுடனே அதை விதவிதமாக் காட்டுவாங்க. அடுத்த ஒரு வாரம் எனக்கு நரக வேதனையா இருக்கும். ஒவ்வொரு நாளும் பாட்டி மடியில அழுதுகிட்டே படுத்துத் தூங்கறது தான் வேலை. அவங்களும் அம்மாகிட்டே பயப்படுவாங்க''

''அவங்ககிட்டே தாங்க தப்பு. அவங்க சின்ன வயசுல ரொம்ப செல்லம் கொடுத்து வளர்த்துட்டாங்க. கண்டிச்சு வளர்க்காம விட்டுட்டாங்க''

''இல்லைங்க. எங்க அம்மா ரொம்ப முசுடு. ஆ ஊன்னா மருந்தைத் தூக்கிக்குவாங்க. தூக்க மாத்திரையை தூக்கிப் பாங்க. அதனால தாத்தா, பாட்டி பயந்துப்பாங்க. ஏன்னா ரொம்ப ஆங்காரம் பிடிச்சவங்க ஏதோ ஒரு ஸ்டேஜ்ல கோபத்துல பண்ணிக்கிட்டாங்கன்னா அப்படின்னு எங்க தாத்தா, பாட்டிக்கு பயம் வந்துடும்''

''ஓஹோ, அந்த அஸ்திரத்தைத்தான் நீங்களும் கையிலே எடுத்துக்கிட்டீங்களாக்கும்!'' என்றான்.

அவள் முகம் வாடியது. ''இல்லைங்க, நான் அஸ்திரமா நெனைச்சு எல்லாம் எடுக்கலை. அப்பா மேல ரொம்ப அன்பு இருந்தது. அவருகிட்டே இருந்து முழு அன்பும் எனக்குக் கிடைக்குதுன்னு நினைச்சுகிட்டிருந்தேன். அவரும் இப்படி ஒரு காரியம் பண்ணியிருக்காருன்னு தெரிஞ்ச வுடனே சடக்குன்னு என் மதிப்பிலே கீழ போயிட்டாரு. அவரு செஞ்சது தப்புதானே?''

"உங்க அம்மாவுக்கு செஞ்சது துரோகம் தான். ஆனா அவரு பக்கம் ஒரு நியாயம் இருக்கு. ஒரு சண்டைக்கார வைஃப் கூட ஒரு பத்து வருஷம் வாழ்க்கை நடத்தின வருக்கு எங்கயாவது ஒரு ரிலீஃப் கிடைக்காதான்னு இருக்கும். நீங்க மக. உங்ககிட்ட அன்பு செலுத்தலாம் ஆனாலும் சாய ஒரு தோள் கிடைக்காதான்னு ஏங்கிகிட்டிருந்திருப்பாரு"

"அது நிஜம்தான். அதுபுரியுது. அதுக்கு பேசாம அம்மாகிட்ட டைவர்ஸ் வாங்கியிருக்கலாம்"

பிறகு அவளே தலையாட்டிக்கொண்டு "இல்லல்லே எங்க அம்மா டைவர்ஸ் கொடுக்க மாட்டேனுட்டாங்க"

"எதுக்கு? டைவர்ஸ் கொடுத்தா அந்த ஆள் இன்னொருத்தியை கல்யாணம் பண்ணிக்குவாரு. அப்படியெல்லாம் அந்த ஆளை வாழ விடமாட்டேன்னெல்லாம் சொல்வாங்க எங்க அம்மாவுக்கு ரொம்பப் பழி வாங்குகிற உணர்ச்சி!" என்றாள்.

"ஆனா இப்போதைக்கு அம்மா ரொம்ப உடைஞ்சு போயிருக்காங்க. நான் கூட அவங்களை விட்டுட்டு வந்திருக்கக் கூடாது. வேணும்னுதான் வந்தேன். செல்ப் அனாலிஸிஸ் பண்ணட்டும். நாம என்ன செஞ்சாலும் நமக்கு சம்பந்தப்பட்டவங்க நம்ம கூட இருப்பாங்கன்னு அவங்க நினைக்கறாங்க.எங்க தாத்தா, பாட்டி அப்படி இருந்து பழக்கிட்டாங்க"

"அவங்களை விடுங்க. நீங்க உங்களைப் பத்தி சொல்லுங்க!" என்றான் அருள் பிரகாஷ்.



"என்ன சொல்றது? வேகமா இடி இடிச்சா எனக்கு பயமாகும். ஆனா உடனே பாட்டி வந்துருவாங்க. வந்து கொஞ்ச நேரம் இருந்துட்டு என் கூட படுத்துப்பாங்க. அவங்க சப்போர்ட் இல்லாட்டி நான் மெண்டலாதான் ஆகியிருப்பேன்!" என்றாள்.

"அது மட்டும் இல்லே. ஸ்கூல்லே எல்லாம் ஃபங்ஷன் நடக்கும். பேரண்ட்ஸைக் கூட்டிட்டு வாங்க அப்படிம்பாங்க. அப்பா வந்தா அம்மா வரமாட்டாங்க. அம்மா வந்தா அப்பா வரமாட்டாங்க. ஒரு சில, ஒரு சில என்ன பெரும் பாலான பொண்ணுகளுக்கு அவங்க அம்மா, அப்பா ரெண்டு பேரும் வருவாங்க. செலவு பண்ணி பெரிய பள்ளிக்கூடத்துல படிக்க வச்சு என்ன பண்றது? எங்களுடைய சின்ன சின்னத் தேவைகளைஅவங்க புரிஞ்சுக்கலையே?" என்றாள்.

அவன் மௌனமாக ஆமோதித்தான். "இந்த மாதிரி புரோக்கன் மேரேஜஸ்ல குழந்தைங்க ரொம்ப சஃபர் பண்ணுவாங்க. அதைப் பெத்தவங்க புரிஞ்சுக்கணும்!" என்றாள்.

அருள் பிரகாஷ் ஆழ்ந்த ஒரு பெருமூச்சுடன் சொன்னான். "அதனாலேதான் நம்ம பெரியவங்கலெல்லாம் ஒருவனுக்கு ஒருத்தின்னு வச்சாங்க.ஒழுக்க ரீதியாவும் அது உடம்புக்கு நல்லது. பார்க்கறோமில்லே, இப்ப எய்ட்ஸ் அது இதுன்னு எத்தனையோ வருது. ஒழுக்கமா இருக்கறது சௌகரியங்க. பல பிரச்சினைகளை தவிர்த்தர்லாம். ஒழுக்கமா இருக்கறது பலகீனம்னு நினைக்கறாங்க அப்படி இல்லை. ஒழுக்கமா இருக்கறதுக்குத்தான் தைரியம் வேணும். வைராக்கியம்

வேணும். அதை நம்ம நியதிகள் மூலமாவெல்லாம்
சொல்லிக் கொடுத்திருக்காங்க. ஆனா, அதுக்காக இப்ப
ஒரு ரொம்ப ப்ராப்ளம் பண்ற ஒரு வைஃப்கிட்டே...
என்று அவன் சொல்லும் போது ''ராட்சஷின்னு
சொல்லுங்க. நாகரீகமா சொல்றீங்க!'' என்றாள் இந்துமதி.

அவன் சிரித்து விட்டான். ''இப்படியெல்லாம்
பேசுவீங்களா?''

''பின்னே, என் மனசுல இருக்கறதெல்லாம் இப்ப
கொட்டிகிட்டிருக்கேன்'' என்றாள்.

''கொட்டிடுங்க. எல்லாத்தையும் வெளியேத்திடுங்க''
என்றாள்.

அவள் அதற்குப் பிறகு அவனிடம் தன்னுடைய தனிமை
யான இரவுகளை, உறவுக்காக ஏங்கிய தருணங்களை
எல்லாம் பகிர்ந்து கொண்டாள். ''இதைச் சொல்றதுக்கு
எனக்குக் கஷ்டமா இருக்கு. ஆனா உங்களை ஒரு
ஃப்ரெண்டா நினைச்சு சொல்றேன். சட்டர்ன் ஏஜுக்கு
அப்புறம் பொண்ணுங்களுக்கு அம்மாவோட கைடன்ஸ்
தேவை இருக்கும்.சில நேரங்கள்லே அம்மாவோட
அரவணைப்புத் தேவை இருக்கும். அந்த நேரத்திலே
எல்லாம் எனக்கு அம்மாவோட கைடன்ஸ் கிடைக்கலை.
ஃப்ரெண்ட்ஸ் பாட்டி இவங்களெல்லாம்தான் கைட்
பண்ணினாங்க. ஒரு வேளை மாமா அத்தைன்னு யாராவது
இருந்திருந்தாக் கூட அத்தைகிட்டயாவது கேட்கலாம்.
அதுக்கும் எனக்கு வழியில்லை. ரொம்ப சஃபர்
பண்ணினேன்ங்க!'' என்றாள்.



அவன் முகத்தில் எந்த பாவமும் இல்லாமல் ஒரு
தோழனைப் போல கேட்டுக் கொண்டான். ''ஒரு நல்ல
ப்ரெண்ட்ஷிப் கூட நான் வச்சுக்கலைங்க. ஏன்னா
என்னோட எல்லா ப்ரெண்ட்ஷிப்பையும் கிரிட்டிசைஸ்
பண்ணுவாங்க. அவங்களுக்கு பணக்காரப் பொண்ணுங்க
கிட்ட தான் ப்ரெண்ட்ஷிப். வச்சுக்கணும். ஆனா
அவங்களும் இவங்களைப் போலத்தானே இருப்பாங்க?ஒரு
ஸ்டேட்டஸ்னு வந்துட்டாலே அது தலைக்குள்ளே எப்பப்
பாரு ஏறிக்குதுங்க!'' என்றாள்.

''அது ஏங்க உங்களுக்கு ஏறலை?'' என்றான் இவன்.

''அந்த ஸ்டேட்டஸ்னால வந்த பிரச்சினையெல்லாம்
நான் பார்த்து அனுபவிச்சுட்டேன்ல. அதனால ஸ்டேட்
டஸ்ங்கறது தேவையில்லாத ஒரு விஷயங்கற மாதிரி எனக்கு
ஆகிப்போச்சு!'' என்றாள்.

''இப்படியே எப்போதும் இருங்க. அதுக்காக பணம்
வேண்டாம்னு சொல்லிட முடியாது. பணம் வேணும்.
ஆனா அதுதான் வாழ்க்கைன்னு நாம நினைக்கத்
தேவையில்லை''

''கரெக்ட்டுங்க. உங்க அப்பா பாருங்க! ஊர்ல நிலம் கூட
இருக்குன்னு சொன்னாரு. ஏதோ பத்து இருபது மைல்
தூரத்திலே வயல் இருக்காமே? அங்கேயும் அப்பப்ப
போயிடுவாராமே?''

''ஆமா, கொஞ்சமா அந்தக் காலத்துல ஒரு அஞ்சு ஏக்கர்
வாங்கிப் போட்டிருக்காரு. அதிலே விவசாயம் பண்றாரு.
அளவா இந்த வீடு. அதுவும் எங்கிட்டே சொல்லிட்டாரு.

இன்னொரு இடம் வச்சிருக்காரு. அவரு ஆயுசு காலத்து குள்ளே இன்னொரு வீடு கட்டிடுவாராம்.உங்களுக்கு தெரியுமா? எங்க அண்ணன் ஒருத்தரு காணா போயிட்டாரு!''

''அப்படியா?'' என்றாள் அவள்.

''அவனுக்காக ஒரு இடம் வச்சிருக்காங்க. அதிலே வீ கட்டிடுவாராம். இந்த வீடு எனக்காம். அந்த வீ அவனுக்காம். நான் ஒழுக்கமா வாழ்ந்துட்டேன். முறையா வாழ்ந்துட்டேன். குழந்தைங்க ரெண்டு பேருக்கும் இருக்கறதை சரி பண்ணி கொடுத்துடுவேன். அந்த நிலத்துலயும் இன்னும் கொஞ்சம் வாங்குவாராம். ஆளுக்கு ஒரு மூணு ஏக்கராவது வச்சுட்டுப் போவேன்.இதுக்கு மே கை ஊணி கர்ணம் போட்டு வந்துக்க வேண்டியது உங்க பொறுப்பு அப்படின்னு சொல்லுவாரு!'' என்றவன் தொடர்ந் ஆனா, நான் வந்து வீட்டு செலவுக்கெல்லாம் அப்பாகிட்டே வாங்கறதில்லை. இந்த வீட்டு மெயிண்டனென்ஸ் எல்லாம் என்னோடதுதான். அப்பாவோட பணம் அப்படியே சேமிச்சுக்க வேண்டியது. அவரு காலம் வரைக்கும் இருக் கட்டும். அப்புறம் யாருக்குக் கொடுக்கறாரோ கொடுக் கட்டும்!'' என்று அவனும் சில விஷயங்களை அவளிடம் பகிர்ந்து கொண்டான். பிறகு அவளைப் பேச விட்டான்.

இந்துமதி ஒரு மணி நேரம் பேசினாள். அந்த ஒரு மணி நேரத்திலும் அவளுடைய இளமைக் கால துக்கங்களை யெல்லாம் கொட்டித் தீர்த்து விட்டாள். கொட்டித் தீர்த்ததற்குப் பின்பு வெடித்து அழுதாள். அவன் தேற்றவே முயற்சி செய்யவில்லை.



'அழட்டும்!' என்று விட்டு விட்டான். அழுது முடித்து அவளே கண்களை துடைத்துக்கொண்டு அவனை நிமிர்ந்து பார்த்து புன்னகைத்தாள்.

''குட், இனிமே பாருங்க! உங்களுக்கு பாரம் இறங்கின மாதிரி இருக்கும்!''

''என்ன திடீர்னு உங்களுக்குன்னுகிட்டு...உனக்குன்னே பேசுங்க!'' என்றாள்.

''ம்... இப்படி யாருகிட்டேயாவது சொல்றதுக்கு உனக்கு யாரும் இருக்கலை. அதான் பிரச்சினை.உங்க தாத்தா, பாட்டிக்கிட்டயும் சொல்ல முடியாது.ஏன்னா, அவங்க மகளைப் பத்தி எவ்வளவு குறை சொல்ல முடியும்?''

''ஆமா சில நேரத்திலே அவங்க விட்டுக் கொடுக்காம பேசுவாங்க!'' என்றாள்.

''அதான். இந்த கவுன்சிலிங் எல்லாம் போகலாம்னு நினைச்சேன். ஆனா சில பேர் சொல்றாங்க. சில பேர் அந்த விஷயங்களை மனசுல வாங்கிட்டு ப்ளாக்மெயில் பண்ற மாதிரியெல்லாம் ஃபாரின்ல இருக்குதாம்!'' என்றாள்.

''இங்கே அப்படி பெரும்பாலும் இல்லை. இருந்தாலும் பெரிய இடத்து விஷயங்கள் வந்து லீக் ஆகாமல் இருக்கறது நல்லதுதான். இப்ப எல்லாத்தையும் கொட்டிட்டீங்கள்லே? உங்க அப்பா பக்கத்தில் இருக்கிற நியாயம். உங்க அம்மா பக்கத்தில என்ன பிரச்சினைன்னு யோசிங்க. நானும் அப்பாவுமா சேர்ந்து உங்க அம்மாவுக்காக சில ஸ்டெப்ஸ் எடுத்திருக்கோம்!'' என்றான்.

''அப்படியா?'' என்றாள் அவள்.

''ஆமா, பார்க்கலாம். எல்லாருமா சேர்ந்து சீக்கிர இந்தப் பிரச்சினைகளுக்கு முடிவு கொண்டு வர பார்க்கலாம். பி ரிலாக்ஸ்ட்!'' என்றான்.

அவள் மகிழ்ச்சியுடன் தலையாட்டி விட்டு எழுந்தாள் மொட்டை மாடி படி வரைக்கும் போனவள் திரும்ப ஓ வந்து 'அருள்!' என்றாள்.

''என்ன இந்து?'' என்றான்.

''உங்க கையைக் கொஞ்சம் நீட்டுங்களேன்!'' என்றாள்

அவன் கையை நீட்டினான். அவள் சட்டென்று அவ புறங்கை மீது ஒரு முத்தம் வைத்து விட்டு 'தாங்க்ஸ் என்றாள். ஒரு கணம் அவன் திகைத்துப் போனான்.

''ஃப்ரெண்ட்லியாத்தான்!'' என்று சொல்லிச் சிரித்து விட்டு அதே சிரிப்புடன் அவள் படிகளில் இறங்கி போனாள். அவள் போன திசையைப் பார்த்துக் கொண்டே அவன் சற்று நேரம் அமர்ந்திருந்து விட்டு சிரித்த கொண்டே எழுந்து தன்னுடைய அறைக்குப் போனான்.

## அத்தியாயம் -12

**கா**ரை செளமியா ஓட்டிக் கொண்டிருந்தாள் சந்தியாவும் சிந்துஜாவும் அந்தக் காரிலே இருந்தார்கள் சிந்துஜா டிரைவிங் சீட்டுக்குப் பக்கத்திலே அமர்ந்திருந்தாள் சந்தியா பின்னாலே அமர்ந்திருந்தாள்.



''என்ன திடீர்னு பிக்னிக் பிளான் பண்ணிட்டீங்க?'' என்றாள் சிந்துஜா.

''ஆமாம் லைஃப் ஒரே ஸ்ட்ரெஸ்ஃபுல்லா இருக்குது. ஆமா, சும்மா நமக்காக கொஞ்ச நேரம் செலவு பண்ணிக் கலாம் அப்படின்னு நான் தான் செளமியாகிட்ட சொன்னேன்!'' என்றாள் சந்தியா.

சிந்துஜாவுக்கு 'நான் எனக்காகத்தான் எல்லா நேரத் தையும் செலவழிச்சுட்டு இருக்கறேன் போல இருக்கு!' என்ற எண்ணம் உள்ளே தோன்றியது. ஆனால் சொல்ல வில்லை.

செளமியாவும் சந்தியாவும் காரின் கண்ணாடி வழியாகப் பார்வை பரிமாற்றம் செய்து கொண்டார்கள். ''உங்க வீட்டுக்காரரு கோபக்காரர் ஆச்சே? எப்படிப் பர்மிட் பண்ணினாரு?'' என்றாள் செளமியா சந்தியாவிடம்.

''அந்தக் கோபமெல்லாம் மலையேறிப் போச்சு செளமியா. கல்யாணம் ஆன புதுசுல ரொம்ப டென்ஷன் ஆவாரு. அப்ப நானும் ஈக்வலா டென்ஷன் ஆகிட்டு இருந்தேன். அப்புறம் இந்த யோகா கிளாஸ், ராஜ யோகம் கிளாஸ் போனேன், ஆர்ட் ஆப் லிவ்விங் போனேன், ஈஷா போனேன். போகாததே இல்லை. எல்லாப் பக்கமும் போய் கொஞ்சம் மூச்சுப் பயிற்சியெல்லாம் செலக்ட் பண்ணி டெய்லி பண்ணிக்கறேன்.அதனால மைண்ட் காமா இருக்கு. அவரு ரொம்ப கோபிச்சு ஆடிக்கிட்டு இருந்தாருன்னா நான் சிரிப்பேன். அவரு இன்னும் டென்ஷன் ஆவாரு!'' என்று சிரித்தாள் சந்தியா

''பாவம்டி அவரு!'' என்றாள் சௌமியா.

அவர்கள் இரண்டு பேரும் வாடி, போடி என்று பேசி கொள்வதைப் பார்த்த சிந்துஜா ஆச்சரியமாகப் பார்க்க ''நாங்க ரெண்டு பேரும் காலேஜ்லே கிளாஸ்மேட்ஸ். டிகிரி ஒண்ணா படிச்சோம். அதுக்கு அப்புறம் நான் மறுபடியும் எம்.பி.பி.எஸ் போயிட்டேன். இவ எம்.எஸ்.ஸி. போயிட்டா'' என்றாள் சௌமியா.

''அப்படியா?'' என்று கேட்டுக் கொண்டாள் சிந்துஜா.

''அதெல்லாம் நான் எங்க வீட்ல அவருகிட்டே சொல்லிடுவேன். மாசத்துக்கு ஒரு த்ரி ஃபோர் டேஸாவது நான் எனக்குன்னு ஸ்பெண்ட் பண்ணிக்குவேன். அதுவு குடும்ப கடமைகளுக்கெல்லாம் மாற்று ஏற்பாடு பண்ணிட்டுத்தான் போவேன்!'' என்றாள்.

''ஏய், என்னென்னமோ சொல்றே?'' என்று சந்தியா சிரிக்கவும் ''அட போடி, நான் அந்த அர்த்தத்திலே சொல்லலை. ஹவுஸ் கீப்பிங்குக்கெல்லாம் ஆள் ஏற்பாடு பண்ணிட்டுத்தான் வெளியே கிளம்புவேன். அவரும் கண்டுக்க மாட்டாரு. மீதி நாளெல்லாம் காலையில் எழுந்திருச்சா அவரு பின்னாடியே தானே அலையறோம் அது மாதிரி நாம டயர்டா இருக்கும் போது அவரும் அலையறாருன்னு வை, ரெண்டு பேரும் டிவைட் பண்ணி ஒரு மாதிரி காம்ப்ரமைஸ் பண்ணிட்டு போவோம் எங்களுக்குள்ளே ஒரு அக்ரிமெண்ட் சந்தியா அவரு கத்தும் போது நான் சைலண்டா இருப்பேன். நான் கத்தும் போது அவரு சைலண்டா இருப்பாரு. அப்புறமா உட்கார்ந்து பேசிப்போம்!'' என்றாள் சௌமியா.



சௌமியா தனக்குப் பாடம் எடுத்துக் கொண்டிருக்கிறாள் என்பதை உணராத சிந்துஜா ''அதெப்படி? அவங்க சும்மா கத்தினா நாம வாங்கிக்கணுமா?'' என்றாள்.

சௌமியா களுக்கென்று சிரித்தாள். ''என்ன சிரிப்பு?'' என்றாள் சிந்துஜா கோபமாக.

''இல்லையே, அவங்ககிட்டே வேற என்னென்னமோ வெல்லாம் வாங்கிக்கறோமில்லே அப்பப்போ. அந்த நேரத்துல நாம ஈகோவெல்லாம் பார்க்கறது இல்லையில்லே. நாம கெஞ்சறோம். அவங்க கெஞ்சறாங்க. எல்லாத்தையும் ஷேர் பண்ணிக்கறோம். என்னென்னத்தையோ விட்டுக் கொடுத்துடறோம். அப்புறம் என்ன பெரிசா அவங்ககிட்டே கோபம்!'' என்றாள்.

சிந்துஜாவுக்குக் கூட தங்கள் ஆரம்ப காலத்துத் திருமண வாழ்க்கை நினைவுக்கு வந்தது. அப்போதெல்லாம் சந்திர மோகன் அவள் பின்னாலேயே அலைவார். இவள் தான் முறுக்கிக் கொண்டு திரிவாள்.ஆனால் அந்த உறவுக்காலங் களில் மட்டும் எப்படியோ அவளைப் பணிய வைத்து விடுவார். அது குறித்து அவளுக்கு அடுத்த நாள் கோபம் வரும். ஒரு விதமான கோபத்திலேயே அலைந்து கொண்டிருப்பாள். இப்போது தோன்றியது. பாவம் அவரும் ரொம்பத்தான் முயற்சி எடுத்திருக்கிறார். நாம் தான் அவரைப் பாடாய்ப் படுத்தி விட்டோம் போல. ''இந்த சௌமியா பாரேன். ஏதோ டாக்டர் கோர்ஸ் படித்திருக் கிறாள். அதிலேயும் ஏதோ பி.ஜி கூட பண்ணியிருக்கான்னு சொன்னாங்க. அதையும் பார்த்துக்கறா. வீட்டையும்

பார்க்கறா. ஒரு பையன் ஒரு பொண்ணு அவங்களையும் சமாளிச்சுக்கறா!'' என்றாள்.

சிந்துஜா ''அது சரி, உன் பையனையும், பொண்ணையும் எப்படி சமாளிக்கறே?'' என்றாள். ''சமாளிக்கறது என்ன அவங்க போக்கிலே போய் அப்புறம் நம்ம போக்குக்கு கொண்டு வந்துடணும். எனக்கு ஃபுல்லா அவங்க கூட இருக்க முடியாது. ஆனா மாமனார் மாமியார் இருக்காங்க. பட் குவாலிட்டி டைம் கொடுப்பேன். எவ்வளவு நேரம் இருக்கேனோ அந்த நேரம் அவங்களுக்காக மட்டும்தான். ஓடுவேன், ஆடுவேன், பாடுவேன் விளையாடுவேன் அவங்க லெவலுக்கு இறங்கிடுவேன்!'' என்றாள்.

சிந்துஜா திகைப்புடன் அவளைப் பார்த்தாள். ''என்ன சிந்து அப்படிப் பார்க்கறே?'' என்றாள் சௌமியா.

''இல்லே! எனக்கு இப்படியெல்லாம் யாரும் சொல்லித் தரலை!'' என்றாள்.

''நீ உங்க அம்மாகிட்டே கேட்க வேண்டியதுதானே?'' என்றாள்.

''எங்க அம்மா ரொம்பப் படிக்காதவங்க. அவங்களுக்கு என்ன தெரியும்?''

''அங்கே தான் சிந்து தப்புப் பண்றே?. நம்ம அம்மாக்கள் படிக்கலைன்னா அவங்களுக்கு ஒண்ணும் தெரியலைன்னு நாம நினைக்கிறோம். ஆனா அவங்க அனுபவத்துல நிறைய கத்து வச்சிருப்பாங்க.நான் எங்க வீட்டுக்காரர் கத்தும் போது பேசாம இருக்கறதை யாருகிட்டே கத்துக்கிட்டேன் தெரியுமா? எங்க அம்மாகிட்டே. எங்க அப்பா கத்தி



கத்துன்னு கத்துவாரு. சில நேரத்திலே பொருளையெல்லாம் தூக்கி வீசுவாரு. எங்க அம்மா போய் திண்ணையிலே உட்கார்ந்துக்குவாங்க. நான் போய் 'ஏம்மா அப்பா இந்தக் கத்து கத்தறாங்க'ன்னு கேட்பேன்.

''கத்தி முடிக்கட்டும் புள்ளே, அவரு ஏதோ வெளியிலே இருக்கற கோபத்தையெல்லாம் இங்க காமிச்சுட்டிருக்காரு. அதை எதுக்கு நாம வாங்கிக்கணும், அவரு எந்தெந்தப் பொருள் மேல காட்டறாரோ அந்த பொருளோட போகட்டும் அப்படின்னு சொல்லுவாங்க''

''அப்பத்தான் எனக்குப் புரிஞ்சது அந்தக் கோபத்தை நாம வாங்கிக்கிட்டாதான் அது நம்மளை பாதிக்கும். வேண்டாம் போ. அப்படின்னு ஒதுக்கிட்டோம்னா? எவ்வளவு சிம்பிளான பாலிஸி!'' என்றாள்.

சிந்து வியப்பாக சௌமியாவைப் பார்த்தாள். ''ஆமா, எங்க அம்மாகூட சில நேரத்துல அட்வைஸ் எல்லாம் பண்ணுவாங்க. அவரு வெளியே அலைஞ்சுட்டு வர்றாரு டி. அந்தக் கோபத்தை காட்டறாரு. நீ கொஞ்ச நேரம் பேசாம இருந்தேன்னா தானா உங்கிட்ட வருவாரு. ஒரு நாளைக்கு அமைதியா இருந்து பாரு. அப்புறம் எப்படி கெஞ்சிகிட்டு வர்றாருன்னு பாரும்பாங்க!''

அப்படியும் ஒரு நாள் இருந்தாள். ஆனால் அடுத்த நாள் அம்மா சொன்னது போலவே சந்திரமோகன் சாரி சிந்து என்று அவளை கொஞ்சுவதும் வெளியே அழைத்துப் போவதுமாக இருப்பார். ஆனால் உடனே சிந்துவிற்கு அவளுடைய ஈகோ திரும்பி விடும்.

சந்தியா, "சௌமியா உனக்கு விஷயம் தெரியுமா? நம் இந்த லேகா இருக்காள்ல லேகா அவளும் அவளுடை ஹஸ்பெண்டும் செப்ரேட் ஆயிட்டாங்க தெரியுமில்லே?"

சௌமியா பெருமூச்சு விட்டாள் "செப்பரேட் ஆகறது என்ன பெரிய விஷயம் இருக்கு? ஆனா அவளுக்கு ஒரு பொண்ணு இருக்கு. பையன் கூட இந்த சமுதாயத்தை சமாளிச்சுப்பான். பொண்ணு எப்படி ஏங்கிப் போவாள்!" என்றாள் சௌமியா.

"ஆமா, அவங்க அதைப் பத்தி யோசிச்சிருக்கலாம். இந்த மாதிரி ஈகோயிஸ்டிக்கா செப்பரேட் ஆகறதெல்லாம் கொஞ்ச நாளைக்கு நல்லாயிருக்கும்ப்பா. அதுக்கு அப்புறம் லைஃப்ல வெறுமை வந்துடும். அந்த வெறுமையிலே எப்படி எப்படியோ கோபம் கோபமா வரும். அடுத்தவங்க மேல ஆங்காரம் வரும்!" என்று சௌமியா கிட்டத்தட்ட சிந்துஜாவின் நடத்தையை முழுமையாக சொல்லி விட்டாள்.

சிந்துஜாவிற்கு அப்போது புரிந்தது. 'நாமளும் இப்படித்தானே பண்ணிகிட்டிருந்தோம்!' என்று எண்ணிக் கொண்டாள்.

"அவளோ கோபம் வருது. எதைப் பார்த்தாலும் எரிச்சலா வருது அப்படின்னாலே உள்ளே வெறுமை இருக்குதுன்னு அர்த்தம்ப்பா!" என்றாள் சௌமியா.

"எல்லார் லைஃப்லேயும் ஒரு கட்டத்திலேயும் வெறுமை வரும். பெரிய புகழ் அடைஞ்சவங்களையெல்லாம் பாரு புகழின் உச்சிக்குப் போனவங்களெல்லாம் ஆன்மீகத்துப்



பக்கம் திரும்புவாங்க. ஏன்னா அந்த புகழை எட்டிப் பிடிக்கற வரைக்கும் அது பெரிசா தெரியும். வந்ததுக்கு அப்புறம் எல்லாமே சாதாரணமா இருக்கும். அப்பதான் அவங்க ஆன்மீகத்துப் பக்கம் திரும்புவாங்க" என்றாள் சௌமியா.

கிட்டத்தட்ட அந்த நாள் முழுக்க அவர்கள் மாறி இது மாதிரி விஷயங்களையே பேசிக் கொண்டார்கள். வழக்கம் போல முகம் திருப்பிக் கொள்ளாமல் 'வேற பேசுங்க!' என்று கூட சொல்லாமல் சிந்துஜா இதையெல்லாம் முழுமையாக கவனித்தாள்.

சௌமியா உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள். இதற்கு நடுவிலே வேறு பேச்சுக்களும் பேசினார்கள். அவர்கள் பிக்னிக் வருகிறேன் என்று கோயம்புத்தூருக்குப் பக்கத்திலே கோபி பக்கத்திலே கொடி வேரி என்ற இடத்திற்கு வந்திருந்தார்கள்.

அருகிலே இருக்கிற கோயில்களைப் பார்த்து விட்டு அந்த கொடி வேரி என்கிற சின்ன நீர் வீழ்ச்சியிலே விளையாடி விட்டு ஒரு பக்கமாக அமர்ந்து சாப்பிடவும் செய்தார்கள்.

சந்தியா கதம்ப சாதம் கொண்டு வந்திருந்தாள். சௌமியாவும் ஏதோ கொண்டு வந்திருந்தாள். சிந்துஜாவும் தன் வீட்டிலே இருந்து வெஜிடபிள் பிரியாணி ராய்தா அது போக இன்னும் ஏதேதோ கொண்டு வந்திருந்தாள். குளித்து விட்டு சாப்பிடவும் எல்லாமே உள்ளே போனது.

''பாரேன், வீட்லயெல்லாம் நான் இவ்ளோதான் சாப்பிடுவேன். இங்கே பாரு, மறுபடியும் எப்படி உள்ளே போகுது!'' என்றாள்.

''சரி, கொஞ்சம் கழிச்சு ஈவினிங் சாப்பிடலாம்!'' என்றாள் சந்தியா.

''ஈவினிங்கா,'' என்றாள் சிந்துஜா.

''ஆமா, மறுபடியும் குளிக்கணுமில்லே? என்றார்கள்.

சற்று நேரம் ஓய்வெடுத்து விட்டு மறுபடியும் தண்ணீரில் ஆடிவிட்டு மாலை வரை பொழுதைக் கழித்து விட்டு கிளம்பினார்கள்.

பல நாட்களுக்குப் பிறகு சிந்துஜா அன்றைக்கு வாழ்ந்தது போல உணர்ந்தாள். சௌமியாவின் கைகளைப் பிடித்துக் கொண்டாள். ''ரொம்பத் தாங்க்ஸ் சௌமியா. நீங்க நிறைய விஷயங்கள் எனக்காகத்தான் சொன்னீங்கன்னு நான் புரிஞ்சுக்கிட்டேன். நேரடியா சொல்லாம மறைமுகமாக சொல்லியிருக்கீங்க. நானும் உங்ககிட்டே பேசணும். என் மனசிலே இருக்கறதெல்லாம் பேசணும்! ''நான் ஏன் அப்படி நடந்துக்கிட்டேன் அப்படிங்கறதுக் கெல்லாம் நான் உங்ககிட்ட சொல்லணும்!'' என்றாள்.

''பேசலாம் சிந்து. நீங்க என் கிளினிக் வந்தாக் கூட பேஷண்டுன்னு பேரு கட்டிடுவாங்க. நான் உங்க வீட்டுக்கு வரேன். அங்கே ஃப்ரீயா பேசலாம்!'' என்றாள் சௌமியா.

சௌமியாவின் கைகளை எடுத்து கண்களில் ஒற்றிக் கொண்டாள் சிந்து.



''உண்மை என்ன தெரியுமா? எனக்கு மனசு விட்டுப் பேசறதுக்கு யாருமே இல்லை!'' என்றாள்.

''தப்புப் பண்ணிட்டீங்க சிந்து. சந்திரமோகன் நான் பார்த்த வரைக்கும் அருமையான ஆளு. நீங்க அவர்கிட்டே எல்லாத்தையுமே உட்கார்ந்து பேசியிருக்கலாம்!'' என்றாள்.

''அங்கே தான் எனக்கு பெரிய தயக்கமே இருந்தது. ஏன்னா விஷயம் அப்படி?'' என்றாள் சிந்து.

''என்ன விஷயமா இருந்தா என்ன? நீங்க என்கிட்டே சொல்லுங்க. நான் கான்ஃபிடன்ஷியலா வச்சுப்பேன். உங்க நம்பிக்கையைக் காப்பாத்துவேன்'' என்றாள்.

மனம் லேசானாற்போல அன்று வீட்டுக்கு வந்து இறங்கினாள் சிந்து. பல நாட்களுக்குப் பிறகு முகம் தெளிவாக இருப்பதைப் பார்த்தார்கள் மகாலிங்கமும் மரகதமும்.

''என்ன கண்ணு இன்னைக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கே?'' என்றாள் மரகதம்.

''ஃப்ரெண்ட்ஸ் கூட பிக்னிக் போயிட்டு வந்தேன்!'' என்று பொறுமையாக சொன்னாள். எப்பொழுதும் தாயை அலட்சியப்படுத்தி ஏதாவது சொல்லி விட்டுப் போவாள். நின்று அவள் பதில் சொல்லவும் மகாலிங்கமும் மரகதமும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

அறைக்குப் போனவள் முதலில் இந்துமதிக்குத்தான் போன் செய்தாள். ''இந்துக் குட்டி எப்படிடா இருக்கே?'' என்றாள்.

இந்துவுக்கு ஒரே ஆச்சரியம் 'என்னடா இது, அம்மா இப்படிப் பேசறாங்க!' என்று. "ஏம்மா நான் நல்லாயிருக்கேன். நீங்க எப்படி இருக்கீங்க?" என்றாள்.

"நானும் நல்லாயிருக்கேன்.இன்னைக்கு என்னாச்சு தெரியுமா? சௌமியா தெரியுமா பெரிய சைக்யாட்ரிஸ்ட் அவ. சௌமியா சந்தியா நானு மூணு பேரும் கொடி வேரி பிக்னிக் போனோம்!" என்றாள்.

"ரியலி?" என்றாள் இந்து.

"ரொம்ப நல்லா என்ஜாய் பண்ணினேன் இந்து. நீ கூட வந்திருக்கலாம். உன்னை நான் ரொம்ப மிஸ் பண்ணினேன்"

"எனக்கென்னம்மா தெரியும்? நீங்க போறேன்னு சொல்லியிருந்தா நான் வந்திருப்பேன். ஆனா நீங்க மூணு பேரும் ஃப்ரெண்ட்ஸ். சேம் ஏஜ். நீங்க போனாத்தான் நல்லாயிருக்கும்."

"ஆமாடா, சௌமியாகிட்டே நிறைய விஷயம் பேசிட்டு இருந்தேன்"

"அப்படியாம்மா? ஓகே ஐ ஆம் வெரி ஹாப்பி ஃபார் யூ ரொம்ப நாள் கழிச்சு இப்படி சந்தோஷமா பேசறீங்கம்மா!" என்றாள்.

"ஆமாடா, மனசிலே இருந்து பாரம் இறங்கின மாதிரி இருக்கு!" என்றாள்.

"சரிம்மா, நான் வேண்ணா வரட்டுமா இன்னைக்கு? அங்கே வந்து ரெண்டு நாள் இருந்துட்டு வரேன்!" என்றாள்.



"வாடா கண்ணு, தாராளமா வா. ஐ ம் வெயிட்டிங் ஃபார் யூ!" என்று ஃபோனை வைத்தாள்.

அம்மாவை அழைத்து "அம்மா இந்து ரெண்டு நாளைக்கு வராளாம். இந்துவுக்குப் பிடிச்சதெல்லாம் என்னன்னுட்டு சொல்லுங்க. செஞ்சுடுவோம்!" என்றாள்.

மகளுக்கு என்ன பிடிக்கும் என்று கூடத் தெரியாத தாயாக அவள் இருப்பதைப் பார்த்து மரகதம் பெருமூச்சு விட்டுக் கொண்டாள்.

இருந்தாலும் இந்த சந்தர்ப்பத்தை விட வேண்டாம் என்று மகளிடம் இந்துமதியைப் பற்றி சொல்ல ஆரம்பித்தாள்.

முதல் முதலாக இந்துமதியைப் பற்றி அவளும் தெரிந்துகொள்ள ஆரம்பித்தாள்.

## அத்தியாயம் - 15

**சி**காமணி திருக்குறள் வகுப்பெடுக்க ஆரம்பித்திருந்தார். இந்துமதியைத் தவிர வேறு நான்கைந்து பேர்கள் வந்திருந்தார்கள். அவ்வப்போது இப்படி ஒரு சின்னக் குழுவாக வைத்து வகுப்பெடுப்பார் என்று அவள் இதற்குள்ளாக கேள்விப்பட்டிருந்தாள்.அவளும் அந்த வகுப்பிலே அமர்ந்து கொண்டாள்.

சிகாமணி அன்று காலையில்தான் அவளிடம் சொன்னான். "உனக்காகத்தாம்மா இந்த வகுப்பே ஆரம்பிக்கிறேன்.

ஆனால் வேற ரெண்டு மூணு பேர் கேட்டுகிட்டிருந்தாங்க ஆனால் வேற ரெண்டு மூணு பேர் கேட்டுகிட்டிருந்தாங்க. அதான் அவங்களையும் வரச் சொல்லிட்டேன்!'' என்றார்.

அப்போது அங்கே வந்த அருள் பிரகாஷ் ''அப்பா, இந்த குரூப்ல நானும் சேர்ந்துக்கறேன்'' என்றார்.

''நீதான் ஏற்கனவே கேட்டிருக்கியேடா!'' என்றார் அப்பா.

''இல்லியே அப்பா, நீங்க ஒவ்வொரு தடவை ஒவ்வொரு மாதிரி விளக்கம் சொல்லுவீங்களே?'' என்றான்.

''அது அப்படித்தாம்ப்பா. திருக்குறளுக்கெல்லாம் ஒரு குறள் எடுத்தா ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு விளக்கம் சொல்லுவாங்க. ஒருத்தரே பத்து விளக்கம் சொல்றவங்களெல்லாம் இருக்காங்க!'' என்றார்.

''எப்படியோ ஐ ஆம் வெரி இன்ட்ரஸ்ட்டட்ப்பா!'' என்றான்.

''பார்த்தியாம்மா, திருக்குறளுக்கு இங்கிலீஷ் கமெண்ட்!'' என்று சிரித்தார் சிகாமணி.

மாலை ஐந்து மணிக்கு வகுப்பு எடுக்க ஆரம்பித்தார்.

இந்துமதியும் ஆர்வமாக அமர்ந்து கொண்டாள். முதலிலே ஆங்காங்கே ஒன்றிரண்டு குறள்களை எடுத்து சொல்ல ஆரம்பித்தார்.

''இல்வாழ்க்கைன்னா என்ன?

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.



ஒரு கணவன் மனைவின்னா அன்பு இருக்கணும். அவங்களுக்குள்ள ஒழுக்கம் இருக்கணும்.

அப்பதான் இல்வாழ்க்கையோட பண்பும், பயனும் ஆகும் என்று ஆரம்பித்தவர் ''இப்பொழுதெல்லாம் எப்படிக் குடும்பங்கள் உடைந்து போகின்றன. அதற்கு என்ன காரணம் பொறுமையின்மைதான்.இப்போ எல்லோரும் தனி மனிதர்கள் கணவனும் தனி மனிதன் மனைவியும் தனி மனுஷின்னு பேச ஆரம்பிச்சுட்டாங்க. ஒவ்வொருத்தரும் தனி மனிதர்கள்தான். ஆனால் ஒரு குடும்பம் உருப் படணும்னா ரெண்டு பேருமே ஒரு பாய்ண்ட்ல உட்கார்ந்து பேசி காம்ப்ரமைஸ் பண்ணிக்கணும்.நீ பெரிசா நான் பெரிசான்னு இருக்கக் கூடாது. நம்ம ரெண்டு பேரைக் காட்டிலும் நம்ம குழந்தைங்க பெரிசு அப்படின்னு உணரணும். நம்ம தருமம் பெரிசுன்னு உணரணும். உலகத்துல எல்லாருமே நம்ம இந்தியாவினுடைய குடும்ப அமைப்பைப் பார்த்து ஆச்சரியப்படறாங்க. ஆனா இங்கே ஒருதலைப் பட்சமாத்தான் நடக்குது. அதை ஒத்துக்கணும். ஒரு குடும்பங்கற அமைப்பைக் காப்பாத்தறதுக்காக பெண்கள் ரொம்பத் தியாகம் பண்றாங்க. பெண்களை ரொம்ப எக்ஸ்ப்ளாய்ட் பண்றாங்க. அதுவும் இருக்கக் கூடாது. அவங்களுக்கான நேரம், அவங்களுக்கான ரசனை, இதுக்கெல்லாமும் நேரம் கொடுக்கணும். இப்ப ஆனா பெண்கள் வேலைக்குப் போறாங்க ஆனால், பெரிய மாற்றம் எல்லாம் இல்லை. பொருளாதார சுதந்திர மெல்லாம் பெரிசா ஒண்ணும் இல்லை. சம்பளத்தைக் கொண்டு வந்து கொடுத்தர்றாங்க. மறுபடியும் சம்பாதிக்கிற

அடிமைகளா இருக்கணும்னு எதிர்பார்க்கிறாங்க கணவன் மார்கள். இப்ப அப்படியே பெண்கள் எதிர்க்க ஆரம்பிச் சிருக்காங்க. அதனால தான் இப்ப குழப்பங்களெல்லாம் வருது, எப்படிக் குழப்பங்கள் எல்லாம் வருது என்று ஆரம்பித்தவர் எப்படி விட்டுக் கொடுக்க வேண்டும் அதே சமயத்தில் எப்படி அவரவர் தனித்தன்மையை காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்கும் விளக்கம் சொன்னார்.

"இதுக்குப் பெரிய சொல்யூஷன் என்ன தெரியுமா? நான் கணவன் நீ மனைவி நான் ஒஸ்தி நீ தாழ்த்தின்னு நினைக் காம இரண்டு பேரும் நண்பர்களாக இருக்கணும். அப்பத் தான் அது சாத்தியம்.நட்புங்கற ஒரு உறவுலதான் ஒருத்தரை ஒருத்தர் கட்டுப்படுத்தறது இருக்காது. ஒருத்தரை ஒருத்தர் அப்படியே ஏத்துக்கறது இருக்கும். நாம இப்ப சொல்லிக் கொடுக்க வேண்டியதெல்லாம் நட்பா இருங்க. ஃபிரண்ட்ஸ் ஆயிட்டாலே அப்புறம் மரியாதை கொடுக்கணும். நீ எப்படி இப்படிப் பேசலாம் அப்படிப் பேசலாம்கற தெல்லாம் இருக்காது. உட்கார்ந்து பேசிடலாம். அதான் குழந்தைகளுக்கும் நல்லது.இன்னைக்கு ஒரு பக்கத்திலே பெரிய அளவிலே லிபரேஷனைப் பத்தி பேசற பெண்கள் எல்லாம் வந்துட்டதினாலே ரொம்ப அவங்ககிட்ட போய் பெய்யெனப் பெய்யும் மழை அப்படினெல்லாம் பேசக் கூடாது. அது இந்தக் காலத்துக்குப் பொருந்தாது.அது அந்தக் காலத்து நியாயம். ஒழுக்கம் வேணும். ஆனா அதுக்காக கணவனைப் பூஜை பண்ணிட்டு இருன்னு சொன்னா இன்னைக்கு ஏத்துக்க மாட்டாங்க. மனைவியைப் பூஜை பண்ணினார் ராமகிருஷ்ணர் அதுவும் இருக்குது. அதனால



இதையெல்லாம் யோசிச்சு பெஸ்ட் சொல்யூஷன் ஃஎன்னன்னா ப்ரண்ட்ஸா இருக்கறதுதான்!'' என்றார் சிகாமணி.

அருள் பிரகாஷும் இந்துமதியும் கைதட்டினார்கள். சிகாமணி சிரித்தார். "வகுப்பெடுக்கறேன் தம்பி. மீட்டிங்கா நடத்தறேன்?" என்றார்.

"சூப்பர்ப்பா!" என்றான் அருள் பிரகாஷ்.

இப்படி ஒவ்வொரு குறளையும் எடுத்துக் கொண்டு அதற்கு இந்தக் காலத்துக்குப் பொருந்துகிறமாதிரியும் அவர் விளக்கம் சொல்ல வரிசையாக இல்லாமல் அதிகார வரிசையாக இல்லாமல் ஆங்காங்கே ஒரு குறளை எடுத்துக் கொண்டு அதற்கென்று விளக்கம் சொல்ல ஆரம்பித்தார்.

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்.

அப்பா என்ன செய்யணும். ஒரு சொஸைட்டில முன் நிக்கற அளவுக்கு அவனைத் தயார் படுத்தணும்.

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்என்னும் சொல்!".

மகன் என்ன பண்ணனும்? அப்படி முன்னிறுத்தின அப்பாவுக்குப் பெருமை தேடித் தரணும். அடடா, இந்தப் பையன் இந்தப் பையனை பெத்த அம்மா அப்பா எவ்வளவு புண்ணியம் செஞ்சவங்கன்னு அவங்க சொல்லணும்.இதான் நடக்கணும்'' என்றார்.

''எப்படி அருள் பிரகாஷ் தம்பியும் உங்களையும் மாதிரியுமா?'' என்றார் ஒருவர்.

"வேண்டாம், வேண்டாம். அவ்வளவு கனமெல்லாம் எங்களுக்கு ஏத்தாதீங்க. நானும் ரொம்ப சாதாரணமான ஆளு. அவனும் ரொம்ப சாதாரணமான ஆளு!" என்றார் சிகாமணி தன்னடக்கமாக

"என்னங்க சார்? இப்படிச் சொல்றீங்க. அருள் பிரகாஷ் நுகர்வோர் இயக்கத்துல பெரிய வேலையெல்லாம் பண்ணிக்கிட்டு இருக்காப்ல தெரியுங்களா? பிளாஸ்டிக்குக்கு எதிர்ப்பா ஒரு பெரிய இயக்கமே ஒரு குரூப் பண்ணிக்கிட்டு இருக்காங்க!" என்றார் அந்த நபர்.

"ஆமாமா, சொஸைட்டிக்கு நல்லதா ஏதாவது செய்யணுமில்லே? அது அட்வர்டைஸிங்குங்கற பேர்லே நிறையப் பொய் சொல்லிடறான். அதனாலே அதுக்கு பிராயச்சித்தம் பண்றான்!" என்றார் சிகாமணி.

எல்லாரும் சிரித்தார்கள். அருள் பிரகாஷ் கலகலவென்று சிரித்தான். "உண்மையே அது தாம்ப்பா" என்றான். மறுபடியும் எல்லாரும் சிரித்தார்கள்.

தந்தையும் மகனையும் பார்த்து இந்துமதிக்கு பொறாமையாக இருந்தது.

"அப்படிப் பார்க்காதே கண்ணு, திருஷ்டி பட்டுடும்" என்றான் அருள் பிரகாஷ் முணுமுணுப்பாக. இரண்டு பேரும் அருகருகே தான் அமர்ந்திருந்தார்கள். இந்துமதி களுக்கென்று சிரித்தாள்.

"என்ன அங்கே?" என்றார் சிகாமணி.

"பார்த்தியா? வாத்தியார் வேலையைக் காமிச்சுட்டாரு"



"ஒண்ணுமில்லைப்பா, இந்துமதி சிரிக்கிறா நம்மளைப் பார்த்து!"

"சிரிக்கட்டும்ப்பா. நல்லா சிரிக்கட்டும்!" என்று சிகாமணி சட்டென்று திருக்குறளுக்கு தாவினார்.

அந்த ஒரு மணி நேர வகுப்பும் இப்படிக் கலகலப்பும் சிரிப்புமாகத்தான் போனது. முடிந்து கிளம்பும் போது ஒருத்தர் சொன்னார். "எங்க அண்ணன் பையன் வரேன்னான். அதுக்குள்ள எங்க அண்ணன் என்னன்னாரு. டேய், உன்னை மாதிரி சின்னப் பசங்களுக்கெல்லாம் ஒண்ணும் இல்லையேடா! இவங்க ஒரே தத்துவம் பேசிகிட்டிருப்பாங்க அப்படின்னு சொல்லிட்டாரு. ஆனா இங்க வந்து பார்த்ததுக்கு அப்புறம் தானே தெரியுது என்னை விட அவன் ரொம்ப ரசிச்சிருப்பான். அடுத்த தடவை நம்ம பையனையும் கூட்டிட்டு வரேன்"

"கூட்டிட்டு வாங்க. இளைஞர்களுக்குத்தான் இது ரொம்பத் தேவை! இப்போ இருபது பேர் உட்கார்றதுக்கு எங்கிட்டே வசதி இருக்கு. யாரை வேண்ணாலும் கூட்டிட்டு வாங்க" என்றார் சிகாமணி. எல்லாரும் விடைபெற்றுச் சென்றார்கள்.

இருந்த இடத்தில் இருந்தே தன்னால் முடிந்த பொது சேவையைச் செய்கிற தந்தையைப் பெருமையுடன் பார்த்தான் அருள் பிரகாஷ்.

"என்னடா நீ வேற, கண்ணு போடாதே!" என்றார் சிகாமணி.

''நீங்க போட்ட கன்னுதானே அவன்'' என்று வந்தா கமலவதி.

''இது ஜோக்காம்டா'' என்றார் சிகாமணி. மறுபடியு சிரித்தார்கள்.

அவர்கள் எல்லாம் சென்றதற்குப் பிறகு மாலை சிற்றுண்டியாகக் கொஞ்சம் நொறுக்குத் தீனியைக் கொண் வந்து வைத்தார் கமலவதி அம்மாள். ''ரொம்ப நேர பேசிட்டீங்க. கேட்டவங்களுக்கு காது வலிக்கும். போய் காதுக்கு மருந்து ஊத்திக்கட்டும்.நீங்க இதெல்லா கொஞ்சம் சாப்பிடுங்க!'' என்று சூடான பால் குரு மிள போட்டுக் காய்ச்சிய பாலையும் கொண்டு வந்து வைத்தா

அருள் பிரகாஷுக்கும், இந்துமதிக்கும் காஃபி போட்டுக் கொண்டு வந்து கொடுத்தார். அவர்கள் தோட்டத்தில இருந்து வந்த பால். அங்கே மாடுகள் வளர்த்து கொண்டிருந்தார்கள். அந்த கள்ளிச் சொட்டு போன் காஃபியை இந்துமதி சுவைத்து அருந்தினாள்.

'செவிக்கு உணவு இல்லாத பொழுது சிறிது வயிற்றுக் ஈயப்படும்' என்றார் சிகாமணி.

''எங்கப்பா இப்படித்தான் இந்து போக வர குற சொல்வாரு. ஆயிரத்து முன்னூறு குறளும் மனப்பாடம் கனக சுப்புரத்தினம் கேள்விப் பட்டிருக்கியா? அவரு இப்படித்தான் திருக்குறளை பிரிச்சு மேஞ்சுடுவாரு. மொதல சீர்ல இருந்து கேட்டாலும் சொல்லுவாரு. பின்னால சீர்லருந்து கேட்டாலும் சொல்லுவாரு. மீனிங் சொல்லி கேட்டாலும் சொல்லுவாரு. பின்னி எடுப்பாரு



அவர்கிட்டே போய் அப்பப்ப பேசிட்டு வருவாரு எங்கப்பா!'' என்றார்.

''அம்மா, அவரு மனசைப் பத்தி நிறைய சொல்றா ரும்மா. இந்த மெகா டி.வி.ல காலையில பேசுவாரு. மனதை எப்படி அடக்கறது ஆன்மீகத்துக்குப் எப்படிப் போறது. எப்படி உடம்புல நோயே இல்லாம வச்சுக்கறது அதெல்லாம் அவரு சொல்றாரு!'' என்றார்.

இந்துமதி இதெல்லாம் தனக்கு கிடைத்த பொக்கிஷம் போல கேட்டுக் கொண்டாள். ''எனக்கென்னமோ இப்ப ஒரு குருகுலத்துல இருக்கற மாதிரி இருக்குது!'' என்றாள்.

''நான் குருவெல்லாம் இல்லம்மா. உங்க மாமன். ஃபேமிலி ஃப்ரெண்டு. அவ்வளவுதான்!'' என்றார்.

''ஏன் குருன்னு சொல்றதுக்கு பயப்படறீங்க?'' என்றாள் இந்துமதி.

''குருன்னு சொல்லிகிட்டு நிறைய பேர் வியாபாரம் பண்ணிகிட்டிருக்காங்க. நம்மளை அந்த லிஸ்டில் சேர்த்துராதே!'' என்றார். மறுபடியும் எல்லோரும் சிரித்தார்கள்.

''நீ எனக்கு மருமகள் கண்ணு. உங்க அம்மா எனக்குத் தங்கச்சி!''

சிற்றுண்டியை அருந்தி விட்டுத் தன்னுடைய அறைக்கு அவள் வந்த பொழுதுதான் தாய் போன் செய்தாள். அவளுடன் பேசிவிட்டு உடனே அருள் பிரகாஷிடம் வந்து ''அம்மா, இன்னைக்கு ஃபோன் பண்ணினாங்க. ரொம்ப சந்தோஷமா பேசினாங்க!'' என்றாள்.

இன்னமும் அருள் பிரகாஷ் தன்னுடைய அறைக்குப் போகாமல் அங்கே தான் இருந்தான். அவன் சிகாமணியையும் பார்த்துப் பொதுவாக சொன்னாள். "சௌமியாவாம். யாரோ சைக்யாட்ரிஸ்டாம் அவங்க சந்தியா மேடம், அம்மா மூணு பேரும் இன்னைக்கு கொடு வேரி பிக்னிங் போனாங்களாம். அவங்க குரலே ஒரே சந்தோஷமா இருக்கு. என்னமோ பாரம் இறக்கி வச்ச மாதிரி பேசறாங்க!" என்றாள்.

இவளுக்கும் மகிழ்ச்சியாக இருந்தது. "என்னைப் பார்க்கணுங்கறாங்க. நீங்க எப்படியும் இரண்டு நாள் கழிச்சுதானே மாமா கிளாஸ் எடுப்பீங்க? நான் அதுக்குள்ளே அம்மாவைப் போய் பார்த்துட்டு வந்துடட்டுமா!" என்றாள்.

"தாராளமா போயிட்டு வா!" என்றார் சிகாமணி.

"அருள், நீயே கொண்டு போய் விட்டுட்டு வந்துரு" என்றார்.

இந்துமதியினுடைய காரை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

"நீங்க எப்படித் திரும்பி வருவீங்க?"

"அதென்ன பெரிய விஷயமா? அந்த கார்னருக்கு வந்தா பஸ் இருக்கு. பஸ் ஏறி வந்துடறேன். எப்பவுமே பைக்ல போகணுமா? நாங்க சோஷியல் சர்வீஸுக்காக கிராமத்துக்குப் போகும் போது நிறையத் தடவை நடந்திருக்கோம். இந்த மலைப்பகுதியில போய் பிளாஸ்டிக்கையெல்லாம்



கிளீன் பண்ணுவோம்ல அப்பவும் நடந்திருக்கோம். அதெல்லாம் ஒண்ணும் கஷ்டம் இல்லே!" என்றான்.

அவள் ஆச்சரியமாகப் பார்த்தாள். "சௌமியா சைக்கியாட்ரிஸ்ட்னாங்க!" என்றாள்.

அவளுக்கு மெதுவாக புரிய ஆரம்பித்தது. அருள் பிரகாஷைப் பார்த்து "இது உங்க ஏற்பாடா?" என்றாள்.

அவன் குறும்பாக சிரித்து விட்டு "சே, கண்டுபிடிக்க மாட்டேன்னு நினைச்சேனே?" என்றான்.

அவள் கண்களில் கண்ணீர் நிறைந்தது

"தாங்க்ஸ் அருள். தாங்க்ஸ்!"

"அப்பாவுக்கு சொல்லு. கதை வசனம் டைரக்ஷன் எல்லாம் அவருதான். நடிக்கறது மட்டும்தான் நம்ம வேலை!" என்றான்.

"உங்க அப்பா ரொம்ப நல்ல அப்பா!"

"உங்கப்பாவும் நல்ல அப்பாதான். உங்க அம்மாவும் நல்லவங்கதான். பார்க்கலாம் எதிர்காலம் என்ன வச்சிருக்குன்னு!" என்றான்.

அவள் மறுபடியும் அவனைப் பார்த்து 'தாங்க் யூ!' என்றாள்.

"கையை நீட்டட்டுமா?" என்றான் அருள் பிரகாஷ்.

"ரோடா இருக்குதே?" என்றாள். பிறகு

"கிண்டல் பண்றீங்க!" என்று சிரித்தாள் இந்துமதி.

"இல்லை, அன்னைக்கு ட்ரீட்மெண்ட் நல்லாயிருந்தது!" என்றான்.

"போங்க அருள்!" என்று சிரித்தபடி அவள் இறங்கி தன்னுடைய பங்களாவை நோக்கிச் செல்லுவதை பார்த்தான்.

இவனையும் அழைத்தாள் "வேண்டாம், வேண்டாம் உங்க அம்மாவும் மகளும் ரீ யூனியன் ஆகறீங்க. நீங்களே என்ஜாய் பண்ணுங்க!" என்று சொல்லிவிட்டான். மகிழ்ச்சியோடு இறங்கிப் போகிற அந்த இளம் பெண்ணை அவன் அன்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

## அத்தியாயம் - 14

**சி**ந்துஜா வாசல் படியை நோக்கி பார்க்கும் விதமாக சோஃபாவில் அமர்ந்திருந்தார். அவள் முகத்தில் ஆர்வம் தெரிந்தது. மரகதமும் மகாலிங்கமும் வந்து "என்ன சாமி?" என்று கேட்டார்கள்.

"உங்க பேத்தி வரேன்னா. அதான் பார்த்துக்கிட்டிருக்கேன்!" என்றாள்.

"இன்னைக்கு ஏதோ கிளப் மீட்டிங் இருக்கு போகணும்னு சொன்னே!" என்றார் மகாலிங்கம்

"போகலை, அதான் இன்னைக்கு நான் வெளியே போயிட்டு வந்தேனே? அதனால இன்னைக்கு வரலையனு சொல்லி ஃபோன் பண்ணிட்டேன்!" என்றாள்.



இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். "இந்துவைப் பார்த்தே ஒரு வாரத்துக்கு மேல ஆயிடுச்சு. அதனாலே இந்து வந்துட்டா அவளோட பேசணும். கிளப் மீட்டிங் என்ன பெரிசு? அடுத்த தடவை பார்த்துக்கலாம்!" என்றாள்.?

"அம்மா, ஸ்கூல்லே பேரண்ட் டீச்சர்ஸ் மீட்டிங் இருக்கும்மா. நீ வாம்மா!" என்று இந்து அழைக்கும் போது "எனக்கு அதுக்கெல்லாம் நேரமே இல்லே. உங்க அப்பாவைக் கூட்டிட்டுப் போ!" என்று நிர்த்தாட்சண்ய மாக சொல்லிவிட்டுப் போகிற மகளா இவள் என்று இரண்டு அவளை ஆச்சரியமாக பார்த்தார்கள்.

"என்ன ஆச்சரியமாப் பாக்கறீங்க? இத்தனை நாள் அவ கூடவே இருந்தா தெரியலை. ஒரு வாரம் போயிட்டாள்லே அதான் பார்க்கணும்போல இருக்கு!" என்று லேசான வெட்கத்துடன் பதில் சொன்னாள் சிந்துஜா.

"சரி, சரி நான் போய் இந்துவுக்குப், பிடிச்ச அதிரசம் பண்றேன்!" என்று சொல்லிவிட்டுப் போனார் மரகதம். 'ஓ!இந்துவுக்கு அதிரசம் ரொம்பப் பிடிக்குமோ?' என்று எண்ணிக் கொண்டாள் சிந்துஜா.

சொந்த மகளுக்கு எது பிடிக்கும் எது பிடிக்காது என்றுகூட அறிந்து கொள்ள தான் ஆர்வம் காட்டவில்லை. அவ்வளவு ஏன்? கணவருக்குக் கூட எது பிடிக்கும் எது பிடிக்காது என்று அவளுக்குத் தெரியாது. இன்னும் சொல்லப் போனா தனக்கு எது பிடிக்கும் பிடிக்காது என்பதே அவளுக்கு முழுமையாகத் தெரியவில்லை.

என்னமோ ஃபேக்டரி, வெளி உலக வாழ்க்கை என்று ஓடிக் கொண்டே இருந்தவளுக்கு உறவுகளின் முக்கியத்துவம் புரியவேயில்லை. உறவுகள் கைவிட்டுப் போகின்றன என்ற நிலையில்தான் அவளுக்கு லேசாக எச்சரிக்கை மணி அடித்தது.

அது என்ன? சந்திரமோகன் இப்படி ஒரு வேலையைச் செய்வார் என்று அவள் எதிர்பார்க்கவே இல்லை. ஆனால் அவளுடைய பகுத்தறிவு சொன்னது. 'நீ அவரைச் டார்ச்சர் பண்ணிட்டே இருந்தே? எத்தனை நாளைக்குப் பொறுத்துகிட்டே இருப்பாரு. அதனாலதான் ஏதோ கிடைச்ச ஏற்பாட்டைப் பண்ணிட்டாரு. அப்பக் கூட ரொம்ப எச்சரிக்கையாத்தான் இருந்திருக்காரு. சொல்றாரே, எந்த பைண்டிங்கும் இல்லை. எப்ப வேண்ணாலும் அந்தப் பொண்ணு போயிடும் அப்படிங்கறாரே? சாமர்த்திய சாலிதான்!' என்று எரிச்சலாக எண்ணிக் கொண்டாள். இந்துவின் கார் உள்ளே நுழைவது தெரிந்தது. அருள் பிரகாஷ் ஓட்டிக் கொண்டு வந்ததைப் பார்த்து லேசாகப் புருவத்தை உயர்த்தினாள்.

வெளியே எழுந்து போய் 'இந்துக்குட்டி!' என்றாள். அம்மா என்று அவளும் ஓடி வந்து கட்டிக் கொண்டாள். திரும்பியவள் அருள் பிரகாஷைப் பார்த்துப் புன்னகைத்து விட்டு 'உள்ள வாங்களேன் தம்பி!' என்றாள்.

''வந்தாப் போச்சு!'' என்று சிரித்துக் கொண்டே உள்ளே வந்தான் அவன். அவனை ஹாலிலே உட்கார வைத்து உபசரித்தாள். அவனுக்கும் சூடாக இரண்டு அதிரசம் சுவையாக உள்ளே இறங்கியது.



''பாட்டி கை டேஸ்ட்டாட்டம் இருக்கு?'' என்றான்.

''எப்படிக் கண்டு பிடிச்சே?'' என்று கேட்டார் பாட்டி.

''இல்லே, ரொம்ப அனுபவம் இருந்தாத்தான் இந்த மாதிரி வரும். சிந்து மேடம் பிஸியா இருக்காங்க அவங்களுக்கு இதுக்கெல்லாம் நேரம் இருக்காது. அதை வச்சுக் கண்டுபிடிச்சேன்!'' என்றான்.

ஒரு வேளை கிண்டல் பண்ணுகிறானோ என்று அவன் முகத்தைப் பார்த்தாள் சிந்து. அவன் முகத்தை சீரியஸாக வைத்துக் கொண்டுதான் சொல்லிக் கொண்டிருந்தான். ''இரு தம்பி, வீட்ல அம்மா அப்பாவுக்கு கொஞ்சம் பேக் பண்ணித்தரேன்!'' என்று மரகதம் ஓடிப் போய் ஒரு எவர்சில்வர் பாத்திரத்திலே பேக் செய்து கொடுத்தார்.

''அடுத்த தடவை வரும்போது இந்தப் பாத்திரம் கொண்டு வந்து தரேன்!'' என்றான் அவன்.

''குடு, குடு, மெதுவா கொடு. ஒண்ணும் அவசரம் இல்லை!'' என்றார் அம்மா.

''சரி, நான் கிளம்பறேன். உங்களுக்கு நிறையப் பேசறதுக்கு இருக்கும். ஐ டேக் லீவ் ஆஃப் யூ!'' என்று சொல்லி விட்டு விடைபெற்றுக் கிளம்பினான்.

சிந்துஜா வாசல்வரை வந்து அவனை வழியனுப்பினாள். இந்துமதிக்குத் தலை சுற்றாத குறைதான். ''என்ன ஆச்சரிய மாக இருக்கிறது? அம்மாகிட்டே எவ்வளவு பெரிய மாற்றம்!'' என்று.

சந்திரமோகன் பெரிய அடியாகக் கொடுத்து விட்டா என்பதும் அவள் ஈகோ சுத்தமாக விழுந்தே விட்டது என்பதும் இந்துமதிக்குப் புரியவில்லை. திரும்பி வந்த சிந்து இந்துவின் தோள் மேல் கைபோட்டுக் கொண்டாள். 'வாடி உன் ரூமுக்குப் போய்ப் பேசலாம்!' என்றார்.

படி ஏறும் போதே "ஏண்டி, ஒருவாரமா போய் இருந்துக்கிட்டே. அம்மாவைப் பார்க்கணும்னு உனக்கு தோணலையில்லே!" என்றார்.

இந்துமதி சற்றே சங்கடமான முகபாவத்துடன் அம்மாவைப் பார்த்தாள். "அப்படி இல்லைம்மா. ஒவ்வொருத்தருக்கும் அவங்க அவங்களுக்குன்னு பிரைவசி வேணும். உன் லைஃப்ல முக்கியமான பிரச்சினை ஆகியிருக்கு. நீ அதைப் பத்தி யோசிக்கணும். எனக்கும் பலதும் சிந்திக்க வேண்டி இருந்தது.அதனால கொஞ்சம் வேற செட்டப்ல இருந்தா பரவாயில்லைன்னு தோணுது. அதுக்காகத்தான் இந்த ஏற்பாடு!" என்றாள்.

"அதுக்கு எதுக்குடி அவங்க வீட்டுக்குப் போகணும்!"

"அம்மா, உனக்குத் தெரியாதும்மா. நீ அங்கே வந்து பாரு. வாழ்க்கைன்னா அதுதான். சிகாமணி மாமாவும் கமலவதி அத்தையும் அப்படி இருக்காங்க. ரெண்டு பேரும் ஒத்துமையா ஒண்ணொண்ணும் செஞ்சுக்கிறாங்க. சண்டை வராம இல்லை. ரெண்டு பேருக்கும் வாக்கு வாதம் வருது கருத்து வேறுபாடு வருது. ஆனா அதையும் தாண்டி அவங்கிட்டே ஒரு அன்பு இருக்கும்மா. குடும்பம் எப்படி நடத்தணுங்கறதை அவங்களைப் பார்த்து கத்துக்கிட்டு இருக்கேம்மா!" என்றாள்.



சிந்துஜா ஒன்றும் பேசவில்லை. "என்னம்மா இன்னைக்கு ரொம்ப சந்தோஷமா இருக்க மாதிரி இருக்கு!" என்றாள்.

"ஆமா, ரொம்ப நாள் கழிச்சு என் ஃப்ரெண்ட்ஸ் ரெண்டு பேர் கூட பிக்னிக் போயிட்டு வந்தேன். மனசு கொஞ்சம் ரிலாக்ஸ்டா இருக்கு. வருத்தங்களும் இருக்கு. ஆனா கொஞ்சம் ரிலாக்ஸ்டா இருக்கு!" என்றாள்.

"அப்படியா? வேணும்மா. அப்பப்ப இந்த மாதிரி ஒரு ப்ரேக் வேணும். அதான் நல்லது!" என்றாள் இந்துமதி.

"என்னமோ எல்லாம் லேட்டா புரியுதுடி!" என்றாள்.

பிறகு இந்துமதி சிகாமணியின் வீட்டில் தான் கழித்த இந்த ஒருவாரத்தைப் பற்றிய அனுபவங்களையெல்லாம் சொன்னாள். "திருக்குறள்ளே பின்னி பெடல் எடுக்கறார், மாமா. நிறைய விஷயங்களெல்லாம் சொல்றாரு. நிறைய இலக்கியத்தைப் பற்றியெல்லாம் நான் தெரிஞ்சுக் கிறேன்"

"ம்க்கும்... இலக்கியம் சோறு போடுதாக்கும்"

"என்னம்மா இப்படி பேசறீங்க? அதுவும் வேணும்மா. சும்மாவா அந்தக் காலத்திலே ராஜாக்கள் இலக்கியவாதி களை சுத்தி வச்சுட்டு இருந்தாங்க. அது மட்டும் இல்லே அவங்களுக்கு செலவுக்கு கொடுத்து. இலக்கிய வாதிகளுக்கு மனசுல எந்த சங்கடமும் இல்லாம வச்சுக்கிட்டாங்க. அப்பத்தான் அவங்க சொல்ற கருத்துக்கள் இவங்களுக்கு கிடைக்கும்னு அந்தக் காலத்திலே பெரிய பெரிய ராஜாக்களுக்கே தெரிஞ்சிருக்கு!" என்றாள்.

"என்னடி? ரொம்பப் பெரிய பேச்செல்லாம் பேசறே?" என்றாள்.

''இப்பத்தான் பேசறதுக்கு சந்தர்ப்பம் கிடைச்சிருக்... பேசறேன்!'' என்றாள்.

''அப்புறம் உன் சைடு விஷயத்தைச் சொல்லு...'' என்றாள். சிந்துஜா சற்றே முகம் வாடி சொன்னாள்.

''என்னம்மா?'' என்றாள் இந்து.

''இல்லடி, உங்க அப்பா இப்படிப் பண்ணுவாருன்னு நான் நினைக்கவே இல்லை!'' என்றாள். உடனே இந்து... ஏதோ சொல்ல ஆரம்பிக்க அவள் கையை உயர்த்தினாள்.

''தெரியும்டி, அவரு பக்கம் நியாயம் இருக்குன்னு சொல்லுவே. ஆனா நீ எனக்கு ஒரு பெரிய ஷா... ட்ரீட்மெண்ட் கொடுத்தேன்னா உங்கப்பா அதுக்கு மே... கொடுத்துட்டாரு.எல்லாமே என் கை நழுவி போயிட்டிருக்கோன்னு எனக்கு பயமா இருக்குடி'' என்றாள்.

''எதுவுமே கையிலே இருக்கும்போது அதோட மதிப்பு தெரியறதில்லைம்மா!'' என்றாள் இந்துமதி.

''உண்மைதாண்டி''

''ஏம்மா, எப்பவாவது இப்படி அப்பாகூட உட்கார்ந்து பேசியிருக்கியா?''

''எங்கடி? நான் உட்கார்ந்து பேசலாம்னு நினை... கறப்போ அவரு பிஸியா இருப்பாரு. அதிலேயே எனக்கு கோபம் வந்துடும். இப்படியேதான் நீ பேசறதா நா... பேசறதான்னு இழுத்துட்டுப் போயிடுச்சு. கடைசியில அந்த ரோஜாமணி கொத்திக்கிட்டு போயிட்டா!'' என்றாள்.



''கொத்திக்கிட்டெல்லாம் போகலைம்மா... இப்போவும் கூட நீ யோசிக்கலாம். அப்பாவோட அந்த ரோஜாமணியை நீ சேர்த்து ஏத்துக்க வேண்டியதுதான்!'' என்றாள்.

''நோ, நோ அப்ப ஒரு தப்பை ஏத்துக்கிட்ட மாதிரி ஆகும். நான் செஞ்சா உங்க அப்பா ஒத்துக்குவாரா?'' என்று கேட்டாள்.

''நீ டைவர்ஸ் வாங்கியிருந்தேன்னா நீயும் வேற மேரேஜ் பண்ணியிருக்க வேண்டியதுதான்!'' என்றாள்.

''ஏண்டி, நான் அப்படி பண்ணனும்னா எப்பவோ பண்ணியிருப் பேன். உனக்காகத்தாண்டி அதெல்லாம் பண்ணலை''

''அப்ப உனக்கு பாசம் இருந்திருக்கு. ஆனா அதையாவது நீ எங்கிட்டே காட்டியிருக்கியா? அப்பாகிட்டே இருந்த பாசத்தையும் நேசத்தையும் நீ வெளியிலே காட்டலை. எங்கிட்டேயும் நீ பிரியமா இருக்கலை.ஏம்மா, ஏன் இப்படி நெருப்பு மேலே நடமாடிக்கிட்டிருக்கற மாதிரி நடமாடிகிட்டிருந்தே?'' என்று கேட்டாள்.

''உனக்குத் தெரியாதுடி. என் மனசுக்குள்ளே எத்தனையோ பிரச்சினைகள்''

''அம்மா, நான் சொல்றேன்னு நினைக்காதம்மா. இந்த சௌமியா இருக்காங்களே, சைக்கியாட்ரிஸ்ட். அவங்க சிகாமணி மாமாவுக்கு ஃபேமிலி ப்ரெண்டாம். அவங் களைப் பத்தி ரொம்ப சொன்னாங்க. நீ பேசாம சௌமியா மேடத்துக்கிட்ட உன் மனசுல இருக்கற எல்லாத்தையும் சொல்லு. எங்கிட்ட வேண்டாம்மா. அப்பாகிட்டே

வேண்டாம். ஒவ்வொருத்தருக்கும் அவங்கவங்களுக்கான அந்தரங்கங்கள் இருக்கும் இல்லையா? அதனால நீ அவங்க கிட்டே பேசு!'' என்றாள்.

''அப்படித்தாண்டி யோசிச்சுகிட்டிருக்கேன். அதுவும் கூட சௌமியா என்ன தெரியுமா சொன்னாங்க? இங்கேயே வரேன் அப்படின்னாங்க. நீங்க ஹாஸ்பிடல் கூட வரவேண்டாம். பேஷண்டுன்னு முத்திரை குத்திடுவாங்க. அதனால நானே ஓய்வு இருக்கும் போது வரேன்.வி வில் டாக் அவுட் எவரி திங் அப்படின்னு சொல்லியிருக்காங்க. எனக்கு என்ன பண்றதுன்னே புரியலைடி!'' என்றாள்.

''அம்மா, நீ எனக்காகப் பார்க்காதே. உனக்கு மனசுக்குப் பிடிக்கலைன்னாலும் உனக்கு மனசால ஏத்துக்க முடியலைன்னாலும் நீ அப்பாவுக்கு டைவர்ஸ் நோட்டீஸ் குடுத்துரு!'' என்றாள் இந்துமதி.

சிந்துஜா திடுக்கிட்டுப் போய் பார்த்தாள். இந்துமதி அவளை ஆழ்ந்து பார்த்தாள். ''ஏம்மா மனசு ஒத்துக் கலையா?'' என்றாள். அந்த நேரத்தில் தான் சிந்துஜா அந்தக் காரியத்தை செய்தாள். இந்துமதியின் மடியில் முகத்தைப் புதைத்து தேம்பித் தேம்பி அழுதாள்.

இந்துமதி ஒரு சிரிப்புடன் அம்மாவின் தலையைத் தடவிக் கொடுத்தாள் ''அப்போ உனக்குப் பாசம் இருக்கு. அப்பாவை விட முடியாதுன்னு நினைக்கறே. அப்ப நீ வெளிக்காட்டியிருக்கலாமில்லே?'' என்றாள்.

''எனக்கு காட்டத் தெரியலைடி. அவரு அன்பு காட்டும் போது எனக்கு புரிஞ்சுக்கத் தெரியலை. திருப்பிக் கொடுக்கத் தெரியலை!'' என்றாள்.



''சரி, இப்பவாவது இறங்கி வர்றியா?'' என்று கேட்டாள்.

''அவருதான் வேற செட்டில் பண்ணிட்டாரே!'' என்றாள் இவள்.

''அவங்களை அனுப்பி விட்ரலாம். அவங்க தான் எப்பவேண்ணாலும் போறேன்னு சொல்றாங்கள்லே?'' என்றாள் இந்துமதி.

''அது எப்படி? அந்தப் பாவம் நமக்கு எதுக்கு?'' என்றாள் சிந்துஜா.

வேலை ஆட்களை விரட்டு விரட்டு என்று விரட்டும் போது பாவ புண்ணியம் பார்க்காத அம்மாவா இவள் என்று இவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

''அம்மா, அப்பா ரொம்ப கெட்டிக்காரர்மா. நல்லா ப்ளான் பண்ணிதான் இதைப் பண்ணியிருக்காரு அவங் களுக்குக் குழந்தை பிறக்காதாம். அதனாலே அவங்களுக்கு இவரு வாழ்க்கை கொடுத்த மாதிரியும் ஆச்சாம்.அவங்க எப்ப வேண்ணாலும் பிரிஞ்சு போறதுக்குத் தயாராம்''

''இல்லடி, அவங்களைப் பயன்படுத்திக்கிட்ட மாதிரி ஆகுமில்லே?'' என்றாள் சிந்துஜா.

''இல்லம்மா, அப்பா சொல்றாரு, அவங்களாத்தான் இவங்களை அப்ரோச் பண்ணினாங்களாம். அவங்களும் ஏதோ ஒரு பெரிய பிஸினஸ் கன்சர்ன்ல நல்ல வேலையில இருந்தாங்களாம். உங்களுக்குள்ளே இருக்கற பிரச்சினையைப் பார்த்து அவரு மனசு வேதனையைப் பார்த்து அவங்களாத் தான் வந்தாங்களாம்!'' என்றாள்.

பெருமூச்சு விட்டாள் சிந்துஜா. கிட்டத்தட்ட அவ... ஒத்து வருவாள் போன்று நிலை இருந்தது. "சரிம்மா, நா... அப்பாகிட்ட பேசறேன்!"

இரண்டு நாட்கள் கழித்து இவளைப் பார்ப்பதற்கா... சந்திரமோகன் சிகாமணியின் வீட்டிற்கு வந்தார். ஆனா... வந்தவர் சும்மா வரவில்லை. டைவர்ஸ் நோட்டீசுடன்... வந்தார்.

## அத்தியாயம் - 15

**அ**ருள்பிரகாஷ் இந்துமதியை கேலி செய்து... கொண்டிருந்தான். தாயை சந்தித்து விட்டு இரண்டு... நாட்கள் அவளோடு இருந்து விட்டுத் திரும்பி வந்தா... இந்துமதி.

அருள்பிரகாஷ்தான் போய் அவளை அழைத்து வந்தா... "என்ன இந்து? முகமெல்லாம் லைட் போட்ட மாதி... பிரகாசமாக இருக்குது!" என்றான்.

"அம்மா ரொம்ப சேஞ்ச் ஆயிருக்காங்க!" என்றா... இந்துமதி.

"ஒரு நாள் பயணத்திலேவா? ஒரே பிக்னிக்லயே இப்ப... மாறிட்டாங்க. அடடா, தெரியாம போச்சே, முதல்... தெரிஞ்சிருந்தா அவங்க லைஃப்பையே சரி பண்ணியிரு... கலாம்!" என்றான் அருள் பிரகாஷ்.

"இல்லல்லே, என்னோட அட்டெம்ப்ட்டுக்கு அப்புறம்... அப்பாவோட இந்தத் தொடர்புக்கு அப்புறம்தா...



அவங்களுக்கும் கொஞ்சம் புரிய ஆரம்பிச்சிருக்குன்னு நினைக்கிறேன். ரொம்பப் பண்ணினோம்னா அவங்கவங்க விலகிடுவாங்கன்னு இப்பப் புரியுது. இப்ப எத்தைத் தின்னா பித்தம் தெளியுமோங்கற மாதிரி இருப்பாங்க போல இருக்கு.சௌமியா மேடம் ஒரு நாள் ஃபுல்லா கூட வச்சு நல்லா கவுன்சிலிங் கொடுத்திருக்காங்க. ஆனா கவுன்சிலிங் கொடுக்கறோம்னு தெரியாமலேயே குடுத்திருக்காங்க. அவங்க அப்படிச் சொன்னாங்க இப்படிச் சொன்னாங் கன்னு அம்மா நிறையச் சொல்றாங்க!" என்றாள் இந்துமதி.

வீட்டிற்கு வந்ததற்குப் பிறகும் அவன் சிகாமணியிடம் இவளைப் பற்றி ஒரே கேலி. "அப்பா, இத பாருங்க, அம்மாவைப் போய்ப் பார்த்துட்டு வந்தவுடனே பாப்பா ரொம்ப மகிழ்ச்சியா இருக்காப்லே!" என்றான்.

"ஏண்டா, அவளுக்கு எத்தனையோ நாள் கிடைக்காத சுகம் கிடைச்சிருக்கு!" என்றார் அப்பா.

பிறகு "ஏம்மா, பேசாம அப்படியே கண்டினியூ பண்ணியிருக்கலாமில்லே?" என்றார்.

"இல்லைங்க மாமா, எனக்கும் கஷ்டமாத்தான் இருந்தது. இவ்வளவு பிரியமா அம்மா சொல்றாங்க விட்டுட்டு வர்றமேன்னு. ஆனா, கொஞ்ச நாள் மறுபடியும் பிரிஞ்சு இருக்கவே விரும்பறேன்.. உங்ககிட்டே இருந்து நாள் ஃபுல்லா வச்சு நிறைய நாலெட்ஜ் கிடைக்குது. இதை நான் மிஸ் பண்ண விரும்பலை. சொன்ன மாதிரி மூணு மாசம். ரெண்டு பேருக்கும் ஒரு வாய்ப்பு. அப்பாவுக்கும் சரி, அம்மாவுக்கும் சரி. என்ன பண்றாங்கன்னு பார்க்கலாம்!" என்றாள்.

"ஓஹோ நீ அவங்க ரெண்டு பேர்த்துக்கும் நீ டெஸ்ட் வைக்கிறியாக்கும்!" என்றார் சிகாமணி சிரிப்புடன்.

"இல்லல்லே, அப்படி இல்லை. டெஸ்ட் எல்லாம் வைக்கலை. ஆனால் என்னோட அந்த சுயிஸைட் அட்டம்ப்ட்டுக்குப் பிறகு ரெண்டு பேருக்குமே ஒரு அதிர்ச்சி ஆயிருக்கு. ரெண்டு பேருமே யோசிக்க ஆரம்பிச்சிருக்காங்க. ஏதாவது ஒரு சல்யூஷன் கிடைக்கும்னு எனக்கு ஒரு ஓரத்தில நம்பிக்கை"

"அதுவும் ஓரத்துலதானேப்பா!" என்றான் அருள் பிரகாஷ்.

"நீ வேற ஏண்டா?" என்று கடிந்து கொண்டார் சிகாமணி.

"விடுங்க, அருள் இப்படிப் பேசறது எனக்குப் பிடிச்சுத் தான் இருக்கு. என்னையும் இப்படி கேலி பண்றதுக் கெல்லாம் எந்த மாமா மகனும் இல்லாமப் போனாப்ல" என்றாள் இந்துமதி.

"ஓ, மாமா மகன்னு சொல்லியாச்சு. சரி சரி மஞ்சத் தண்ணி ஊத்திட வேண்டியதுதான்" என்றான் அருள் பிரகாஷ்.

அவனுக்கும் தான் தன்னை மீறி பேசுகிறோம் என்பது தெரிந்தது. "கொண்டு போய் விடும் போது பார்க்கணும்ப்பா. அப்படியே ஒரு சஸ்பென்ஸ் முகத்திலே இப்பப் போயிட்டுத் திரும்பி வர்றப்போ பார்த்தா மேடம் அப்படியே கலக்கலா இறங்கி வர்றாங்க. சரி இறங்கி வந்து அருள் நான் வரலை நான் இங்கே இருந்துக்கறேன்னு



சொல்லுவாங்கன்னு பார்த்தேன். கிளம்பி வந்துட்டாங்க. ஏம்ப்பா, பல பேர் உங்க திருக்குறள் கிளாஸ் கேட்டுட்டு ஐய்யோ அறுக்கறாருன்னு ஓடறாங்க. சில பேருக்குத்தான் அதோட அருமை தெரியுது. என்னப்பா? இந்த வயசுப் பொண்ணு உங்களை நம்பி இப்படி வந்துடுச்சு" என்று அப்பாவையும் வாரினான்.

"டேய், சந்தடி சாக்குல என் கிளாஸையும் கேலி பண்றியா? அப்புறம் எதுக்குடா நீயும் உட்கார்ந்துட்டு கேட்கறே? என்றார்.

"அது வேற இது வேறப்பா. இதெல்லாம் கிடைக் கறப்போ வாங்கிக்கணும். அது எனக்கும் தெரியுமில்லே? சரிப்பா நான் ரூமுக்குப் போறேன்!" என்று போனான்.

பிற்பகல் உணவுக்குப் பிறகு இந்துமதியும் அவன் அறைக்குப் போனாள். கமலவதியிடம் குப்பம்மா "பாத்திரத்தையெல்லாம் போடுங்கம்மா. நான் கழுவிடறேன்!" என்று உதவிக்குப் போனாள்.

இந்துமதி மேலே போய் கதவைத் தட்டி எழுப்ப வேண்டி இருக்குமோ பகல் தூக்கம் போடுவானோ என்றெல்லாம் நினைத்துக் கொண்டு போனாள். அவன் அங்கே ஏதோ ஒரு புத்தகத்தை வைத்துப் படித்துக் கொண்டிருந்தான்.

"தூங்கறது இல்லையா?" என்றான்.

"பகலெல்லாம் தூங்கினா வேலையாகுமா? இப்பல்லாம் நைட்ல கூட சரியாத் தூக்கம் வர்றது இல்லை."

"ஏனாம்?" என்று கேட்டான் இவள்.

''இல்லே, உங்க வீட்டுப் பிரச்சினை என்னை ரொம்ப குடையுது. உங்க அம்மா எப்ப சரியாகறது?. உங்க அப்பா எப்ப சரியாகறது? நீ எப்ப சந்தோஷமா, அமைதியா இருக்கறது. ஏன் இந்து?'' என்றான்.

அவள் 'தாங்க்ஸ்!' என்றாள் ஆழ்ந்த அமைதியுடன்.

''எதுக்குத் தாங்க்ஸ்?'' என்றான்.

''இல்லே, எனக்காகக் கவலைப்படறதுக்கு ஒருத்தர் இருக்கீங்களே? அந்த சந்தோஷம்தான்!'' என்றாள். அவன் மென்மையாகப் புன்னகைத்தான்.

''உட்காரு இந்து!'' அமர்ந்தாள்.

''அம்மா தனக்கு ஏதோ பிரச்சினை இருக்கும்போல சொல்றாங்க. என்னமோ அவங்க மனசுக்குள்ள அரிச்சு கிட்டிருக்கு. நான் சொல்லிட்டேன். ஒவ்வொருத்தருக்கும் அந்தரங்கம் இருக்கும். நீ என்கிட்டே சொல்ல வேண்டாம். சௌமியா மேடத்துக்கிட்டே உன்னுடைய பிரச்சினைகளை எல்லாம் சொல்லிக்கோ. சால்வ் பண்ணிக்கோன்னு'' என்றாள்.

பிறகு அவன் முகம் பார்த்து ''நான் சொன்னது சரிதானே?'' என்றாள்.

''கரெக்ட். சூப்பர் சஜெஷன். அப்புறம் சந்திரமோகன் அங்கிள் நேத்து ஃபோன் பண்ணினாரு. நேத்தா? இல்லே இன்னைக்குக் காலையில ஃபோன் பண்ணினாரு. அநேகமா இன்னைக்கு இங்க வந்தாலும் வருவாரு'' என்றான்.



''அப்படியா? அப்பா வர்றாங்களா?'' என்றாள் சந்தோஷமாக.

''ஆனா அவரு என்ன டெசிஷன்ல வர்றாருன்னு தெரியலையே?'' என்றான்.

''ஏன் இப்படி சொல்றீங்க?'' என்றாள்.

''இல்லே, இந்து அவரு ஏதோ ஒரு டெசிஷன் எடுத்திருக்கிற மாதிரித் தெரியுது!'' என்றான்.

''ஒருவேளை அம்மாகூட மறுபடியும் சேருவாரோ?'' என்று கேட்டாள்.

''தெரியலை, அப்படி நடந்தா சந்தோஷம்தான்!'' என்றான். அவன் எதையோ மறைத்துப் பேசுகிறான் என்று தோன்றியது.

''அருள் வர வர நீங்க ரொம்ப மோசமாயிட்டீங்க!'' என்றாள்.

''ஏன் என்ன பண்ணினேன்?'' என்றான்.

''மனசுக்குள்ளே எல்லாத்தையும் போட்டு வச்சுக்கறது. ஒண்ணுமே சொல்றதில்லை!'' என்றாள்.

''மனசுக்குள்ளே என்னென்னமோ இருக்கும். எல்லாத் தையும் சொல்ல முடியுமா?'' என்றான் அவன்.

அவள் சற்று விழித்தாள். ''ஆமா, இங்கே ஒரு பிரச்சினை இருக்கு. அங்கே ஒரு கேஸ் இருக்கு. நாளைக்கு அட்வர்டைஸ்மெண்ட் கம்பெனியிலே ஒரு முக்கியமான மாடல் செலெக்ஷன் இருக்கு. இப்படி எத்தனையோ

மண்டைக்குள்ளே இருக்கு. அதையெல்லாம் சொ
முடியுமா?"

"லயர்!" என்று சிரித்தாள் இந்துமதி. அவனும் சிரி
விட்டான்.

"கண்டுபிடிச்சுட்டியா? என்றான்.

"இந்து, ரெடியாயிக்கோ. உங்க அப்பா ஏதோ குண்
போடப் போறாருன்னு எனக்குத் தோணுது.'' என்றான்.

அவள் கலக்கத்துடன் அவனைப் பார்த்தாள். "இந்
உன் வரைக்கும் நீ ரொம்பப் பக்குவமான பொண்ண
இருக்கேன்னு நான் நினைச்சுகிட்டிருக்கேன். எதுக்
கவலைப்படறே? நவ் யூ ஆர் எ க்ரோன் அப் கா
எனக்காகப் பார்க்காதீங்க. அப்பா உங்க வாழ்க்
முடிவுகளை நீங்க எடுத்துக்கங்கன்னு நீதான் அன்னைக்
சொன்னயாமே?''என்றான்.

"அதனாலே?" என்றாள் இந்துமதி.

"தெரியலை, ஏதோ முடிவெடுத்த மாதிரித் தெரியு
என்றான்.

"என்ன அருள் இப்படிச் சொல்றீங்க? இப்பத்தா
அம்மா கொஞ்சம் தெளிவாயிட்டு வர்றாங்க.அவங்
பேசறதெல்லாம் பார்த்தா அப்பா கூட சேர்ந்துடுவா
அப்படின்னு நினைச்சேன்!'' என்றாள்.பிறகு அவளே
தொடர்ந்து "ஆமா, இருபது வருஷமா வறுத்தெடுத்துட்
ரெண்டு, மூணு நாள்ல முடிவெடுத்தா...! இப்ப அவ
பங்குக்கு அவரு முறுக்கிக்கிட்டாரு என்ன பண்றது"
என்றாள்.



இந்துவின் கண்கள் கலங்கியது. "அருள், நீங்களாவது எங்கூட இருப்பீங்களா?'' என்றாள்.

"சே, அசடு என்ன பேசறே? ஐ வில் பி ஆல்வேஸ் யுவர் ஃப்ரெண்ட். எனி டைம் எனி வேர் நீ கூப்பிட்டேன்னா நான் உடனே வந்து நிப்பேன்.உன் வாழ்க்கையிலே நீ செட்டில் ஆகிற வரைக்கும் நான் ஃபுல் சப்போர்ட் கொடுப்பேன். மாமா மகன்னு சொல்லிட்டே. ப்ரெண்டுன்னு வேற சொல்லிட்டே!'' என்றான்.

அவள் கண்களில் கண்ணீருடன் சிரித்தாள். "நான் கொஞ்ச நேரம் உங்க கையைப் பிடிச்சுட்டு உட்கார்ந்துக்கலாமா?'' என்றாள்.

"ம்...!'' என்றான் அவன்.

அவன் அருகிலே அமர்ந்து அவனுடைய இடது கையை சற்று நேரம் பிடித்துக் கொண்டு அமர்ந்து கொண்டாள். அவனும் தன் வலக்கையால் அவள் கையைத் தட்டிக் கொடுத்து "யூ ஆர் எ பிரேவ் கர்ள். ஆனா, நீ எப்படி இந்த சுயிஸைடு அட்டம்ப்ட் பண்ணேன்னே எனக்குப் புரியலை. அது ஒண்ணுதான் உன்கிட்ட சறுக்கலாப் போச்சு. யூ கேன் ஃபேஸ் த வர்ல்ட் நவ். அப்பா அவரோட கருத்தைச் சொல்லப் போறாரு. நீயும் உன்னோட கருத்தைச் சொல்லு'' என்றான்.

"தெரியலை அருள்! என்னோட பிரச்சினையே என்னன்னா அவங்கவுங்களுக்கான ஸ்பேஸை கொடுக்கணும்னு நான் ஒதுங்கி நிப்பேன். அதுதான் வம்பாப் போச்சு. விபரம் தெரிஞ்சதுக்கு அப்புறம் அம்மா, அப்பா

நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து எனக்கு அபெக்ஷன் கொடு கணும் அப்படின்னு நான் டிமாண்ட் பண்ணவே இல்லை கிடைக்கலைன்ன உடனே நான் மனசு சுருங்கிப்பேன் அவ்வளவுதான். எனக்குள்ளே தான் நான் ஃபீல் பண்ணி பேனே ஒழிய நான் காட்டிக்க மாட்டேன்!'' என்றாள்.

''அதுதான் பெரிய தப்பு. நீ கோபம் காட்டியிருந் தேன்னா ரெண்டு பேரும் கரெக்ட் ஆயிருப்பாங்க!'' என்றான்.

''தெரியலையே, நான் மனசு சுருங்கி சுருங்கி இருந்து இருந்து இப்பவும் எனக்கு ஃபீலிங்ஸை முழுசா காட்டத் தெரியலை!'' என்றாள் அவள்.

அவன் மென்மையாகப் புன்னகைத்தான். பிறகு சொன்னான் ''இத பாரு இந்து. இப்ப நீ பிரைம் யூத்ல இருக்க. உன் வாழ்க்கையில யாராவது வருவாங்க கண்டிப்பா. அப்படி உனக்குப் பிடிச்சவன் வரும் போது அட்லீஸ்ட் அவன் கிட்டேயாவது உன் ஃபீலிங்ஸைக் காட்டிடு. இப்படி உள்ளுக்குள்ளே வச்சுட்டுப் புழுங்காதே. என்ன?'' என்றான்.

அவள் சிரித்தாள். ''ம்ஹூம்... இனி எனக்கு வர்றவன் என் பணத்துக்காக, சொத்துக்காக வருவானா இருக்கும்! எங்க வீட்லே இருக்கற இந்தப் பிரச்சினையெல்லாம் பார்த்துட்டு ஏதாவது நல்ல குடும்பத்துல இருந்து யாராவது வருவாங்களா என்ன?'' என்றாள் அவள்.



''அப்படியெல்லாம் நீயே உன்னைத் தாழ்த்திக்காதே. கண்டிப்பா உனக்காக உன்னைப் பிடிக்கிற ஒருத்தன் வருவான்!'' என்றான்.

''சரி, நான் கேட்கறேன். நீங்க என்னை பண்ணிப்பீங் களா?'' என்றாள்.

அருள் பிரகாஷ் கலகலவென்று சிரித்தான். ''ஏய், இந்த வம்புதானே வேண்டாங்கறது?'' என்றான்.

''பார்த்தீங்களா? நழுவறீங்க!'' என்றாள் இந்துமதி.

''இத பாரு இந்து, நாம இப்பத்தான் பழகறோம். ஒருவேளை என் மனசிலே அப்படி விருப்பம் ஏற்பட்டால் கண்டிப்பா பண்ணிக்குவேன். உங்க அம்மா அப்பா பத்தியெல்லாம் எனக்கு கவலை இல்லை. ஆனா நான் இன்னும் அந்த ஸ்டேஜுக்குப் போகலை. யூ ஆர் மை குட் ஃப்ரெண்ட். ஐ ஆம் ஆல்ஸோ யுவர் குட் ஃப்ரெண்ட். நாம இப்போதைக்கு இப்படியே பழகிக்கலாம் என்ன?'' என்றான்.

அவளும் புன்னகைத்தாள். ''எனக்குத் தெரியும். ஒரு பேச்சுக்காகத்தான் கேட்டேன்!'' என்றாள்.

சரியாக அந்த நேரத்தில் சந்திரமோகன் வருவதாகத் தகவல் வந்தது.

அவரும் வந்து சற்று நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டுப் பிறகு சொன்னார். ''அம்மா, நீ சொன்ன மாதிரி நான் டெசிஷன் எடுத்துட்டேம்மா!'' என்று.

''என்னப்பா?'' என்றாள் மகள்.

"இல்லே, ரோஜாவுக்கும் துரோகம் பண்ண வேண்டாம். சிந்துவுக்கும் துரோகம் பண்ண வேண்டாம். அதனால நான் சிந்துகிட்டே டைவர்ஸ் கேட்டர்லாம்னு இருக்கேன்" என்றார்.

இந்துமதி திகைத்துப் போய் அருள் பிரகாஷைப் பார்த்தாள். அவன் கண் அமர்த்திப் புன்னகைத்தான். "சரிங்க சார், சப்போஸ் நீங்க டைவர்ஸ் கேட்டு அவங்க ஒத்துக்கலைன்னா?" என்றான் அருள்.

"அவ வீம்புக்காகத்தான் ஒத்துக்க மாட்டேம்பா. இல்லே அபெக்ஷன்னால ஒத்துக்க மாட்டேன்னு சொல்லப் போறாளா?" என்றார்.

"ஒரு வேளை அபெக்ஷனால ஒத்துக்க மாட்டேன்னு சொன்னாங்கன்னா?" என்றான்.

"அட போப்பா, நீ வேற விளையாடிக்கிட்டு!" என்றார் அவர்.

"சரி, நீங்க அவங்ககிட்டே டைவர்ஸ் பத்திப் பேசிப் பாருங்க. ஆனால் ஒன் கண்டிஷன் ஆன் பி ஹாஃப் ஆஃப் இந்துமதி!" என்றான்.

இந்துமதி பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"டைவர்ஸ் நோட்டீஸை யார் மூலமாவது அனுப்பக் கூடாது. ஃபோன்லயும் சொல்லக் கூடாது. எனக்காகவும் இந்துவுக்காகவும் நீங்க உட்கார்ந்து அவங்ககிட்டே பேசுங்க!" என்றான்.

இந்துமதி அவனை நன்றியுடன் பார்த்தாள். அவனும் கண் அமர்த்திச் சிரித்தான்.



அவர் "சரி, உங்க ரெண்டு பேருக்காகவும் ஒத்துக்கறேன்!" என்றார்.

என்ன நடக்கப் போகிறதோ என்று திகிலுடன் காத்துக் கொண்டிருந்தாள் இந்துமதி.

## அத்தியாயம் - 16

மனம் ஆறவே இல்லை இந்துமதிக்கு. அப்பா என்ன இப்படிப் பேசுகிறார்? அம்மா இப்போதுதான் ஒரு வழியாக வழிக்கு வருவார் போல இருக்கிறது. இந்த நேரத்தில் போய் இவர் டைவர்ஸ் பேப்பரை நீட்டுகிறாரே என்று திகைத்துப் போய் விட்டாள். அப்பா போனதற்குப் பிறகு அவள் இரவு உணவைக் கூட கொறித்துக் கொண்டுதான் இருந்தாள்.

வழக்கம் போல சிகாமணி, இவள் அருள் பிரகாஷ் மூன்று பேரும் கீழேதான் அமர்ந்து சாப்பிட்டார்கள். இரவு உணவு பெரும்பாலும் சப்பாத்தி, பாசிப்பருப்புக் கூட்டு, கோதுமை ரொட்டி இந்த மாதிரிதான் இருக்கும்.

ஒரு சில நாட்களில் ஆப்பம், உப்புமா என்று ஏதாவது செய்திருப்பார்கள். அவர்களுடைய வீட்டில் விதவிதமாக செய்து ஆளுக்கு கொஞ்சம் கொறித்து விட்டு வைத்தால் மீதம் இருக்கிற அத்தனையும் வேலை ஆட்கள்தான் உண்பார்கள்.

மரகதப் பாட்டி ஏதோ அதை கவனித்து சரி செய்வாள். இல்லாவிட்டால் நிறைய வீணாகும் என்று இந்துமதிக்குத் தோன்றியது. இங்கே எளிமையான உணவு. ஆனால்

ருசியான உணவு. இரவு படுக்கப் போகும் பொழுது ஒரு புருட் சாலட் சாப்பிடுகிறார்கள்.

வீட்டிலே செய்த பலகாரங்கள் மாலை நேரத்திலே நொறுக்குத் தீனியாகக் கொடுக்கப்படுகிறது. அவர்கள் வாழ்வியல் முறையே இவளுக்கு மிகவும் பிடித்துப் போய் விட்டது. ஆனால் இன்றைக்கு அதையெல்லாம் ரசிக்கிற மன நிலையில் அவள் இல்லை.

இன்றைக்கு இரவு கமலவதி இட்லியும், தேங்காய்ச் சட்னியும் செய்திருந்தார். "எதுக்கு கமலா நைட்ல போய் தேங்காய்ச் சட்னி செஞ்சே?" என்று கேட்டார் சிகாமணி.

"அட என்னங்க, வாரத்திலே ஒரு நாள் பத்து நாளுக்கு ஒரு நாள்தானே செய்யறேன்!" என்றார் கமலவதி.

"அதுவும் கூட காலையில பண்ணிடும்மா. நைட்ல எல்லாம் லைட்டா பண்ணிடு! பருப்பு சாம்பார் பண்ணினா கூட போதும்!" என்றார்.

இந்துமதி கொரித்தாற்போல சாப்பிடுவதை அருள் பிரகாஷ் கவனிக்கத்தான் செய்தான்.

"என்ன இந்து?" என்றான்.

"அவள் கொஞ்சம் ஷாக்ல இருக்காடா. சந்திரமோகன் வந்து குண்டு போட்டுட்டுப் போயிருக்கானில்லே!" என்றார் சிகாமணி.

"ஆமாம்ப்பா, எனக்கும் கொஞ்சம் கவலையாத்தான் இருக்குது!" என்றான் அருள் பிரகாஷ்.



"அதான் நீ ஒரு ஆலோசனை சொல்லியிருக்கியே? அது ரொம்ப நல்ல ஆலோசனைடா. டைவர்ஸ் நோட்டீஸ்ல அவன் கையெழுத்தா வாங்கிட்டான்? போய் பேசட்டும். அப்புறம் என்ன நடக்குதுன்னு பார்க்கலாம்!" என்றார்.

இரவு உணவு உண்டதற்குப் பிறகு சிகாமணி தன்னுடைய அறைக்குச் சென்று விட்டார். ஏதாவது புத்தகத்தை வைத்துப் படித்துக் கொண்டிருப்பார். இப்போது பெரிய புராணம் படித்துக் கொண்டிருக்கிறார். அவளும் போய் சற்று நேரம் அவர் சொன்ன கதையைக் கேட்டு விட்டு எனக்கு "ஏதோ கொஞ்சம் மனசே சரியில்லை மாமா. நான் போய் அருள்கிட்டே கொஞ்ச நேரம் பேசறேன்!" என்றாள்.

"பேசு, பேசு, நல்லா கவுன்சிலிங் கொடுத்துருவான்" என்றார் அவர்.

மகனை அவர் கிண்டல் செய்யும் போதெல்லாம் அவள் கலகலவென்று சிரிப்பாள். இன்று இதழில் ஒரு புன்னகையை உதிர்த்து விட்டு மாடி ஏறிப் போனாள்.

அங்கே பனியன் லுங்கியுடன் மொட்டை மாடி ஓரமாக நின்று தோட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான் அருள் பிரகாஷ். பின்னாலே இருந்த அந்த சின்னத் தோட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். பின்கட்டிலே இரண்டு தென்னை மரங்கள் இரண்டு மூலைகளிலும் இருந்தன. வீட்டின் முன் புறத்திலும் இரண்டு மூலைகளிலும் இரண்டு தென்னை மரங்கள் இருந்தன.

இலைகள் எல்லாம் நிலவொளியில் மின்னி மின்னி மறைவதை அந்த ஒளிக்கீற்றுக்களையெல்லாம் ரசித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தான்.

லேசான மேகம் அங்கங்கே தலை காட்டியது. நிலாவும் மேகங்களும் தொட்டு விளையாடிக் கொண்டிருப்பது போல அவனுக்குத் தோன்றியது. மேகங்கள் வேக வேகமாக உருமாறிக் கொண்டிருந்தன அரக்கனாக, நாயாக, பாம்பாக, முதலையாக என்று. அவன் அந்த உருமாற்றங்களை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

பின்னாலே இந்துமதி வருவது அவள் பூசுகிற அந்த வாசனைப் பொருட்களினால் அவனுக்குத் தெரிந்தது. இப்போதெல்லாம் அவள் இயற்கையான வாசனைப் பொருட்களுக்கு தாவி விட்டாள். எல்லாம் கமலவதியினுடைய புண்ணியம் தான். தசாங்கப் பொடி மாதிரி ஏதோ ஒரு பொடி வீட்டிலே செய்து அவளுக்கு கொடுத்திருந்தார்.

இந்துமதி இப்போது முன்னை விட அழகாக மின்னினாள். அவன் லேசாகத் திரும்பி அவளைப் பார்த்தான். படியேறி அந்த நிலவொளியிலே அவள் நடந்து வருவதைப் பார்க்க அவ்வளவு அழகாக இருந்தது. தன்னையும் மீறி அவன் கண்கள் அந்த அழகை உள் வாங்கிக் கொண்டது. அவன் தன்னை ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதைக் கூட அவள் உணரவில்லை. ஏதோ யோசனையுடன் வந்து அவன் அருகிலே நின்றாள். 'ஒரு நிமிஷம்!' என்றவன் உள்ளே போய் அவசர அவசரமாக ஒரு சட்டை அணிந்து கொண்டு வந்தான்.



''என்ன இந்து? ஏன் ஒரு மாதிரி இருக்கே?'' என்று கேட்டான்.

''என்ன அருள் இப்படி கேட்கறீங்க?'' என்றாள்.

''வேறே எப்படிக் கேட்கணும்? ஒய் ஆர் யூ ஸோ வொரீட் இந்து அப்படின்னு கேட்கணுமா?'' என்றான்.

அவள் வருத்தத்துடன் அவனைப் பார்த்தாள். ''ஓகே, ஓகே, நோ ஜோக்ஸ் சொல்லு!'' என்றான். ''இல்லே, அப்பா பாருங்களேன். டைவர்ஸ் பேப்பரைத் தூக்கிட்டு வந்திருக்காரு!'' என்றாள்.

''நீதானே சொன்னியாமே? அப்பா இனிமே எனக்காகப் பார்க்காதீங்க. உங்க வாழ்க்கையை நீங்க வாழுங்க. அம்மாவைப் பிடிக்கலைன்னா பேசாம டைவர்ஸ் வாங்கிடுங்க அப்படின்னு சொன்னியாமே?'' என்று.

''ஆமா சொன்னேன். அப்ப அம்மா இருந்த நிலைமை வேற. இப்ப அம்மா மாறிக்கிட்டு இருக்காங்கள்லே? அவங்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுக்கணுமில்லே?'' என்றாள்.

''உங்கம்மா மாறினது எப்படி அவருக்கு தெரியும்? உங்க அம்மா எப்பவும் போல இருக்காங்கன்னு நினைச்சுக்கிட்டு பேசாம பிரச்சினையை முடிச்சுக்கலாம் அப்படின்னு நினைக்கிறார் போல இருக்கு. டைவர்ஸ் பண்ணிட்டு ரோஜாமணிகிட்டே உன்னைக் கூட்டிட்டுப் போறேன் அப்படிங்கறாரு''

இந்து பெருமூச்சு விட்டாள். "கேள்விப்பட்ட வரைக்கும் ரோஜா சித்தியை எனக்குப் பிடிக்குது. ஆனா, இனிமே நான் அவங்கிட்ட போக மாட்டேன்"

"ஏன்?" என்றான் அவன் ஆச்சரியமாக.

"இல்லே, அம்மா ரொம்ப நொந்து போயிடுவாங்க. அம்மா சும்மா பளபளன்னு ஜொலிக்கிற கண்ணாடிப் பாத்திரம் மாதிரி தான் இருந்திருக்காங்க. பார்க்கறதுக்கு ரொம்ப உறுதியா இருக்கற மாதிரித்தான் இருக்கும். ஆனா பொத்துன்னு கீழே போட்டா உடைஞ்சிடும். அது மாதிரி இப்ப அப்பாவோட பிரிவு தான் பெரிய அடியா இருக்கும். இந்த நேரத்துல நானும் டாட்டா காட்டிட்டுப் போனா ரொம்ப உடைஞ்சிருவாங்க!" என்றாள்.

"யு ஆர் வெரி ஸ்வீட் இந்து!" என்றான் அவன்.

"அதில்லே பாயிண்ட் அருள். இப்போ என்ன பண்றது? அப்பா ஏன் இப்படிப் பண்றாரு?" என்றவள். சட்டென்று அவன் எதிர்பாராத விதமாக அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள். அவன் வலத்தோளின் மேல் தன் கையைப் பதித்துக் கொண்டு தேம்பி அழுதாள்.

அந்த ஸ்பரிசத்திலும் அந்த சாய்விலும் அவன் ஒரு விநாடி திணறிப் போனான். பிறகு ஒரு மாதிரியாக தேறிக் கொண்டு அவளைத் தட்டிக் கொடுத்தான்.

"இரு இந்து. நான் உங்க அப்பா கையெழுத்து வேணும்னு சொன்னவுடனேயே நான் கையெழுத்து வாங்கிக் கொடுத்துடறேன் அப்படின்னெல்லாமா சொன்னேன்? நான் உங்க



அம்மாவுக்கு ஒரு வாய்ப்பு கொடுத்திருக்கேன் இந்து" அவள் சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள்.

இரு கன்னங்களிலும் கண்ணீர் கோடாக ஓடியிருக்க கண்கள் பளபளக்க நிமிர்ந்து பார்த்த அந்தக் கணத்தில் அவன் உள்ளத்தில் அவள் நெற்றியிலே முத்தமிட வேண்டும் போல ஒரு எண்ணம் தோன்றியது.

திடுக்கிட்டுப் போனான். சமாளித்துக் கொண்டு "ப்ளீஸ் இந்து, புரிஞ்சுக்கோ. உங்க அப்பாகிட்டே உங்க அம்மாகிட்டே போய் பேசணும்னு சொல்லியிருக்கேன். ஏன் தெரியுமா? உங்க அம்மா வந்து ஒரு உடையற பாயிண்ட்லே இருக்காங்க. உங்க அப்பா போய் இப்பப் பேசினா தன்னை அறியாம தன்னோட பிரியத்தை வெளிப்படுத்திருவாங்க. உங்க அப்பா ஏதாவது ஒரு டெசிஷன் எடுக்கத்தான் செய்வாரு"

"என்ன டெசிஷன்? ரோஜாமணியை விட்ருவாரா?" என்றாள்.

"ஆமா, அதைத்தான் பண்ணனும்."

அவங்க பாவம் இல்லே?" என்றாள்.

"இல்லம்மா, அவங்க தெரிஞ்சேதான் இவரு வாழ்க்கையில நுழைஞ்சிருக்காங்க. இன்னொருத்திக்கு சொந்தமா இருக்கறவரு வாழ்க்கையில என்ன காரணம் சொல்லி நுழைஞ்சாலும் தப்புதான். இன்னைக்கு இவங்க ரெண்டு பேரும் சேர்ந்தவுடனே ஏதோ இவரு கூட வாழ்ந்த வரைக்கும் போதும் அப்படின்னுட்டு அந்த அம்மா விலகிப் போகணும். அதான் நியாயம்!" என்றான் அருள் பிரகாஷ்.

"அப்படி விலகிடுவாங்களா?" என்றாள்.

"பார்க்கலாம். மொதல்ல உங்க அம்மாவும் அப்பாவு பேசட்டும். ஒரு தடவை ரெண்டு தடவை பேசினாங்க னாலே பேட்ச் அப் ஆயிடும். ஏன்னா இப்பத்தான் உங் அம்மா எதையும் கேட்கற நிலையில இருக்காங்க. அ மட்டும் இல்லே இந்து ,நான் உங்க அப்பாவை மீட் பண் உங்களோட புரோக்கன் மேரேஜ்னால நீ எவ்வளவு சங் பண்ணியிருக்கே, எங்கிட்ட என்னென்ன சொன்னேங் தெல்லாம் அவர்கிட்டே நான் சொன்னேன்"

"ஐயய்யோ, எதுக்கு சொன்னீங்க?" என்றாள்.

"சொன்னாத்தானே தெரியும்? இவங்க ரெண்டு பேரு ஈகோனாலே ரெண்டு மூலையிலே நின்னுகிட்டு இருந்தா இடையில ஒரு குழந்தை எவ்வளவு அவஸ்தைப்பட்டுகிட் இருக்கும்னு தெரிய வேண்டாமா அவங்களுக்கு?"

"பாவம், அப்புறம் அவங்க கில்டியா ஃபீல் பண்ணு வாங்க!" என்றாள்.

"ஃபீல் பண்ணட்டும். இந்த அழகான இளமை காலத்திலே எப்ப அம்மா அப்பாவோட அன்பு வேணுமோ அப்ப உனக்கு அது கிடைக்கலை. இரண்டு பேரும் அன்பை வச்சுக்கிட்டு இருக்காங்க. அதை வெளிக்காட்டத் தெரியாம பிரச்சினை பண்ணிக்கறாங்க. அதுக்கு நாம என்ன பண்ண முடியும்?அவங்களும்...தே ஆர் நாட் சில்ரன், தே ஆர் குரோன் அப் பீப்பிள். ஃபாக்டரியா கட்டி ஆண்டா போதுமா? குடும்பம்னா என்னன்னு தெரிய வேண்டாமா?" என்றான்.



அவள் திகைப்புடன் அவனைப் பார்த்தாள். 'அசடு' என்று அவன் தன் கையால் இரண்டு கன்னங்களையும் துடைத்து விட்டான்.

'அருள்' என்று அவள் வெட்கத்துடன் அவனைப் பார்த்தாள். ஆனால், அவன் கவனமாக உணர்வுகளைத் தவிர்த்து விட்டான்.

"யூ ஆர் மை ஃப்ரெண்ட் இந்து. உனக்கு எல்லா உரிமையும் இருக்கு!" என்றபடி லேசாக அவளை விலக்கினான்.

அவளும் சற்றே ஏமாற்றத்துடன் விலகிக் கொண்டாள்.

'நீ வெறும் ஃப்ரெண்டுதான்னு மறுபடியும் சொல்லிட்டாரு அருள்!' என்று நினைத்துக் கொண்டு மெல்லத் திரும்பி வந்து அந்தச் சேரிலே அமர்ந்தாள்.

"இத பாரு இந்து, இத்தனை நாள் நீ தனியா அவஸ்தைப் பட்டுகிட்டிருந்திருக்கே. இப்பத்தான் உனக்கு நாங்கெல்லாம் இருக்கோமில்லே?. வி ஆல் டு கெதர் வில் டிரை டு சால்வ் த ப்ராப்ளம் ஒகே!" என்றான்.

அவள் மறுபடியும் தலையாட்டினாள். அவன் அருகிலே வந்து நின்று அவள் தலையை மெல்லக் கோதிக் கொடுத்தான். "போதும். நிம்மதியாத் தூங்கு. அப்பா இருக்காங்க. நான் இருக்கேன். ஏதாவது நல்ல முடிவா எடுப்போம். எப்படி இருந்தாலும் உங்கப்பா எங்கப்பாகிட்டே வந்து பேசுவாரு. எங்கப்பா விட்டு வாங்கிருவாரு. கவலைப் படாதே!" என்றான்.

"இத்தனை நாள் பண்ணலையே?" என்றாள் அவள்.

"இத்தனை நாள் அவங்களுக்கு டச் விட்டுப் போயிடுச்சு. எப்பவாவது ஒரு தடவை சந்திச்சுப் பேசுவாங்க. அவ... வச்சுட்டு பர்சனல் லைஃப்புக்குள்ளே நுழைய முடிய... இல்லே. இப்பதானே உங்கப்பா பர்சனல் லைஃப்பைப் பத்தி பேசறதுக்கே வர்றாரு உங்கப்பா. எல்லாம் சரியாயிடும்மா"

"சரியாயிடும்னு நம்புவோம். போ போய் தூங்கு" என்று அவள் கன்னத்தை லேசாகத் தட்டிக் கொடுத்தான்.

அவள் ஒரு நிமிடம் அவனுடைய அந்த கைகளை பிடித்துக் கொண்டாள். அவனுக்குள்ளும் ஏதோ நகர்ந்த மாதிரி இருந்தது.

அசையாமல் நின்றான். ஒரிரு நிமிடங்களுக்குப் பிறகு அவள் எழுந்து 'தாங்க்ஸ் அருள்!' என்றாள்.

"நோ மென்ஷன் ப்ளீஸ்!" என்று அவன் சிரித்தான்.

"போடா, போய்த் தூங்கு!" என்றான்.

அவள் மெல்லப் படியிலே இறங்கிப் போனாள். போனவள் அந்தக் கையிலேயே தன்னுடைய இதயத்தை எடுத்துக் கொண்டு போகிறாற்போலத் தோன்றியது.

அவளுக்கும் அந்த இரவிலேயே தன் மனம் முழுக்க முழுக்க அருள் பிரகாஷிடம் சாய்ந்து இருப்பது தெளிவாக புரிந்தது. அருள் பிரகாஷ் சற்று நேரம் நிலவை வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருந்தான்.

பிறகு ஒரு பெருமூச்சு விட்டவனாகத் தன்னுடைய அறைக்குப் போனான்.



# அத்தியாயம் - 17

இந்துமதி உற்சாகமாக உடை உடுத்திக் கொண்டாள். இந்த வீட்டிற்கு வந்ததற்குப் பிறகு காட்டன் சுடிதார், கைத்தறி புடவைகள் தான் அணிந்தாள்.

மிக எளிமையாக அலங்காரம் செய்து கொண்டாள். சின்னச் சின்ன டாலர்கள் பொருந்திய மெல்லிய செயின் களை அணிந்து கொண்டாள், மெல்லிய வளையல்களை அணிந்து கொண்டாள்.

பல நாட்கள் செயற்கை அணிகலன்களைத்தான் அணிந்து கொண்டாள். அது அவளுக்கு மிகவும் அழகாகக் கூட இருந்தது. காலையில் உற்சாகத்துடன் குளித்து முடித்து வந்து சிகாமணியுடன் கூட நின்று

'நமச்சிவாய வாழ்க! நாதன் தாழ் வாழ்க!' என்று அவளும் சொல்ல ஆரம்பித்தாள்.

அவர் அவளிடத்தில் சிவபுராண புத்தகத்தைக் கொடுத்து விட்டார். அதை அவளும் பார்த்துப் படித்துக் கொண்டே பின்னாலே நிற்பாள். கற்பூர தீபாரதனை காட்டுகிற நேரத்துக்கு அருள் பிரகாஷ் வந்து விடுவான்.

இன்றைக்கு சந்தனக் கலரிலே வயலட் பார்டர், ஆங்காங்கே வயலட் நிறத்திலே சின்னச் சின்ன பூக்கள் போட்ட மாதிரியான கைத்தறி புடவை அணிந்து கொண்டு காத்துக் கொண்டிருந்தாள்.ஆனால் அருள் பிரகாஷ் வரவே யில்லை. சிகாமணியும் கூட பூஜை முடித்து விட்டார்.

"மாமா, அருள்!" என்றாள் இவள்.

''அவன் எங்கேயோ நேரத்துலயே போயிட்டாம்மா. எங்கேயோ நுகர்வோர் ஆர்ப்பாட்டம் இருக்குதாம். அதுக்கு எல்லாரும் எட்டு மணிக்கே வந்துடுவாங்க. எல்லாரும் எட்டு மணிக்குள்ளே அசெம்பிள் பண்ணினாத்தான் கலெக்டர் வர்றதுக்குள்ள ஆர்ப்பாட்டம் பண்ண முடியும்னு போயிட்டான்''

'ஓ!' என்றாள் இவள்.

தன்னுடைய ஏமாற்றத்தை மறைத்துக் கொள்வதற்கு வெகு பாடு பட்டாள். அதற்குப் பிறகு வழக்கம் போல சாப்பிட உட்கார்ந்தாள். காலை உணவுக்குக் கமலவதி இன்றைக்கு பொங்கல், தக்காளி சட்னி, சாம்பார் என்று செய்திருந்தாள்.

சுவையாகத்தான் இருந்தது. ஆனால், அந்த சுவை அவள் மனதுக்குள் இறங்க மறுத்தது.

முந்தின நாள் இரவு அவளுக்கு நினைவுக்கு வந்தது. அவனுடைய அந்த ஆண்மை மிக்க உறுதியான கைகளைப் பிடித்துக் கொண்டு அமர்ந்த பொழுது உலகமே பாதுகாப்பாக உணர்ந்தோமே என்று எண்ணிக் கொண்டாள்.

தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

'எங்கே போனா என்ன? வந்துதானே ஆகணும்?'என்று தன்னைத் தானே உற்சாகப்படுத்திக் கொண்டாள்.

உணவருந்தி முடித்ததற்குப் பிறகு சற்று நேரம் சிகாமணி அவளுக்கு விளக்கம் சொல்லிக் கொண்டிருந்தார்.



''மாமா, அந்த 'ஒருமையுடன் நினது திருமலரடி' பாட்டுக்கு விளக்கம் சொல்லுங்க மாமா''என்றாள்.. அவர் விளக்கம் சொன்னார். ''அம்மா ஒருமைன்னா கொஞ்சம் கவனமா மனதைக் குவித்துக் கடவுளைக் கும்பிடறது. அப்படி கும்பிடறவங்க உறவுதான் எனக்கு வேணும். சும்மா ஏனோ தானோன்னு எல்லாருடைய உறவும் எனக்கும் வேண்டாம்.உள்ளொன்றும் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும். வள்ளலார் துறவி! ஆனா அவருக்கே இந்த புறம்பேசுறவங்களைப் பத்தித் தெரிஞ்சிருக்கு பாத்தியா? மனசிலே ஒண்ணை வச்சுக்கிட்டு வெளியிலே ஒண்ணு பேசறவங்க அப்படிப்பட்ட மனிதர்களின் உறவே எனக்கு வேண்டாம் அப்படின்னு சொல்றாரு'' என்று அந்தப் பாட்டுக்கு முழுக்க விளக்கம் சொல்லிவிட்டு இன்னொன்றும் சொன்னார். ''உனக்குத் தெரியுமா? அம்மா இதைப் பத்தி ஒரு கதை சொல்லுவாங்க. இந்த வேண்டும் வேண்டும்னு வந்ததைப் பத்தி ஒருகதை சொல்லுவாங்க. நம்ம ஊர்ல குழந்தைங்களுக்கு ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம். ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம். அப்படியெல்லாம் வேண்டாம் வேண்டாம்னு முடியற மாதிரி நீதிக் கருத்துள்ள பாடல்கள் அந்தக் காலத்திலே சொல்லித் தருவாங்க. இவரு பள்ளிக் கூடத்துக்குப் போனப்பவும் அப்படி சொல்லிக் கொடுத்தாங்களாம். எதுக்கு வேண்டாம் வேண்டாம்னு சொல்லணும். வேண்டும் வேண்டும்னு சொல்லலாம் அப்படின்னு தான் இந்தப் பாட்டை எழுதினதா சொல்லுவாங்க''

''ஆமா மாமா, எனக்கு கூடத் தோணும் ரெயின், ரெயின் கோ அவே என்று சொல்லும் போது. இங்கிலீஷ்

காரனுக்கு அது சரி, ரொம்பப் பனியா இருக்கும். அவனுக்கு அதனால மழை வேண்டாம்னு நினைச்சான். நமக்கு பருவ மழை வந்தாதானே நல்லது அப்படின்னு நான் நினைச்சு துண்டு மாமா''

கலகலப்பாக சற்று நேரம் பேசியதில் அருள் பிரகாஷின் நினைப்பு மறந்து போயிற்று. அவன் மதிய உணவுக்குக் கூட வரவில்லை. உணவு உண்டதற்குப் பிறகு சிகாமணி சற்று நேரம் ஓய்வெடுக்கப் போய் விடுவார். அந்த நேரத்தில் கமலவதியும் குப்பம்மாவும் போய் பின்னாலே தோட்டத்திலே ஏதாவது சுத்தம் செய்ய வேண்டும் என்றால் செய்வார்கள். இந்துமதியும் கூடப் போய் உதவி செய்வாள்.

குப்பம்மா ''ஏம்மா, நீங்க எதுக்கும்மா?'' என்பாள்.

''என்ன, ஏம்மா நீங்க எதுக்கும்மா? நான் மட்டும் என்ன தெய்வப் பிறவியா? இப்படிச் சொல்லிச் சொல்லித்தான் என்னைக் கெடுத்து வச்சிருக்காங்க!'' என்று சொல்லிக் கொண்டு அவளும் உதவி செய்வாள்.

குறைந்த பட்சம் செடிகளிலே உள்ள காய்ந்த இலைகளை பறித்துப் போடுவது. குப்பை அள்ளுவது என்றெல்லாம் செய்வாள்.

''இது என்ன குப்பை? செடியிலிருந்து விழற குப்பை தானே?'' என்று சொன்னவள் புதிதாக அங்கே ஒரு குழியை தோண்டச் செய்து அதிலே போடச் செய்து இந்தக் குப்பைகளையெல்லாம் போட்டு வைத்தாள்.

''இந்த மக்கும் குப்பையெல்லாம் நம்மளுக்கு உரமாகு மாம் மாமா!'' என்றாள்.



''ஆமா, அருள் சொல்லிக்கிட்டே இருப்பான். ஆனா எனக்கு நேரம் இல்லம்மா!'' என்றார் சிகாமணி.

உடனே அருள்பிரகாஷிடம் சொல்லி ஆளை அழைத்து வரச் சொல்லி இவள் ஒரு குழியைத் தோண்டச் செய்து அதிலே இந்த குப்பைகளையெல்லாம் போட்டு வைத்தாள்.

''மாமா மண் புழு உரம், மண் புழு போட்டு வச்சா இது உரமாயிடும்!'' என்று மண் புழு வாங்கி வரச் செய்து அந்த குழிக்குள்ளே போட்டு மேலே ஒரு வலையை வைத்து அங்கே உரம் தயாராகிக் கொண்டிருந்தது.

''ஆமா, இது ஏன் எனக்குத் தோணாமப் போச்சு. நம்ம ஊர் நிலத்திலே கூட இப்படிப் போட்ரலாம்'' என்றார் அவர்.

''ஆமா மாமா, செய்தர்லாம்'' என்றாள்.

அதற்குப் பிறகு மூன்று மணிக்கு மேல் வந்து சற்று நேரம் ஓய்வெடுத்துக் கொண்டாள் இவள். படுத்தாலும் அவன் நினைவுதான் வந்தது. அவன் முழுக் கை சட்டையை அணிந்தவன் இப்படியே மடித்து விட்டுக் கொண்டே நடந்து வருவான். சிக்கென்றுதான் உடை அணிவான்.

லட்சியவாதி போல நடந்து கொண்டாலும் அதற்காக தொள தொளவென்று ஜிப்பாவும் பேண்டும் அணிந்து கொண்டெல்லாம் அவன் அலைவதில்லை. வேட்டி சட்டையிலும் வெளியே போவதுண்டு. போக வேண்டும். ஏதாவது ஒரு நாள் ஜிப்பா பைஜாமா போடுவான். ஷெர்வாணி அணிவான். விதவிதமாக அலங்காரம் செய்து கொள்ளுவான்.

இவள் கூட "லேடீஸ் கூட இப்படியெல்லாம் கெட்டப் போட மாட்டாங்கப்பா!" என்று கேலி செய்வாள்.

"ஆமா, வாழ்றதே சந்தோஷத்துக்காகத்தான். எதுக்காக அப்படியே ரொம்ப கிரிஸ்பா நடமாடிக்கிட்டு இருக்கணும்? ஐ நோ அபவுட் மி, ஐ நோ அபவுட் மை பர்சனாலிட்டி ,என்னோட பர்சனாலிட்டி பத்தி எனக்குத் தெரியும் இந்து!" என்று ஒரு நாள் பெருமை அடித்துக் கொண்டான்.

"ஐயே, தம்பட்டத் தம்பிரான்," என்று இவள் சிரித்தாள்.

"என்னதிது தம்பிரான் கிம்பிரான்னுட்டு!" என்று அவனும் ஆச்சரியமாகப் பார்க்க "ஆமா, இந்த வார்த்தையெல்லாம் மாமாகிட்ட இருந்து நான் அடிக்கடி கேட்கறேன் இல்லே?" என்றாள்.

"அப்படியா செந்தமிழ் தேவியாயிட்டீங்களா?" என்று அவனும் சிரித்தான்.

இவள் கேலி செய்வதை யெல்லாம் அவன் ரசனையோடு ரசித்தான். திருப்பி அவனும் கேலி செய்தான். அவன் சந்திக்கிற மனிதர்களைப் பற்றியெல்லாம் அவளிடம் விவரிப்பான். "அங்கே சந்தனமும் அத்தர் வாசமும் அடிக்கும் அந்தாள் கிட்ட. சட்டை கஞ்சி போட்டு அப்படி ஸ்டிஃப்பா நிக்கும். ஆள் சூப்பரா இருப்பாரு. ஆனா மேல்மாடி காலி!" என்பான். அவள் கலீரென்று சிரிப்பாள்.

"என்ன உன்னை மாதிரின்னு தோணிடுச்சா?" என்பான் அவன்.

"இல்லல்லே, உங்களை மாதிரின்னு தோணிடுச்சு!" என்பாள் அவள்.



"வேண்டியதுதான். ஆளைக் காப்பாத்தி உட்கார வச்சிருக்கோமில்லே? எல்லாம் பேசுவே!" என்று அவனும் கேலியில் இறங்குவான்.

'இன்றைக்கு என்ன ஆள் வரவே இல்லை!' என்று யோசித்தவளுக்கு சட்டென்று அது தோன்றியது.

ஒரு வேள்ள தன்னிடம் இருந்து விலகுகிறானோ, தன் மனதைப் புரிந்து கொண்டானோ? அது பிடிக்க வில்லையோ என்று தோன்றியது. 'அப்படியும் சொல்ல முடியாது. எனக்கு மேல் அவர் மெய் மறந்து நின்றாரே' என்று எண்ணிக் கொண்டாள். ஆனால்அடுத்து வந்த இரண்டு மூன்று நாட்கள் தொடர்ந்து அவள் கண்ணிலே படாமல் அவன் தவிர்ப்பதை அவள் உணர்ந்து கொண்டாள்.

சிகாமணியும் கூட ஏதோ விஷயம் தெரிந்ததைப் போல மகனை கவனித்துப் பார்த்தார். அவன் நடமாடும் போது அவர் கண்கள் அவன் பின்னாலே அலைந்தன. ஆனால் தலையிட வில்லை.

நான்காவது நாள் அவளுக்குப் பொறுக்கவே இல்லை. மாலையில் அவன் வந்தால் பார்க்க வேண்டும் என்பதற்காகவே ஹாலில் அமர்ந்து கொண்டிருந்தாள். சிகாமணி "என்னம்மா தூங்கலையா?" என்று கேட்டார்.

"இல்ல மாமா, உங்க பிள்ளை வரணும்னு வெயிட் பண்ணிகிட்டிருக்கேன்!" என்றாள்.

"எதுக்கு?" என்றார் சிகாமணி ஆச்சரியமாக. சண்டை பிடிக்கத்தான்.

"என்னம்மா சண்டை?"

''நாலு நாளா என்கிட்டே பேசலை. மாமா ரொம்ப பிஸியா பெரிய ஒபாமா மாதிரி ஓடிக்கிட்டே இருக்காரு வரட்டும்!'' என்றாள்.

சிகாமணி ஒரு நிமிடம் திகைத்துப் போனார். பிறகு மெல்லச் சிரித்தபடி ''நீயாச்சு, உன் ஃப்ரெண்டாச்சும்மா!'' என்றபடி கண்டு கொள்ளாதவர் போல நகர்ந்து விட்டார்.

சமையல் கட்டில் இருந்த கமலவதிக்கும் இது காதில் விழுந்தது. அவரும் சிந்தனையில் ஆழ்ந்தார்.ஆனால், அன்று ஏதோ ஒன்பது மணிக்கு அருள் பிரகாஷ் வந்ததும் இவள் தன்னுடைய அறையில் போய் அடைந்து கொண்டாள். அவன் சாப்பிட்டு விட்டு மேலே போனான்.

அப்போது வெளியே வந்து சிகாமணியைப் பார்த்துச் சிரித்து விட்டு ''இருங்க, உங்க மகன் கிட்டே பேசிக் கிறேன்!'' என்று கையைக் காட்டி விட்டுப் போனாள்.

சிகாமணியும் கமலவதியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். இவள் மேலே போனவள் வேகமாகப் படியேறினாள். ஆனால், மேல்படிக்கு போன உடனே வேகத்தை நிதானப்படுத்திக் கொண்டாள்.

அவன் அறைக்குப் போனதும் எதற்காகவோ வெளியே வந்தான். வந்தவன் அந்த மொட்டை மாடியினுடைய முகப்பிலே இவள் நிற்பதைப் பார்த்தவுடன் திகைத்து விட்டான்.

''இந்து?!'' என்றான். அவன் குரல் இறங்கிய குரலாகப் பிசுபிசுத்துப் போனது.

அவள் மெல்ல இரண்டடி எட்டி வைத்தாள்.



''ஏன் இப்படி என்னை வதைக்கறீங்க?'' என்றாள். அவன் பேச்சே வராமல் பார்த்தான்.

''எதுக்கு இப்படி ஓடி ஒளியறீங்க? நானே எங்க அம்மா அப்பாவாலே நொந்து போய் உங்களோட இருந்தா எனக்கு ஒரு கான்ஃபிடன்ஸ் கிடைக்கும்னு தானே வந்தேன். நீங்க ஏன் இப்படி?'' என்று தேம்பிக் கொண்டே அவன் மார்பிலே சாய்ந்தாள்.

அவன் திகைத்துப் போனவனாய் மெல்லிய குரலில் சொன்னான். ''நான் உங்கிட்டே இருந்து ஓடலை இந்து. எங்கிட்டே இருந்தே ஓடிப் பார்க்கிறேன். தப்பிக்க முடியு மான்னு பார்க்கறேன்!'' என்றான் தழுதழுத்த குரலில்.

'ப்ளீஸ், வேண்டாம். என்னை விட்டு எங்கேயும் போயிடாதீங்க!'' என்றவள் கண்களில் கண்ணீர் வழிய முகத்தை நிமிர்த்தித் தன் இரண்டு கைகளாலும் அவன் கன்னத்தைத் தடவிக் கொடுத்தாள். அவன் மெய் மறந்து நின்றவன் சற்று கழித்து விலகிக் கொண்டான்.

''இல்லை இந்து இது நடக்காது!'' என்றான். அவள் திகைத்துப் போய் அவனை வெறித்துப் பார்த்தாள்.

## அத்தியாயம் - 18

''ஏன் நடக்காது?'' என்றாள் இந்துமதி.

''உட்காரு இந்து ப்ளீஸ்!'' என்று அவளை உட்கார வைத்தான். ஆனால் அவன் அமரவில்லை. நின்று கொண்டிருந்தான்.

"நல்லா யோசிச்சுப் பாரு இந்து! நீ ஒரு பணக்கார அம்மாவுக்கும், பணக்கார அப்பாவுக்கும் பொறந்த ஒரே வாரிசு, ராஜகுமாரி மாதிரி. நான் அப்படி இல்லை. எனக்கு சோத்துக்கு இல்லாமப் போயிடலை. ஆனா உன் அளவுக்கு எனக்கு ஸ்டேட்டஸ் இல்லை. நான் ஸ்டேட்டஸ் பார்க்கறவன் இல்லை. ஆனா உங்க வீட்ல பார்ப்பாங்க வேண்டாம் ப்ளீஸ். ஏற்கனவே உனக்கு அம்மா அப்பா அன்பு கிடைக்கலை. இப்ப என் மேல பிரியம் வச்சு நானும் உன் மேல பிரியம் வச்சு இதுவும் நடக்காமப் போயிட்டா வேண்டாம் இந்து. உன்னாலயும் தாங்க முடியாது என்னாலயும் தாங்க முடியாது. ரொம்ப யோசிச்சுத்தான் இந்து நான் விலகி இருக்கேன். பேசாம நீ கிளம்பு இந்து நான் போய் உன்னை வீட்ல விட்டுடறேன் இந்து!" என்றான்.

"அப்போ என்னை நரகத்திலே தள்ளிட்டு நீங்க சந்தோஷமா இருப்பீங்களா?" என்றாள்.

அவன் வேதனையுடன் அவளைப்பார்த்தான். "நீ நாலு நாளைக்கு முன்னாடி என் கையைப் பிடிச்சுட்டு உட்கார்ந்தே பார்த்தியா, அந்த நிமிஷமே எனக்குத் தெரிஞ்சுடுச்சு இந்து, நானும் என்னோட வசத்திலே இல்லைன்னு எனக்குப் புரிஞ்சுடுச்சு. ரொம்ப யோசிச்சுகிட்டிருக்கேன் இந்து. நாலு நாளா அலைஞ்சுட்டு இருக்கேன். எங்கிட்டே இருந்தே தப்பிச்சுகிட்டிருக்கேன். காடு, மலை மேடெல்லாம் அலைஞ்சுகிட்டிருக்கேன்!" என்றான்.

"எதுக்காக அலையணும்?" என்றாள் அவள்.



"இதுக்காகத்தான். இந்த உண்மைக்காகத்தான். நான் காயப்படறதைப் பத்தி நான் கவலைப்படலை இந்து. நீ காயப்பட்டா உன்னால தாங்க முடியுமான்னு பாரு!" என்றான்.

"இத பாருங்க அருள், இதுவரைக்கும் இருந்த இந்து வேறே. இப்ப இருக்கற இந்து வேறே. இதுவரைக்கும் ஒரு மகளா ஒரு வாழ்க்கைக்கு நான் போராடிக்கிட்டு இருந்தேன். ஆனா இனிமே நான் தனி ஆளா ஒரு நல்ல வாழ்க்கை அமைச்சுக்கறதுன்னு நான் முடிவு பண்ணிட்டேன். ஐ'ம் நாட் எ சைல்ட் அருள்!" என்றாள்.

"அதுதான் இங்கே விஷயம். யு ஆர் நாட் எ சைல்ட். நானும் குழந்தை இல்லை. இந்த நிமிஷம் நீ அங்கே உட்கார்ந்துட்டு இருக்கே நான் இங்க நின்னுட்டு இருக்கறதுக்கு எவ்வளவு கஷ்டப்படறேன் தெரியுமா?இந்த தூரத்தையே என்னாலே ஏத்துக்க முடியலை. நீ உங்க வீட்டுக்குப் போனா நீ இன்னும் உயரத்துல நிப்பே. நான் கீழே நின்னு பார்த்துக்கிட்டிருக்கணும்!" என்றான் அவன்.

"வில் யூ ப்ளீஸ் ஷட் அப்!" என்றாள் இந்து.

அவன் திகைத்துப் போய் அவளைப் பார்த்தான். "நான் நம்ம மனசைப் பத்தி பேசிகிட்டிருக்கேன். நீங்க பணத்தைப் பத்தி பேசிட்டு இருக்கீங்க. அந்த பணம் இத்தனை நாளா என்ன கொடுத்துச்சு? ஒரு துளி சந்தோஷம் கூட கொடுக்கலை. இந்த சொத்தும் பணமும் எங்க அம்மா அப்பாவை என்ன செஞ்சது? ரெண்டு பேருக்கும் ஈகோவைத்தான் கொடுத்துச்சு. அவங்க தானும் சந்தோஷமா இல்லை.

அடுத்தவங்களையும் சந்தோஷமா வச்சுக்கலை. ஐ கேர் டேம். எனக்கு இந்தப் பணம் வேண்டாம்''

''நீ அப்படிச் சொல்றே இந்து. ஆனா உங்க வீட்ல என்ன தெரியுமா சொல்வாங்க? ஏதோ பத்து நாள் மன ஆறுதலுக்காக ப்ரெண்டு வீடுன்னு விட்டா கடைசி பொண்ணையே கவர் பண்ணிட்டாங்க. சும்மாவா கவர் பண்ணுவாங்க சொத்துக்காக அப்படின்னுதான் பேசுவாங்க இந்து!.நீ ஏழைப் பொண்ணா வசதி இல்லாத பொண்ணா இருந்தா இந்த நிமிஷம் என்னோட பிஹேவியரே வேறயா இருக்கும்''

''ப்ளீஸ், என்னோட பேக்ரவுண்ட் என்னன்னு பார்க்காதிங்க. என்னைப் பாருங்க!'' என்றாள்.

எழுந்தவள் அவனைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு உள்ளே இருந்த ஹாலுக்குச் சென்றாள். ''இப்படி நில்லுங்க'' என்று அவனுடைய சட்டைக் காலரைப் பிடித்து இழுத்து நிறுத்தினாள்.

தன் இரண்டு கைகளாலும் அவன் முகத்தை அழுந்தப் பிடித்துக் கொண்டு ''என்னைப் பாருங்க. இந்த ரெண்டு கண்களையும் பாருங்க. அந்தக் கண் வழியா நீங்கதான் உள்ளே போய் என் மனசு முழுக்க இருக்கீங்க தெரியுதா?'' என்று கிசுகிசுவென்ற குரலில் பேசினாள்.

சற்று நேரம் இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு நின்றார்கள். சுற்றிலும் இருக்கிற உலகமே ஸ்தம்பித்துப் போனாற்போல இருந்தது. தங்களை மறந்து நின்றார்கள். கண்களாலேயே இரண்டு பேரும் ஒருவர்



அடுத்தவருடைய உருவத்தையும் மனதையும், நேசத்தையும் உள்வாங்கிக் கொள்வது போல பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

சற்றுக் கழித்து அவன் தன்னை மறந்தவனாக தன் இடக்கையால் அவளை வேகமாக இழுத்தான். தன் இறுகிய அணைப்புக்கு கொண்டு வந்தான். அவள் ஏதோ எதிர்பார்த்தவள் போல தன் முகத்தை நிமிர்த்திக் கொண்டு நின்றாள். அவனும் அவளை ஏமாற்றவில்லை.

அவன் கொடுத்த பரிசுக்கும் அவளும் பதில் கொடுத்தாள். கிட்டத்தட்ட பத்து நிமிடங்களுக்கு மேல் இருவரும் தன் நிலையை மறந்து நடந்து கொண்டார்கள். பிறகு சட்டென்று நினைவு வந்தாற்போல அவனை உலுக்கினாற் போல அவளை விலக்கி விட்டு நகர்ந்து நின்றான்.

''ஏண்டி என்னை இப்படிக் கொல்றே?'' என்றான் எரிச்சலுடன். அவள் களுக்கென்று சிரித்தாள்.

''இப்போ என்ன செய்யணும்? இந்த சொத்தெல்லாம் வேண்டாம்னு எழுதிக் கொடுத்துட்டு வந்துடட்டுமா?'' என்றாள் இறக்கமான குரலில்.

அவன் ஒன்றும் பேசவில்லை தலையைக் கோதிக் கொண்டான். ''இல்லே இந்து, இந்தப் பாயிண்ட்லே விலகிடலாம். இந்த சந்தோஷத்தை மனசுல வச்சுக்கிட்டே நான் என்னோட மீதிக் காலத்தைக் கழிச்சிடுவேன்!'' என்றான்.

அவள் அவனைக் கோபமாகப் பார்த்தாள். ''அப்ப சரி மீதிக் காலத்தை நீங்களும் தனியா கழிக்கப் போறீங்க நானும் தனியாதான் கழிக்கப் போறீங்க அப்படின்னா எல்லாத்தையும் பார்த்தர்லாம்!''.

அவன் முகம் மாறியது. ''என்னத்தை எல்லாத்தையும்?'' என்றான்.

''அம்மா, அப்பாவெல்லாம் தூங்கட்டும். பத்து மணிக்கு மேல நான் வரேன்!'' என்றாள்.

அவன் அதிர்ந்து போய் அவளைப் பார்த்தான். ''ஆமா, அருள் நீங்கதான் சேர்ந்து வாழ முடியாதுன்னு சொல்றீங்கள்லே. வேண்டாம். இந்தப் பாழாப் போன கல்யாணம் வேண்டாம். அந்த கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டு எங்க அம்மா அப்பா என்ன சந்தோஷம் அனுபவிச்சுட்டாங்க வில் எண்ட் அப் இன்அன் அஃபேர். இப்ப எங்க அம்மா அப்பா வந்து என்ன செய்ய முடியும்?'' என்றாள்.

சொல்லி முடிக்கையிலே அவன் வலது கை கிண்ணென்று அவள் கன்னத்தில் இறங்கியது. அவள் கன்னத்தை ஆழ்ந்து பிடித்துக் கொண்டு அவனை மலங்க மலங்கப் பார்த்தாள்.

''பல்லைப் பேத்துடுவேன். இவ்வளவு கீழே போவியா நீ?'' என்றான்.

''போகக்கூடாதில்லே? நீங்களும் போக மாட்டீங்க தானே? அப்ப ஒழுங்கா கல்யாணம் பண்ற வழியப் பாருங்க'' என்றாள். அருள் திகைத்துப் போனான்.

''அருள், இது நடக்கும். இது நடக்கணும்.நீங்க என்ன பண்ணுவீங்கன்னு'' எனக்குத் தெரியாது. ஆனா நான் என்ன



பண்ணனும்னு எனக்கு தெரியும். ஆனா அதுக்காக நான் இன்னைக்கு இங்கிருந்து போயிடுவேன்னு நினைக்காதீங்க. இனிமேல் உங்ககிட்டே இப்படி வழிவேன்னு நினைக் காதீங்க. இந்த மூணு மாசம் நான் இங்கேதான் இருப்பேன்டா. இங்கதான் இருப்பேன்!'' என்றாள்.

அவன் திகைத்துப் போய் அவளைப் பார்த்தான். ''எங்கே ஓடுவீங்க? காலையிலே இருந்து ராத்திரி வரைக்கும் ஓடுவீங் களா? நைட் வரத்தானே செய்வீங்க? நீங்க நடக்கறதை, பார்க்கறதை, தூங்கறதை எல்லாத்தையும் நான் அணு அணுவா உள்ள வர்ங்கி வச்சிருக்கேன். மனசுக்குள்ள வச்சுக்குவேன். மனசால உங்களோட வாழ்க்கை நடத்து வேன். அதை நீங்க கெடுக்க முடியாதில்லே?'' என்றாள்.

''ப்ளீஸ் இந்து!'' என்றான் அவன் வேதனையுடன்.

''வேதனையா இருக்கில்லே? அப்ப நாம பிரிஞ் சுடலாம்னு சொல்லும் போது எனக்கும் அப்படித்தானே இருக்கும்?. இப்போதைக்கு சின்னதா ஒரு ஸ்டெப் எடுத்தா போதும் உங்க மனசிலே இருக்கறதெல்லாம் வெளியே வந்துடும்'' என்றவள் அவனை நெருங்கினாள்.

அவன் சட்டென்று பின்னாலே போய் சுவற்றோரம் சாய்ந்து கொண்டான்.

''ப்ளீஸ் இந்து!''

அவள் அதற்கு மேல் கால் எடுத்து வைக்க வில்லை. ''அப்படியெல்லாம் நினைச்சுக்காதீங்க. ஐ ஹேவ் மை ஓன் டிக்னிட்டி!'' என்று பின்னாலே காலெடுத்து வைத்தாள்.

"நான் இங்கே தான் இருப்பேன். மூணு மாசம் இங்கேதான் இருப்பேன். நீங்க ரோஷமுள்ளவரா இருந்தா எங்கயும் போகக்கூடாது. இங்க தான் நடமாடணும். ஆனா எங்க அம்மா அப்பாவை டேக்கிள் எப்படி பண்றதுன்னு நான் பார்த்துக்கறேன்!" என்றாள்.

அவன் ஒன்றுமே பேசவில்லை. அவள் மறுபடியும் சற்று நேரம் நின்று அவனை ஆசையுடன் உள்வாங்கிக் கொள்வது போல பார்த்தாள். அவனும் மெல்லத் தன் மார்பை நீவியபடி அவளுடைய அந்தக் கிறக்கப் பார்வையைத் திருப்பிக் கொடுத்தான்.

"என்ன இந்து இப்படிப் பண்றே?" என்றான். அதே கிறக்கத்துடன்.

"இப்படித்தான் பண்ணுவேன். உங்களைத் தேடி வர்றது இன்னையோட கடைசி. ஆனா, இந்த வீட்ல எந்த மூலையிலிருந்தாவது நான் இப்படித்தான் பார்த்துக்கிட்டிருப்பேன் என் பார்வையும், ஆசையும், பிரியமும் உங்களைத் துரத்திகிட்டே தான்இருக்கும். முடிஞ்சா தப்பிக்கப் பாருங்க மிஸ்டர் அருள்!" என்றாள்.

அவன் பேச்செழாமல் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் மறுபடியும் நெருங்கினாள். ஆனால், பெரிதாக அருகில் வராமல் அவனுடைய முகத்தை மட்டும் தன் இரு கைகளாலும் அருகிலே இழுத்து நெற்றியிலே முத்தமிட்டு விட்டு "எங்கிட்டே இருந்து நீங்க தப்பிக்கவே முடியாது அருள் பிரகாஷ்!" என்று அடிக்குரலிலே சிரித்தாள்.



சிரித்துவிட்டு வேகமாக படியிறங்கிப் போனாள். பத்து படிகள் தான் இறங்கியிருப்பாள். பிறகு அங்கேயே நின்று தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு மறுபடியும் இறங்கிப் போனாள்.

அருள் பிரகாஷ் சற்று நேரம் தன் நிலையை மறந்து நின்றவன். கட்டிலில் போய் தொப்பென்று விழுந்தான். போனவள் சும்மா போகவில்லை. படியின் ஓரத்திலே போய் நின்று "இட்ஸ் எ சேலஞ்ஜ் மிஸ்டர் அருள் பிரகாஷ்!" என்று சொல்லிவிட்டுப் போயிருந்தாள்.

அவளுடைய தொடுகையும் அவளுடைய அந்த நேசப் பார்வையும் தைரியமாக வெளிப்படுத்திய உணர்வுகளும் அவனைப் பிரித்துப் போட்டுத் துண்டாடின.

எவ்வளவுக்கெவ்வளவு அவன் உள்ளத்திலே பரவசம் எழுந்ததோ அவ்வளவுக்கவ்வளவு நிலைமையின் விபரீதமும் அவனுக்கு புரிந்தது.

## அத்தியாயம் - 19

உறக்கமே வராமல் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தான் அருள் பிரகாஷ். ஒரு பக்கம் இந்துமதியை நினைத்தால் சிரிப்பு வந்தது. உலக அனுபவம் இல்லாதவள் என்பது தெரிகிறது. எப்படி இப்படி பேசுகிறாள். 'வாடா, போடா!' என்று மிரட்டுகிறாளே என்று அவனுக்கு சிரிப்பாகவும் இருந்தது. ஆனால், இரண்டு பேருடைய பார்வைகளும் கவ்வி நின்ற அந்தக் கணத்தை

நினைக்கும் போது அவனுக்கு உள்ளுக்குள்ளே ஒரு சிலிர்ப்பு ரேகை ஓடியது. சற்று நேரம் அவளைப் பற்றிய சிந்தனையிலேயே அமர்ந்திருந்தான்.

கொஞ்ச நாட்களாகவே அழகழாக உடை உடுத்து கிறாள். அவனை அவஸ்தைப் படுத்துகிறாள். ஆனாலும் அவனுக்கு உலக அனுபவம் இருந்தது. ஒரு பெரிய அட்வர்டைசிங் ஏஜென்ஸியோடு இவன் டை அப் வைத்துக் கொண்டிருந்தான். அங்கே வருகிற மனிதர்களைப் பார்த் திருக்கிறான். மேல் தட்டு மனிதர்களைப் பார்த்திருக்கிறான்.

அந்த மேல் மட்டத்து மனிதர்களுக்கு இடையிலே ஒளிவு மறைவற்ற வாழ்க்கை இருப்பதில்லை என்பதையும் அவன் புரிந்து கொண்டிருந்தான். எல்லாவற்றைக் காட்டிலும் சிந்துஜாவினுடைய குணம் அச்சத்தை தருவதாக இருந்தத

இந்தக் காதல் தன்னைக் காயப்படுத்தும் என்பதை அவன் ஆழமாக உணர்ந்திருந்தான். 'இவளுக்கு மட்டும் இப்படி சொத்து பத்து இல்லாம இருந்திருந்தா...!'' என்று பெருமூச்சு விட்டான். சொத்தோடு பெண் கிடைத்தால் கொத்திக் கொண்டு போவதற்குத்தானே மனிதர்கள் தயாராக இருப்பார்கள்? ஆனால் தான் என்ன அப்படிப் பெண் வேண்டாம் என்று அச்சப்படுகிறோம் என்று அவனுக்குத் தன்னைக் குறித்து சிரிப்பும் வந்தது.

இளமை ததும்பும் முகம்! இன்னசன்ட் என்பார்களே அது போல ஒரு வெகுளித்தனம். இவன் என்ன நினைப் பான் என்று சற்றும் யோசிக்காமல் தன்னைச் சீண்டு கிறாளே என்று அவனுக்கு சிரிப்பாகவும் வந்தது. ஆனால் அப்பாவின் கௌரவத்துக்கும் இடைஞ்சல் வந்து விட



கூடாது. அப்பாவை நண்பன் என்று எண்ணித்தானே சந்திர மோகன் அங்கிள் தன் மகளைப் பொறுப்பாக ஒப்படைத் திருக்கிறார்.

இப்படி இருக்கும்போது இப்படி ஒரு நினைப்பைத் தன் மனதிலே ஏற்றிக் கொண்டால் அது எவ்வளவு பெரிய தவறாக இருக்கும்? அவளுக்குத்தான் புரியவில்லை.

'இப்படிப் பாடாய்ப் படுத்துகிறாளே பாவி, பாவி!' என்று செல்லமாகத் திட்டிக் கொண்டான். ஒரு வழியாக உறங் கினான். உறக்கத்தின் நடுவிலும் அவள் படியிலே வேக வேகமாய் வருவது போலவும் 'அருள்!' என்று அழைத்துக் கொண்டு உள்ளே நுழைவது போலவும் தான் காட்சிகள் வந்து போயின. அதைக் காட்டிலும் தன் சட்டைக் காலரைப் பிடித்து வம்பு செய்தாளே நெற்றியில் முத்தம் வைத்தாளே அந்தக் காட்சிகள் எல்லாம் தான் அவன் நினைவுகளில் ஓடின.

ஆழ்ந்த உறக்கம் கிடைக்கவில்லை. மாறாக கொஞ்சம் கற்பனையிலேதான் ஆழ்ந்து போனான். நள்ளிரவுக்கு மேல்தான் அவனுக்கு உறக்கம் வந்தது. அதற்கு நேர்மாறாக கீழே இந்துமதி தன் அறைக்கதவைச் சாத்திக் கொண்டு படுத்திருந்தாள்.

குப்பம்மாவுக்கு என்று ஒரு சின்ன அறை கொடுத்திருந் தார்கள். அவர்களுக்கு ஸ்டோர் ரூமாக இருந்தது போலும். அதையெல்லாம் ஒதுக்கி ஒரு புறமாக வைத்து விட்டு அவளை மதித்து அவளுக்கு ஒரு அறை கொடுத்திருந் தார்கள்.

இந்துமதி தலையணையில் முகம் பதித்துக் கொண்டு வெட்கத்தில் தவித்தாள். 'சே! என்ன காரியம் செஞ்சோம்? அவரைப் போய் சட்டையைப் பிடிச்சு மிரட்டி, வலிய வம்பிழுத்து..! இதெல்லாம் என்ன?'' என்று தனக்குத்தானே கேள்விகளைக் கேட்டுக் கொண்டாள்.

தன் மனம் தறிகெட்டுப் பாய்கிறது என்றும் அது முழுக்க முழுக்க அவன் காலடியிலே மண்டியிட்டுக் கிடக்கிறது என்றும் அவளுக்கு புரிந்தது.

அருள்பிரகாஷுக்கும் தன் மேல் நாட்டம் இருப்பது அவளுக்குப் புரிந்தது. ஆனால், அவன் அறிவுப் பூர்வமாக யோசிக்கிறான். தன்னுடைய பெற்றோருடைய குண விசேஷங்களைப் புரிந்து கொண்டவன் என்பதால் இதனால் என்ன விளைவுகள் ஏற்படும் என்று யோசிக்கிறான். நியாயம் தான். ஆனால், ஒரு மனம் இன்னொரு மனத்திடம் ஒன்றி விட்டால் இந்த மாதிரி லாஜிக்குக்கெல்லாம் அங்கு என்ன வேலை?

சிந்து அம்மா வேண்டுமானால் கடுமையாக எதிர்ப்பு தெரிவிக்கலாம். ஆனால் அம்மாவிற்கு அன்பைப் பற்றி என்ன தெரியும்? காதலைப் பற்றி என்ன தெரியும்? சொன்னாலும் புரியாது. புரியாதவர்களுக்கு எதற்காக விளக்கிக் கொண்டிருக்க வேண்டும்? போராடிப் பார்த்து விட வேண்டியதுதான். ஆனால், துரதிருஷ்ட வசமாக தன்னுடைய போராட்டம் அருள் பிரகாஷை ஒத்துக் கொள்ள வைப்பதற்காகவும் கூட...!'' என்று நினைக்கும் போது அவளுக்கு வருத்தமாக இருந்தது.



அவன் அவளை விழுங்குவதுபோல் பார்த்த போதே அவளுக்குப் புரிந்தது. கண்டிப்பாக அவன் தன்னை நேசிக்கிறான். 'அதை ஏன் அவர் ஒத்துக் கொள்ளக் கூடாது?' என்ற எண்ணமும் தோன்றியது.

உறக்கம் வரவில்லை. எழுந்து அமர்ந்து கொண்டாள். கதவை மெல்லத் திறந்தாள். அந்த வீட்டில் ஒரு விசேஷம் என்னவென்றால் உள்ளிருந்து படி போனது. அங்கே மேலே கதவு இல்லை. அது நேராக மொட்டை மாடிக்குப் போய் நின்றது. வெளிப்புறத்தில் இருந்து வரும் படிக்கட்டில் தான் அந்தப் பக்கமாக ஒரு கதவு போட்டிருந்தார்கள். அதனால் யோசிக்காமல் நடந்தவள் மீண்டும் தன்னுடைய அறைக்கு வந்துவிட்டாள்.

பிறகு மெல்ல எட்டிப் பார்த்தாள். சிகாமணி நன்றாக உறங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. லேசான ஒரு குறட்டை சத்தம் வரும். கமலவதியும் அப்படித்தான். லேசான ஒரு குறட்டை சத்தம் அவரிடத்தில் இருந்தும் வரும்

குப்பம்மா எப்போதும் அடித்துப் போட்டது மாதிரி தூங்கி விடுவாள். அதனால் மெல்ல அடி மேல் அடி எடுத்து மொட்டை மாடிக்குப் போனாள். அருள் பிரகாஷ் அறைக் கதவை தாழிடுவது இல்லை என்பது அவளுக்கு தெரியும். லேசாக கதவை ஒருக்களித்து வைத்திருப்பான்.

இவள் போய் மெல்ல கதவை நகர்த்தினாள். நேரம் பார்த்தால் இரண்டு மணி! அவன் அப்போது தான் கண் அயர்ந்தான் போலும். உறக்கத்தில் அமைதியாக இருந்தது அவன் முகம்.

ஒரு குழந்தையைப் போல ஒரு கள்ளமில்லாத்தன இருந்தது. இவனா போன வாரத்தில் ஒரு ஆர்ப்பாட்டத்தில் கையைத் தூக்கி கையைத் தூக்கி ஆங்காரமாக குரல் கொடுத்துக் கொண்டிருந்தவன் என்று நினைத்தபோது சிரிப்பு வந்தது. மெல்லப் புன்னகைத்தாள்.

அவன் என்ன நினைத்தாலும் சரி என்று ஒரு சேரை இழுத்து சற்று முன்னாலே போட்டுக் கொண்டு அவனை ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள். யாராவது ஒருவர் குறுகுறுவென்று பார்க்கும் பொழுது ஒரு உள்ளுணர்வு தோன்றுமல்லவா? அது போல் அவனுக்கும் தோன்றியது போலும்.

லேசாகக் கண் விழித்துப் பார்த்தவன் திடுக்கிட்டுப் போனான். அடித்துப் பிடித்துக் கொண்டு எழுந்து அமர்ந்தான். "ஏய், நீ என்ன இந்த நேரத்திலே?" என்றான்.

அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது. தலையைக் குனிந்து கொண்டாள். அவன் எழுந்து படுக்கையில் சாய்ந்து அமர்ந்தான். பனியனோடு இருந்தான்.

அவசரமாகக் கையை நீட்டி கொடியிலேயிருந்த துண்டை எடுத்துப் போர்த்திக் கொண்டான். "என்னடா ஏண்டா இப்படிப் பண்றே?" என்றான்.

அவள் அவனை ரசித்தபடி பார்த்தாள். "எனக்குத் தூக்கம் வரலை!" என்றாள்.

"ப்ளீஸ், நீ...!"

"எங்க அம்மா அப்பாவைப் பத்தி யோசிக்காதீங்க. எனக்குத் தேடின இடத்திலே எங்கயுமே அன்பு கிடைக்



கலை. நீங்களும் மறுக்காதீங்க!" என்றாள். அவன் செய்வதறியாமல் அவளைப் பார்த்தான்.

"எங்க அம்மா அப்பாவுடைய அன்பு நேரடியா கிடைக்கலைன்னா கூட நான் தாங்கிப்பேன். ஆனா, எல்லாத்தைக் காட்டிலும் இப்ப நீங்கதான் முக்கியம்னு நான் நினைக்கிறேன். இந்த மனசு உங்க காலடியில கிடக்கறது புரியலையா?" என்றாள்.

அவன் இன்னும் திடுக்கிட்டுப் போனவனாக எழுந்து காலை கீழே வைத்துக் கொண்டு கட்டிலிலே அமர்ந்தபடி பார்த்தான்.

"ப்ளீஸ்! கொஞ்சம் பொறு. நான் கேட்கறதுக்கு நீயே பதில் சொல்லு. உங்க அப்பா உன்னை நம்பி இங்கே கொண்டு வந்து விட்டிருக்காரு. இப்படி நமக்குள்ளே ஒரு பிரச்சினை வந்தா எங்க அப்பாவைத் தானே சந்தேகப்படுவாரு? எங்க அப்பாவோட இண்டகிரிட்டிதானே பாதிக்கப்படும்?" என்றான்.

அவள் ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு "புரியுது. ஆனா என் மனசு எங்கிட்டே இல்லையே? ஐ ஃபீல் வெரி கம்ஃபர்டபிள் வென் எவர் ஐ'ம் வித் யூ!" என்றாள்.

என்ன பேசுவது என்று தெரியாமல் எழுந்து நின்றான் அருள் பிரகாஷ். அவளும் எழுந்து நின்றாள். "இத பாருங்க அருள், எங்க அப்பா எங்க அம்மாவை ஏமாத்தினதே என்னால தாங்க முடியலை. அவரை நான் இழந்துட்ட மாதிரி உணர்ந்தேன். நீங்க முடியாதுன்னு சொன்னா அதுக்கப்புறம் நான் வாழ்றதுல அர்த்தமே இல்லை!" என்றாள்.

"ஏய், என்ன பேசறே நீ!" என்று அவன் தன்னை மறந்தவனாக அவளை இழுத்து அணைத்துக் கொண்டான். அந்த இரவும் அவளுடைய அருகாமையும் அவள் தரத் தயாராக இருந்த அன்புமோ என்னவோ அவன் அந்தப் பத்து நிமிடங்களில் முழு வேகத்தையும் காட்டி விட்டான்.

அவளும் இழைந்து கொடுத்தாள். சற்றே எல்லை மீறுகிற தருணத்தில் இரண்டு பேருமே விலகிக் கொண்டார்கள். வெட்கத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"பார்த்தீங்களா? இப்ப நம்ம ஃபீலிங்க்ஸ் தானே ஜெயிச்சது!" என்றாள் அவள் வெட்கத்துடன்.

"அதான் எனக்குக் கவலையா இருக்கு. இப்போதைக்கு நமக்கு ஃபீலிங்ஸ் தான் முக்கியமா தெரியும். ஆனா உங்க அப்பாவுக்கு...?"

"ப்ளீஸ். இதையே ரிபிட் பண்ணாதீங்க. நான் எங்க அப்பா அம்மாகிட்டே சொல்லிக்கறேன். உங்க தப்பு எதுவும் இல்லை. நான் தான் கம்பெல் பண்ணினேன்னு சொல்றேன்!"

"அடி பாதகத்தி, இவ்வளவு தைரியமா பேசுவியா?" என்றான்.

"தேவைப்பட்டா இதை விடக் கூட தைரியமா பேசுவேன்!" என்றவள் "அப்ப... உயிரை விடுவேன்னு சொன்னாத்தான் மனசிலே இருக்கறதை வெளியே விடுவீங்க!" என்றாள்.

"இங்கே பாரு, இப்போ இல்லே, என் மனசை எப்ப உங்கிட்டே கொடுத்தேனோ அப்பவே முடிவு பண்ணிட்டேன்.



வாழ்ந்தா உன்னோடதான். ஒருவேளை உங்க அம்மா அப்பா ஒத்துக்கலைன்னா கூட நான் தனியாத்தான் இருந்திருப்பேன். இப்ப நீ இங்கே கழிக்கிற ஒவ்வொரு நிமிஷத்தையும் மனசிலே வச்சுக்கிட்டு நான் அதைத்தான் நினைச்சுட்டு வாழ்க்கையை ஓட்டி இருப்பேன்" என்றான்.

அவள் திரும்பவும் ஓடி வந்து தன் வலக் கையால் அவன் கழுத்தை வளைத்துக் கொண்டாள். மறுபடியும் அவன் குனிந்து தன் பரிசுகளை வாரி இறைத்தான். அவள் மெல்ல விலகினாள்.

இப்போது சற்றே நடுக்கம் வந்தது. "ப்ளீஸ் வேண்டாம். நான் இன்னும் ஒரு நிமிஷம் இங்கே இருந்தேன்னா கூட என்ன நடக்கும்னு எனக்குத் தெரியாது!"

"ஆமாம் போயிடு. ப்ளீஸ் போடா! என்றான்.

அவள் சரேலென்று அவனிடம் இருந்து விலகிக் கொண்டு அவன் அறைக் கதவு வரை வந்தாள். பிறகு நின்று திரும்பிப் பார்த்தாள். அவனும் அங்கே நின்று தாபத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் பார்வையை உள் வாங்கிக் கொண்டவளாக மெல்ல இறங்கி வந்தாள். இப்போதும் அவர்கள் எல்லோரும் விடுகிற லேசான குறட்டைச் சத்தம் தெரிந்தது. அடி மேல் அடிவைத்து பூனை போல் நடந்து தனக்காகக் கொடுக்கப் பட்டிருந்த அறைக்குள்ளே போய் அறைக் கதவைச் சாத்தினாள். ஆனால், மனக்கதவை திறந்து கொண்டாள்.

## அத்தியாயம் - 20

இரவெல்லாம் இரண்டு பேரும் உறங்கவில்லை. அவள் தன்னுடைய லேப்டாப்பை எடுத்து வைத்துக்கொண்டாள். அவனுக்கு மெசேஜ் அனுப்பினாள். அவனும் மேலே தன்னுடைய டெஸ்க்டாப் கம்ப்யூட்டரை திறந்து கொண்டு கதவைச் சாத்திக் கொண்டு இரண்டு பேரும் மறுபடியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு சற்று நேரத்தைக் கழித்தார்கள். அதற்குப் பிறகு குட் நைட் சொல்லி ஒரு வழியாக அவரவர்கள் படுக்கையிலே படுத்தார்கள்.

ஆனால், படுத்தார்களே தவிர உறங்கவில்லை. மறுபடியும் மெசேஜ் குறுஞ் செய்திகள் இங்கிருந்து அங்கும் அங்கேயிருந்து இங்கும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. 'ஸ்வீட் நத்திங்ஸ்!' என்பார்களே அது போல் ஒன்றுமே இல்லாமல் செய்திகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

பரிமாறிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே இருவரும் பரிமாறிக் கொண்டார்கள். மூன்று மணிக்கு மேல் செல்ஃபோனில் மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தார்கள். அவனுடைய கிறக்கம் நிறைந்த பேச்சு அவளை தவிக்கச் செய்தது என்றாலும் விருப்பத்துடன் கேட்டுக் கொண்டாள்.

''என்ன? நேத்து நைட்டெல்லாம் மிரட்டு மிரட்டுன்னு மிரட்டினே? வாடா போடான்னே. இப்ப நான் பேச ஆரம்பிச்சவுடனே சத்தத்தையே காணோம்!'' என்றான்.

அவள் வெட்கத்துடன் சிரித்தாள்.



''இப்படியெல்லாம் சிரிக்காதே... இங்கே மனுஷனுக்கு இருப்புக் கொள்ள மாட்டேங்குது''

அவள் மறுபடியும் சிரித்தாள். ''ஜெயிச்சுட்டேங்கற கர்வம்...?'' என்றான்.

''ம்ஹூம்.... தோத்துட்டேங்கற சந்தோஷம்!'' என்றாள் அவள்.

''போச்சுடா, இப்படியெல்லாம் வேற பேசுவியா?''

''ம்... பேசுவேன்!'' என்றாள் அவள்.

''ஆனால், நாம முறையா சந்திக்கும் போது பேசவே விடமாட்டேன் தெரியுமா?'' என்றான்.

அவள் சற்று நேரம் ஒன்றும் பேசவில்லை.

''என்ன இப்பவே பேசக் காணோம்!'' என்றான்.

''நீங்க ரொம்பப் பேசறீங்க!'' என்றாள் அவள்.

அவன் அந்தப் பக்கம் கிறக்கமாக சிரித்தான். ''இதெல்லாம் நல்லாத்தான் இருக்கு. நாளைக்கு உங்க அம்மா அப்பாகிட்டே சொல்லும் போது...!'' என்று அவன் மறுபடியும் ஆரம்பிக்க.

''இத பாருங்க, இனிமேக் கொண்டு எங்க அம்மா அப்பாவை நம்ம பேச்சிலே இழுக்காதீங்க. நாளைக்கு என்ன நடந்தாலும் சரி. அப்படின்னா உடனே நான் வேற யாருக்காவது கழுத்தை நீட்டிடுவேன்னு மட்டும் நினைக்காதீங்க போராடுவேன். கடைசி வரைக்கும் போராடுவேன். நீங்க எனக்குத் துணையாக் கூட

வரவேண்டாம். நீங்க இங்கிருந்துட்டே நான் உனக்காக காத்துகிட்டிருக்கேன்னு சொன்னாப் போதும்!'' என்றான்.

''இனிமேல் சொல்லாமல் எப்படி இருக்கறது? அதான் பைத்தியம் பண்ணிட்டியே. ம்...!'' என்று சிரித்தவன் சற்று நேரம் தங்களுக்குள் நடந்த பரிமாற்றங்களைப் பற்றி பேசினான்.

அவள் ''ப்ளீஸ், அதெல்லாம் பேசாதீங்க!'' என்றாள்.

''இப்ப மட்டும் பேசாதீங்க பேசாதீங்கங்கறே! அப்பவே பேசுங்க பேசுங்கன்னே! நான் இதுக்குதாங்க மேடம் பயந்தேன்! பேசாம இருக்கலாம்னு பார்த்தேன். பேச வச்சுட்டே. நான் பேச ஆரம்பிச்சேன் நிறுத்த மாட்டேன். அதுக்குத்தான் பயந்தேன்!'' என்றான்.

''பேசுங்க. என்ன வேண்ணாலும் பேசுங்க. நீங்க பேசறதைக் கேட்கறதுக்குத்தானே நான் இருக்கேன்!'' என்றாள் அவள்.

''ரியலி, என்ன வேணும்னாலும் பேசட்டுமா?'' என்றான் அருள் பிரகாஷ். ''இப்பவே! இந்தப் போடு போடறியா! கல்யாணம்னு ஒண்ணு ஆயிட்டா...''

''ஏன்? நீங்க மட்டும் என்னவாம். என்னமோ சத்திய சிலன் மாதிரி வேண்டாம் வேண்டாம்னீங்க. ஆனா கச்சேரி ஆரம்பிச்சவுடனேயே...!'' அவன் பெருமையாக சிரித்தான்.

பிறகு, ''ஏய், வேண்டாம். அப்புறம் நான் எதைப்பத்தியும் யோசிக்கமாட்டேன். இீமே அம்மா அப்பா இருக்காங்க குப்பம்மா இருக்காங்க. எதைப்பத்தியும் கவலைப்பட மாட்டேன். நேரா இறங்கி வந்துடுவேன்!'' என்றான்.



அவள் ஒன்றும் பேசவில்லை.

அவன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டு விட்டு ''எப்படியோ தூக்கம் போச்சு!'' என்றான். அப்பொழுது தான் அவன் மணியைப் பார்த்தான்.

''ஐய்யோ, மணி ரெண்டாச்சு. கொஞ்ச நேரமாவது தூங்குங்க. மாமா வேற ஆறு மணிக்கெல்லாம் எழுந்துரு வாரு!'' என்றாள்.

''ம்... ட்ரை பண்றேன். தூக்கம் வருதான்னு பார்க்கறேன்!'' என்றான்.

''நைட்டே பன்னிரெண்டு மணிக்குத்தான் கண்ணை மூடினேன். அதுவரைக்கும் நீ என்னைப் போட்டு அவஸ்தைப் படுத்திட்டே. அப்ப தான் கண்ணை மூடினேன். மறுபடியும் வந்து புரட்டிப் போட்டுட்டுப் போயிட்டே''.

அவள் சிரித்தாள். ''சிரிக்காதடி, இருக்கவே முடியலை!'' என்றான்.

''ஓகே, ஓகே! போதும் குட் நைட்!'' என்று அவள் செல்ஃபோனை ஆஃப் செய்து விட்டாள்.

அவனை வென்று விட்டோம் என்ற நினைவிலே அதற்குப் பிறகு அவள் ஆழ்ந்து உறங்கி விட்டாள். வழக்கமாக ஆறு மணிக்கு எழுந்திருப்பவள் ஏழு மணி ஆகியும் கூட விழிக்கவில்லை.

கமலவதி கூட கதவைத் திறந்து பார்த்து விட்டு 'சரி, பாவம் ஏதோ தூங்குகிறாள்!' என்று எண்ணிக் கொண்டு

கதவைச் சாத்தி விட்டுப் போய் விட்டாள். அருள் பிரகாஷும் அதிகாலையிலேதான் உறங்கினான். அப்போதும் ஆழ்ந்த உறக்கம் இல்லை.

அவள் நினைவுகள் நெஞ்சிலே ஊடாடின. இனி எதிர்காலத்தில் என்ன செய்யப் போகிறோம். எப்படித் திட்டமிட்டு அவளுடைய தாய் தந்தையை சமாளிக்கப் போகிறோம். அவள் அப்பா எப்படி எடுத்துக் கொள்வாரோ தெரியவில்லை. நம்பி பெண்ணைக் கொண்டு வந்து விட்டு விட்டுப் போனா. இப்படி விளையாடிட்டீங்களே என்று கேட்டால் என்ன சொல்வது? என்று என்னென்னமோ அவனுக்கு தோன்றியது. ஆனாலும் இந்த உணர்வு சுகமாக இருந்தது.

ஏதோ ஒரு பெண்ணிடம் தன் மனம் பறிபோய் விட வில்லை. ஒரு நல்ல பெண்ணிடம். அன்புக்காக ஏங்கி நிற்கிற பெண்ணிடம்தான் தன் மனம் பறிபோயிருக்கிறது. சொல்லப்போனால் அவளுக்கு உலகத்து அன்பை யெல்லாம் கொட்டிக் காட்ட வேண்டும். அன்பாலே அவளைக் குளிப்பாட்ட வேண்டும். நேசமும் காதலும் வேகமுமாக அவளுக்கு ஒரு வாழ்க்கையை கற்பிக்க வேண்டும் என்றெல்லாம் அந்த நேரத்தில் அவன் சங்கல்பமும் எடுத்துக் கொண்டான்.

"பார்க்கலாம்! அவளே சமாளிச்சுக்கறேங்கறா. நாம ஏன் யோசிக்கணும்? மெது மெதுவா அம்மா அப்பாவிடம் சொல்ல வேண்டியதுதான். இது ஒரு தங்களை மீறிய நிகழ்வு!" என்பதைப் பெற்றோர்களுக்குப் புரிய வைக்க



வேண்டியதுதான் என்று எண்ணிக் கொண்டதற்குப் பிறகுதான் அவனுக்கு கொஞ்சம் உறக்கம் வந்தது.

எழுந்திருக்கும் போதே மணி எட்டாகி விட்டது. அவசர அவசரமாகப் போய் குளியல் அறையிலே தன்னுடைய குளியலை முடித்துக் கொண்டு வெளியிலே வந்தான். அப்பா இந்நேரம் பூஜையை முடித்து டிபன் சாப்பிட்டிருப் பார். இப்போது போய் அங்கே டிஸ்டர்ப் செய்ய வேண்டாம். ஒரேயடியாக தயாராகிப் போய் டிஃபனை சாப்பிட்டு விட்டு வெளியே கிளம்பலாம்.

இங்கே இருந்தால் வம்புதான். அவள் ஓரக்கண்ணால் பார்ப்பாள். சீண்டுவாள் என்றெல்லாம் எண்ணியவன் சிரித்துக் கொண்டான்.

நுகர்வோர் சங்க விஷயமாக ஒரு இரண்டு மூன்று கடிதங்கள் எழுத வேண்டி இருந்தது. அதையும் எழுதிக் கையோடு எடுத்துக் கொண்டு போய் விடலாம் என்று மேஜையிலே ஒரு பேடை வைத்து எழுத ஆரம்பித்தான்.

இரண்டு மூன்று கடிதங்களை எழுதி உறையிலே போட்டு யார் யாருக்கு அனுப்ப வேண்டுமோ அவர்கள் விலாசத்தை எழுதி விட்டு நிமிர்ந்தான். சற்று நேரம் சிந்தனையிலே ஆழ்ந்தான். முந்தைய இரவு நினைப்பும் இனி வரப் போகிற நாட்களின் சுகப்புமாக அவன் நெஞ்சத்தில் மாறி மாறி மோதி அவனை அலைபாயச் செய்தது.

இவ்வளவு தூரம் தன் மேல் உயிரை வைத்திருக்கிற பெண்ணை எப்படி விட்டுக் கொடுக்க முடியும்? அது முடியாது. அவள் தொட்ட இடமெல்லாம் குளிர்ந்தது

இப்போது கூட. மலரினும் மென்மையோடு இதமாக இருந்தது. இது என்ன இந்தப் பாடு படுத்துகிறது? அதனால் தான் இதில் மாட்டிக் கொண்டவனெல்லாம் மயக்கம் கொண்டவனைப் போலவே திரிகிறானா.

அப்பாதான் அடிக்கடி சொல்லுவார் 'கள்ளுக் குடித்தவனைப் போல!' என்று இந்த மயக்கம் இப்படித்தான் இருக்குமா என்று. எண்ணி சிரித்துக் கொண்டான்.

வேண்டும் போலவும் இருக்கிறது. வேண்டாம் போலவும் இருக்கிறது. முதலிலே வீம்பாகப் பேசியவள் தான் வெளிப்படுத்திய உணர்வுகளின் வேகத்தைப் பார்த்தபொழுது வெட்கமும் நாணமுமாக ஒளியப் போனவன் தலையாரி வீட்டில் ஒளிந்த மாதிரி அவன் மார்பிலே அடைக்கலம் புகுந்ததை நினைத்தபோது அவனுக்கு ஒரு விதமான பரவசமாகத்தான் இருந்தது.

கண்கள் லேசாக சிவந்திருந்தன. உணர்வுகளின் தாக்கம் வேறு ஒரு மாதிரியான நிலைக்கு அவனைத் தள்ளி இருந்தது. அப்பொழுது பின்னாலே ஆள் வருகிற அரவம் கேட்டது.

தைரியமாக வருகிறாளே இந்தப் பெண்? என்ன சொல்லி விட்டு வருகிறாளோ என்று எண்ணியவன் திரும்பிப் பார்க்காமல் "ஏய் இந்து, காலையிலயே வந்துட்டியா? அதான் நேத்து நைட்டே எல்லாம் பேசினோமே. மனுஷன் நைட் ஃபுல்லா தூங்கலை. காலையில தான் தூங்கினேன். இப்ப வந்து நிக்கறே! நீ இப்ப என்ன பாடா படுத்தப் போறே" என்றான்.



அவளிடம் இருந்து பதில் வரவில்லை. "ப்ளீஸ், இந்து இப்படி என்னைக் கொல்லாதே. எனக்குக் கொஞ்சம் டைம் கொடு. நான் என்ன செய்யணும்னு யோசிக்கிறேன்!" என்றபடியே திரும்ப எத்தனிக்கையில் அவன் தோள்களில் ஒரு கை அமர்ந்தது.

அது இந்துமதியின் கை அல்ல. திடுக்கிட்டுப் போய்த் திரும்பினான். அவன் கண்கள் இரண்டும் நிலைகுத்தினாற் போல ஆகிவிட்டது. அப்படி அவன் எதிர்பாராத ஒரு நபர் அங்கே நின்று கொண்டிருந்தார். அவன் திடுக்கிட்டுப் போய் உதறலுடன் எழுந்து நின்றான்.

உலகமே தலைகீழாக சுற்றியது போல இருந்தது.

## அத்தியாயம் - 21

சந்திரமோகனின் வருகைக்காக வாசலிலேயே காத்துக் கொண்டிருந்தாள் சிந்துஜா. பார்த்தாலே தெரிந்தது இன்றைக்கு சிரத்தையெடுத்து அலங்காரம் செய்து கொண்டிருக்கிறாள் என்று. இவர்கள் இரண்டு பேரும் பேசிக் கொள்ளட்டும் என்பதற்காகவோ என்னவோ மகாலிங்கமும், மரகதமும் கோயிலுக்குப் போகிறோம் என்று போய் விட்டார்கள்.

'விருந்தாளிக வந்ததும் உபசரணை பண்ணி விட்டு அப்புறமா நீங்க அந்தப் பக்கம் போயிடணும். அவர்கள் கூப்பிட்ட அப்புறம் தான் வரணும்'என்று வேலைக் காரர்களிடம் சொல்லி விட்டார்கள்.

சந்திரமோகன் சொன்ன நேரத்துக்கு வந்து இறங்கினார். அவரும் ட்ரிம்மாகத்தான் இருந்தார். என்ன, இன்னும் நாற்பதுகளிலேதானே இருக்கிறார். இன்னும் நாற்பத்தைந்தைக் கூட தாண்ட வில்லை. அதனால் மனிதர் இன்னும் இளமையாகத்தான் இருந்தார்.

'வாங்க!' என்று வரவேற்றாள் சிந்துஜா.

அவளை சற்றே வேதனையுடன் பார்த்து விட்டு உள்ளே நுழைந்தார் சந்திரமோகன். இவள் ஏதோ நாம பேசுவதற்காக வந்திருக்கிறோம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாள். ஆனால் மணமுறிவு கேட்பதற்காக வந்திருக்கிறோம் என்று தெரிந்தால் எப்படி எடுத்துக் கொள்வாளோ தெரியவில்லை. என்று எண்ணிக் கொண்டே உள்ளே போனார்.

''வாங்க, மாடிக்குப் போயிடலாம்!'' என்றாள் அவள். அவர் மறுக்கவில்லை.

வேலைக்காரர்களை அழைத்து சிற்றுண்டி கொண்டு வரச் சொன்னாள். ''இல்ல சிந்துஜா, அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்''

''இல்லல்லே, ரொம்ப நாள் கழிச்சு வந்திருக்கீங்க. ப்ளீஸ் ஹேவ் சம்திங்!'' என்றாள்.

'சரி, அவளுடைய விருப்பத்தை மறுப்பானேன்!' என்று இவரும் ஏற்றுக் கொண்டார். முன்பு மாடியிலே அவர்கள் தங்கியிருந்த அந்தப் பகுதிக்கு அழைத்துச் சென்றாள். அங்கே ஒரு ஹால் இரண்டு மூன்று படுக்கையறைகள் என்றெல்லாம் இருந்தன.



இந்துமதி கூட அதில் ஒன்றில்தான் தங்கியிருந்தாள். சிற்றுண்டி வந்தது. உணவு உண்டு விட்டு பிறகு 'இந்து!' என்று ஆரம்பித்தாள். ஆனால், சிந்து அவரை பார்வையாலே விழுங்கிக் கொண்டிருந்தாள்.

சந்திரமோகன் இதை எதிர்பார்க்கவில்லை. ''சிந்து, நான் என்ன பேச வந்திருக்கேன்னா?'' என்று ஆரம்பித்தார்.

அதற்குள்ளாக அவள் குறுக்கிட்டு ''இருங்க, நான் சொல்லிடறேன். இதுவரைக்கும் நடந்ததுக்கெல்லாம் நான் ரொம்ப வருத்தப்படறேன். ஐ'ஆம் வெரி சாரி!'' என்றாள். இதை எதிர்பார்க்காத சந்திரமோகன் திகைத்துப் போனார்.

''ஆமா, நானும் ஒத்தைப் பொண்ணா? நிறைய சொத்தோட வளர்ந்துட்டேன். என் தலையில பூராவும் ஆணவமா நிறைஞ்சுடுச்சு. அது இதுவரைக்கும் என்னை ஆட்டிப் படைச்சு எதெல்லாம் முக்கியம்னு எனக்கு உணர முடியாம செஞ்சிடுச்சு!'' என்றாள்.

'இந்தப் பெண் என்ன சொல்கிறாள்?' என்று அவர் ஆச்சரியமாக யோசித்தார்.

''ஆமாங்க, இளமையான இந்த இருபது வருஷத்தையும் நான் தொலைச்சுட்டேன். நம்ம இந்துமதிக்கு நாம ரெண்டு பேருமா சேர்ந்து கொடுத்திருக்க வேண்டிய சந்தோஷத்தையும் கொடுக்காமப் போயிட்டோம். நம்மளோட இந்த செபரேஷனால இந்துமதி பத்து வருஷமா ரொம்ப வருத்தப்பட்டிருக்கா. அதையெல்லாம் ஃப்ரெண்ட்ஸ் கிட்டே சொல்லி ஃபீல் பண்ணியிருக்கா. அதெல்லாம் இப்பத்தான் என் காதுக்கு வந்துச்சு. நான் அதெல்லாம்

புரிஞ்சிருக்கணும். எனக்கும் இப்போதான் நல்ல ஃப்ரெண்ட்ஸ் அமைஞ்சு புத்தி சொல்றாங்க"

சந்திரமோகன் வெறித்துப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தார். "இதென்னடா இது? கிணறு வெட்ட பூதம் கிளம்புகிறது. இப்போது இவளிடத்திலே எப்படி பிரிவைப் பற்றி சொல்லுவது?" என்ற எண்ணம் அவரை அலைக்கழிக்க ஆரம்பித்தது.

சிந்துஜா ஆனால் உணர்ச்சிவயமாக பேசினாள். "சாரிங்க, பத்து வயசுல இருந்து உங்க குழந்தை வளர்றதை உங்களாலே பக்கத்துல இருந்து பார்க்க முடியலை. அப்படி நீங்க இழந்தீங்கன்னா. நான் பக்கத்துல இருந்தே அவளை சரியா கவனிக்காம அந்த சந்தோஷத்தையெல்லாம் இழந்தேன். எவ்வளவு வருத்தப் பட்டிருந்தா இந்துமதி அப்படி ஒரு முடிவு எடுத்திருப்பா? என்னோட இன்டிவிஜுவாலிட்டி என்னோட பெருமைன்னு நினைச்சேனே ஒழிய குடும்பத்துக்காக கொஞ்சம் காம்ப்ரமைஸ் பண்ணிக்கணும் அப்படின்னு புரிஞ்சுக்கலை.உங்களை சும்மா சொல்லக் கூடாது. நீங்க எவ்வளவோ தூரம் இறங்கி வந்தீங்க!'' என்றாள்.

சந்திரமோகன் சற்று நேரம் கழித்து ஒரு நீண்ட பெருமூச்சு விட்டு விட்டுச் சொன்னார். ''இப்பச் சொல்றியே சிந்து இதெல்லாம். இந்து என்ன சொல்லிட்டா தெரியுமா? நீங்க ரெண்டு பேரும் எனக்காகத்தானே ஒருத்தரை ஒருத்தர் கஷ்டப்பட்டு சகிச்சுக்கறீங்க. இனிமே அந்த சிரமம் உங்களுக்கு வேண்டாம்ப்பா. நீங்க அம்பாகிட்டே டைவர்ஸ் வாங்கிக்கோங்கன்னு சொல்லிட்டா. அதுக்குத்



தான் நான் பேப்பர்ஸ் எல்லாம் கொண்டு வந்தேன்!'' என்றார்.

சிந்து அவரைப் பார்த்து விட்டு சட்டென்று எழுந்து போய் சுவற்றிலே முகத்தைப் புதைத்துக் கொண்டு கேவிக் கேவி அழுதாள்.

சந்திரமோகன் திகைத்துப் போய் அமர்ந்து விட்டார். பிறகு எழுந்து போய் அவள் தோளிலே கை வைத்து "ப்ளீஸ், சிந்து அழாதே! என்றார்.

சிந்து தனது கண்களைத் துடைத்துக் கொண்டு வந்து சோஃபாவிலே அமர்ந்தாள். "வெண்ணெய் திரண்டு வரும் போது தாழி உடைஞ்ச கதையா நான் இப்பத் திருந்தி வரேன். ப்ளீஸ் டைவர்ஸ் வேண்டாம். கொஞ்ச நாளைக்கு அட்லீஸ்ட் இந்துமதி கல்யாணம் வரைக்காவது உங்களுக்கு விருப்பம் இல்லைன்னாலும் சரி நாம ரெண்டு பேரும் சேர்ந்து இருக்கிற மாதிரி நடிப்போம்'' என்றாள்.

சந்திரமோகன் மேலும் திகைத்துப் போனார். அவள் கண்களைத் துடைத்துக் கொண்டு "ஆமா, எந்த விதத்திலயும் நான் மனைவிங்கற உரிமையைக் கேட்க மாட்டேன். நீங்க அந்த ரோஜாமணி கூடவே தொடர்ந்து...!'' என்றவள் மேற்கொண்டு பேச முடியாமல் நிறுத்திக் கொண்டாள்.

சந்திரமோகனின் முகமும் மாறியது. "என்ன சொல்றே சிந்து?'' என்றார்.

"ஆமா, நான் உங்களை ரொம்ப நோகடிச்சுட்டேன். நீங்க எனக்கு அதுக்கு ஒரு பெரிய தண்டனை

கொடுத்துட்டீங்க. ஐ டிசர்வ் இட். இந்தத் தண்டனை எனக்கு வேணும்தான். ஆனா நாம ரெண்டு பேருமா சேர்ந்து இந்துவுக்கு ரொம்ப தண்டனை கொடுத்துட்டோம். அட்லீஸ்ட் இனி அவ கல்யாணம் வரைக்குமாவது மே பி ஒன் ஆர் டூ இயர்ஸ் நாம ரெண்டு பேரும் ஒரே பக்கமா இருக்கலாம். அவ முன்னாடி நாம ரெண்டு பேரும் சேர்ந்துட்ட மாதிரி நடிக்கலாம். ப்ளீஸ்!'' என்றாள்.

'சிந்து!' என்றார் சந்திரமோகன். குரலில் குழைவு தெரிந்தது. பல நாட்களுக்குப் பிறகு குழைந்த குரலில் அவர் அழைத்தார். அவள் நிமிர்ந்து அவரைப் பார்த்தாள். என்னதான் இருபது வயதில் மகள் இருந்தாலும் அவர்களும் இன்னும் இளமையைத் தாண்டி விடவில்லை அல்லவா? அவள் பார்வையில் இப்போது முழுமையாக நேசம் தெரிந்தது.

''ப்ளீஸ், அப்படியாவது உங்களோட கொஞ்ச நாள் இருக்கிறேன். எனக்கு அந்த சந்தோஷத்தையாவது கொடுங்க!'' என்று மறுபடியும் அழுதாள். சந்திரமோகன் பேச்செழாமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

''நான் என்ன செய்யணும் சொல்லுங்க? உங்க கால்ல விழுந்து மன்னிப்பு கேட்கணுமா?'' என்று எழுந்தாள். சந்திரமோகன் சட்டென்று எழுந்தவர் அவள் அருகிலே போய் லேசாக அணைத்துக் கொண்டு அவள் இரண்டு கண்களில் வழிந்த கண்ணீரையும் துடைத்து விட்டார். ''ஓகே, ஓகே, ரிலாக்ஸ். ஒரு அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி இந்த முடிவெடுத் திருந்தேன்னா இந்துமதி பாவம், டீன் ஏஜ்ல சந்தோஷமா இருந்திருப்பா. ஒரு புரோக்கன்



ஃபேமிலி குழந்தைகளுக்கு எவ்வளவு கஷ்டத்தைக் கொடுக்கும்னு உனக்குத் தெரியலையா சிந்து?'' என்றார்.

''தெரியலையே?'' என்று அவள் மறுபடியும் முகத்தில் அறைந்து கொண்டு அழ ஆரம்பித்தாள்.

சந்திரமோகன் அவள் கையை விலக்கி விட்டார். அவள் முகத்தை நிமிர்த்தி அவரைப் பார்த்தாள். ''ப்ளீஸ் சந்துரு. ப்ளீஸ் நீங்க வேண்ணா அந்த ரோஜாமணியை வேண்ணா அப்பப்ப பார்க்கறதுக்குப் போயிட்டு வாங்க!'' என்றாள். அப்படிச் சொல்லும்போது அவள் முகத்திலே சொல்ல வொண்ணாத வேதனை தெரிந்தது.

தன்னுடைய பொக்கிஷத்தை இழந்ததோடு இன்னொருத்தருக்கு வாரிக் கொடுத்து விட்டு இப்படிக் கெஞ்சிக் கொண்டிருக்கிறோமே என்று அவளுக்கு வெட்கக் கேடாக இருந்தது. 'தவறு அவளுடையதுதானே? சந்திர மோகன் எத்தனையோ முறை தணிந்து போயிருக்கிறார், தழைந்து போயிருக்கிறார், கெஞ்சி இருக்கிறார், மிரட்டி இருக்கிறார் அவள் எதற்குமே இடம் கொடுக்கவில்லையே. இவ்வளவு பெரிய பெண்ணை அடித்துத் துவைக்கவா முடியும்?'' என்று வெறுத்துப் போய்த்தான் அவர் இப்படி ஒரு ஏற்பாட்டை செய்து கொண்டார் என்பது அவளுக்குப் புரிந்தது.

''ஏன் சிந்து? ரோஜாமணியும் இருக்கட்டுங்கறியா?'' என்றார்.

''ரோஜாமணியை அனுப்புங்க. நீங்க எனக்கு மட்டுமே சொந்தம்னு கேட்கறதுக்கு எனக்கு என்ன யோக்கியதை இருக்கு?'' என்று தழுதழுத்த குரலில் சொன்னாள் இந்து.

''இருக்கு சிந்து. உனக்கு எல்லா உரிமையும் இருக்கு'' என்று அவர் அவள் கழுத்திலே இருந்த தாலியை எடுத்துக் காட்டினார்.

''இதைத்தான் நீங்க மதிக்கலையே?'' என்றாள் அவள்.

அவர் கசப்பாகப் புன்னகைத்தபடி சொன்னார். ''நீ மதிக்கலை சிந்து. அதனால நானும் விலகியிருக்க வேண்டியதாப் போச்சு''

''வேண்டாம். நான்தான் உங்களுக்கு எல்லா சலுகையும் கொடுக்கறேனே. நீங்க அந்த ரோஜாமணி கூடவே தொடர்ந்து அஃபேர் வச்சுக்கோங்க. நான் மனைவிங்கற உரிமையைக் கூடக் கேட்க மாட்டேன்!'' என்றாள்.

அவர் மெல்லச் சிரித்தார். 'மக்கு!' என்று அவள் கன்னத்தை தடவினார். அவள் நிமிர்ந்து பார்த்தாள். ''உன்னோட உரிமை எங்கேயும் போயிடலை சிந்து. ஏன்னா?'' என்றார்.

''ஏன்னா?'' என்றாள் அவள்.

அவர் லேசாகச் சிரித்து விட்டுச் சொன்னார். ''ரோஜாமணி அப்படிங்கற ஒரு கேரக்டர் கிடையவே கிடையாது சிந்து!'' என்றார். அவள் திகைப்புடன் நிமிர்ந்து அவரைப் பார்த்தாள்.

''என்ன சொல்றீங்க?'' என்றாள்.

''இல்லே சிந்து, ரோஜாமணிங்கற ஒரு பொண்ணு கூட எனக்கு கனெக்‌ஷனே கிடையாது. அப்படி ஒரு பொண்ணே இல்லை!'' என்றார்.



''சந்துரு...?'' என்றாள் அவள்.

''ஆமா, அப்படி ஒண்ணைச் சொன்னாலாவது நீ அசையறியான்னு பார்க்கறதுக்காகத்தான் நான் தான் டிரைவர்கிட்டே சொல்லி சொல்லச் சொன்னேன். ரோஜா மணிங்கற ஒரு பொண்ணு கூட எனக்கு கனெக்‌ஷன் இருந்திருந்தா இந்நேரம் எல்லாருக்கும் தெரிஞ்சிருக்கணுமில்லே? யாராவது ஒருத்தராவது அரசல் புரசலா பார்த்து உங்கிட்ட சொல்லியிருக்கணுமில்லே?'' என்றார்.

அவள் முகம் அப்படியே அன்றலர்ந்த மலர்வதை அவர் ஆசையுடன் பார்த்துக் கொண்டிருந்தார். ''நியலி, என்னோட சந்திரமோகன் எனக்கேவா?'' என்றாள்.

''எப்பவுமே உனக்குத்தான். நீதான் அதை புரிஞ்சுக்கலை. உனக்குப் புரிய வைக்கவும் முடியலை. ஏன்னா ரொம்ப ஈகோ! ரொம்ப எடுத்தெறிஞ்சு பேசினே. கோடு போட்டு நிறுத்தின மாதிரி அந்தப் பக்கம் நிறுத்தினே.எத்தனை நாள்தான் பொறுத்துக்கிட்டிருக்கறது? அதான் நான் வருத்தத்தோட விலகி நின்னேன்!'' என்றார்.

'சந்துரு!' என்று அவளுடைய வலக்கையை எழுத்து அவர் கழுத்து மீது போடப் போனவள் கேள்விக்குறியாக அவரைப் பார்த்தபடி கையை அப்படியே நிறுத்தினாள்.

சந்திரமோகன் சிரித்தபடி ''ம்... புரொசீட்...!'' என்றார். அவள் வெட்கத்துடன் சிரித்தபடி அவர் தோளில் மாலையாகச் சரிந்தாள்.

''ரொம்ப பிலேட்டட் லவ்!'' என்று சிரித்தபடி அவரும் தன் பங்குக்கு சற்று நேரம் விளையாடினார்.

பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமா என்ன? சந்திரமோகன் அன்று அங்கேயே தங்கி விட்டார்.

## அத்தியாயம் - 22

திடுக்கிட்டுப் போய்த் திரும்பினான் அருள் பிரகாஷ்.

அங்கே நின்று கொண்டிருந்தது அப்பா! அவனுடைய தந்தை சிகாமணி நின்று கொண்டிருந்தார்.

இந்துமதி என்று நினைத்துக் கொண்டு திரும்பிப் பார்க்காமலே பேசி மாட்டிக் கொண்டு விட்டான். "அடடா, யோசித்திருக்க வேண்டாமா? இந்துமதி உள்ளே வரும் பொழுதே அவள் பயன்படுத்தும் அந்த இயற்கைப் பொருள் வாசனை தூக்குமே? அவ்வளவு மயக்கத்தில் இருந்திருக்கிறோம் என்று தன்னையே நொந்து கொண்டவனாக 'அப்பா!' என்றான் அதிர்ச்சியுடன்.

சிகாமணி முகத்தில் எதையும் காட்டாமல் அவனைப் பார்த்தார்.

"அப்பா!" அவன் குளறியபடி.

"அப்பா, நான் வேண்டாம்னு சொன்னேன்ப்பா! அவ கேட்க மாட்டேங்கறாப்பா. அவ... அவ... மறுபடியும் ஏதாவது பண்ணிப்பேன். வாழ்ந்தா உங்களோடதான் வாழ்வேன்னு சொல்றாப்பா!" என்றான்.

"அப்போ உனக்கு இன்ட்ரஸ்ட் இல்லையா?" என்றார் சிகாமணி.



அவன் மறுபடியும் விழித்து விட்டு "எனக்கும் பிடிச்சுத்தாம்ப்பா இருக்கு. ஆனா நான் மொதல்லே வெளிப்படுத்தலை. அதை அப்படியே மாத்திடலாம்னுதான் நினைச்சுக்கிட்டிருந்தேன்.எப்படியோ இந்த மூணு மாசம் இருந்துட்டுப் போகட்டும். விலகிடலாம் அப்படின்னு நினைச்சுட்டு இருந்தேன். ஆனா அவளுமே...! என்று இழுத்து நிறுத்தினான்.

'ம்...!' என்றார் சிகாமணி.

"அவளுமே வந்து...பிடிவாதம் பண்ணி நான் வாழ்ந்தா உங்களோடதான் வாழ்வேன்னு சொன்னா. நான் என்னப்பா பண்ணட்டும்?" என்றான்.

"ம்...!" என்றார். "ஆனா உங்க ரெண்டு பேருக்கும் நடந்த இந்தப் பரிமாற்றத்தில் என்னைப் பத்தி நினைக்கலை நீங்க?" என்றார் குரலில் கடுமையுடன்.

"சொன்னேம்ப்பா. நான் இந்துகிட்டே சொன்னேன்!" என்றான்.

"என்ன சொன்னே?"

"இல்லை, உங்க அப்பா எங்க அப்பாவை நம்பிக் கொண்டு வந்து விட்டிருக்காரு. இப்போ இப்படின்னா அவங்க ரெண்டு பேருத்துக்குள்ள பிரச்சினை வரும்னு சொன்னேன்"

"சொன்னதுக்கு அப்புறமும் ரெண்டு பேரும் சந்திச்சு...ம்?" என்றார் சிகாமணி.

"ஐ' ம் வெரி சாரிப்பா. இப்ப நான் என்ன செய்யட்டும்?" என்றான்.

"இப்ப என்ன செய்யட்டும்னு கேட்கறே? அந்தப் பொண்ணுக்கு ரெஸ்பான்ஸ் கொடுத்துட்டே இல்லே. அது ஃப்ரெண்ட் ஆயிடுச்சில்லே. இனி என்னன்னு சொல்லி மாத்தறது?" என்றார்.

அவன் மௌனமாக "தம்பி, இப்ப நீ கிளம்பி வெளியே போறே? எத்தனை மணிக்கு வருவேன்னு சொல்லு!" என்றார்.

"நீங்க எப்ப வரச் சொல்றீங்களோ அப்ப வரேம்ப்பா" என்றான்.

"பாரு தம்பி, வாழ்க்கையில சில நேரங்கள்ல சில தியாகங்கள் செய்ய வேண்டி இருக்கும். அந்தப் பொண்ணு ராஜா வீட்டுக் கன்னுக்குட்டி. அவளுக்கு ஆசை இருக்கலாம்பா. இது வந்து ஒரு அட்ராக்ஷன் தான். அவ வெளி ஆள்கிட்டே யாருகிட்டேயும் பழகினது இல்லை. அவளுக்கு அவ வீட்லே அன்பு கிடைக்கலை. முதல் முதலா நீ அன்பா இருக்கேன்ன உடனே டைவர்ட் ஆயிட்டா. ஆனா நீ அப்படி இல்லை. யோசிச்சுத்தான் பண்ணியிருப்பே. ஆனாலும் வேற வழியில்லப்பா. இந்த முடிவை நீ மாத்திக்கத்தான் வேணும்!" என்றார். அவன் மௌனமாக இருந்தான்.

"முதலாவது என்னை நம்பிக்கை துரோகின்னு சந்திரமோகன் நினைச்சுப்பான். இரண்டாவது அந்தப் பொண்ணுக்கு இங்கே வந்தா கொஞ்ச நாளைக்கு நல்லா இருக்கும். ஏன்னா அது நம்ம ஸ்டேட்டஸுக்கு வாழனும் முடியலைன்னு வை. மறுபடியும் சங்கடங்கள் தான் வரும்!" என்றார்.



இந்தக் கருத்தில் அவனுக்கு உடன்பாடு இருக்கவில்லை. இந்துமதி இயற்கையாகவே எளிமையாகத்தான் இருந்தாள். ஆனால் இப்போது அவன் தந்தையிடம் சொன்னால் தந்தை ஏற்றுக் கொள்ள மாட்டார். 'இப்போதைக்கு தந்தை விருப்பப்படி நடக்கட்டும். பிறகு ஏதாவது ஒரு வழியைக் கண்டுபிடிக்கலாம்!' என்று எண்ணிக் கொண்டவனாக 'சரிப்பா! நீங்க எப்படிச் சொல்றீங்களோ அப்படி. நான் வெளியே போயிட்டு நீங்க எப்ப ஃபோன் பண்றீங்களோ அப்ப வர்றேன். உங்களுக்கு என்ன இஷ்டமோ அதைச் செய்ங்க!'' என்றான்.

அந்த சமயத்தில் இந்துமதி வேகமாக ஓடி வந்தாள். "மாமா... அருள்!" என்றபடி.

"என்னம்மா?" என்றார் சிகாமணி.

"மாமா அப்பா ஃபோன்ல பேசினாங்க!" என்றாள்.

இதிலென்ன அதிசயம் என்பது போல் இருவரும் ஒருவரை ஒருவர் பார்க்க "பேசினாங்க. செல்ஃபோன்ல இல்லே. லைன்..லைன்ல இருந்து பேசினாங்க!" என்றாள்.

"இது என்னடா? இந்தப் பெண்ணுக்கு பைத்தியம் பிடித்திருக்கிறதா?" என்பது போல இருவரும் பார்த்துக் கொண்டார்கள்.

"எங்கே இருந்து தெரியுமா? எங்க அம்மாவோட பங்களாவில இருந்து ஃபோன் பண்ணினாரு. நேத்து அங்கே வந்திருக்காராம். இப்ப அங்கேதான் இருக்காராம். ரெண்டு பேரும்...!'' என்று சந்தோஷமாக இழுத்தவள் கலகல வென்று சிரித்தபடி 'சேர்ந்துட்டாங்களாம்!' என்றாள்.

சிகாமணியின் முகமும் மலர்ந்தது. அருளின் முகமும் மலர்ந்தது.

"அப்படியாம்மா? ரொம்ப சந்தோஷம்!" என்றவருக்கு உடனே இந்தப் பெண்ணைக் கிளப்புவதற்கு ஒரு காரணம் கிடைத்தது என்றும் தோன்றியது.

"சரிம்மா. நீ இனி அந்த இடத்தில்தான் இருக்கணும். போ! போய் கொஞ்ச நாள் அங்கே இருந்துட்டு அப்புறம் வேண்ணா இங்க வரலாம்!" என்றார்.

"ஆமாம் மாமா. எனக்கு உடனே அவங்க ரெண்டுபேரும் சேர்ந்து இருக்கறதைப் பார்க்கணும்னு ஆசையா இருக்கு"

"சரிம்மா, உன்னோட காரை எடு நான் வரேன்!" என்றார்.

அவள் 'அருள்!' என்று அவனைப் பார்க்க "இல்லம்மா, அவனுக்கு ஒரு முக்கியமான வேலை இருக்கு. அதை அவன் பார்க்கணும். நான் வரேம்மா" என்றார்.

"சரிங்க மாமா!" என்று சற்றே சிரிப்பு குறைந்தவளாக ஓடிப் போய் தன்னுடைய பொருட்களை பேக் செய்தாள். "எல்லாத்தையுமே எடுத்துக்கம்மா. அப்புறம் எப்ப வேணுமோ அப்பத் திரும்ப வரும் போது எடுத்துட்டு வந்துக்கலாம்!" என்றார்.

அந்த வார்த்தைகள் அருளின் மனத்தில் வலியை ஏற்படுத்தின. ஆனாலும், வேறு வழியில்லாமல் அதைப் பார்த்துக் கொண்டிருந்தான். இந்துமதி மிகவும் மகிழ்ச்சியாக



அவனிடத்திலும் கமலவதி இடத்திலும் சொல்லிக் கொண்டு குப்பம்மாவையும் அழைத்துக் கொண்டு கிளம்பினாள்.

"சரி, இங்கே வந்ததுக்கு அவளுக்காவது சந்தோஷம் கிடைத்ததே!" என்று நினைத்துக்கொண்டு அருள் பிரகாஷ் தன்னுடைய அறையிலேயே அமர்ந்து கொண்டான்.

"இனி எதற்கு வெளியே போக வேண்டும்? இங்கேயே கொஞ்ச நேரம் அமர்ந்து துக்கம் கொண்டாட வேண்டியது தான்!" என்று கசப்புடன் நினைத்துக் கொண்டான்.

அன்று பிற்பகலுக்குள்ளாகவே சிகாமணி வந்து சேர்ந்தார். ஆனால் என்ன நடந்தது ஏது நடந்தது என்று கூட கேட்காமல் தான் வந்தவுடன் வெளியே கிளம்பும் மகனைக் கவலையுடன் பார்த்தார் சிகாமணி. ஆனால் அதற்கு நேர்மாறாக அங்கே இந்துமதி மகிழ்ச்சியோடு இருந்தாள்.

"அப்பா, நிஜமாவா அப்பா, இனிமே நீங்க இங்கேயா இருக்கப் போறீங்க?" என்றாள்.

'ம்ஹூம்!' என்றார் சந்திரமோகன்.

"அப்பா...!" என்றாள் அவள் கவலையுடன்.

"நீயும் நானும் அந்த பங்களாவுக்கு போறோம். தனியா போகலை. உங்க அம்மாவையும் கூட்டிக்கிட்டுப் போறோம்!" என்றார்.

"அப்ப தாத்தா, பாட்டி தனியா இருப்பாங்களே?" என்றாள் அவள்.

"அது பிரச்சினை இல்லம்மா. கொஞ்ச நாள் நம்ம மூணு பேர் மட்டும் இருப்போம். அப்புறம் மெதுவா சொல்லி

அவங்களையும் கூப்பிட்டுக்கலாம்!'' என்று கண்ணை சிமிட்டினார் சந்திரமோகன்.

சிந்துஜா லேசான வெட்கத்துடன் மகளைப் பார்த்து சிரித்தாள். ''ஹை, அப்பா அம்மா வெட்கப்படறாங்க!'' என்று ஓடிப் போய் அவளைக் கட்டிக் கொண்டு கன்னத்திலே முத்தம் வைத்தாள்.

''அப்பா உங்களுக்கும் ரிலே பண்றேன்!'' என்று சொல்லி அவருக்கும் ஒரு முத்தம் வைத்தாள். இரண்டு பேரும் வெட்கத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள்.

''ஹை, ரெண்டு பேரும் வெட்கப்படறீங்களா?'' என்று அவள் மறுபடியும் சிரித்தாள்.

''அட ஏம்மா நீ?'' என்றார் சந்திரமோகன்.

''அப்பா, உங்க ரெண்டு பேரையும் நான் இப்படிப் பார்ப்பேனான்னு எவ்வளவு ஆசைப்பட்டிருக்கேன் தெரியுமா? ப்ளீஸ், உட்காருங்க. நான் இந்த சோஃபாவில் உட்கார்ந்துக்கறேன். அம்மா இப்படி உட்காருங்க, அப்பா இப்படி உட்காருங்க.!'' என்று அவர்கள் இரண்டு பேருக்கும் நடுவிலே அமர்ந்து கொண்டு ''செல்ஃபி எடுத்துக்கறேம்ப்பா!'' என்று போட்டோக்கள் எடுத்துக் கொண்டாள்.

இருவர் தோள் மீதும் கை போட்டுக் கொண்டு அங்கே இருந்த வேலை ஆட்களை அழைத்து வித விதமாக போட்டோக்கள் எடுத்தாள். மகளின் மகிழ்ச்சியைப் பார்த்தவுடன் சிந்துஜாவின் கண்கள் கலங்கின. சந்திரமோகனை கலங்கிய



கண்களுடன் பார்த்தாள். அவரும் அப்பொழுதுதான் லேசாக கர்சீஃபால் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

''பாவம், இந்தக் குழந்தைக்குக் கிடைக்க வேண்டிய எவ்வளவு சந்தோஷத்தை வீணடிச்சிருக்கிறோம்!'' என்றார் சந்திரமோகன் மெல்லிய குரலில். அவர்களோடுதான் இருப்பேன் என்று அவர்களோடு ஈஷிக் கொண்டே நடமாடிக் கொண்டிருந்தாள் இந்துமதி.

அவர்களும் மறுக்கவில்லை. ''இன்னைக்கு ரெண்டு பேருமா என்னை ஷாப்பிங் கூட்டிட்டுப் போகணும்''

''ஷாப்பிங்கா? நீதான் வேண்டாம் வேண்டாம்பியே!'' என்றார்.

''இன்னைக்கு நீங்க என்ன வாங்கிக் கொடுத்தாலும் வாங்கிப்பேன். அதுக்குன்னு பணத்தை வேஸ்ட் பண்ணாதீங்க. அளவான செலவிலே எனக்கு ஏதாவது வாங்கிக் கொடுங்க. ஐ வாண்ட் டு என்ஜாய் போத் ஆஃப் யுவர் கம்பெனி!'' என்றாள்.

''எங்கே போகலாம். சரிம்மா நீ கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடு. நானும் ரெஸ்ட் எடுக்கறேன்!'' என்றார். ''சரிங்க அப்பா!'' என்று இந்துமதி அந்த பகல் நேர ஓய்வுக்காக தன்னுடைய அறைக்குப் போனாள். சாதாரணமாக அவள் பகலில் தூங்குவதில்லை ஆனால் அம்மா அப்பாவுக்கு தனிமை கொடுக்க வேண்டுமாம். அதனால் போய் கட்டிலிலே படுத்துக் கொண்டாள்.

இதையெல்லாம் அருள் கிட்டே சொன்னா எவ்வளவு சந்தோஷப்படுவாரு என்று அவனுக்குப் ஃபோன்

அடித்தாள். ஆனால் அந்தப் பக்கம் போன் ஸ்விட்ச் ஆஃப் என்று வந்தது.

''பாரேன், போனை ஆஃப் பண்ணி வச்சிருக்கிறதை'' என்று திட்டிக் கொண்டாள். அவள் திரும்பிப் படுத்த போது அம்மா வந்தாள்.

அவள் அருகிலே அமர்ந்து அவள் கையை எடுத்து தன் மடியிலே வைத்துக் கொண்டாள். ''சாரி இந்து, இன்னைக்கு நீ எவ்வளவோ சந்தோஷமா இருக்கே.சே, இதையெல்லாம் பார்க்கும் பொழுது எனக்குக் குத்த மனப்பான்மையா இருக்கு!'' என்றாள் வருத்தத்துடன்.

''பரவாயில்லம்மா. போனது போகட்டும். இதை யெல்லாம் மறந்துட்டு நாம சந்தோஷமா இருப்போம்'' என்றாள்.

''சரிடா!'' என்ற சிந்து அவள் தலையை தடவிக் கொடுத்துக் கொண்டு சற்று நேரம் அமர்ந்திருந்தாள்.

''என்ன நடக்குது இங்கே!'' என்று வந்தார் சந்திர மோகன்.

மனைவிக்குப் பின்னாலே நின்றபடி மகளைப் பார்த்துச் சிரித்தார்.

''அப்பா, இன்னைக்கு டோட்டலா என் ஜாதகத்திலே மாற்றம் ஏற்பட்டிருக்குப்பா! இங்கே பாருங்களேன்!'' என்று சிரித்தாள் மகள். 'என்ஜாய்!' என்று அவரும் சிரித்து விட்டு அந்தப் பக்கம் நகர்ந்தார்.



''உனக்குத் தெரியுமாடி, உங்க அப்பா சொல்றாரு ரோஜாமணின்னு ஒரு ஆளே இல்லையாம். சும்மா என்னை பயமுறுத்தறதுக்காக அப்படிச் சொன்னாராம்!'' என்றாள்.

இந்துமதி எழுந்தே அமர்ந்து விட்டாள். ''என்னம்மா சொல்றே?'' என்றாள்.

''ஆமாம், அப்படிச் சொன்னாலாவது ஐய்யோ, இவரு நம்ம கையை விட்டுப் போயிடுவாரேன்னு எனக்குப் பயம் வரும்னு சொன்னாராம்.பயங்கரமான ஆளு இல்லே? நினைச்சதைச் சாதிச்சுட்டாரு!'' என்று வெட்கத்துடன் சிரித்தாள்.

''அம்மா, நான் உங்கிட்டே இப்படி பேசக்கூடாதுதான். ஆனா என்னைக் கோச்சுக்காதே. நான் ஒண்ணு சொல்றேன்!'' என்றாள்.

''சொல்லும்மா!'' என்றாள் அவள்.

''அம்மா இனிமேலாவது அப்பாவை எல்லா விதத்துலயும் நல்லா கவனிச்சுடும்மா. அவரு உன்னை விட்டுட்டு வெளியூர் போறதுக்கே யோசிக்கணும். அந்த மாதிரி உன்னோட அன்பால அவரை திணறடிச்சர்ணும்!'' என்றாள்.

சிந்துஜா வெட்கத்துடன் சிரித்தாள்.

''நேரம்டி! நீ எனக்கு இதெல்லாம் சொல்லித் தரவேண்டி இருக்குது!'' என்றாள்.

''யாரு சொல்லித் தந்தா என்னம்மா? விஷயம் தெரிஞ்சா சரி!'' என்றாள் மகள்.

"சரிடி, நீ கொஞ்ச நேரம் தூங்கு!" என்று வெட்கத்துடன் நகர்ந்தாள் சிந்துஜா.

பேருக்கு அரை மணி நேரம் படுத்திருப்பது போல் படுத்து விட்டு எழுந்து வந்த இந்துமதி "அப்பா, என்னப்பா இது? ரோஜாமணிங்கற கேரக்டர் இல்லவே இல்லையாம்!" என்று கேட்டாள்.

"ஆமாம்மா!" என்றார் சந்திரமோகன்.

"சூப்பர்ப்பா. நல்ல ஐடியாப்பா!" என்று மெச்சிக் கொண்டாள் மகள்.

அவர்கள் எல்லோருமாக அன்றைக்கு ஷாப்பிங் கிளம்பினார்கள். அதே சமயத்தில் இல்லவே இல்லை என்று சந்திரமோகன் சாதித்த ரோஜாமணி மலேஷிய விமானத்தில் இருந்து இறங்கினார்.

எவ்வளவுக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக ஷாப்பிங் கிளம்பினோமோ அவ்வளவுக்கு அவ்வளவு வருத்தத்துடன் வீட்டுக்குத் திரும்பப் போகிறோம் என்று அறியாத இந்துமதி உற்சாகமாகக் கிளம்பினாள்.

## அத்தியாயம் - 23

படுக்கையில் படுத்தபடி குலுங்கி அழுதாள் இந்துமதி. ஆனால், சத்தம் வராமல் தான். எதிர்பாராத விதமாக உள்ளே நுழைந்தார் சந்திரமோகன். அப்படி இந்துமதி அழுகிற மாதிரி என்னதான் நடந்தது. இன்றைக்குத்தான்



மகிழ்ச்சியாக தாய் தந்தையர் இருவருடனும் ஷாப்பிங் போனாள்.

வழக்கம் போல அப்பா ஜவுளிக்கடைக்கும், அம்மா நகைக்கடைக்கும் போனார்கள். இரண்டு பேருமாக செலக்ட் பண்ண வேண்டும் என்று இரண்டு மூன்று துணி மணிகளை எடுத்துக் கொண்டாள். அதே போல இரண்டு பேருமாக சேர்த்து செலக்ட் பண்ணித்தாங்க என்று ஒரு நகை செட் வாங்கிக் கொண்டாள்.

"இவ்வளவு தானாடி? போதுமாடி?" என்று கேட்டுக் கொண்டே இருந்தாள் சிந்து.

"போதும்மா. எங்கிட்டேதான் நிறைய இருக்கில்லே!" என்றாள் அவள். நகைக்கடையிலே நகை வாங்கிக் கொண்டு வெளியே வரும்போதுதான் அருள் பிரகாஷ் உள்ளே நுழைந்தான்.

இவளுக்கு அவனைப் பார்த்தவுடன் மகிழ்ச்சி. ஆனால் அவன் ஏனோ இவர்களைப் பார்த்தவுடன் திடுக்கிட்டு விட்டான்.

சட்டென்று திரும்பிப் போவதற்கு முயற்சி செய்தானோ என்னவோ அதற்குள்ளாக சந்திரமோகன் அவனைப் பார்த்துவிட்டார். "ஏய், அருள்!" என்று அழைத்து விட்டார். அவன் வேறு வழியில்லாமல் வந்தான்.

"அங்கிள், ஆண்ட்டி!" என்றான்.

சிந்து பேருக்கு லேசாக ஒரு புன்னகையை வீசினாள். இந்துமதியின் முகம் பூவாக மலர்ந்து விட்டது. "இங்கே அட்வர்டைஸ்மெண்ட் சம்பந்தமாக வந்தேன் அங்கிள்".

"இத பார்த்தியாப்பா, உன்னோட நெடுநாள் ஆசை நிறைவேறிடுச்சு. நானும் சிந்துவும் ரெண்டு பேரும் ஒண்ணா இந்துமதிக்காக ஷாப்பிங் பண்ண வந்திருக்கோம்!" என்றார்.

அவன் முகம் மலர்ந்தது.

"தட்ஸ் வெரி நைஸ் அங்கிள். உங்க ரெண்டு பேரையும் சேர்த்து பார்க்கறதுக்கு ரொம்ப அழகா இருக்கு!" என்றான். சிந்துஜா ஆனால் பெரிதாக பிரதிபலிப்பு காட்டவில்லை. கடனே என்று ஒரு புன்னைகையை வீசிவிட்டு நின்று கொண்டிருந்தாள்.

அருள் பிரகாஷ் பேசிக் கொண்டிருந்த ஐந்து நிமிடமும் "அங்கிள், அங்கிள்" என்று சந்திரமோகனிடம் தான் பேசினான். இந்துமதியிடம் திரும்பவே இல்லை.

பிறகு சட்டென்று கழண்டு கொண்டு பிறகு அவசரமாக 'ஒனரைப் பார்க்கணும்!' என்று உள்ளே போனான்.

"அருள்!" என்று அழைத்தாள் இந்து.

"சாரி இந்து, நான் அப்புறம் பேசறேன்!" என்று சொல்லிவிட்டு நகர்ந்து போனான்.

அதற்குப் பிறகு வீட்டுக்கு வந்ததற்குப் பிறகு போன் அடித்து அடித்துப் பார்த்தாள். ஸ்விட்ச்ட் ஆஃப் என்றே வந்தது. ஒருவேளை சிம்மை மாற்றி விட்டானோ என்று சந்தேமாக இருந்தது.

கொஞ்சம் புரிகிறாற் போல இருந்தது. தன்னிடம் இருந்து விலகுகிறானோ? ஒருவேளை சிகாமணி அங்கிளுக்குத் தெரிந்து விட்டதோ. எதிர்ப்புக் காட்டுகிறாரோ



என்றெல்லாம் நினைத்தவுடன் அவளால் தாங்க முடியவில்லை. உடையைக் கூட மாற்றாமல் படுக்கையிலே படுத்து விசித்துக் கொண் டிருந்தாள். அந்த நேரத்தில் தான் சந்திரமோகன் உள்ளே நுழைந்தார்.

"என்னடா? ஏண்டா அழுதுக்கிட்டிருக்கே?" என்றார்.

"அப்பா, அப்பா!" என்றாள்.

"என்னம்மா?" என்றார் சந்திரமோகன்.

"அப்பா, பார்த்திங்களாப்பா? அருள் எங்கிட்டே பேசவேயில்லை. அவாய்ட் பண்றாரு!" என்று அழுதாள்.

அவள் முகத்தில் தெரிந்த அந்த தீவிர பாவத்தைப் பார்த்தவுடன் சந்திரமோகனுக்கு யோசனையாகப் போய் விட்டது.

"ஏம்மா?" என்றார்.

"தெரியலப்பா!" என்றவள் அப்பாவின் முகத்தைப் பார்த்தாள்.

ஏதோ சொல்ல வந்து பிறகு தயங்கினாற் போல தெரியவந்தது.

"என்னடா...சொல்லுடா!" என்றார் அப்பா.

"அப்பா...!" என்று மெதுவாக அருளிடம் தன் மனம் சென்றிருப்பதை உணர்த்தினாள். சந்திரமோகன் சற்று நேரம் திகைத்துப் போனார்.

அவர் உடனே 'சிகாமணி வீட்டுக்கு இது...! என்று கேட்கும் போதே அவள் தடுத்தாள்.

"அப்பா அதிலே அவங்க தப்பு எதுவும் இல்லைப்பா. சிகாமணி மாமாவும் கமலவதி அத்தையும் என்னை மக மாதிரிதான் பார்த்துட்டாங்க. ஆனா உங்களுக்குத் தெரியமில்லே? நான் அந்த சூயிசைடு அட்டெம்ப்ட் பண்ணப்ப இருந்தே அருள் எனக்கு நிறைய கவுன்சிலிங் கொடுத்தாரு. ஐ ஃபீல் வெரி கம்பர்டபிள் வித் ஹிம். அருளோட இருந்தா நான் பாதுகாப்பா உணர்றேன். ஐ ஃபீல் வெரி செக்யூர்டு!" என்றாள்.

"அம்மா, நான் சொல்றேன்னு தப்பா நினைச்சுக்காதே மொதல் மொதலா ஒரு பையன்கிட்டே நீ பழகினதாலே இப்படித் தோணுதோ?" என்றார்.

"வாட், நான்சென்ஸ் அப்பா! காலேஜ்ல எனக்கு எத்தனை பாய் ஃப்ரெண்ட்ஸ் இருந்தாங்க தெரியுமா. பாய் ப்ரெண்ட்ஸ் மீன்ஸ் கிளாஸ்மேட்ஸ். இங்கேயும் வீட்டுக்கே வருவாங்க. ஆனா அந்த மாதிரியெல்லாம் யார்கிட்டயும் அட்டாச் மெண்ட் வந்ததில்லை!" என்றாள்.

"ம்... சிகாமணியை நம்பி அனுப்பினேன்."

"நான் தான் சொல்றேன்லப்பா. இந்த மாதிரி ஏதாவது இஷ்யூஸ் வரக்கூடாதுன்னுதான் ஒருவேளை சிகாமணி மாமா அருள்கிட்ட வேண்டாம்னு சொல்லியிருப்பாரோ!" என்றவள் "அப்பா, அருள் மட்டும் இல்லேன்னா...!" என்று ஆவேசமாக அப்பாவைப் பார்த்தாள்.

"ப்ளீஸ் டா...ப்ளீஸ் டா... பொறுடா, நீ புரிஞ்சுக் கோடா! உங்க அம்மா இதுக்கெல்லாம் ஒத்துக்குவாளா? இப்பத்தான் நம்ம குடும்பப் பிரச்சினை சால்வ் ஆகியிருக்கு!" என்றார்.



"என்னத்துக்கு ஒத்துக்குவாளான்னு கேட்கறீங்க?" என்றபடி உள்ளே வந்தாள் சிந்து.

"இப்போதைக்கு ஒண்ணும் இல்லை!" என்றார்.

"ஏம்ப்பா மறைக்கணும்? பிரச்சினைன்னு வந்துடுச் சில்லே. நான் சொல்லிடறேன்!" என்றாள் இந்து.

"என்னடி சொல்லப்போற" என்று சிரித்துக் கொண்டே எதிரிலே இருந்த ஒரு சேரிலே அமர்ந்தாள் சிந்துஜா.

இந்துமதி கட்டிலிலே அமர்ந்திருக்க அவருடைய தந்தையும் பக்கத்திலே கட்டிலிலே அமர்ந்திருந்தார். இந்துமதி தாயின் முகத்தை ஆழ்ந்து பார்த்தாள். பிறகு சொன்னாள். "அம்மா, நான் எனக்காக ஒருத்தரை மனசிலே வச்சிருக்கேன்!" என்றாள்.

"அட்றா சக்கை, நீ அவ்வளவு பெரிய ஆளாயிட்டியா?" என்றாள் இவள்.

"பின்னே? அவளுக்கும் இருபத்தொரு வயசு ஆகுதில்லே?" என்றார் சந்திரமோகன்.

"இருந்தாலும் இத்தனை பெரியவங்க இருக்கோம். இவளே தேர்ந்தெடுக்கற அளவுக்கு வந்துட்டாளாம்"

"சிந்து, ப்ளீஸ் அண்டர்ஸ்டாண்ட். அவ ஒண்ணும் சின்னக் குழந்தை இல்லை.அவ என்ன சொல்றான்னு கேளு!" என்றார்.

அரை மனதாக "சொல்லுடி, யாரது!" என்றாள்.

இந்துமதி சற்றும் தயங்காமல் "அருள் பிரகாஷ்!" என்றாள்.

சிந்துஜாவின் முகம் வெளுத்துப் போனது.

''என்னது? அருள் பிரகாஷா?'' என்றாள் ஒருவிதமான குரலிலே.

''ஆமா!'' என்றாள்அழுத்தமாக.

''அவன்கிட்டே என்ன இருக்குன்னு இப்படி யோசிச்சே?'' என்றாள்.

''ஏன்? அவருகிட்டே என்ன இல்லை? படிப்பு இல்லே? கையில தொழில் இருக்கு. அதோட நல்ல அப்பா அம்மா கிட்ட வளர்ந்திருக்காரு. அதோட அப்பா அம்மா கூட இருந்து அவங்க அரவணைப்பிலே வளர்ந்திருக்காரு. குடும்பம்னா அவருக்கு என்னன்னு தெரியும்!'' என்றாள் இந்துமதி.

சந்திரமோகன் முகத்தில் லேசாக சிரிப்பு தோன்றியது. மகள் நெற்றியடி கொடுக்கிறாள். ஆனால் பிரச்சினை வேறு விதமாக இருக்கிறதே என்றும் தோன்றியது.

''நத்திங் டூயிங். நம்ம ஸ்டேட்டஸ் என்ன? அவங்க ஸ்டேட்டஸ் என்ன?'' என்றாள் சிந்துஜா.

''அம்மா நான் உங்கிட்டே சம்மதம் கேட்கலை. நான் உங்கிட்டே இன்ஃபர்மேஷன் தான் கொடுக்கறேன்!'' என்றாள்.

''கொன்னே போடுவேன்!'' என்று கோபமானாள் சிந்துஜா.

''கொன்னே போடறதுன்னா அப்பவே சாக விட்டிருக்கலாமில்லே? நான் போயிருப்பேனில்லே? எதுக்கு விழுந்தடிச்சு காப்பாத்தினீங்க!'' என்றாள் கோபமாக.



சிந்துஜா திகைத்துப் போய் நின்று விட்டாள். ''ஆமாம்மா, உங்க ரெண்டு பேருக்கும் ஸ்டேட்டஸ் இருக்கு. சொத்து இருக்கு. ஆனா வாழத் தெரிஞ்சுதா? எனக்கு இருபது வயசு முடிஞ்சுது. என்னைக் கேட்டா இந்தக் கடந்து போன இருபது வருஷத்திலே எனக்கு ஏதாவது சந்தோஷமான நேரம் இருந்ததா அப்பா அம்மாவோட செலவழிக்கற மாதிரி?'' என்றாள்.

''அதுக்கும் இதுக்கும் என்னடி முடிச்சுப் போடறே?'' என்றாள்.

''ஆமாம்மா, ஐ நோலாங்கர் நீட் யுவர் ஸ்டேட்டஸ். உன்னோட ஸ்டேட்டஸ் சொத்து எல்லாத்தையும் நீயே கட்டிட்டு அழு. அப்பா உங்களுக்கும் தான் நான் சொல்றேன். எனக்கு ஒரு வாழ்க்கை இருந்தா அது அருள் கூடதான். மறுபடியும் நான் சொல்றேன். சிகாமணி அங்கிள் கிட்ட போய் எதுவும் பேசாதீங்க. இதிலே அவங்க தப்பு எதுவுமே இல்லை. நான் தான் மேல போய் விழுந்தேன். அருள் ரொம்ப தயக்கத்துக்கப்புறம் தான் ஒத்துக்கிட்டாரு. அதுவும் நான் படற வேதனையைப் பார்த்துட்டு ஒத்துக்கிட்டாரு''

''அடேயப்பா, அவன் பெரிய இவன். ஒத்துக்கிட்டானாம்!'' என்றாள் சிந்துஜா.

''மைண்ட் யுவர் வர்ட்ஸ் அம்மா. அருள் பிரகாஷ் ஒரு ஜென்டில் மேன். ஹி இஸ் கிரேட். அவரை நீங்க ஏதாவது குறை சொன்னீங்க நான் ஒத்துக்கவே மாட்டேன்'' என்றாள்.

சிந்துஜா வாயடைத்துப் போய் நின்றாள். "நீ என்ன நினைச்சுகிட்டிருக்கே? உனக்காக எல்லாம் செஞ்சது அவங்கதான். சௌமியா ஆண்டியை சந்திக்க வச்சு, உங்கூட பேச வச்சு, உனக்குப் புத்தி வரவச்சதே சிகாமணி அங்கிளும் அருள் பிரகாஷ"ம்தான். அவங்க நீயும் நல்லாயிருக்கணும்னு தான் நினைச்சாங்க"

சிந்துஜா திகைத்துப் போனாள். "ஓஹோ, அவங்க எனக்கு வாழ்க்கைப் பிச்சை போட்டு உன் வாழ்க்கையை விலைக்குக் கேட்பாங்களா?"

"அம்மா, உனக்கு விலை பணம் ரூபாய் இதைத் தவிர வேறு எதுவும் தெரியாதா? அவங்க அன்புக்குத்தாம்மா நான் கட்டுப்பட்டிருக்கேன். ஒருநாளும் அவங்க அந்த எண்ணத்துல எங்கிட்டே பழகலை!" என்றாள்.

"இதெல்லாம் சரி வர்ற மாதிரி தெரியலை. உங்ககிட்டே சொல்லிட்டேன் பாருங்க!" என்று சொல்லி விட்டு வேகமாக அந்த அறையை விட்டு வெளியே போனாள் சிந்துஜா.

சந்திரமோகன் இரண்டு பேரும் பேசிக் கொண்டிருந்ததை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

மகள் திரும்பி தந்தையைப் பார்த்தாள். "என்னப்பா? அவங்க இப்படிப் பேசிட்டுப் போறாங்க. நீங்க ஒண்ணுமே சொல்லலை"

"சொன்னா எடுபடாதும்மா!" என்றார் சந்திரமோகன்.

"அப்பா நீங்க என்ன சொல்றீங்க? அம்மாவை விடுங்க நீங்க என்ன சொல்றீங்க?" என்றாள்.



"அவளை எப்படிம்மா விட முடியும். அவளையும் அனுசரிச்சுத்தான் போகணும்!" என்றார் சந்திரமோகன்.

"இத்தனை நாள் நீங்க அனுசரிச்சீங்களா?" என்றாள்.

"போகலைதான். விடும்மா. உன் கல்யாணத்துக்காவது நாங்க ரெண்டு பேரும் நின்னு சந்தோஷமா செய்ய வேண்டாமா?" என்றார் ஆதங்கத்துடன்.

"ஆமா, அம்மா அப்படி வந்து நிக்கணும்னா எவனாவது ஃபாரின் மாப்பிள்ளைம்பாங்க. மறுபடியும் சொத்துக் காரனா கொண்டு வந்து நிறுத்துவாங்க. அவனுக்கு உங்களை மாதிரிதான் பிஸினஸ் பிஸினஸ்னு நேரமே இருக்காது."

"அருள் பிரகாஷ் மட்டும் நாளைக்கு இதைச் செய்ய மாட்டான்னு என்ன நிச்சயம்?"

"அப்படி இல்லைப்பா. அவருக்குத் தெரியும். அப்படி இல்லைன்னா நானும் அவரோட போய் அட்வர்டைஸ் மெண்ட் ஏஜென்ஸியில உட்கார்ந்துருவேன்!" என்றாள்.

சந்திரமோகன் சிரித்தார்.

"ப்ளீஸ் அப்பா! ஒப்புதல் கொடுங்க!" என்றாள்.

"அம்மா எனக்குக் கொஞ்சம் டைம் கொடு!" என்றார்.

"டைம் கொடுக்கறேம்ப்பா. ஆனா ரிசல்ட் பாஸிட்டிவா இருக்கணும். உங்க ரெண்டு பேருக்கும் இருக்கற பிடிவாதம் சேர்ந்து எனக்கு இருக்கு. எய்தர் எ லைஃப் வித் அருள். அதர்வைஸ் நோ மேரேஜ் அட் ஆல்!" என்றாள் இந்துமதி.

"நல்லா யோசிச்சுக்கம்மா. ஏதோ இளமையின் வேகத்துல சொல்றியான்னு பார்த்துக்கோ. அப்புறமா லைஃப் சரியில்லைன்னு வந்து நின்னா....!"

"கண்டிப்பா வரமாட்டேன். அது மட்டும் இல்லே நானும் அருள் பிரகாஷுஉம் சேர்ந்து ஒரு குடும்பம்னா எப்படி இருக்கணும்னு உங்களுக்குக் காட்டுவோம்!" என்றாள்.

"சந்தோஷம். நான் வாழ்க்கைல தோத்தவன்தான். ஆனா உன் லைஃப்பும் தோத்துப் போயிடக் கூடாதில்லே!" என்றார்.

"தோக்காதுப்பா. யாரோ என்னமோ குழப்பம் பண்ணித்தான் அவரு ஒதுங்கறாரு. ஆனா அருள் கிட்டே நான் சொல்லிடு வேன். எதுனா பட்டா நான் இருக்கமாட்டேன்னு சொல்லிடுவேன்!" என்றாள்.

"என்னம்மா? மறுபடியும் கோழைத்தனமா பேசற?" என்றார்.

"பின்னே என்னப்பா உங்க சொத்தும் ஸ்டேட்டஸுஉம் உங்க லைஃப்பைக் கெடுத்தது பத்தாதுன்னு என் லைஃப்பையும் கெடுக்கணுமா?" என்றாள்.

அவள் முகத்தில் வேதனையைப் பார்த்துவிட்டு "சரிம்மா, ஒரு ரெண்டு மூணு நாள் டைம் கொடு எல்லாத்தையும் சால்வ் பண்ணலாம் என்ன?" என்று சொல்லிவிட்டு வெளியே வந்தார்.

வெளியே வந்ததுக்கு பிறகு முகம் இறுக்கமானது. செல்ஃபோனை எடுத்தார். சிகாமணிக்கு போன் அடித்தார்.



"என்ன சிகாமணி பிரச்சினை இப்படிக் கிளம்பியிருக்கு!" என்றார் இறுக்கமான குரலில்.

சிகாமணி அந்தப் பக்கம் திகைத்து நின்றார்.

## அத்தியாயம் - 24

தன்னுடைய நிலத்திலே இருந்த அந்த தோட்டச் சாளையிலே காத்துக் கொண்டிருந்தார் சிகாமணி. நெருக்கமாகக் கூரை வேயப்பட்டு உள்ளே தரையிலே சாணம் மெழுகி பெரிய ஒரு கூடம் போல அந்த தோட்டச் சாளை இருந்தது.

சுற்றிலும் இரண்டு ஏக்கர் அளவுக்குத் தென்னை மரங்கள். இன்னொரு பக்கம் பயிர் பச்சை என்று பார்ப்பதற்கு அழகாக இருந்தது. அந்த தோட்டத்து சாளைக்கு முன்னாலே ஒரு பெரிய திடல் இருந்தது. அங்கேயும் மெழுகி சுத்தமாக வைத்திருந்தார்கள்.

அங்கே ஒரு கயிற்றுக் கட்டிலிலே அமர்ந்து கொண்டு காத்துக் கொண்டிருந்தார். இரண்டு மூன்று கூடைச் சேர்களும் உள்ளே இருந்தது. தோட்டத்திலே வேலை செய்கிற வேலை ஆட்கள் இரண்டு மூன்று பேர் அங்கேயே குடிசை போட்டு தங்கியிருந்தார்கள்.

அவர்களிடத்திலே சொல்லி நகரத்திலேயிருந்து காபி பலகாரம் வாங்கிக் கொண்டு வரச் சொல்லி காபியும், பலகாரமும் தயாராக வைத்துக் கொண்டு சிகாமணி ஒரு குற்ற மனப்பான்மையுடன் காத்துக் கொண்டிருந்தார்.

சொன்ன நேரத்துக்கு சரியாக காரில் வந்து இறங்கினார் சந்திரமோகன். "மோகன் வாப்பா!" என்று வரவேற்றார் சிகாமணி.

மோகன் இறுக்கமாக முகத்தை வைத்துக் கொண்டு எதிரிலே இருந்த அந்தச் சேரிலே அமர்ந்தார்.

"என்ன சிகாமணி இப்படி ஆயிடுச்சு?" என்றார்.

சிகாமணி வருத்தத்துடன் உதட்டைப் பிதுக்கினார். "எனக்கே தெரியலைப்பா. என் பையன் இப்படிப் பண்ணுவான்னு நினைக்கவே இல்லை. கேட்டா நான் வேண்டாம்னுதான் சொன்னேன். இந்துமதி உசிரையே விட்டுடுவேங்கறாப்ல. எனக்கும்தான் அவளைப் பிடிக்குது. வேற வழியில்லாம தான் சரின்னு சொன்னேன் அப்படிங்கறான்!" என்றார்.

சந்திரமோகன், முகவாய்க் கட்டையை நீவிக் கொண்டு சற்று நேரம் சிந்தனையிலே ஆழ்ந்தார். பிறகு சொன்னார். "நான் என் மகளை அங்கே அனுப்பியிருக்கக் கூடாது. ஒரு இள வயசுப் பையன் இருக்கற இடத்துல. ஆனாலும் அனுப்பிச்சேன்!" என்றார்.

சிகாமணி புரியாமல் பார்த்தார். "ஆமாப்பா அனுப்பிச்சேன். பஞ்சையும், நெருப்பையும் பக்கத்திலே வச்சா பத்திக்கும்னு தெரியாதா என்ன? தெரிஞ்சுதான் அனுப்பிச்சேன்"

"சந்திரமோகன்...!" என்று சிகாமணி ஆச்சரியமாக பார்க்க.

சந்திரமோகன் கடகடவென்று சிரித்தார். "என்னப்பா பார்க்கறே இப்படி இதெல்லாம் நடக்கணும்னுதான்



நினைச்சேன்." சிகாமணி எழுந்து நின்று விட்டார். "என்னப்பா சொல்ற நீ.

உட்காரு உட்காரு என்ற சந்திரமோகன் இதுல எனக்கு சந்தோஷம்தாம்பா" என்றார்.

"சந்துரு!" என்றார் சிகாமணி.

"ஆமாப்பா. நான் ஹாஸ்பிட்டல்லயே பார்த்தேன். எம் பொண்ணு மருந்தைக் குடிச்சா பார்த்தியா? அந்த சமயத்துல உதவிக்கு வந்தானே அருள் பிரகாஷ். அவனோடு பேசும் போது அவளுக்கு ஒரு சந்தோஷம். கம்பர்டபிளா இருக்கறா. அவன் கூட இருந்தா சேஃபா நினைக்கற மாதிரி எனக்கே தெரிஞ்சது. அதைத்தான் நேத்து அவளும் சொன்னா.அப்ப அவளுக்கே தெரியலை அவளைப் பத்தி. ஆனாலும் இதெல்லாம் ஒரு மயக்கமா இருக்கலாம் அப்படிங்கறதுனால உங்க வீட்டுக்கே அனுப்பினேன். இந்த சூழ்நிலையில் இருந்து பார்க்கட்டும். இங்கே வந்தா இப்படித்தான் இருக்கணும். ஆனா அப்படி இருக்க முடியு மான்னு அவ பார்த்துக்கட்டும்னு தான் அனுப்பினேன். நினைச்ச மாதிரியே மக முடிவெடுத்துட்டா!" என்றார்.

சிகாமணி திகைப்புடன் பார்த்தார். "நீ முடிவெடுத் துட்டப்பா. உன் மகளும் முடிவெடுத்துட்டா. ஆனா அவ இங்கே வந்து...? வளர்ந்த சூழ்நிலைக்கும் இங்கேயும் ஒத்து வருமா? அது எங்களுக்குக் கவலையா இருக்கு. கமலவதியும் அதான் கவலைப்படுவா.உன் பொண்ணு சந்தோஷமா இருப்பாளா?" என்றார்.

"இருப்பாப்பா. கண்டிப்பா இருப்பா. ஏன்னா என் சகல வசதி எல்லாத்தையுமே அவ அலட்சியமாத்தான் பார்ப்பா. அவங்க அம்மா எப்பப் பார்த்தாலும் ஸ்டேட்டஸ் ஸ்டேட்டஸ்னு சொல்லி அவ மேலயே அவ கடுப்பா இருக்கா. தன்னைப் பொறுத்த வரைக்கும் அவ எப்பவும் எளிமையாதான் இருப்பா. அவ எதிர்பார்க்கறதெல்லாம் அன்புதான். எங்க ரெண்டு பேர்னாலயும் இத்தனை நாள் கொடுக்க முடியலை. இப்பத்தான் நாங்க ரெண்டு பேரும் சேர்ந்து இருந்து அவளுக்கு அன்பைக் கொடுக்கறோம். என்ன ஒரே ஒரு ரிக்வெஸ்ட் தான் பண்ண வந்திருக்கேன். இந்தக் கல்யாணத்துக்கு கொஞ்சம் டைம் மட்டும் கொடு. ஒரு நிச்சயம் வேண்ணா பண்ணிக்கலாம். நான் ஒரு ஏழெட்டு மாசமாவது அட்லீஸ்ட் ஒன் இயராவது எங்க பொண்ணு எங்களோட இருக்கட்டும்"

சிகாமணி உடனே வீட்டுக்கு ஃபோன் செய்து கமல வதியை வரவழைத்தார். கமலவதியிடமும் சந்திரமோகன் பேசினார். "அப்ப உனக்கு இதிலே வருத்தம் இல்லையா?" என்றார்.

கமலவதி புறப்படுவதற்கு முன்பாக அருள் பிரகாஷுக்கு ஃபோன் செய்து அவனையும் வரச் செய்து விட்டார். அருள் பிரகாஷ் வந்தவுடனேயே சிகாமணி மகனைப் பார்த்து "என்னப்பா இவன் இப்படிச் சொல்றான்?" என்றார்.

"எப்படிச் சொல்றாருப்பா?" என்றான் அவன் கவலையுடன்.

"கவலையெல்லாம் படாதே. இங்க பக்கத்திலே உட்காரு!" என்று இன்னொரு கயிற்றுக் கட்டிலை எடுத்து



வரச் சொல்லி போட்டு அதிலே சந்திரமோகன் அமர்ந்து பக்கத்திலே அருள் பிரகாஷை அமரச் செய்தார்.

"நேத்து பார்த்துட்டு பேசாமப் போயிட்டியாம். என் மகளால தாங்கவே முடியலை. பொங்கிப் பொங்கி அழறா. காலையிலிருந்து சாப்பிடலை. என்னடா நீ? சாரி மாப்பிள்ளையா வரப் போறான். டா போடலாமா?" என்றார்.

அருள் பிரகாஷ் திகைத்துப் போய் பார்த்து விட்டு "நீங்க என்ன வேண்ணாலும் கூப்பிடலாம் மாமா!" என்றான்.

"இல்லல்லே, அது நல்லாயில்லே. இனிமே வாப்பா போப்பான்னுதான் பேசணும். என்னப்பா மந்திரம் போட்டே? எம் பொண்ணு அப்படி மயங்கிக் கிடக்கறா!" என்றார்.

அருள் பிரகாஷ் சிகாமணியைப் பார்த்தான்.

சிகாமணி சற்று நேரம் அமைதியாக அமர்ந்து கொண்டார். பிறகு "இவன் பெரிய ஸ்கீமராக்கும்!" என்றார் மறுபடியும் சந்திரமோகன் சிரித்தார்.

"இல்லப்பா, இப்படி ஏதாவது வரும்னு தெரிஞ்சுதான் என் பொண்ணை நான் இங்கே அனுப்பினேன்!" என்றார்.

அருள் பிரகாஷ் திகைத்துப் போய் சந்திரமோகனைப் பார்த்தார். "ஆமாம்ப்பா, நீ கவுன்சிலிங் கொடுக்க ஆரம்பிச்சதிலிருந்தே நான் என் மகளை கவனிச்சுட்டே தான் இருக்கேன். ஷி ஃபீல்ஸ் வெரி கம்ஃபர்டபிள். ஷி ஃபெல்ட் வெரி சேஃப் வித் யூ. ஆனால் எனக்கு ஒரு சந்தேகம் இருந்தது. இதெல்லாம் சரிதான். இந்தக் குடும்ப

அமைப்பில இந்த அளவு வசதியிலே அவ வந்து இருப்பாளா? தயவு செய்து தப்பா நினைக்காதீங்க. நான் மிடில் கிளாஸைத் தப்பா சொல்லலை. அவ பழகின விதம் வேறே. இதை அவ லைக் பண்ணுவாளா? அவளால முடியுமான்னு பார்க்கட்டும்னு தான் இங்க அனுப்பினேன். ஆனா அவளுக்கு அந்த மாதிரி ஒண்ணுமே தோணலை. இங்கே ரொம்ப என்ஜாய் பண்ணியிருக்கா. இங்கேதான் அம்மா, அப்பான்னா எப்படி இருப்பாங்க, ஒரு குடும்பம்னா எப்படி இருக்கும்னு தெரிஞ்சுக்கிட்டாளாம். ஒரு ஜென்டிலான கண்ணியமான ஆண் பிள்ளை எப்படி நடந்துக்கணும்னு நான் தெரிஞ்சுக்கிட்டேன் அப்படின்னெல்லாம் சொல்றா. இதுவும் சொல்லிட்டு இன்னொண்ணு வேற சொல்றாப்பா. அருள் பிரகாஷ் ஒதுங்கி ஒதுங்கித்தான் போனாரு. நான் தான் மேல விழுந்து பிடுங்கி அவருகிட்ட சம்மதம் வாங்கினேன்ப்பாங்கறா!'' என்றார்.

அருள் பிரகாஷ் வெட்கத்துடன் புன்னகைத்தான். சிகாமணி அவன் வெட்கத்தைப் பார்த்தார். பார்த்து விட்டு மனைவியைப் பார்த்தார். பிறகு பெருமூச்சு விட்டு விட்டுச் சொன்னார். ''இந்துமதியைப் பற்றி எங்களுக்கு சந்தோஷம் தாம்பா ஆனா, உங்க ஸ்டேட்டசை நினைச்சாத்தான் பயமா இருக்கு!'' என்றார் சிகாமணி.

''சிகாமணி, நான் உன்னைக் கையைக் கூப்பி கேட்டுக்கறேன். என் மக நிறைய அனுபவிச்சுட்டா. ஒரு புரோக்கன் ஃபேமிலியில என்னென்ன பிரச்சினை வரும்னு அந்தப் புள்ளை பார்த்துப் பார்த்து நொந்து போயிடுச்சு. ஒரு நல்ல குடும்பத்திலே அவ இருக்கணும். அது ஒண்ணுதான்



எனக்கு முக்கியம். பெரிய பெரிய பணக்காரங்களுக்கு கல்யாணம் பண்ணிக் கொடுத்துட்டு நாளைக்கு எங்களுக்கு வந்த மாதிரி பிரச்சினை வந்தா தாங்க மாட்டா. தெரிஞ்சு தான் இதைச் செய்தேன். ப்ளீஸ், என் மகளை உன் மருமகளா ஏத்துக்கோ!'' என்றார்.

''என்ன சந்துரு இப்படியெல்லாம் பேசறே? இந்துமதி அருமையான பொண்ணு. அவ மருமகளா வந்தா எனக்கு சந்தோஷம்தான். ஆனா எனக்கென்ன பயம்னா உன்னை நம்பி என் பொண்ணை அனுப்பிச்சேன் இப்படி ஸ்கீம் பண்ணிட்டியேன்னு கேட்கக் கூடாதில்லே?'' என்றார்.

''ஸ்கீம் பண்ணிதே நான் தாங்கறேன்ல. நான் தான்திட்டம் போட்டு அனுப்பினேன்ங்கறேனே?'' என்றார் சந்திரமோகன். சொன்னவர் திரும்பி ''இந்தா அருள், நீ அந்தப் பக்கம் போய் என் பொண்ணுகிட்டே பேசிடு வேணும்னா. எங்காவது கூட்டிட்டுப் போயிட்டு வா. இல்லே உங்க வீட்லயே கூட்டிட்டுப் போய் கொஞ்ச நேரம் பேசிட்டு வா!'' என்றார்.

அவன் சிகாமணியைப் பார்க்க சிகாமணியை கமலவதியைப் பார்த்துவிட்டு இரண்டு பேருமாக முடிவு செய்து கொண்டு சம்மதம் என்பது போல் தலையாட்டினார்கள். அடுத்த நிமிடம் அருள் பிரகாஷ் அங்கிருந்து பஞ்சாகப் பறக்க மூவரும் சிரித்தார்கள்.

அருள் பிரகாஷினுடைய ஃபோன் வந்தவுடனேயே இந்துமதி தாவியபடி போனை எடுத்து ''பிரகாஷ்!'' என்றாள்.

''ஏய், ஐ' ம் சாரி!'' என்றான் அவன்.

''என்ன சாரி, நீ வா உன்னைப் பார்த்துக்கறேன்!'' என்றாள்.

''பார்த்துக்கலாமா? வர்றியா எங்க வீட்டுக்கு?'' என்றான்.

''எப்போ?'' என்றாள் அவள்.

''நான் எங்க தோட்டத்திலே இருந்து கிளம்பிட்டேன். நான் ஒரு முக்கால் மணி நேரத்திலே அங்கே வந்துடுவேன். நீ உங்க வீட்ல இருந்து கிளம்பி வர்றதுக்கு சரியா இருக்கும். நிறைய நல்ல சந்தோஷமான விஷயங்கள் இருக்கு. சொல்லட்டுமா?'' என்றான்.

''ம்...!'' என்றாள் அவள்.

''உங்க அப்பாவும் எங்க அப்பாவும் பேசிகிட்டிருக்காங்க. இரண்டு பேரும் பயங்கரமான ஸ்கீமர்ஸ். என்னென்ன பேசினாங்கன்னு நான் அங்கே வந்து சொல்றேன்!'' என்றான்.

''ஐய்யோ, எனக்கு த்ரில்லிங்கா இருக்கே!'' என்றாள் இந்து.

''இத பாரு இந்து, நீ இப்போ வண்டி ஒட்டாதே. டிரைவரை ஓட்டச் சொல்லி வா. ஏன்னா நீ ரொம்ப எக்ஸைட்டடா பேசறே. சரி வராது!'' என்றான்.

''இதோ இப்பக் கிளம்பிட்டேன்!'' என்று அவள் ஃபோனில் பேசிக்கொண்டே வேக வேகமாகக் கிளம்பினாள்.



''அம்மா, கொஞ்சம் வெளியே போயிட்டு வரேன்!'' என்று சொல்லி விட்டு சிந்துஜா எங்கே என்று கேட்பதற்கு முன்பாக வெளியே வந்து விட்டாள்.

இத்தனைக்கும் காதில் செல்ஃபோனை வைத்துக் கொண்டே பேசிக் கொண்டே வந்தாள். காரில் ஏறியவுடன் ''டிரைவர் இருக்காரு, நான் அப்புறம் பேசறேன்!'' என்று அமர்ந்து கொண்டாள்.

இங்கே தந்தையர் இருவரும் பேசிக் கொண்டிருந் தார்கள். சிகா!மணி ''எல்லாம் சரிதாம்ப்பா சிந்துஜா ஒத்துக்கணுமில்லே?'' என்றார்.

சந்திரமோகன் பெருமூச்சு விட்டு விட்டு ''ஒத்துக்க மாட்டேன்னுதான். சொல்றா!'' என்றார். உடனே சிகாமணியும் கமலவதியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அவர்கள் முகத்தில் கவலை படிந்தது. ''கவலையெல்லாம் படாதீங்க. நான் பார்த்துக்கறேன். நான் தான் சொல்லிட்டேன் இல்லே. என் மக சந்தோஷம்தான் எனக்கு முக்கியம் அப்படின்னு!'' என்றார்.

''அது சரி, நான் உங்கிட்டே ஒண்ணு கேட்கணும்னு நினைச்சேன்!'' என்றார் சிகாமணி.

''என்ன விஷயம்?'' என்றார்.

''இல்லே, என்னமோ ரோஜாமணின்னு ஒருத்தர் இல்லவே இல்லைன்னு சிந்துஜாகிட்ட சொன்னயாம்?'' என்று கேட்டார்.

சந்திரமோகன் வெட்கத்துடன் புன்னகைத்தபடி ''உங்க மகன் தான் அந்த ஐடியா கொடுத்தான்!'' என்றார்.

"இதெல்லாம் வேற பண்றானா?" அவன் என்றபடி பார்க்க அந்த நேரத்தில் சந்திரமோகன் தன் பாக்கெட்டிலே இருந்து ஒரு கடிதத்தை எடுத்துக் கொடுத்தார்.

சிகாமணி அதைப் படித்து விட்டு "நல்ல பொண்ணுதான் இல்லே?" என்றார்.

"ஆமா, சிந்துஜா என்னதான் திருந்தி வந்தாலும் கூட இன்னமும் அவளுக்கு அந்த ஈகோ கொஞ்சம் இருக்கும். அதனால அருள் பிரகாஷ்தான் இந்த ஐடியா சொன்னாப்ல. இப்போதைக்கு அவளுக்கு நம்ம ஹஸ்பெண்ட் நம்மளுக்குத் தான் அப்படின்னு ஒரு சந்தோஷம் இருந்தாலே மத்த எல்லாத்தையும் சரி பண்ணிடலாம்னு".

"என்னமோப்பா சிந்துஜாவை சரி பண்றது கொஞ்சம் கஷ்டம்தான்!" என்றார் சிகாமணி.

சந்திரமோகன் 'இல்லே முடியும்!' என்றார். ஆனால் சந்திரமோகன் நினைத்த அளவிற்கு அவ்வளவு எளிதாக அது இருக்கவில்லை. யார் என்ன நினைத்தால் என்ன என்பது போல தங்கள் வீட்டிலே அருள் பிரகாஷும் இந்துமதியும் உலகம் மறந்தவர்களாக ஒருவர் பிடியிலே ஒருவர் நின்று கொண்டிருந்தார்கள்.

## அத்தியாயம் - 25

**த**ன் அறையில் காத்துக் கொண்டிருந்தான் அருள் பிரகாஷ். அவன் சொன்னது போலவே டிரைவரை துணைக்கு அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்தாள் இந்துமதி.



'நான் வந்துக்கறேன் போங்க!' என்று காரைத் திருப்பி அனுப்பி விட்டாள்.

கேட் திறந்திருந்தது. தள்ளினால் கதவு திறந்து கொண்டது. மாடியிலே தான் இருப்பேன் என்று அவன் சொல்லியிருந்ததால் நேராகப் பக்கவாட்டிலே மாடிப் படிகளில் ஏறி ஓடினாள் இந்துமதி.

'ஆனை வரும் பின்னே. மணி யோசை வரும் முன்னே!' என்பது போல அவளுடைய அந்த வாசனைத் திரவியத்தின் மணம் அவளுக்கு முன்னே சென்று அவனை இழுத்தது.

படபடப்புத் தாங்காமல் கம்ப்யூட்டரை வைத்துக் கொண்டு ஏதோ செய்து கொண்டிருந்த அருள் பிரகாஷ் சட்டென்று எழுந்து நின்றான். அவள் ஆர்வமும் வேகமுமாய் ஓடி வருவதைப் பார்த்தவுடன் அவனும் உணர்வு மயமானான்.

'ஹேய் இந்து!' என்றபடி தன் இரு கைகளையும் நீட்ட அவள் ஓடி வந்து அடைக்கலமாகிக் கொண்டாள். சற்று நேரம் மெய் மறந்து நின்றார்கள். பிறகு அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்துக் கேட்டாள் "என்னதிது?. திடீர்னு இரண்டு நாளா முகத்தைத் திருப்பிக்கிட்டு போனீங்க. போன் ஸ்விட்ச் ஆஃப்லே இருந்தது. இப்ப என்னன்னா நேர் மாறா ரியாக்ஷன் காட்டறீங்க?" என்றாள்.

அவள் முகத்தில் தெரிந்த ஆர்வத்தையும் படபடப்பையும் ரசித்துப் பார்த்த அவன் அவள் தலையைக் கோதிக் கொடுத்தபடி "சூழ்நிலை மாறிடுச்சு"என்றான்

"என்ன சூழ்நிலை இருந்துச்சு? இப்ப என்ன சூழ்நிலை மாறிடுச்சு!" என்று கேட்டாள் அவள்.

"இல்லே, அன்னைக்கு நீதான் வந்து நிக்கிறியாக்கும்னு நினைச்சுகிட்டு நான் படபடன்னு பேசிட்டுத் திரும்பினா அப்பா நிக்கறாரு. அப்பா ரொம்ப வருத்தப்பட்டாரு. என்னப்பா, சந்துரு அவன் பொண்ணை நம்மளை நம்பி அனுப்பியிருக்கான். இப்படி நீங்க ஆண்டி கிளைமாக்ஸ்லெ கொண்டு வந்து நிறுத்தினீங்கன்னா நான் அவனுக்கு எப்படிப்பா பதில் சொல்றது அப்படின்னு ரொம்ப வருத்தப் பட்டார். அப்ப எனக்கு என்ன பண்றதுன்னே தெரியலை. அப்பாவோட பக்கம் நியாயம் இருந்தது. ஆமா, ஃப்ரெண்ட்ஸ், அந்த நம்பிக்கையிலே கொண்டு வந்து தன் பொண்ணை விட்டா இப்படியா பண்ணுவீங்கன்னு அப்பாவைக் கேட்டா அப்பா என்ன பண்ணுவாரு. எக்காரணத்தைக் கொண்டும் அப்பா தலைகுனிந்து நிக்கறதை நான் விரும்பலை. அதான் அப்பா நீ வெளியே போயிடு. நான் அவளைக் கொண்டு போய் விட்டுடறேன்னாரு. சரி மொதல்ல இது நடக்கட்டும். அப்புறம் அப்பாவையும் மாமாவையும் கன்வின்ஸ் பண்ண முடியுமான்னு பார்க்கலாம். அப்படின்னு உள்ளத்தில் ஓரத்தில் ஒரு நப்பாசை இருந்தது. அதான் அப்பாகிட்டே ஒரு வாக்குறுதி கொடுத்தேன்!" என்றான்.

"ஓஹோ, நீங்க எல்லாரும் உங்க கௌரவத்தைப் பத்தித்தான் நினைச்சிங்க. என் மனசைப் பத்தி நினைக்கலையா?" என்றாள் அவள்.



"பின்னே? நினைக்காமயா? இப்படி ஒரு ஏற்பாட்டுக்கு ஒத்துக்கறப்போ என் மனசு எப்படி இருந்திருக்கும்னு உனக்குப் புரியலையா?".

அவள் பதில் சொல்லத் தோன்றாமல் அவனைப் பார்த்தாள். அப்புறம் இப்ப எப்படி மாறினீங்க" என்றாள்.

"நீ ரொம்ப ஃபீல் பண்ணிட்டியோ?" என்றான்.

"ஆமா, அன்னைக்கு நகைக்கடையிலே பார்த்துட்டு என்னமோ எதிரியைப் பார்க்கிற மாதிரி பார்த்துட்டுப் போனீங்க. ஐ ஃபெல்ட் வெரி பேட்!" என்றாள்.

"எனக்கும் தான் அப்படி உங்கிட்டே நடந்துக்கறதுக்கும் உன்னை அப்படி நடத்தறதுக்கும் கஷ்டமா இருந்தது. ஆனா எனக்கு வேற வழி இருக்கலையே?" என்றான்.

"ஆனா அதுக்கப்புறம் நான் ரொம்ப உடைஞ்சு போயிட்டேன். வீட்ல போய் தேம்பித் தேம்பி அழுதுகிட்டு இருந்தேன். அப்பா வந்து என்கிட்ட பேசி விஷயத்தைக் கறந்துக்கிட்டாரு. அங்கேயும் பிரச்சினையாதான் இருந்தது. அம்மா எதிர்ப்பு!" என்றாள் அவள்.

"ஓ!" என்றான் அவன் சிந்தனையுடன்.

"இத பாருங்க அருள். இத்தனை நாள் அவங்க வாழ்க்கையை அவங்க இஷ்டப்படி நடத்தினாங்க நான் தலையிட்டேனா? இல்லை. அதே மாதிரி இப்ப என் வாழ்க்கையிலும் அம்மா தலையிடக்கூடாது!" என்றாள் இந்து.

"இல்லடா, அப்படியெல்லாம் பேசாதே. பார்க்கலாம். அவங்களையும் கன்வின்ஸ் பண்ண முடியுமான்னு பார்க்கலாம்" என்றான்.

"ஆனா அப்பா எங்கிட்டே சரின்னு அங்கே சொல்லவே இல்லை"

"ஆமா, சரியான வில்லன்!" என்று சிரித்தான் அருள் பிரகாஷ்.

"எங்கப்பாவை வில்லன்கிறீங்களா? அடி வாங்குவீங்க!" என்றாள் இந்துமதி.

"அடிக்கணுங்கறே? எங்கே அடி பார்க்கலாம்!" என்று அவன் குனிந்து காட்ட அவள் செல்லமாக ஒரு அடி நிஜமாகவே வைத்தாள்.

"சே, இதுக்குப் பேரு அடியா? என்று சிரித்தபடி நிமிர்ந்தான் அவன்.

"சொல்லுங்க. எனக்குச் சஸ்பென்ஸ் தாங்கலை!" என்றாள்.

"உங்க அப்பா பயங்கரமான வில்லன். என்ன பண்ணி யிருக்காரு தெரியுமா? வேணும்னே தான் உன்னைக் கொண்டு வந்து எங்க வீட்லே விட்டிருக்காரு. ஒரு வேளை உனக்கும் எனக்கும் லைக்கிங் ஏற்பட்டா ரெண்டு பேருக்கும் ஈர்ப்பு ஆச்சுன்னா சந்தோஷம். இந்த மாதிரி ஒரு நல்ல ஃபேமிலி என் மகளுக்குக் கிடைச்சா பரவாயில்லை. இது நடக்கும்னு எதிர்பார்த்தெல்லாம் கொண்டாந்து விடலை. நடந்தா ஓகே தாங்கற துணிவில தான் கொண்டு வந்து விட்டேன்னு சொல்றாரு!" என்றான் அருள் பிரகாஷ்.



சொல்லி விட்டு கிளுகிளுவென்று சிரித்தான். "அப்பாவா? இப்படியெல்லாம் ஸ்கீம் பண்றாரா?" என்றாள்.

"ஆமா, மகளுக்கு பொறுப்பான ஒரு இடம் வேணும். உண்மையா அன்பு செலுத்தறவங்க வேணும்னு அவருக்கு ஆசை. சொத்து பணம்னு இருந்து என் லைஃப் என்னாச்சு?. என் மகளுக்கு அப்படி ஆகக்கூடாது. அது மட்டும் இல்லாம அவ ரொம்ப சென்சிட்டிவ். அதனால அவ ஹேப்பியா தான் இருக்கணும். பணங்காசு என்ன பணங்காசு அப்படின்னு எங்க அப்பாகிட்டே சொல்லி எங்கப்பாவை சமாதானப்படுத்திட்டாரு. அப்புறம் ரெண்டு பேரும் என்னை வரவழைச்சு எங்கிட்டே விஷயத்தை சொன்னாங்க. இதெல்லாம் தெரிஞ்சதுக்கப்புறம் ஏண்டா இங்க நிக்கறே. ஃபோனைப் பண்ணி என் மகளை வரச் சொல்லி பேசு போன்னு அனுப்பினதே உங்கப்பாதான்!" என்றாள்.

இந்துமதிக்கு வெட்கமாக போய் விட்டது. "பாருங்க, எங்கப்பா உங்களை நம்பி அனுப்பியிருக்காரு. அப்படின்னா நீங்க எப்படி நடந்துக்கணும்?" என்றாள்

அவள் "எப்படி நடந்துக்கணும்? இப்படித்தான் நடந்துக் கணும்!" என்று மறுபடியும் அவளை இறுக அணைத்து அவள் நெற்றியிலே இதழ் பதித்தான்.

"போதும் இதோட முடிச்சுக்கங்க!" என்றாள்.

"இத பாரு, நானே லிமிட்டோட இருந்துக்கணும்னு திட்டம் போட்டுகிட்டிருக்கேன். நீ என்னை சீண்டினே அப்புறம் ஐ வில் நாட் பி ரெஸ்பான்சிபிள்!" என்றான் அவன். ஆனால், அவள் இன்னும் நெருக்கமாக இழைந்து வந்தாள். ஆனால், 'விடுங்க, விடுங்க!' என்றாள்.

அவன் இரண்டு கைகளையும் விரித்துக் காட்டி "இங்கே பாரு. நானா உன்னைப் பிடிச்சுகிட்டிருக்கேன்!" என்று கேலி செய்ய அவள் வெட்கத்துடன் அவன் வலத்தோளைப் பற்றினாள்.

அவன் அவள் கைகளை தன் கைகளில் கோர்த்துக் கொண்டான். "ம்... ஆசை இருக்கு. ஆனா காட்டிக்கறது இல்லை!" என்றான்.

"அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லை!" என்றாள் அவள்.

"சரி, சரி, இப்ப இப்படித்தான் பேசுவே. கரெக்டான டைம் வரட்டும். என்னென்ன விஷயம் வாங்கணுமோ அந்த விஷயத்தையெல்லாம் எப்படி எப்படி வாங்கணுமோ அப்படி அப்படி வாயாலே சொல்ல வச்சுடுவேன்." 'பார்க்கலாம்' என்றாள் அவள்.

பார்க்கலாம் என்றான் இவன். பிறகு சற்று விலகி அந்த சோபாவிலே அமர்ந்து கொண்டார்கள். "சரி காபி குடிக்கறியா?" என்றான்.

"நீங்க போடுவீங்களா?" என்றாள்.

"நான் தான் சொன்னேல்ல இங்கே காஃபி மேக்கர் வச்சிருக்கேன்னு என்று அவளுக்கு சுடச்சுட காபி தயாரித்துக் கொடுத்தான்.

தனக்கும் ஒரு கப்பிலே ஊற்றிக் கொண்டான். பிறகு "இனிப்பு சரியா இருக்கா பாரு!" என்று அவளிடத்திலே கொடுத்தான். அவள் அருந்தி விட்டு நீட்டவும் வாங்கிக் கொண்டு மேற்கொண்டு அருந்தியவன் "ம்... இப்ப சரியா



இருக்கு" என்றான். அவள் தலையில் அடித்துக் கொண்டு "இது எல்லா பழைய சினிமாவுலயும் வந்தாச்சு நிறைய கதைல வந்தாச்சு" என்றான்.

அவன் மெல்ல அவள் காதைப் பிடித்துத் திருகி விட்டு சொன்னான். "இனி நடக்கப்போற எல்லா சமாச்சாரமுமே காலம் காலமாக நடந்துட்டு வர்றதுதான். பெருசா புதுமையெல்லாம் இருக்காது" என்றான். அவள் முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டாள். "வேணும்னா நீயும் நானும் சேர்ந்து புதுசா ஏதாவது கண்டுபிடிக்கலாம்."

அவள் ஒன்றும் பேசவில்லை. சற்று நேரம் அவன் இப்படியே கேலி செய்து கொண்டிருந்தான்.

அவள் அமைதியாக காஃபி அருந்திக் கொண்டிருந்தாள். பதில் கொடுக்கவில்லையென்றாலும். அவளுக்கும் இந்த மாதிரி பேச்சுக்கள் பிடித்துத்தான் இருந்தது. "எல்லாம் சரி எங்க அம்மா தான்."

"ஆமா உங்க அம்மாதான் நெகட்டிவா இருக்காங்க என்றான் அவன். "நீங்கதான் என்னமோ சரிபண்ணலாம்னு சொல்றீங்க எனக்கென்னமோ எங்க அம்மா சரியாவாங்களான்னு தெரியலை" என்றாள்.

"விடு, சரியாகலைன்னா உங்க அப்பா சப்போர்ட்டோட மேரேஜ் பண்ணிக்க வேண்டியதுதான். அப்புறமா அவங்களை திருப்தி படுத்திக்கலாம்" என்றான்.

"அவள் முகம் மலர்ந்தது." "இல்லை எனக்கு பயமா போச்சு" என்றாள். என்ன பயம் என்றான் அவன்.

''உங்க அம்மா ஒத்துக்கிட்டாதான் ஃபர்தரா மேரேஜ் பத்தி பேசுவோம் என்று சொல்லிடுவீங்களோன்னு பயந்தேன்.'' ''உங்க அம்மாவைப் பத்தி எல்லாம் தெரிஞ்சுக்கப்புறம் அப்படி சொல்வாங்களா. உங்க அம்மாதான் பிடிவாதமாச்சே. ஆனா இப்ப மாறியிருக்காங்க பார்க்கலாம் என்றான்.

மேலும் சற்று நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு ''வேண்டாம். நாம ரொம்ப நேரம் தனியா இருக்க வேண்டும். நீ சொன்னமாதிரி உங்க அப்பா என்னை நம்பி அனுப்பிச்சிருக்காரு. நாமளா சந்திச்சிருந்தா கூட கொஞ்சம் விளையாடலாம்'' என்று அவளை அனுப்பினான்.

''நான் என் காரை அனுப்பிச்சுட்டனே'' என்றாள் அவள்.

''நான் பைக்கில கொண்டு வந்து விடட்டுமா'' என்றான் அவன்.

''ம்...'' என்று அவள் ஆசையாக கிளம்பினாள். அவன் புன்னகைத்த படி சொன்னான். ''நீ வேற பின்னாடி உட்கார்ந்துட்டு நான் எப்படி வண்டி ஓட்டுவேன்னே தெரியலை'' என்றான்.

''வண்டி ஓட்டும் போது இந்த மூடெல்லாம் இருக்கக் கூடாது. பின்னால ஏதோ அரிசி மூட்டை உட்கார்ந்திருக்குன்னு நினைச்சுக்கங்க'' என்றாள் அவள். அவன் சிரித்தான். ''அரிசி மூட்டையா நீயா. நீ அப்படியே வடிவமா அழகா'' என்று அவன் வர்ணிக்க ஆரம்பிக்க ''ஐய்யய்யோ நானே வீடு எடுத்துக் கொடுத்துட்டேனா'' என்றாள்.



''இதுக்குத்தான் யோசிச்சுப் பேசணும்'' என்றவன் சிரித்தபடி 'கிளம்பு' என்று தன் வண்டியிலே ஏற்றிக் கொண்டான்.

அந்த அரை மணி நேர பயணத்திலும் அவர்கள் பொதுப்படையாகத்தான் பேசிக் கொண்டார்கள். அவர்கள் பங்களாவின் முன்னாலே வண்டியை நிறுத்தினான். உள்ளே கொண்டு வந்து விடட்டுமா என்றான். ''வேண்டாம், வேண்டாம். இப்போதைக்கு உள்ளே வந்திங்கன்னா எங்கம்மா உங்களை வம்பிழுப்பாங்க. நானே சமாளிச்சுக்கறேன்'' என்றாள் அவள்.

சரி என்று அவள் இறங்கி உள்ளே போனாள். நீண்ட தொரு பெருமூச்சு விட்டு விட்டு வண்டியைத் திருப்பினான் அருள் பிரகாஷ். அவன் எதிர்பார்த்தது போலவே தான் அங்கே நிகழ்ச்சிகள் நடைபெற்றது. ஹாலிலேயே கோபமாக சோபாவில் அமர்ந்திருந்தாள் சிந்துஜா.

இந்துமதி பங்களா கேட்டில் இருந்தே பார்த்து விட்டாள். ''போச்சுடா வம்புதான்'' என்று நினைத்துக், கொண்டே பங்களாவிற்குள்ளே போனாள். ''நில்லுடி எங்க போயிட்டு வர்றே'' என்றாள் சிந்துஜா. ''அருள் பிரகாஷைப் பார்த்துட்டு வரேன் என்றாள் இவள்.

''என்னடி சினிமாக் கதாநாயகின்னு நினைப்பா உனக்கு. யாரைக் கேட்டுப் போனே'' என்றாள்.

''யாரைக் கேட்டுப் போகணும். அருள் பிரகாஷ் என் ப்ரெண்டு அவரைப் பார்க்கப் போறதுக்கு நான் யாரைக் கேட்டுப் போகணும்?'' என்றாள்.

"வெறும் ப்ரெண்டுதானா?" என்றாள் அம்மா.

"அம்மா நான் நேத்தைக்கே சொல்லிட்டேன். அருள் பிரகாஷ் என் ஃப்ரெண்டு மட்டுமில்லே." அதுக்கும் மேலே என்றாள் இந்துமதி சற்றே குரல் எழுப்பி.

"என்னடி குரலெல்லாம் எழும்புது. யாருகிட்ட பேசிட்டு இருக்கற? அருள் பிரகாஷாவது வெங்காயமாவது. இனி நீ ஏதாவது அவனைப் பார்க்கப் போன என்று குரல் எடுத்துக் கத்தினாள் சிந்துஜா.

சத்தம் கேட்டு மகாலிங்கமும், மரகதமும் இறங்கி வந்து விட்டார்கள். இந்துமதி தாயை நேராகப் பார்த்தாள். "அம்மா இதெல்லாம் வேஸ்ட் இதெல்லாம் பிரயோஜனமே இல்லை. நீ இத்தனை நாள் உன் லைப்பை பார்த்தில்ல? நான் ஏதாவது தலையிட்டனா? கேட்டனா. அது மாதிரி நான் என் லைப்பை பத்தி டிஸைட் பண்ணப் போறேன். யூ டோன்ட் ஹேவ் எனி சே இன் இட்."

"தாயை மதிப்பேன் ஆனால் சில முடிவுகளை நான்தான் எடுப்பேன்" என்று சொல்லி விட்டு இந்துமதி வேகமாக மாடியேறிப் போனாள்.

சிந்துஜா அதற்குப் பிறகும் வெகு நேரம் ஆர்ப்பாட்டமாக கத்திக் கொண்டிருந்தாள். இந்துமதி மட்டும் சட்டை செய்யாமல் தன் அறையிலே அமர்ந்து கொண்டாள். மகாலிங்கத்திற்கும். மரகதத்திற்கும் இப்போதுதான் விஷயம் தெரிய வர இரண்டு பேரும் திகைப்புடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.



# அத்தியாயம் - 26

எவ்வளவு கத்தியும் தன் மகள் அசையவே இல்லை என்றவுடன் சிந்துஜாவுக்கு அவமானமாகப் போய் விட்டது. அதோடு களைப்பாகவும் உணர்ந்தாள்.

மகாலிங்கமும் மரகதமும் அவள் கத்தி முடித்ததற்குப் பிறகு எச்சரித்தார்கள். "இத பாரு வயசுப் பொண்ணு. ஏற்கனவே ஒரு தடவை தூக்க மாத்திரையை சாப்பிட்டிருக்கா. நீ ரொம்ப அவளை டார்ச்சர் பண்ணினா மறுபடியும் ஏதாவது பண்ணிட்டான்னா புள்ளை நம்மளுக்கு இல்லன்னு ஆயிடும். நீ உன்ற போலி கௌரவம் சொத்து பணம் இதெல்லாத்தையும் உன்னோட நிறுத்திக்கோ. இந்த சொத்து, பணம் இதனாலதானே இத்தனை நாளா புருஷனையே இழந்துகிட்டு நின்னே!" என்று கேட்டார் மரகதம்.

முதல் முறையாக தன்னிடம் மிரட்டிப் பேசுகிற தாயை சற்று ஆச்சரியமாக பார்த்தாள் சிந்துஜா. "ஆமா, போதும்! உன்ற ஆட்டம் எல்லாம் போதும். அந்தப் புள்ளையை யாவது நிம்மதியா இருக்க விடு. ஒரு வழியா உங்க வீட்டுக்காரன் தணிஞ்சு வந்திருக்காப்ல. மறுபடியும் நீ ஆடினா சலிச்சுப் போய் அவரும் போயிடுவாப்ல!" என்றாள் மரகதம்.

"ஆமாம்மா, ஓவரா ஆட்டம் போடாதே. பெரியவங்க இருக்கிறோம். உங்க வீட்டுக்காரர் இருக்காரு. இனிமே லாவது கட்டுப்பட்டு ஒத்துப்போய் வாழ்றதுன்னா என்ன

அப்படின்னு நீ தெரிஞ்சுக்கோ!'' என்றார் மகாலிங்கம் கடுமையாக.

''என்னப்பா பேசறீங்க?'' என்றாள் அவள்.

''கரெக்டாத்தான் பேசறோம். சொத்து சொத்துங்கறியே? இதெல்லாம் யாரு சம்பாதிச்சது.? நீ சம்பாதிச்சதா? நான் சம்பாதிச்சது. ஏதோ போனாப் போகுது. ஒரே புள்ளை அப்படின்னு செல்லமா வளர்த்தேன். நாப்பது வயசு வரைக்கும் நீயும் உன்ற லைஃப்பை கெடுத்துக்கிட்டே. இனி உன் மக லைப்பையும் கெடுக்கணுமா?'' என்று கோபமாகப் பேசவும் சிந்துஜா திகைத்துப் போனாள்.

''ஆமா, நீ என்ன சம்பாதிச்சிருக்கிறே? சொல்லு. நான் விட்டுட்டு வந்த ஃபேக்டரியை நிர்வாகம் பண்ணி கிட்டிருக்கே. அதையும் ஏதோ பண்ணிட்டுக் கிடக்கட்டும் நான் விட்டிருக்கேன். உள்ளே வந்து பார்த்தாதான் என்னென்ன குளறுபடி பண்ணி வச்சிருக்கேன்னு தெரியும். சும்மா ஆடறா!. புள்ளைக்கு அந்தப் பையனைப் பிடிச்சா பண்ணிக்கிட்டுப் போகட்டும். குடும்பம் நல்ல குடும்பம். நடுத்தரக் குடும்பம்னாலும் நாகரீகமானவங்க. அமைதியான வங்க, அன்பானவங்க, நீங்க பெரிய சொத்தும் பொருளும் வச்சுகிட்டு புருஷனும் பொண்டாட்டியும் ஊரு பூரா எங்க மானத்தைக் கப்பலேத்தி நாறடிச்சுட்டீங்க. வேற என்ன செஞ்சே நீ!'' என்றார்.

சிந்துஜா உண்மையாகவே திகைத்துப் போய் அமர்ந் தாள். ''பேசாம இருந்துரு, ஆமாம். என்னைப் பத்தி உனக்குத் தெரியாது. வீட்லே இவ்வளவு அமைதியா இருக்கறேன். வெளியே போய் கேட்டுப் பாரு. இனி



ஏதாவது ஆடினேன்னா சாட்டையை எடுத்துருவேன்!'' என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கையிலே சந்திரமோகன் உள்ளே வந்தார்.

சாட்டையை எடுத்து விடுவேன் என்று மாமனார் கோபமாகப் பேசுவதை ஆச்சரியமாக பார்த்துக் கொண்டு நின்றார். சிந்துஜா வேகமாக ஓடி சந்திரமோகனிடம் போய் ''பாருங்க, இவங்க என்ன பேச்சுப் பேசறாங்க!'' என்றாள்.

''மாப்பிள்ளை நான் சொல்ல வேண்டியதெல்லாம் சொல்லிட்டேன். சொத்து சொத்துங்கறாளே பத்து பைசா இவ சம்பாதிச்சது இல்லை. நான் சம்பாதிச்சது. இவ நிர்வாகம் பண்றாளே ரெண்டு ஃபேக்டரி. அதுவும் நான் பண்ணினது. ஏதோ நிர்வாகம் பண்ணட்டும்னு விட்டிருக்கேன். சும்மா சொத்துப் பணம்னுட்டு பெரிய அந்தஸ்து. நம்ம அந்தஸ்து என்னன்னு தெரியுமா? நான் ஆரம்ப காலத்திலே என்னவா இருந்தேன்னு தெரியுமா. கூலி வேலைக்குத்தான் போயிட்டு இருந்தேன். ஏதோ ஒரு புண்ணியவான் கொஞ்ச நிலம் எனக்கு குறைஞ்ச விலையில கொடுத்தாரு. அதிலே எங்க அம்மா உள்பட எல்லாரும் உழைச்சு விவசாயம் பண்ணி கிடைச்ச லாபத்துல ஆரம்பிச்சது தான் இப்படி இந்த அளவுக்கு வந்து நிக்குது. போதும். சும்மா இரு!'' என்று சொல்லி விட்டு மனைவியை அழைத்துக் கொண்டு உள்ளே போய் விட்டார்.

சந்திரமோகன் 'சரி நீ வா' என்று அவளை கீழே இருக்கிற தங்கள் படுக்கை அறைக்கு அழைத்துக் கொண்டு போனார். இங்கேயும் ஒரு படுக்கை அறை. மேலேயும் ஒரு படுக்கை அறை என்று இவர்களுக்கும் இருந்தது. இந்துமதிக்கும்

இருந்தது. உள்ளே போன சிந்துஜா "எல்லாரும் என்னை பந்தாடறாங்க" என்று அழ ஆரம்பித்து விட்டாள்.

அவளை அழ விட்டார் சந்திரமோகன். பிறகு சொன்னார். "அவங்க சொல்றது கரெக்ட்தான் சிந்துஜா!" என்றார்.

"என்னங்க? அவங்க அந்த அன்னக் காவடியைப் போய் என் மக கல்யாணம் பண்ண முடியுமா?"

"ஸ்டாப். ஸ்டாப். அவங்க ஒண்ணும் அன்னக் காவடி இல்லை. சொந்த வீடு இருக்குது. இரண்டு மகனுக்கும் ரெண்டு வீடு வச்சிருக்காரு. அது இல்லாம நிலம் இருக்குது.அவனும் சொந்தமா நிறுவனம் நடத்தறான். எல்லாத்தைக் காட்டிலும் உன் மகளுக்கு அந்த எளிமையான வாழ்க்கைதான் பிடிச்சிருக்கு. ஏன்னா உன்னோட ஆடம்பர வாழ்க்கை அவளுக்கு அவ்வளவு வெறுப்பு ஏற்படுத்திருச்சு!" என்றார்.

"பேசமாட்டீங்க. நீங்களும் அவங்க கட்சிதான்!" என்றாள்.

"ஒருத்தரும் ஒருத்தர் கட்சியும் இல்லம்மா. நாம ரெண்டு பேரும் சேர்ந்து இந்துவுக்கு நல்லது செய்யணும். இந்துவுக்கு அந்தப் பையனைப் பிடிச்சிருக்கு. அந்தப் பையனும் கெட்டிக்காரன்தான். அவங்கிட்டே எந்தக் கெட்ட பழக்கமும் இல்லை. பிஸினஸ்லே நல்லா வந்துகிட்டிருக்கான். சோஷியல் சர்வீஸ் பண்றான். அவனுக்கும் இந்தப் புள்ளையைப் பிடிச்சிருக்கு. மரியாதையா நாம கல்யாணம் பண்ணிக் கொடுக்கறதுதான் நல்லது"



"இவ எப்படிங்க இந்த வசதியெல்லாம் பழகிட்டு அங்க போய் இருப்பா?"

"இருக்கட்டும்னுதானே டெஸ்ட் பண்றதுக்கு விட்டது? இருந்தாளா இல்லையா? சொல்லப்போனா இந்த இருபது வருஷத்துல நம்ம புள்ளை நம்மகிட்டே இருந்து சந்தோஷப் பட்டதை விட இந்த ஒன்றரை மாசத்திலே அவ ரொம்ப சந்தோஷமா இருந்திருக்கா.அது தெரியுமா உனக்கு? இது "உனக்கும் அடிதான்" எனக்கும் அடிதான். சிந்துஜா ஒன்றும் பேசவில்லை"

"இப்ப என்ன சொல்றீங்க?" என்றாள்.

"முடிவுதான். நம்ம முடிவு இல்லை. அவங்களோட முடிவு. அவங்க முடிவு பண்ணியாச்சு.நம்ம மேலே இருக்கற அன்பு கொஞ்சமாவது குறையாம இருக்கணும்னு நினைச்சா சந்தோஷமா நல்லபடியா அவளுக்கு ஆதரவு கொடுத்து முன்னாலே நின்னு கல்யாணம் பண்ணி வச்சா.அப்பா அம்மான்னு நம்மகூட ஒரு நாள் இருக்கறதுக்காவது ஆசையா வருவா. இல்லைன்னா அது கூட வரமாட்டா!" என்றாள்.

சிந்துஜா சற்று நேரம் ஒன்றும் பேசவில்லை. சந்திர மோகன் அவளை தன் பக்கமாக இழுத்து தன் வலக்கையால் அணைத்துக் கொண்டார்.

"இத பாரு சிந்து, ஏதோ ஒரு விதத்திலே என்னை உனக்குப் பிடிக்கப் போய்த்தானே இத்தனை நாளா காத்துக்கிட்டு இருந்தே? கோபதாபம் அந்தஸ்து பிரச்சினை இதெல்லாம் இருந்தா கூட நீ வேற ஒருத்தனை திரும்பிப் பார்க்கலையில்லே?" என்றார்.

அவள் மேலும் கீழும் மௌனமாகத் தலையாட்டினாள்.

"என்னைப் பத்தி அப்படிச் சொல்ல முடியாது. நான் ஒரு தடவை ரெண்டு தடவை..." என்று இழுத்தவர் "சரி, அதை விடு. ஆனா நானும் ஒரு லீகல் கமிட்மெண்டுக்குப் போகலையில்லே. ஏன் நம்ம பொண்ணுக்காக? அப்படி இருக்கும் போது அவ சந்தோஷம்தானே நமக்கு முக்கியம்!" என்றார் சந்திரமோகன்.

சிந்துஜா மெல்லிய குரலில் "அதெல்லாம் சரிதாங்க. இப்பத்தான் நாம ரெண்டு பேரும் சேர்ந்திருக்கோம். நம்ம கூட அவ கொஞ்ச நாள் இருந்தா நல்லா இருக்குமில்லே!" என்றாள்.

"இது பாயிண்ட். இதை நீ சொல்றியே இது பாயிண்ட். நான் மகிட்ட ரிக்வெஸ்ட் பண்ணிக்கறேன். ஒண்ணு வேண்ணா செய்யலாம். கல்யாணம் ஒரு ஏழெட்டு மாசம் கழிச்சு வச்சுக்கலாம். அடுத்த மாசம் நாம நிச்சயம் பண்ணிக்கலாம். அது வரைக்கும் அவங்க சந்திச்சுக்கட்டும். ரெண்டு குழந்தைகளும் நல்ல குழந்தைங்கதான். எல்லை மீற மாட்டாங்க. பொறுத்துக்குவாங்க. இந்துமதியை நாம சந்தோஷமா வச்சுக்கலாம். வாட் டு யு ஸே!" என்றான்.

"சரிங்க!" என்றாள் அவள்.

"அப்பன்னா நீ மொதல்ல வா! நாம போய் இந்துவை சமாதானப் படுத்தலாம்!" என்றார்.

இரண்டு பேரும் மாடி ஏறிப் போனார்கள். இந்துவின் அறைக் கதவு சும்மாதான் சாத்தியிருந்தது. கதவைத் திறந்த



சந்திரமோகன். கண்ணில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு படுத்துக் கொண்டிருந்தாள் இந்துமதி.

"இந்து!" என்றாள் சிந்துஜா.

இந்துமதி பார்த்தாள்.

"என்னப்பா? இவங்க உங்க மனசையும் மாத்திட்டாங்களா?" என்றாள் அப்பாவிடம்.

சந்திரமோகன் சிரித்து விட்டு "இல்லம்மா. வைஸ்வர்ஸா. நான் தான் உங்க அம்மாவின் மனசை மாத்தியிருக்கேன்!" என்றார்.

உடனே துள்ளிக் குதித்தாற்போல் எழுந்து அமர்ந்தாள இந்துமதி.

"அம்மா! அப்படியா?" என்றாள்.

"ம்...!" என்று வெட்கத்துடன் சிரித்தாள்.

"ஏம்மா நான் அவ்வளவு தூரம் சொன்னேன். நீ கேட்கலை. உன் வீட்டுக்காரர் வந்து உடுக்கை அடிச்சவுடனே அரை மணி நேரத்துல சரின்னுட்டியா?" என்றாள் இந்துமதி.

சிந்து வெட்கத்துடன் சிரித்து விட்டு "இல்லடி. நீ அந்த விட்லே போய் எப்படிடி இருப்பே? அதான் எனக்குக் கவலையா இருந்தது"

"அம்மா, அந்த வீட்ல அடிப்படை வசதிகளெல்லாம் இருக்கு. கீழ மூணு பெட் ரூம் இருக்கு. மேல மூணு பெட் ரூம் இருக்கு. எல்லா வசதிகளும் இருக்கும்மா. தோட்டம்

துறவுன்னு இருக்கு. வேற என்ன வேணுங்கறே? எல்லாத்தைக் காட்டிலும் அவங்க அன்பா இருக்காங்க. இத்தனை நாளா எனக்கு கிடைக்காத அம்மா, அப்பா அங்க எனக்கு கிடைப்பாங்கம்மா''

''சரிடி, ஆனா இப்பதானே நாங்க ரெண்டு பேரும் சேர்ந்திருக்கோம். எங்க கூட கொஞ்ச நாள் இருக்கலா மில்லே?'' என்றாள்.

''சரிம்மா, கல்யாணத்தை வேண்ணா கொஞ்சம் தள்ளிப் போடுங்க!'' என்றாள்.

''தேர் யூ ஆர். இதையேதான் நான் சொன்னேன். ஒண்ணு பண்ணலாமாடா? அடுத்த மாசம் நிச்சயதார்த்தம் வச்சுக்கலாம். கல்யாணம் ஒரு ஏழெட்டு மாசம் கழிச்சு வச்சுக்கலாமா?'' என்றார்.

''சரிங்கப்பா!'' என்ற இந்துமதி 'ஹைஹ!' என்று குதித்தபடி தாயை கட்டி அணைத்துக் கொண்டாள். தந்தையையும் கட்டி அணைத்துக் கொண்டாள்.

தன்னிடம் இப்படியெல்லாம் உணர்ச்சிகளை இந்துமதி வெளிப்படுத்தியதில்லை என்பதால் சிந்துஜாவும்தான் குளிர்ந்து போனாள். ''இருங்க. அம்மா அப்பா வேறே என் மேல கோபமாக இருந்தாங்க. அவங்களையும் கூட்டிட்டு வந்துடறேன்!'' என்று போனாள் சிந்துஜா.

அடுத்த நொடி அவர்களும் அங்கே இருந்தார்கள். எல்லோருமாக இந்துமதியின் அறையில் இருந்த அந்த சோஃபாக்களில் அமர்ந்தபடி உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.



''அப்பா, நீங்க இவ்வளவு சீக்கிரம் பிரச்சினையை சால்வ் பண்ணுவீங்கன்னு நான் நினைக்கவே இல்லப்பா''என்றாள் இந்துமதி.

''அது ஒரு சூழ்நிலைதாம்மா!''

''என்ன சூழ்நிலை? ஆமா உன்னை அனுப்பிச்சுட்டா நாங்க ரெண்டு பேரும் கொஞ்ச நாள் ஜாலியா இருக்கலா மில்லே?'' என்றார் சந்திரமோகன்.

''என்ன பேச்சுப் பேசறீங்க?'' என்று சிந்துஜா அவரை செல்லமாகத் தட்ட. 'ம்... ம்... நடத்துங்க, நடத்துங்க!' என்று சிரித்தாள் இந்துமதி.

மகாலிங்கமும், மரகதமும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''சாரி மாமா நீங்க இருக்கீங்கன்னு...!''

''இல்லல்லே, பரவாயில்லை. நடத்துங்க. இப்படி யெல்லாம் நடக்காதா? நாங்க அப்படியே லேசு பாசா பார்த்து ரசிச்சுக்க மாட்டோமான்னு எத்தனையோ நாளா காத்துக்கிட்டிருந்தோம். நடத்துங்க மாப்பிள்ளை நாங்க கண்டுக்காம ஆனா கண்டுக்குவோம்!'' என்றார் மகாலிங்கம்.

அவரும் கூட இப்படி நகைச்சுவையாகப் பேசி நாளா யிற்று என்பதால் சிந்துஜா அவரை அன்புடன் பார்த்தாள். ''க்கும்... உங்க அப்பனுக்கு இளமை திரும்புது!'' என்றார் மரகதம்.

சந்திரமோகனும் இந்துமதியும் சிரித்தார்கள். ''ஏன்? நம்ம இளமைக்கு என்ன குறைச்சல்? சொல்லு பார்க்கலாம். ஒரு முடி நரைச்சிருக்குதா?'' என்று காட்டினார் மகாலிங்கம்.

உண்மைதான். அவருக்கு அந்தக் காலத்து உடல் என்பதாலோ என்னவோ முடியெல்லாம் நரைக்கவே இல்லை. "உன்னை எங்காவது கூட்டிட்டுப் போனாத்தான் அக்காவான்னு கேட்பாங்க. டை அடிச்சுட்டதினாலதான் கேட்கறதில்லை!" என்றார் மகாலிங்கம்.

"ம்ஹூம். நம்ம பாடு தான் முக்கியம். புள்ளையும் மாப்பிள்ளையும் சந்தோஷமா இருக்கறாங்க. புள்ளையோட புள்ளைக்கு மாப்பிள்ளை பேசியாச்சு. இனித்தான் நான் டை அடிச்சுட்டு நடக்கணுமாக்கும்!" என்று சிரித்தார் மரகதம்.

"சரி, நீங்க வாங்க. அவங்க பேசிகிட்டிருக்கட்டும். நான் போய் கீழே போய் காபி கீஃபி ஏதாவது போட்டுட்டு பலகாரம் இருந்தா எடுத்துட்டு வரேன்!" என்று நகர்ந்தார்.

இந்துமதி கலகலவென்று சிரித்தாள். "அப்பா, தாத்தாவும், பாட்டியும் ரொம்ப டிப்ளமேட்டிக் இல்லே!" என்றாள்.

சந்திரமோகன் அழகாகப் புன்னகைத்தார். கணவனின் புன்னகையை பல நாட்களுக்குப் பிறகு உள் வாங்கிக் கொண்டாள் சிந்து.

"அப்பா, நானும் அருள் கிட்டே இந்த நல்ல விஷயத்தைச் சொல்லணும்ப்பா. நீங்க பேசிகிட்டிருங்க. நான் அந்தப் பக்கம் பால்கனியில போய் பேசிட்டு வரேன்!" என்றவள் நாலெட்டு நடந்து திரும்ப வந்து அப்பாவின் காதிலே "அப்பா, பத்து நிமிஷம் டைம். என்ன ரொமாண்டிக்கா பேசி அம்மாவை மடக்கணுமோ மடக்கிக்கங்க. ஏன்னா நானும் டிப்ளமேட்டிக்" என்றவள் "ஓ,கே, பதினைஞ்சு



நிமிஷம்!" என்று முணுமுணுத்து விட்டு சிரித்துக் கொண்டே செல்போனை எடுத்துக் கொண்டு தன் மனம் கவர்ந்தவனிடம் பேசுவதற்காக அந்தப் பக்கம் இருந்த பால்கனிக்கு சென்றாள்.

"என்ன சொன்னா?" என்றாள் சிந்துஜா.

"அவ என்ன சொன்னான்னா..." என்று ஆரம்பித்தார் சந்திரமோகன்.

## அத்தியாயம் - 27

இன்று தன்னுடைய அலுவலகத்தில் இருந்த அனைத்து வேலையாட்களையும் ஒரு புராஜக்ட் விஷயமாக வெளியிலே அனுப்பி விட்டான் அருள் பிரகாஷ். அவன் மட்டும்தான் அன்றைக்கு அலுவலகத்திலே இருந்தான்.

அந்தத் தனிமையும் அவனுக்குத் தேவையாக இருந்தது. கொஞ்சம் போர் அடித்தது. ஆனால் இந்துமதியை நினைத்த உடனே எல்லா சலிப்புணர்வும் பிய்த்துக் கொண்டு ஓடி விட்டது.

முந்தின நாள் இரவு அவள் உற்சாகமாகத் தன்னிடம் பேசியதைக் குறித்து இப்போது சிரித்துக் கொண்டான். குழந்தையைப் போல ஆகிவிட்டாள். காதல் மனிதனை பைத்தியம் ஆக்குமா என்ன? குழந்தையை போல ஆக்கிவிடுமா என்ன? எனக்குமே ஒன்றுமே ஓட மாட்டேங்குது இந்த நேரத்திற்குள்ளாக எத்தனை வேலையை முடித்திருப்பேன். இப்போது ஒரு பெரிய

கம்பெனியோட டை அப் வைத்துக் கொள்வதற்கான பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது.

அவர்களுக்குத் தங்களுக்கு வருகிற எல்லா விளம்பரங் களையும் முடித்துக் கொடுப்பதற்கு நேரம் இல்லையாம். அதனால் இதைப் போல இரண்டு மூன்று நிறுவனங்களை உடன் வைத்துக் கொள்ளலாம் என்று அவர்கள் திட்டம் போடு கிறார்கள். இவனுடைய விளம்பர தயாரிப்புகள் தரமாகவும் சுவாரசியமாகவும், சில சமயங்களில் நகைச் சுவை கலந்து இருப்பதை அவர்கள் உணர்ந்தார்கள். அதனால் இவனிடத் திலே பேச்சு வார்த்தை நடத்தியிருந் தார்கள். இப்போது மூன்றாவது புராஜெக்டை அவர்கள் கொடுக்க இருந்தார்கள்.

அது குறித்த டிஸ்கஷனுக்குத்தான் தன்னுடைய மொத்தப் பணியாட்களையும் அனுப்பி விட்டு 'ஃபைனல் ஸ்டேஜ்ல சொல்லுங்க நான் வரேன்!' என்று அவன் சொல்லியிருந் தான் அருள் பிரகாஷ்.

இன்றைக்கெல்லாம் எப்படியும் அந்த டிஸ்கஷன் போகும். மறுநாள் தான் அவனை அழைப்பார்கள். விசிராந்தையாக கனவு காண்பது என்று முடிவெடுத்திருந் தான். முதல் நாளும் ஒன்றும் பெரிய உறக்கம் இல்லை. மகிழ்ச்சி அவனை உறங்க விடாமல் செய்து விட்டது. பரவாயில்லையே இந்த மாய வித்தையெல்லாம் சந்திர மோகன் முதலிலேயே பயன்படுத்தி இருந்தால் அவர்கள் வாழ்க்கையே சீராக இருக்குமே என்று எண்ணிக் கொண்டான்.



அப்போது அவர் காண்பித்த அந்த ரோஜாமணியி னுடைய கடிதம் நினைவுக்கு வந்தது.

அன்புள்ள சந்திரமோகன் அவர்களுக்கு!

என்னவருக்கு என்று எழுதுவதற்கு எனக்கு எப்போதுமே உரிமை இருக்கவில்லை. ஆனாலும், நானாக வந்துதான் மேலே விழுந்து பிடுங்கி உங்களுடைய நட்பையும் அன்பையும் வாங்கிக் கொண்டேன்.

நீங்களும் வஞ்சம் வைக்காமல் எனக்கு வாரி வாரிக் கொடுத்தீர்கள். ஆனாலும், உங்களுக்கு ஒரு குற்ற உணர்வு இருந்தது. சிந்துஜாவிற்கு துரோகம் செய்கிறோம் என்ற தயக்கத்தோடுதான் நீங்கள் என்னோடு பழகினீர்கள். இது ஒரு இரண்டாம் பட்சமான உறவுதான் என்பது எனக்குத் தெரிந்திருந்தது. ஆனாலும், அதை ஏற்றுக் கொண்டேன். ஏற்றுக் கொண்டேன் இல்லை. கெஞ்சிக் கேட்டு வாங்கிக் கொண்டேன் ஏனென்றால் எனது வாழ்வில் ஒரு வாரிசு இல்லை என்று தீர்மானமாகி விட்டது. ஏதோ கிடைத்த வாழ்க்கையை ஒரு நல்லவரோடு அனுபவிப்போமே என்றுதான் நான் உங்களோடு நட்பு ஏற்படுத்திக் கொண்டேன்.

நீங்கள் முதலில் இருந்தே தெளிவாக இருந்தீர்கள். நான் சிந்துஜாவின் கணவன்தான். உன்னோடு இருப்பது ஜெஸ்ட் அன் அஃபேர். என்று தெளிவாக சொல்லிவிட்டீர்கள். அதிலும் என் மனைவியே என்னைப் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறாள். அதற்காக தரம் தாழ்ந்து செல்வதற்கு நான் விரும்பவில்லை. உன்னைப் போல ஒரு

நாகரீகமான பெண்ணோடு ஒரு தொடர்பை வைத்துக் கொள்வதைத் தவிர எனக்கு வேறு வழி இருக்கவில்லை என்றுதான் என்னிடம் நீங்கள் சொன்னீர்கள்.

அப்போதெல்லாம் எனக்கு வலிக்கும். ஆனாலும், என்னோடு பழகிய காலத்தில் நீங்கள் என்னை வித்தியாசப் படுத்தி நடத்தவில்லை. கோவிலில் வைத்து மாலை மாற்றிக் கொண்டீர்கள். நானும் அதை ஏற்றுக் கொண்டேன். இந்த ஐந்தாண்டு காலம் நீங்கள் வந்து சென்ற நாட்கள் எல்லாம் எனக்கு வசந்தமாக இருந்தது. வராத நாட்கள் எல்லாம் ஏதோ பாலைவனத்தில் இருப்பது போலத்தான் இருந்தது. எனவே நீங்கள் வந்த நாட்களிலெல்லாம் ஒவ்வொரு கணத்தையும் நான் முழுமையாக அனுபவித்தேன். அந்த நினைவுகளைச் சுமந்து கொண்டு இந்தப் புள்ளியில் நான் உங்களிடம் இருந்து விலகிவிடுவதுதான் நல்லது என்று நினைக்கிறேன்.

சிந்துஜா உங்களிடம் கோபமாக விலகி இருந்த போதே என்னுடைய உறவைக் குறித்து பயந்தவர் நீங்கள். பயம் என்று இல்லை. ஒரு தார்மீக ரீதியான தயக்கம் உங்களிடம் இருந்தது. இனிமேல் இது தொடர்ந்தாலும் உங்களுக்கு அது ஒரு உறுத்தலாகத்தான் இருக்கும். ஒரு முள்ளைப் போல அது கஷ்டப்படுத்திக் கொண்டே இருக்கும் என்பதால் நான் விலகுகிறேன்.

நீங்கள் தாராளமாக சிந்துஜாவுடன் உங்களுடைய வாழ்க்கையைத் தொடருங்கள் ஏனென்றால் உங்களுடைய குழந்தை என்பதால் இந்துமதி எனக்கும் குழந்தைதான். அவளோடு பழகி அவள் அன்பைப் பெற வேண்டும் என்று



நான் நினைத்ததெல்லாம் நடக்கவில்லை.ஆனாலும் அவளை நான் மகளாகவே எண்ணுகிறேன். நீங்கள் இரண்டு பேரும் சேர்ந்திருப்பதுதான் அவளுக்கு மகிழ்ச்சி என்று சொன்னீர்கள். அது நல்லதுதான். அப்படியே நடக்கட்டும். நான் மலேஷியாவுக்கு செல்கிறேன்.நீங்கள் எப்போதாவது மலேசியா வந்தால் ஒரு நண்பராக என் வீட்டுக்கு வரலாம். ஆனால் அதை முடிந்த வரை தவிர்ப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். விரும்பினால் வெளி இடங்களில் சந்தித்து நலம் விசாரித்துக் கொள்ளலாம்.

எப்போதாவது உங்களுக்கு என் நினைவு தோன்றினால் என்னோடு ஃபோனில் பேசலாம். இது எதுவுமே நடக்கவில்லை என்றாலும் நான் வருத்தப்பட மாட்டேன். கிடைத்த இந்த ஐந்தாண்டு கால வாழ்வை செரிஷ் செய்வது என்பார்களால்லவா அது போல மீண்டும் மீண்டும் நினைத்துக்கொண்டே என்னுடைய வாழ்வை ஓட்டி விடுவேன்.

நீங்கள் எனக்காக அளித்த அன்புக்கு நன்றி

என்று எழுதிய அந்தக் கடிதத்தை எடுத்து தன்னிடமும் தன் தந்தையிடமும் கொடுத்து விட்டார் சந்திரமோகன்.

"இதை எப்படிப்பா?" என்று அப்பா தயங்கிய போது "இல்லே, இல்லே அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை படி!" என்றார்.

இப்போது அந்த ரோஜாமணியை நினைத்தால் அவனுக்கு வருத்தமாகத்தான் இருந்தது. ஆனால், என்ன

செய்வது இன்னொருவருக்கு சொந்தமான பொருளை அவரவர்களிடம் ஒப்படைப்பதுதானே நியாயம்?

இதையெல்லாம் நினைத்துக் கொண்டிருக்கும் போது தான் இந்துமதி சொன்னதும் நினைவுக்கு வந்தது. இரண்டு நாட்களுக்கு முன் இந்துமதி தாயின் வாயைக் கிண்டினாளாம்.

''ஏம்மா, ஒரு வேளை ரோஜாமணி உண்மையான காரெக்டரா இருந்தா?'' என்று கேட்டாளாம்.

அதற்கு சிந்துஜா சொன்னாளாம். ''உண்மையான கேரக்டராவே இருந்தா இருந்துட்டுப் போகட்டும். ஆனா என் மனசு நோகக் கூடாதுன்னு தானே அவரு அப்படி ஒருத்தரே இல்லைன்னு சொன்னாரு. அந்த அளவுக்கு எனக்கு வெயிட்டேஜ் கொடுக்கறாரு இல்லே அதுவே எனக்குப் போதும். ஆனா ஒண்ணு தெரியும். எப்ப இங்க வந்துட்டாரோ இனி யாருகிட்டேயும் திருட்டுத்தனமா உங்க அப்பா எந்த விதமான தொடர்பும் வச்சுக்கமாட்டாரு. அது மட்டும் எனக்குத் தெரியும். அப்படின்னு சொன்னாங்களாம். விசித்திரமான தம்பதிகள்பா.ரெண்டு பேரும் ஒருத்தர் மேல ஒருத்தர் பாசம் வச்சிருக்கவும் இருக்காங்க. ஆனா அதை நீ காட்டு மொதல்ல நான் காட்டு மொதல்ல என்று வெட்டியா நாளை ஓட்டிட்டாங்க என்று நினைத்துக் கொண்டிருக்கும் போதே வாசல் செக்யூரிட்டியிடம் இருந்து ஃபோன் வந்தது.

''சார், இந்துமதின்னு ஒரு மேடம் உங்களைப் பார்க்க வந்திருக்காங்க.''



''கண்டிப்பா வரச் சொல்லுங்க. அவங்க எங்கிட்டே பேசிகிட்டிருக்கும் போது யாரு வந்தாலும் இப்ப சார் இங்கே இல்லை. நாட் அவெயிலபிள்னு சொல்லிடுங்க!'' என்றான்.

''சரிங்க சார்!'' என்ற செக்யூரிட்டி ஒரு சிரிப்போடு ஃபோனை வைத்தது தெரிந்தது.

அடுத்த கணம் இந்துமதி உள்ளே நுழைந்தாள். ''என்னடா இது இப்படி புயல் மாதிரி வர்றே!'' என்று சிரித் தான் அருள் பிரகாஷ். ஆனால், தன்னுடைய இருக்கையை விட்டு எழுந்து டேபிளைத் தாண்டி இந்தப் பக்கம் வந்து விட்டான்.

வழக்கம் போல இந்துமதி ஓடி வந்து பாய்ந்து அவனைக் கட்டிக் கொண்டாள். அவனும் சற்று நேரம் அதை அனுபவித்தவனாக நின்றான். பிறகு விலகிக் கொண்டாள். அதையும் அவன் தடுக்கவில்லை. ''என்னடா திடீர்னு வந்திருக்கே?''

''எனக்குப் பொறுக்கலை. நாம ஈவினிங் தானே மீட் பண்றதா இருந்தோம். ஆனா நீங்க பேச்சு வாக்கிலே நேத்து நாளைக்கு ப்ராஜக்ட் ஒர்க் இருக்கு. எல்லாரும் போயிடு வாங்க. நான் மட்டும்தான் ஆஃபீஸ்லே இருப்பேன்னு சொன்னீங்கள்லே!'' என்றாள்.

''ஆமா!'' என்றான் அவன்.

''இந்த வாய்ப்பைப் தவற விடக்கூடாதுன்னுதான் நான் ஓடி வந்தேன்!'' என்றாள்.

''சரி, நானும் இந்த வாய்ப்பைத் தவற விடாம யூஸ் பண்ணிக்கறேன்!'' என்று சிரித்தான்.

''எதுக்கு வந்தேன்னு கேட்க மாட்டீங்களா?'' என்றாள் அவள். அவன் உடனே மறுபடியும் அவளைத் தன் அருகே இழுத்து. முகம் நோக்கி குனிந்து அவள் காதருகிலே முணுமுணுத்தான்.

''எதுக்கு வந்திருப்பேன்னு தெரியாதா?''

''ஓஹோ, அப்ப என்னை அவ்வளவு சீப்பா நினைச்சுப் பீங்களா?'' என்று அவள் பொய்க் கோபத்துடன் அவனைத் தள்ளி விட்டாள்.

''இதிலே சீப்பா நினைக்கறதுக்கு என்ன இருக்கு?. உனக்கு பாக்கணும்னு தோணி இருக்கும் வந்திருப்பே என்றான்.

''ம்... அது ஒருகாரணம்தான். இன்னொண்ணும் இருக்கு!'' என்றாள்.

''சொல்லுடா!'' என்றான்.

''எங்கம்மா சம்மதிச்சுட்டாங்க!'' என்றாள்.

''ஹேய்!'' என்று அவன் கத்தினான்.

''நிஜமாவா சொல்றே?'' என்றான்.

''ம்... எங்க அப்பா என்ன மாயம் செஞ்சாரோ தெரியலை. கொஞ்ச நேரம்தான் பேசினாரு. நான் உங்களைப் பார்த்துட்டுப் போனதுக்கு அப்புறம் மொதல்ல ஒரே ஆர்ப்பாட்டம் பண்ணினாங்க. அப்புறம் பார்த்தா சம்மதிச்சுட்டாங்க''



''எப்போ?'' என்றான் அவன்.

''நேத்து நைட் நான் உங்ககிட்டே பேசறதுக்கு வந்தேன் இல்லே? அப்பவே!'' என்றாள் அவள்.

''ஏன் நீ அதை எங்கிட்டே உடனே சொல்லலை!'' என்றான்.

''நேர்ல சொல்லலாம். சொல்லும் போது இப்படி உங்க ரியாக்ஷனைப் பார்க்கலாம் இல்லே? எவ்வளவு ஹேப்பியா ஃபீல் பண்றீங்க. இதை நேர்ல பார்க்கணும்னு தான் சொல்லலை''

அவன் பார்வையில் கிறக்கம் ஏறியது. ''ம்... இப்பப் பார்த்தாச்சாக்கும்!'' என்றான்.

''பாருங்க, முகமெல்லாம் லைட் போட்ட மாதிரி பளிச்சுன்னு ஆயிடுச்சு!''என்று கொஞ்சினாள்.

''அது இந்த நியூஸுக்காக மட்டும் இல்லே அம்மணி. உள்ள வந்தீங்கள்லே அப்பவே நம்மளுக்கு தலை சுத்திடுச்சு!'' என்றான்.

''நம்பிட்டோம். நம்பிட்டோம்!'' என்றாள் அவள்.

''சரி, வேற எப்படி நம்ப வைக்கிறது சொல்லு!'' என்று அவன் இன்னும் நெருங்க ''நிஜமாங்க, ஐ'ம் வெரி ஹாப்பி!'' என்று அவள் உணர்ச்சி மயமானாள்.

அவனை நிமிர்ந்து பார்த்துக் கண்களால் விழுங்கிக் கொண்டாள்.

அந்தப் பார்வையின் பாதிப்பால் அவன் தடுமாறிப் போய் கிசுகிசுத்த குரலில் ''என்னடா இது? ஆஃபீஸ் தெரியுமா?''என்றான்.

''இருக்கட்டுமே. அதனால் என்ன? நான் எவ்ளோ சந்தோஷமா இருக்கேன் தெரியுமா? எங்க அம்மா பெரிய ப்ராப்ளம் பண்ணுவாங்கன்னு நினைச்சேன். நேத்து நான் உள்ளே நுழைஞ்சப்ப அப்படி ஆர்ப்பாட்டம் பண்ணி னாங்க. ஆனா அப்படியே பொங்கி வர்ற பால்லே தண்ணி தெளிச்ச மாதிரி அப்படியே அடங்கிட்டாங்க. எங்கப்பா ஏதோ ட்ரீட் மெண்ட் கொடுத்திருக்கறாரு.அது என்ன ட்ரீட்மெண்ட்டா இருக்கும்?'' என்றாள் அவனை ஓரக் கண்ணால் பார்த்துச் சிரித்தபடி.

அவனும் அந்த ட்ரீட்மெண்டுக்கு கொஞ்சம் சேம்பிள் காட்டினான். ''ஆனால் ஒரு சோகமான விஷயம்!'' என்றாள்.

''என்ன விஷயம்?'' என்றான் அவன்.

''கல்யாணம் ஏழெட்டு மாசம் கழிச்சாம்''

''ஏன்?'' என்றாள் அவள்.

''எங்க அம்மாவும், அப்பாவும் இப்பத்தானே ஒண்ணா சேர்ந்திருக்காங்க. அவங்க ரெண்டு பேரு கூடவும் நான் கொஞ்ச நாள் இருக்கணுமாம்'' என்றாள்.

அவன் நேசத்துடன் புன்னகைத்தான். ''புரிஞ்சுக்கணும்டா. அவங்க கேட்கறதும் ரைட்தானே? தாராளமா நான் காத்திருப்பேன். என்ன ஒரு வருஷம் கேட்கறாங்களா?'' என்றான்.



''ம்... கிட்டத்தட்ட அப்படித்தான்''

''இருக்கட்டுமே. இதுவும் ஒரு த்ரிலிங்கா இருக்கு மில்லே? அப்பப்ப நான் உன்னை சந்திப்பேன். நீ என்னை சந்திப்பே. ரெண்டு பேரும்...!'' என்று அவன் இழுக்க 'ஆசைதான்!' என்று அவள் விலகினாள்.

''ஆசைதான் நிறைய இருக்கே? சொல்லட்டுமா?'' என்று அவன் பட்டியல் போட.

அவள் கையைத் தட்டி விட்டு சிரித்துக் கொண்டே அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

## அத்தியாயம் - 28

அருள்பிரகாஷின் வயல் பக்கத்தில் இருந்த அந்த தோட்டத்துச் சாளை என்கிற அந்த மாதிரியான ஒரு குடிசை அமைப்பிலான அந்த தோட்டத்துச் சாளையிலே இருந்தார்கள் அருள் பிரகாஷும் இந்துமதியும்.

வயலைச் சுற்றி சுற்றி வந்தார்கள். அன்று சற்றே மேக மூட்டமாக இருந்தது. மாலை நெருங்கிக் கொண்டிருந்தது. ஆங்காங்கே மயில்கள் ஆடிக் கொண்டிருந்தன. அன்று பகல் உணவுக்கு அங்கே வந்து விட்டார்கள்.

அவர்கள் சந்திக்கிறோம் என்றவுடனே சிந்துஜா கட்டுச்சாதமெல்லாம் கட்டிக் கொடுத்து அனுப்பினாள்.

''போங்க. ரெண்டு பேரும் அங்கே பிக்னிக் மாதிரி சாப்பிட்டுட்டு நல்லா என்ஜாய் பண்ணுங்க. ஆனா ஏழு

மணிக்கெல்லாம் வீட்டுக்கு வந்துடணும்'' என்று கண்டிஷன் போட்டிருந்தாள்.

''சரிம்மா!'' என்று சொன்னாள் மகள்.

தேர்ந்தெடுத்து நீலவண்ணத்திலே உடை உடுத்திக் கொண்டாள் இந்துமதி. அந்த நீலவண்ணச் சுடிதாரில் அவள் வரும்போதெல்லாம் அருள் பிரகாஷ் விழுங்குவது போல் பார்ப்பதை அவள் அறிந்திருந்தாள். அதற்கேற்றார் போல செயற்கை கற்கள் மிளிர்கிற மாதிரி ஒரு மாலை ஒன்றும் கழுத்திலே போட்டுக் கொண்டிருந்தாள். சின்னதாக ஐந்து கற்கள் பதித்த மாதிரி ஒரு வைரத் தோடு அணிந்திருந்தாள்.

தன்னுடைய காரை அவளே ஓட்டிக் கொண்டு போய் அங்கே இறங்கினாள். அங்கே அவளுக்காகக் காத்திருந்தான். தோட்டத்து வேலையாட்கள் எல்லாம் இவர்கள் சந்திப்பது தெரிந்த உடனே நாகரீகம் காத்து ஆங்காங்கே ஒதுங்கி நின்று கொண்டார்கள்.

அவள் உணவு கேரியருடன் வந்து இறங்கியதைப் பார்த்தவுடன் அவனுக்குச் சிரிப்பு. ''எல்லாம் உங்க மாமியார் அம்மாதான் கொடுத்தாங்க!'' என்றாள். அவனும் அவளும் கயிற்றுக் கட்டிலில் எதிரெதிராக அமர்ந்து அந்த உணவை உண்டார்கள்.

அவள் ஒரு வாய் எடுத்துக் கொண்டு தனக்காகக் கொண்டு போன பொழுது அவன் சுற்றும் முற்றும் பார்த்தபடி சிரித்துக் கொண்டு சட்டென்று அவள் கையைப் பிடித்து அதை தனக்கென்று வாங்கிக் கொண்டான்.



இந்துமதி சற்றே வெட்கத்துடன் அவனுடைய சின்னச் சின்ன விருப்பங்களுக்கு இடம் கொடுத்தாள். ''டவுன்லேயே வளர்ந்திருக்கே. பெரிய பிஸினஸ் உமன். ஆனா என்ன வெட்கப்படறே?'' என்றான்.

''எனக்கும் தோணுங்க. எதுக்காக வெட்கப்படணும் அப்படின்னு பெண்ணிய கருத்தெல்லாம் தோணும். ஆனால், வந்திருச்சே!'' என்றாள் அவள்.

''ஓ.கே. இயல்பா இரு. உனக்கு எப்படித் தோணுதோ அப்படி இரு!'' என்றான்.

உணவு உண்டு முடித்ததற்குப் பிறகு சற்று நேரம் கை கோர்த்துக் கொண்டு அந்தப் பகுதியிலே உலாவினார்கள். அப்போது வானத்தைக் காட்டினான் அருள் பிரகாஷ்.

ஒரு பெரிய புங்க மரத்தடியில் நின்றபடி அவளைப் பின்னாலே இருந்து கட்டிக் கொண்டு வானத்தைக் காட்டினான்.

''அங்கே பாரு என்ன நடக்குதுன்னு?'' என்றான்.

''சூரியனை மேகம் மறைச்சுகிட்டிருக்கு!'' என்றாள்.

சற்று நேரத்தில் மெல்ல அந்த மேகம் விலகியது. ஆனால், சூரியனை நேரடியாகப் பார்க்க முடியாமல் அவள் கண்ணைப் பொத்திக் கொண்டு அவனைப் பார்த்தாள்.

''பார்த்தியா? மேகம் விலகிடுச்சு!'' என்றான்.

''ம்... நல்லாயிருக்கில்லே?'' என்றான்.

''ஆமா, எப்பவாவது எனக்கு ரிலாக்ஸ் பண்ணனும் தோணிச்சுன்னா இங்கே வந்து அந்த கயித்துக் கட்டில் மேல

தலைக்குப் பின்னால கையைக் கொடுத்துட்டு படுத் துக்குவேன். இந்த மேகம் காட்டுற வித்தையெல்லாம் ரசிக்கறதுன்னா எனக்கு ரொம்ப இஷ்டம். மான் மாதிரி, ஒட்டகம் மாதிரி, அரக்கன் மாதிரி, குழந்தை மாதிரி அப்படி அப்படி மாறி மாறி அது நகரும் போது எனக்கு ரொம்பப் பிடிக்கும் என்றான் அவன்.

''எனக்கும் அது பிடிக்குங்க. நானும் எங்க தோட்டத்துக்குப் போனா ரொம்ப ரசிப்பேன்!'' என்றாள் அவள்.

''நிறைய விஷயங்களில் நம்ம ரசனைகள் ஒத்துப் போகுது இல்லடா!'' என்றவன் அவள் கழுத்தருகிலே குனிந்து மெல்லிய குரலில் சொன்னான் ''உன்னோட வாழ்க்கையும் அப்படித்தான். நிறைய மேகங்கள் இருந்துச்சு. உங்க அம்மா அப்பாவோட பிரிவு. அவங்களுக்கு இடையிலே அன்பு இருந்துச்சு. ஆனா அது'ஈகோ, சொத்து, பணம், இது மேல இருக்கற பற்று இந்த மாதிரி விஷயங் களினால அந்த அன்பை மேகம் மறைச்சிடுச்சு. இப்ப அந்த மேகமெல்லாம் விலகிடுச்சு. உன்னோட லைஃப்லையும் அவங்களோட அன்பு கிடைக்காம ஒரு இருட்டு இருந்தது. இப்ப அதுவும் விலகிடுச்சு!'' என்றான்.

''ஆமா, எல்லாத்துக்கும் காரணம் நீங்கதானே? யோசிச்சு யோசிச்சு எனக்கு கவுன்சிலிங் கொடுத்து என்னை மீட்டெடுத்து எங்க அம்மாவுக்கும் சௌமியா ஆண்டி மூலமா கவுன்சிலிங் கொடுத்து அவங்களையும் இளக்கி..!'' என்றாள்.



''அதென்ன இளக்கி...!'' என்றான்.

''ஆமா, ரொம்ப இறுக்கமா நின்னாங்கள்லே? அவங் களையே இளக வச்சுட்டீங்கள்லே'' என்றாள்.

''இல்லல்லே, உங்க அம்மாவுக்கு உன் மேல கொள்ளைப் பாசம். பொசஸிவா இருந்தாங்க அவ்வளவுதான். அப்பாவும் இறங்கி வரலை!'' என்றான்.

''அப்பாவைக் குறை சொல்ல முடியாது. அப்பா ரொம்ப இறங்கிப் பார்த்திருக்காரு. எங்க தாத்தாவும் பாட்டியும் இப்ப மிரட்டினவங்க அப்பவே மிரட்டியிருக்கலாம். எல்லாருக்கும் உங்களைப் பார்த்ததுக்கு அப்புறம் தான் தைரியம் வந்துடுச்சு'' என்றாள்.

''இதிலே ரொம்ப ட்விஸ்டான விஷயம் என்ன தெரியுமா? எது நடந்தாலும் சரின்னாரு பாருங்க உங்க அப்பா. அதுதான் நான் எதிர்பார்க்காத ட்விஸ்ட்!'' என்றான்.

''சரி, எனக்குப் பிடிச்ச மாதிரி அவருக்கும் பிடிச்சிருச்சு போல இருக்கு. இப்படி பணம் பற்றியே நினைக்காத குணசாலியான மருமகன் வந்தாப் போதும்னு அவரு நினைச்சிருக்காரு போல. எங்க அம்மாவுக்கு இன்னும் திருப்தி இல்லைதான். ஆனா நானும் நீங்களும் ஒண்ணா இருந்து ஜெயிச்சுக் காட்டும் போது அவங்க புரிஞ்சுக்கு வாங்க!'' என்றாள்

அவன் அவளை மெல்ல அருகிலே இழுத்தான். ''விடுங்க, யாராவது பாக்கப் போறாங்க.''

''பார்த்துட்டுப் போறாங்க. அதனாலே என்ன?''

''இல்லைங்க. எனக்கு வெட்கமா இருக்கு!'' என்றாள்.

''இத பாரு, இந்த இடம் எங்கிருந்து பார்த்தாலும் தெரியாது. நாங்க ஒளிஞ்சு விளையாடும் போது இந்த மரத்துக்கு பின்னாடிதான் ஒளிஞ்சுக்குவோம். கண்டு பிடிக்கறதுக்குக் கஷ்டம்!'' என்றான் அருள் பிரகாஷ்.

''இதெல்லாம் நல்லா தெரிஞ்சு வச்சிருக்கீங்களே?'' என்று திரும்பியவள் அவன் மார்பிலே முகத்தைப் புதைத்துக் கொண்டாள். அந்தப் பட்டுப் போன்ற அவளுடைய உடலின் ஸ்பரிசம் அவனுக்குள்ளும் உணர்வுகளைத் தோற்றுவித்தது.

''ஏய், எப்படி ஆறு மாசம் தாங்கப் போறேன்னு தெரியலை. கொல்றடி!'' என்றான் அவன்.

அவள் அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

''சிரிக்கிறா பாரு. எனக்குப் பிடிச்ச ஸ்கை புளூலே டிரஸ் போட்டுட்டு வந்து நின்னுகிட்டு கிருஷ்ண பரமாத்மா மாதிரி அப்படியே மயக்கற மாதிரி ஒரு பார்வை...!'' என்றான் அவன்.

''ம்... இந்த ஆறு மாசத்துக்கும் உங்களைப் போட்டு டார்ச்சர் பண்ணிடலாம்னு இருக்கேன்!'' என்றாள் ''ஏய், வேண்டாம். தாங்காது!'' என்று கெஞ்சினான் அவன்.

''கெஞ்சுங்க. கெஞ்சுங்க. இப்படி நீங்க கெஞ்சும் போது எவ்வளவு அழகா இருக்குத் தெரியுமா? அப்படியே முழுங்கற மாதிரி பார்க்கறது. கிறக்கமா மூஞ்சியை வச்சுக் கறது!'' என்று அவளும் கிறக்கக் குரலிலே பேச ஆரம்பித் தாள்.



''எனக்குத் தெரியும். இதெல்லாம் நடிப்பு!'' என்றாள்.

''இல்லடா. இதெல்லாம் நடிப்பு கிடையாது. நீ பக்கத்துல வந்தாலே ஏதோ ரஸவாதம் மாதிரி ஆயிருது!'' என்றான்.

''ஓஹோ! இதுக்கு பேர் ரஸவாதமாக்கும். இதுக்குப் பேரு வார்றது!'' என்றாள் அவள்.

''வார்றதுன்னா என்ன? இந்த வார்றது உனக்குப் பிடிக்கலைன்னு சொல்லு!'' என்றான்.

''நிச்சயமா பிடிக்குது. அது மட்டுமா பிடிக்குது? ஆறு மாசம் எப்படா முடியும்னு இருக்கு!'' என்றாள்.

''இத பாரு கண்ணம்மா, ஆறு மாசம் கழிச்சு நமக்கு வாழ்க்கை இருக்கவே இருக்குது. இப்பத்தான் எல்லா மேகமும் விலகி சூரியனுக்கு வழி விட ஆரம்பிச்சிருச் சில்லே. அது மாதிரி உன்னோட வாழ்க்கையிலும் ஒளி வந்தாச்சு''.

''நீ இந்த ஆறு மாசமும் என்னை நினைச்சுக்கோ. ஆனா உங்க அம்மா அப்பா கூட டைம் ஸ்பெண்ட் பண்ணு. நாம இப்படி வீக்லி ஒன்ஸாவது சந்திச்சுப்போம். அவங்களுடைய ஏக்கத்தையெல்லாம் நீ தீர்த்தர்ணும்!'' என்றான்.

''அப்புறமா... கல்யாணத்துக்கு அப்புறம் அனுப்ப மாட்டீங்களா?''

''இத பாரு, இந்த அனுப்பறது. பர்மிஷன் இதெல்லாம் என்ன? நாம ரெண்டு பேரும் ஈக்வல்ஸா இருக்கப் போறோம். நான் போயிட்டு வர்றேன்னு எனக்கு

இன்ஃபார்ம் பண்ணு. அவ்வளவுதான்.எனக்கு இந்த ஆதிக்க மெல்லாம் பிடிக்கறது இல்லே!'' என்றான்.

அவள் அவனை ஆசையுடன் பார்த்தாள். ''அம்மா அப்பாவெல்லாம் நிறைய செய்யணும்னு ஆசைப் படறாங்க!'' என்றாள்.

''நான் அவங்க ஆசைக்குத் தடை சொல்ல மாட்டேன். ஆனா எங்க தகுதிக்குத் தகுந்த மாதிரி பண்ணினாங்கன்னா போதும். பெரிய அளவிலெல்லாம் இப்ப எதுவும் செய்ய வேண்டாம்!'' என்றான்.

''எப்படியும் நான்தானே அவங்களுக்கு வாரிசு!'' என்றாள்.

''அது பார்க்கலாம். நாளைக்கு என்ன நடக்குதோ? உன் குழந்தைங்க வந்தா அவங்களுக்கு உங்க தாத்தா பாட்டி சொத்து வந்தா வந்துட்டுப் போகட்டும்!'' என்றான்.

அவள் முகம் சிவந்தது.

உடனே அவன் ''ஹை! குழந்தைங்கன்ன உடனே வெட்கம் வந்துடுச்சாக்கும்!'' என்றான்.

''வெட்கம் வந்துடுச்சுதான். ஆனா ஆசையும் இருக்கு!'' என்றாள்.

''எத்தனை? மே பி ஒன் டு த்ரீ...'' என்று அவன் எண்ணினான்.

''ஹலோ, ஹலோ அவ்வளவெல்லாம் இல்லை. இங்கே நாட்டிலே ஏற்கனவே மக்கள் தொகை ரொம்ப அதிகமா இருக்கு. நம்ம ஜனங்களுக்கு எப்படி இருந்தாலும்



அட்லீஸ்ட் ரெண்டாவது வேணும்னு ஆசைப்படறாங்க!'' என்று பொருளாதாரம் பேசினாள் அவள்.

அவன் சிரித்தான்.

''இங்கே பாரு. இன்னொண்ணு தெரிஞ்சுக்கோ. எத்தனை குழந்தைங்க இருந்தாலும் அவங்க வாழ்றதுக்கான வாழ்வாதாரத்தை நாம ஏற்படுத்திக் கொடுத்துட்டோம்னா அவங்களால நாட்டுக்குப் பிரச்சினை இருக்காதில்லே!'' என்றான்.

''ஐயய்யோ, இந்த டாபிக் ஆரம்பிச்சுட்டேனா? உடனே நீங்க நுகர்வோர் பிரச்சினையெல்லாம் பேச ஆரம்பிச் சுடுவீங்களே?'' என்றாள்.

''ஆமா,, அதைப்பத்தியெல்லாம் நிறையப் பேசணும். ஆனா இப்ப இல்லை.இப்போதைக்கு நம்ம ரெண்டு பேருக்கும் இடையிலே நுகர்வுக் கலாச்சாரம் நல்லதுதான்!'' என்றான். அவனுடைய அந்த சிலேடையை அவள் ரசித்தாள்.

''சரி, நீயும் ரொம்ப நேரம் இருக்க வேண்டாம். வா!'' என்று நகர்ந்தார்கள்.

மறுபடியும் அந்த தோட்டத்துச் சாளைக்குள்ளே அமர்ந்து பேசினார்கள். வெளியே அமர்ந்து பேசினார்கள்.

கைகோர்த்துக் கொண்டு பேசி நடந்தார்கள். சற்று விலகி நின்று ஒருவரை ஒருவர் பார்வையால் விழுங்கிக் கொண்டார்கள். கையணைப்பிலே சற்று நேரம் மெய் மறந்தார்கள்.

இரண்டு காதல் நெஞ்சங்களுக்கே ஆன எல்லாவிதமான மகிழ்ச்சியையும் அவர்கள் அங்கே அனுபவித்தார்கள். ''நான் நினைக்கவே இல்லைங்க. நீங்க மொத மொதல்ல எனக்கு கவுன்சிலிங் கொடுத்தப்ப லைஃப் லாங்கா எனக்கு கவுன்சிலிங் கொடுப்பீங்கன்னு நான் நினைக்கவே இல்லை!'' என்றாள்.

''உனக்கு எதுக்குக் கவுன்சிலிங். உனக்கு முன்னேயே தைரியம் இருந்துச்சு''

''ஏதோ ஒரு நெக் ஆப் த மோமெண்ட்ல அப்படி முடிவெடுத்துட்டேன். ஆனால் உண்மைகளைச் சுட்டிக் காட்டின உடனே டக்குன்னு புரிஞ்சுக்கிட்டேன்ங்க''

''என்ன இருந்தாலும் உங்க அம்மா அப்பாவினுடைய பிடிவாதம் உனக்கு உண்டுதானே? இருக்கத்தானே எப்படியோ என்னை வளைச்சுப் போட்டுட்டே!'' என்றான்.

''அப்போ உங்களுக்கு இண்ட்ரஸ்ட் இல்லையா?'' என்றாள்.

''இன்ட்ரஸ்ட் இல்லையாவா? எங்க அப்பா அந்த குண்டு போட்டவுடனேயே நான் தவிச்ச தவிப்பு எனக்குத்தான் தெரியும். அடுத்த நாள் அந்த நகைக்கடையில உன்னைப் பார்த்துட்டு பேசாம வந்தேன் பார்த்தியா? அப்ப என் மனசு துடிச்ச துடிப்பும் என் மனசு தவிச்ச தவிப்பும் இப்ப நினைச்சா கூட கஷ்டமா இருக்கும்.தனியா உட்கார்ந்து அழுதுட்டேன் தெரியுமா?''



அவள் திடுக்கிட்டுப் போய் அவனைப் பார்த்தாள். ''நீங்களா அழுதீங்களா?'' என்றாள்.

''ஆமா, இனிமேல் நீ கிடைப்பியோ, கிடைக்க மாட்டியோ! இந்த வாழ்க்கை ரணமா இருக்குமோ?மேகம் மூடின மாதிரியே இருக்குமோ? அப்படின்னு என்னென்னமோ நினைச்சுட்டேன்''

அவன் குரலில் தெரிந்த ஆழத்தைப் புரிந்து கொண்ட அவள் சட்டென்று அவன் முகத்தை தன் பால் இழுத்தாள். ''இப்பத்தான் மேகம் விலகிடுச்சில்லே!'' என்று எம்பி அவன் கன்னத்தில் தன் முத்திரையைப் பதித்தாள்.

அவனும் அதை கிறக்கமாக வாங்கிக் கொண்டான். இரண்டு உள்ளங்களின் மகிழ்வும் அங்கே வெளிப்படையாக தெரிந்தது. அந்த மகிழ்வின் சூழல் சுற்றிலும் பரவியது. அவர்கள் நின்று கொண்டிருந்த இடத்திலே இருந்து பார்த்தால் ஒரு கொய்யா மரத்தின் மேல் இரண்டு கிளிகள் பச்சைக் கிளிகள் அமர்ந்து கொண்டிருந்தன. இந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தாள். மயில் தோகை விரித்து ஆடிக் கொண்டிருந்தது.

''ஆஹா, ஆடும் மயில், பாடும் கிளி இதுக்கு நடுவிலே ரொமான்ஸ் சூப்பரா இருக்கில்லே!'' என்று அவன் மறுபடியும் பின்னாலே வந்து தன் இரண்டு கைகளாலும் அவளை அணைத்துக் கொண்டான்.

''ஆமா, ரொம்ப நல்லாயிருக்கு!'' என்றாள் அவள்.

''நம்ம எதிர்காலமும் இப்படித்தான் இருக்கப் போகிறது!'' என்றான் அவன் நேசம் நிறைந்த குரலில்.

அவளும் தன் கண்களில் அன்பை நிறைத்து முகத்திலே நேசத்தை நிறைத்து இதழ்களில் புன்னகையை நிறைத்து தலையாட்டி அதை ஏற்றுக் கொண்டாள்.

அவளோடு கூட அங்கே இருந்த செடி கொடிகளும் கூட தலையசைத்தன. இளங்காற்றுக்குத் தலையசைத்து அந்தச் செடிகளில் இருந்து பூக்கள் தெறித்து அவர்கள் மேல் ஆசிர்வதிப்பது போல விழுந்தன.சூழ்நிலையில் சுகந்தம் நிறைந்தது.

**நிறைவு**